Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞான நாயகன்

பிரகலாதன்

மு. இராமசாமி

திருவரங்கம் பதிப்பகம், இராசிபுரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவரங்கம் பதிப்பகம்
7, எல்லப்பச் செட்டியார் காலனி
இராசிபுரம்-637 408. (சேலம் மாவட்டம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானநாயகன் பிரகலாதன்

7754

DONATION

7754

'ஸ்ரீ வைணவச் செல்வம்'
'சிந்தாமணிச் செம்மல்'
புலவர் மு. இராமசாமி, எம். ஏ. பி. எட்.,
இராசிபுரம்.

வெளியீடு
திருவரங்கம் பதிப்பகம்,
இராசிபுரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்பதிப்பு 12—7—1991
உரிமை ஆசிரியர்க்கு

திருவரங்கம் பதிப்பக நூல்: 27
நாமக்கல் கம்பன் கழக 30-வது ஆண்டு
விழாவில் வெளியீடு செய்யப் பெற்றது.

விலை ரூ. 40—00

நூல் கிடைக்கும் இடம்:
'திருவரங்கம்'
7, எல்லப்பச் செட்டியார் குடியிருப்பு
இராசிபுரம்-637 408.

அச்சிட்டோர்:
சன்-மூன் பிரிண்டர்ஸ்,
அம்மாப்பேட்டை, சேலம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

நூலின் பெயர்	:	ஞானநாயகன் பிரகலாதன்
ஆசிரியர்	:	புலவர் மு. இராமசாமி எம். ஏ., பி. எட்.,
பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆண்டு	:	12—7—1991
மொழி	:	தமிழ்
உரிமை	:	ஆசிரியர் மு. இராமசாமி, எம். ஏ., பி. எட்.,
தாள்	:	டெம்மி 7.3
அளவு	:	1X8
பக்கம்	:	272
எழுத்து	:	10, 12, 14, 18.
கட்டு	:	அட்டைக்கட்டு லேமினேசன்
விலை	:	ரூ. 40-00
வெளியீடு	:	திருவரங்கம் பதிப்பகம்
படிகள்	:	1000
அச்சிட்டோர்	:	சன்-மூன் பிரிண்டர்ஸ் 17, குண்டுபிள்ளையார் கோவில் தெரு அம்மாப்பேட்டை, சேலம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

ஞானநாயகன் பிரகலாதன் :

1	நூல் முகம்	...	4
2	அணிந்துரை	...	5
3	கவிச் சக்கரவர்த்திக்கு முன்னும் பின்னும்	...	15
4	தோற்றுவாய்	...	26
5	வரம்பில் ஆற்றலான்	...	51
6	அறிஞரின் அறிஞன்	...	69
7	ஓதுவானும் உணர்ந்தானும்	...	85
8	பேதையும் மேதையும்	...	103
9	கருமமும் பயனும்	...	121
10	பகைமைப் போக்கும் பக்திப் பெருக்கும்	...	154
11	தூயோன் துதித்தல்	...	157
12	உலகு தந்தார்	...	171
13	சிரித்தது செங்கண்சீயம்	...	181
14	மைந்தனின் மகிழ்ச்சியும் தந்தையின் இகழ்ச்சியும்	...	189
15	அருட் சிங்கம் ஆற்றியவை	...	191
16	சீரிய சிங்கமும் சீறிய சிறுமையும்	...	193
17	நரமடங்கல் கண்ட நான்முகன்	...	198
18	திருமகள் வருகையும் சிங்கப் பெருமான் அருளுதலும்	...	201
19	பகவானும் பக்தனும்	...	204
20	நானிா வளர்க	...	207
21	முடிசூடல்	...	209
22	ஆணவத் தந்தையும் அன்பு மைந்தனும்	...	210
23	அசுரனையும் அருளாளனையும் காட்டிய கவிதைத் தொடர்கள்	...	211
24	திரிவேணி சங்கமம்	...	212
25	இரணியன் வதைப்படலம் மூலம்	...	213
26	பாடல் முதற்குறிப்பு அகராதி	...	245
27	பயன்படுத்தப்பட்ட நூல்கள்	...	248

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

ஸ்ரீ ஆண்டாள் துணை

அணிந்துரை

தென்னிந்தியக் கலாச்சாரத்தில் நரசிம்மாவதாரம் மிக உன்னதமான ஸ்தானம் வகிக்கின்றது கர்நாடக மாநிலத்தில் நரசிம்ம உருவத்தின் பெருமையை ஹம்பியில் காணவேண்டும். தல்லிக் கோட்டைப் போரில் விஜயநகர சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைய, முகம்மதியப் போராளிகள், ஹம்பிக் கோவில் களைச் சிதைத்தனர். விலை மதிப்பற்ற கலைச் செல்வங் களான தெய்வத் திருவுருவங்கள் பாழாயின. அவற்றில், இருபத்திரண்டு அடி உயரத்தில் சமைத்த உக்ர நரசிம்மர் சிலையை இன்றும் காணலாம். திருவபிஷேகத்தின் மேல் ஏழுதலை நாகம் குடை கவிக்கும். மடிமீதமர்ந்த லக்ஷ்மியை உடைத்து விட்டார்கள். கோரமாகச் சிதைவுற்றும் கம்பீர மாகத் தோன்றும் இந்த நரசிம்மர் போல், ஆந்திர தேசத்திலும் நூற்றுக் கணக்கில் அழகிய தெய்வத் திருவுருவங்கள், கலை யுணர்ச்சி யற்ற பாவிகள் கையால் நொறுங்கிப் போயின.

தமிழகத்தில் மாத்திரம் இக்கொடுமை நடக்காதது நம் பேரதிர்ஷ்டமே. திரு. இராமசாமி எடுத்துக்காட்டுவது போல **பரிபாடல்** தோன்றிய சங்க காலத்திலிருந்தே, இந்த அவ தாரம் தமிழ் மண்ணில் போற்றப்பட்டு வந்துள்ளதால் போலும், இன்று தமிழகமெங்கும் கருவறைகளிலும்: தூண் வரிசைகளிலும், ஓவியங்களிலும், காவியங்களிலும், சிங்கப் பிரானைக் கண்டு, மகிழ்ந்து. துதித்து, வாழ்வில் நிறைவு பெறுகிறோம்.

திரு. இராமசாமி அவர்களது புத்தகம், கம்பனது இரணிய வதைப்படலம் பற்றியது. ஆனாலும், வேத, உபநிடத காலத்திலிருந்தே, எப்படி நரசிம்மாவதாரம் இந்தியர்களால் அறியப்பட்டுள்ளது என்பதையும் தெரிந்து கொள்கிறோம் புத்தகத்தில் பலப்பல அரிய செய்திகள்.

ஆயினும், திரு. இராமசாமி அவர்களாலும், ஏன் யாரா லுமே அளவிட முடியாதபடி இரணியனது கதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்மவர்களை ஈர்த்திருக்கிறது. உதாரணமாக, நூறாண்டுகள் முன்பு. வாழ்ந்து மறைந்த **தோருதத்** (Toru Dutt) எனும் பெண் கவிஞர் 'ப்ரஹ்லாதன்' என்ற அற்புதமான கவிதை ஒன்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இதில் ஆச்சரியம் என்னவென்றால், வங்க தேசத்தைச் சேர்ந்த **தோரு** கிருஸ்துவர் என்பதுதான். செங்கட்சீயத்தை ஆங்கில சந்தத்தில் உருக்காட்டும் போது, நம் இதய துடிப்பு நமக்கே கேட்கிறது.

'இந்தக் கடவுள் எங்கேடா? பார்ப்போம்; பொன்னன் தூணைக் காலால் உதைக்கவும், கோடாரி வேருடன் சாய்ந்தமரம் போல், தூணும் கீழே முறிந்து விழுந்ததம்மா! அனைவர் குருதி உறைந்திட, அதனிலிருந்து, மூளைக் காய்ச்சலில் தோற்றிய உருவென கருத்த பெரு வீரன் தோற்றமதுவும் பெருஞ்சத்தமுடன் வெளிப்பட்டதம்மா

தெலுங்கில் நூற்றுக்கணக்கான சதகங்கள் இருப்பினும் பலநூறு ஆண்டுகளாகத் தலைமை வகிப்பது யாயவரமுசேஷப்பகவியின் நரசிம்ம சதகமே ஒவ்வொரு செய்யுளிலும், கவியின் பரமபக்தி புலப்படும். அனந்தபுரம் ஜில்லாவில் தர்மபுரி எனும் ஊரில் உள்ள நரசிம்மனிடம் கவி எத்துணை உணர்ச்சிகரமாகப் பேசுகிறார்! 98 வது செய்யுளில் ப்ரஹ்லாதன்' வரதனிடம் செய்யும் சரணாகதியைக் கேட்போம்.

'திருவின் நாயக! உன் உயர்ந்த குணங்களைக் கேட்க முடியாமற்போனால், பித்துப் பிடிக்கும் போல் இருக்கிறது. என்பைத்தியச் சேஷ்டைகளை மெல்ல கண்டித்து, என்னைக் காப்பாற்று. தாமரைக் கண்ணா! உன்னையே! நம்பினேன்: வேறு தெய்வங்களை நம்பவில்லை, பாம்பணையப்பா! என்னைக் காப்பாற்றினாலும், நீதான்: துன்புறுத்தினாலும் நீதான்;உன் திருவடிமலர்களையே என்றென்றும் நம்பினேன், உன் திருவடிகளில் பக்தி உண்டாக நீயே அருள் செய்து ரட்சிக்கவேண்டும்.' மறைகூவும் பெரியோனே அணிகள் ஒளிவீச விளங்கும் தர்மபுரி வாழ்வோனே! தீயோரைக் கடிவோனே! நரசிம்மா! துயர்களைவோனே!''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முத்துசாமி தீட்சிதர், புரந்தரதாசர் முதலானோர் நரசிம்ம மூர்த்தியை சங்கீத சாம்ராஜ்யத்தில் கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். தீட்சிதரது மோகனராகக் கீர்த்தனை, சிங்கப்பிரானை, "பரப்ரம்ம ஸ்வரூபமானவர், தனது விருப்பத்தைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய பரம சுதந்திரர், மஹா பரிசுத்தமானவர் என்று வியந்து கூறும்.

இந்து சமயத்தின் பெருநிதியான நரசிம்மரூபம்' விஷ்ணு சகஸ்ர நாமத்தில் இருபத்தோராவது பெயராக வருகிறது. இப்பெயரின் உள் அடங்கிய பேருண்மையை ஸ்ரீ இராதா கிருஷ்ண சாஸ்திரி சுருக்கமாகக் கூறுகிறார்.

"எல்லா அங்கங்களிலும் முக்கியமானது தலை. எல்லா அறிவாளியான உயிரினத்திலும் மனிதன் சிறந்தவன். அவனது அறிவின் கேந்திரம் தலை. வலிவு மிக்கவைகளில் சிங்கம் சிறந்தது. அதன் வலிவு அதன் கால் நகங்களிலும் உடலிலும் உள்ளது. மனித உடல் பெறும் நுண்ணுணர்ச்சியைச் சிங்க மூளை உணராது. சிங்கமூளை இடும் உத்தரவை மனித உடலால் நிறைவேற்ற இயலாது. மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்டு நிகழ்த்த வேண்டிய இரணிய கசிபு வதத்தை சிங்க முகமும் மனித உடலும் கொண்டு நிகழ்த்தியது ஆச்சரியமானது" என்றும், "ஜடமான கம்பத்திலிருந்து தோன்றியவர் சேதனமாக இருப்பது விந்தை. இப்படி மாயையால் பொருந்தாதைப் பொருத்திக் காட்டுபவர் நரஸிம்ஹ மூர்த்தி" என்றும் திரு. சாஸ்திரிகள் கூறுவார்.

இப்படிப் பல்லாயிரமாண்டுகளாக நம் உயிருடனும், உள்ளத்துஉணர்வுடனும் சிங்கப்பிரான் தோற்றம் ஒன்றிவிடக் காரணம், திவ்யப் பிரபந்தத்தேன்தான். நமது ஆழ்வார்கள் சிங்கப்பிரான் கதையை அனுபவித்தார்கள். அம்மானுடமடங்கலின் உருவை நமது நெஞ்சில் செதுக்கினார்கள். வடமொழியில் பழம் பாடல் ஒன்று பாகவதர்களை வரிசைப்படுத்தும் போது, "ப்ரஹ்லாத, நாரத. பராசர, புண்டரீக" என்றபடி பிரகலாதாழ்வாருக்கே முதலிடம் கொடுத்திருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதேபோல் ஆழ்வார்களது பேச்சில், பிரகலாதன் பக்தியால் பிழைத்த கதை பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

"செல்ல உணர்ந்தவர் செல்வன்தன்
சீர்அன்றிக் கற்பரோ?"

என்பது போன்ற ஆழ்வார்களது சொற்கோவை மலர்களை வாசக் கதம்பமாக திரு. இராமசாமி இப்புத்தகத்தில் தொகுத்தளித்திருக்கிறார். இந்தப் பிரகலாத காவியம், நம்மவர்க்கு ஒரு ஜீவாதாரமாக ஆனதினால், கம்பர் ராமாயணம் எழுதிய போது, இரணிய வதைப்படலம் தானாகவே காப்பியத்தில் வந்து அமர்ந்து விட்டது.

இராமாவதாரத்தைக் கம்பர் எழுதியிருக்கக் கூடும். ஆனால், இரணிய வதைப்படலத்தை அவர் எழுதவில்லை. கலைவாணி, கம்பரது எழுத்தாணியைத் தன் கையில் எடுத்து வரைந்ததே இராமாவதாரத்தில் தோன்றும் அழிவற்ற நரசிம்மாவதாரம்.

கம்பன் காவியத்தில், பல கிளைக் கதைகள், இவற்றில், சில கம்பன் படைத்தவை. அவற்றுள் நான்கு முக்கியமானவை: இரணியவதம், மாயாஜனகன், விபீஷணன் தூது, களியாட்டு, இரணியவதம், காப்பியத்தின் எதிர் நாயகனுக்கு ஒரு எச்சரிக்கையாகச் சொல்லப்படுவது. வான்மீகத்தில் இல்லாத ஒன்றைக் கம்பன் செய்தால், அது, அவரது காப்பிய நோக்கிற்கு இன்றியமையாதது என்பதே பொருள், விபீஷணனுக்கு இராவணன் செய்வது பிடிக்கவில்லை. ஆனால், ஒரு வேளை இராவணனது மனத்தின் அடித்தலத்தில் ஏதேனும் நல்லது இருக்கலாம். அதைத் தெரிந்து கொண்டு, பின்பு தான் செய்ய வேண்டியதை ஆலோசிப்பதற்காக விபீஷணன் இரணியன் கதையை விவரித்திருக்கலாம். இக்கதை கேட்டும், இராவணன் திருந்தவில்லை என்பதால், தம்பி, அண்ணனை விட்டு நீங்கினான் போலும்! அதனால், இக்கதையை ஒரு உரை கல்லாகவே கொள்ளலாம். கம்பனது காப்பியத்தில், யுத்த காண்டத்தில் இராவணனது காப்புகள் ஒவ்வொன்றாக விலக வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனது முக்கிய காப்பு விபீஷணன்தான், ஏனெனில், அவனொருவனே, இலங்கையில் அறவழியில் நிற்பவன். இதை வால்மீகியும் கூறுகிறார். "ராட்சத ஜாதியில் பிறந்திருந்தாலும், அவன் தர்மாத்மா." நல்லவன் ஒருவனுக்காகப் பெய்யும் மழையால் இலங்கை இன்றுவரை செழித்திருக்கிறது, இராவணனின் மூலபலம்,

"அறத்தைத்தின்று அரும்கருணையைப் பருகி வேறமைந்த
மறத்தைப்பூண்டு வெம்பாவத்தை மணம்புணர் மணாளர்
நிறத்துக் காரன்ன நெஞ்சினர் நெருப்புக்கு நெருப்பாய்ப்
புறத்துப் பொங்கிய பங்கியர் காலனும் புகழ்வார்"

அல்ல, அறமே உருவான விபீஷணன்தான் மூலபலம், அந்த அறமெனும் மூலபலம், இலங்கையை விட்டு நீங்குவதற்கும் காப்பியப் போக்கில் நரசிம்மாவதாரம் நிகழ்கிறது. வால்மீகத்தில் இராவணன் தன் தம்பியைக் கடியுமிடத்தில், - "ஜானாமி சீலம் ஞாதீனாம் ஸர்வலோகேஷீ ராக்ஷஸ ஸ்ருஷ்யந்தி வ்யஸனேஷ் வேத ஞாதீனாம் ஞாதய; ஸதா'! என்கிறான். தாயாதிக்கு எப்பொழுதும் இதயத்தில் பகை. தாயாதியை நம்பவே கூடாது,' என்று பற்பல சொல்கிறான். இந்தத் தாயாதிபற்றிய பேச்சுதான் கம்பனை இரணிய வதைப்படலம் எழுத வைத்தது போலும்! படலமும் தன் பணியைச் செய்கிறது. திரு. மகரபூஷணம் கூறுவது:

மரண பயத்தினால் நீ திருமாலைச் சரணடைந்தாய். பெற்று வளர்த்த தந்தையின் மார்பைப் பிளந்த போது, மகிழ்ந்த மைந்தனுக்கு, நம் பகைவரிடம் நட்பு பூண்டுள்ள நீயே நிகர். நான் இராமனுக்குத் தோற்றபின், என் பெருஞ் செல்வத்தை அடைந்து இலங்கைக்கு அரசனாக வாழக் கருதினாய். உன் கருத்து நிறைவேறாது என்று கூறிப் பழித்து, விபீஷணனை வெளியேற்றும் அடுத்த நிகழ்ச்சிக்குக் கம்பன் தோற்றுவாய் செய்கிறான்."

கம்பனது காப்பிய நடப்புக்கு இப்படி முக்கியமானதொரு செய்தியாகப் பொருத்தப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி, இப்பொழுது தமிழ் இலக்கியத்தின் கொடுமுடியாகத் திகழ்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதில் கதாநாயகன் சிறிவன் பிரகலாதனே. ஆனால், இராமாயணத்தை, வால்மீகி 'பௌலஸ்தியவதம்' என்றது போல் இது 'இரணிய வதை' ஆயிற்று. ஏனெனில், இராவணன், இரணியன் போன்றோர் சாமானிய மனிதரல்ல. அனைத்து பலங்களும் பொருந்திய பேரறிஞர்கள். அகம்பாவம் காரணமாக இப்பேரறிவாளர்கள் அழிவது மானுடத்திற்கு, ஒரு மறக்க முடியாத மறக்கக் கூடாத ஒரு படிப்பினை. இரணியன் வதைப்படலத்தில் செய்யுள் தோறும் விரவியுள்ள இப்படிப் பினையை திரு. இராமசாமி அவர்கள் மிகத்தெளிவாக எடுத்துக் கூறும் முயற்சியே **ஞானநாயகன் - பிரகலாதன்** என்னும் இந்நூல்.

பக்தியில்லாதவனது வெற்றிப் படிப்பும், அன்புள்ளம் இல்லாதவனது அசுர பலமும் மானுட மேன்மைக்கு உதவாத சரக்கு என்பதை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இருளும் ஒளியும் போல இரணியனும் பிரகலாதனும் இருப்பதை அவர்களது குணநலன்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதன் மூலம் திரு. இராமசாமி அவர்கள் எது அறம் என்பதை நிலை நாட்டுகிறார். நாம் அறவழி நிற்க ஆசை கொண்டால், நம் குழந்தைகளை அறவழிப் படுத்த வேண்டும். அதற்குப் பிரகலாதன் சரித்திரம் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகும்.

ஒரே செய்யுளில், இளைய தலைமுறைக்கு வேண்டிய முன் மாதிரியை, நம்முன், கம்பன் வைத்து விடுகிறான். பிரகலாதன் 'அறிஞரின் அறிஞன்' என்பதால் பேரறிவு உடையவன். இறை அறிவு உள்ளவனே, பேரறிவாளன் இறை அறிவு இல்லாதவன் ஏட்டுச் சுரைக்காய்.

பிரகலாதன் "தூயர் என்பவர் யாரிலும் மறையினும் தூயவன்" என்பதால், தேவர்களும் வேதமும் இரணியாயநம;' என்றபோதும், தான் நாராயண நாமத்தை விட்டானில்லை. அவா வற்றவனுக்குப் பயம் ஏது? தூயவன் என்றால், அவா அற்றவன் என்று வள்ளுவமும் கூறுகிறது என்பதை, திரு. இராமசாமி சுட்டிக் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தூஉய்மை என்பது அவாஇன்மை: மற்றது
வாய்மை வேண்ட வரும்'

பிரகலாதனே, பக்தியால் நம்மை நல்வழி நடத்தும் 'நாயகன்.' இவனே எங்கும் நிறைந்துள்ள நல்லறத்துக்கு நாதன், என்பதால், அவன் வழிச் செல்லும் நாம் நல்லறப் பாதையை விட்டு விலகுவதில்லை. எல்லாவற்றுக்கும் மேல் மானுடம் மேன்மையுற வேண்டுமெனில், ஒவ்வொரு தனி மனிதன் மனத்திலும் தாயுணர்வு ஈரமாக இருக்க வேண்டும். அன்பு, தயை, கருணை போன்ற அறநெறிகளை நாம் கண நேரமும் மறக்கலாகாது. தன்னலம் என்பது தன்குடும்பத் தோடு நிற்பதில்லை. அது படிப்படியாக 'தன்' னிலேயே வந்து குவிந்துவிடும். பிறகு, தாரமேது? தனயனேது? அப்படிப் பட்ட தன்னலவாதியான, தற்பெருமைக் காரனான இரணியன், பிரகலாதனைக் கொல்ல முயன்றானே, இதைவிட ஒரு இழிநிலை மனிதனுக்கு வரவேண்டியதில்லை!

ஆனால், அன்பு உள்ளம், தன்னைச் சுற்றி விரிந்து கொண்டே போகிறது. இந்த விரிவடைவு, விசுவரூபமாகி தான்' என்பது மறைந்து, அன்பு உள்ளம் இறைவனாகி விடுகிறது. இதை, திரு. இராமசாமி நயமாக எடுத்துக் காட்டுகிறார்.

"இப்படலத்தின் இறுதியில், நரசிம்மம் பிரகலாதனை நோக்கி 'நானா வளர்க' என்று வரம் கொடுப்பதாகக் கவிதை அமைந்துள்ளது. 'என்னைப் போலவே (இறைவனைப் போலவே) உலகில், நீ நிலைத்து நிற்பாய்' என்பது இதன் பொருள். அதனால், பிரகலாதன் இறைநிலை எய்து கிறான். ஆகவே, இந்தப்பக்தனுய் பகவானைப் போன்று 'எண்குணத்தினன்' என்று சொல்லப் படுவதற்குத்தகுதி (பொருத்தம்) உடையவனாகின்றான்." (பக்கம் 84)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாத்திகம் பேசுவது எளிது. ஆனால், குயவனுக்குப் பலநாள் வேலை என்பது போல், பல்லாயிரம் ஆண்டுகளாக, மனிதன் தன்னடக்கம் பயின்று, தன் மேம்பாட்டுக்கான கலாச்சாரத்தை வளர்த்துக்கொண்டு, இறைச் சிந்தனை மூலம் நல்லொழுக்கத்துடன் கூடிய தெய்வீக வாழ்வு வாழ முயன்று வந்துள்ளான். இந்த அரும்பெரும் நிலையை— நாராயண நாமம் காட்டும் நல்வாழ்வை — ஒரே கணத்தில் தூக்கி எறிந்து விடலாம். அதனால், நஷ்டம் நாராயணனுக்கு இல்லை. நாத்திகம் பேசும் நாம்தான் உயிர் காக்கும் பிடிமானத்தை இழக்கிறோம். வாழ்க்கையில், நம் கடமைகளைச் செவ்வனே செய்து, அன்பினால் ஒன்றுபட்டு வாழ்ந்தால், அந்த அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையாக இறைவன் வந்து; நம் அகம் புகுந்து. நம்மையே கோயிலாக்கித் தூய்மைப் படுத்தி விடுகிறான். அதனால், பக்தி எனும் துணை, நம் காரியம் யாவினும் கை கொடுத்து, நம்மை மேன்மைப் படுத்துகிறது.

நாத்திகம் பேசும் போது, இந்தத் துணையின்றி, சோதனை நேரும் சமயம், மனோதிடம் இழந்து, மாய்ந்து போகிறோம். பக்தி வாழ்க்கை மேற்கொண்ட பிரகலாதன், நாராயண நாமமே துணையாக வாழ்ந்தான். அவனை, நஞ்சு கொள்ளவில்லை; பாம்பு தீண்டவில்லை; கடல் கொள்ள வில்லை. அதனால்தான், இறையுணர்வு வேண்டும்! வேண்டும்! வேண்டும்! என்று பெரியோர்கள் கூவுகிறார்கள்.

இந்த இறையுணர்வை நாம் தேடிச் செல்ல வேண்டாம். இறையில்லாத இடத்தில் நாம் இல்லை. ஏனெனில் அப்படிப் பட்ட இடமே இல்லை.

"யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயம் தோறும்.
தோய்விலன்; புலன் ஐந்துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி"

என்று ஆழ்வார் கூறுகிறார் அல்லவா!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு. இராமசாமி அவர்கள் கம்பனது செய்யுட்களையும் ஆழ்வார்களது பாசுரங்களையும் அடர்த்தியாகத் தொகுத்து திரைமறைவிலிருக்கும் இறைவனை நம் முன் கொணர்ந்து விடுகிறார். ஒவ்வொரு பக்கமும் ஒரு புது எண்ணம் பளிச்சிடுகிறது. முழுப் புத்தகமும் படித்த பின், ஆலயம் சென்று, வழிபட்டு வந்தது போல் தோன்றுகிறது. நம்முள்ளே பதுங்கியுள்ள அகங்காரம், இப்புத்தகத்தைப் படிக்கும் நேரம் முழுவதும் மறைந்து; நிற்கப் பெறுகிறோம். ஆலய வழிபாடு ஒரு நாள் செய்தால் திருப்தி தருமோ? மீண்டும் கோயிலுக்குப் போவது போல், இப்புத்தகத்தை மீண்டும் பிரித்துப் படிக்க வைக்கிறது. உள்ளம் அமைதி கொள்கிறது.

பள்ளியில் ஆசானாக, பல ஆயிரம் மாணவர்களுக்கு அறிவு ஈந்த வித்தகர் திரு. இராமசாமி அவர்கள். அயராத உழைப்பு, அசைக்க முடியாத இறையுணர்வு, உண்மை வைணவனுக்கே உரித்தான சாத்துவீக சுபாவம், பரந்த படிப்பு, நிறைந்த ஞானம், சலிப்பற்ற எழுத்துப் பணி இவற்றின் உருவகமே திரு. இராமசாமி அவர்கள். அவர் கல்வி பயிற்றுவித்த நிலையங்களில், படிக்கக் கூடிய நல்ல அதிர்ஷ்டம் இல்லாத என் போலியருக்கும், தமது தெளிவான ஆழ்ந்த அறிவு துலங்கும் புத்தகங்கள் மூலம் பாடம் சொல்லி, உயர்ந்த ஆசானாக விளங்குகிறார்கள். ஆசானுக்கு அணிந்துரை தரக்கூடிய தகுதி இந்த மாணவிக்கு இல்லை. அதனால், இந்த வைணவச் செல்வர் இதுவரை நமக்கீந்த புத்தகரத்தினங்களுக்காக நன்றி கூறி, இவர் பல்லாண்டு பல்லாண்டு ஆரோக்கியத்துடன் வாழ்ந்து, மேலும் பலபுத்தகங்கள் எழுதி, நமக்கு ஆசானாகத் தொடர்ந்து வழிகாட்டி வர வேண்டும் என்று ஸ்ரீ ஆண்டாளை வணங்கி வேண்டுகிறேன்.

'முதல் திருமாளிகை' — **பிரேமா நந்தகுமார்.**
91, தெற்குச் சித்திரை வீதி, — 1. 7. 91.
ஸ்ரீரங்கம் – 620006

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஶ்ரீ:

அணிந்துரை வழங்கிய அறிவுத்திலகம்

பூதம் ஐந்தொடு, வேள்விஐந்து
புலன்கள்ஐந்து பொறிகளால்,
ஏதம் ஒன்றும் இலாதவவண்கையி-
-னார்கள் வாழ்திருக் கோட்டியூர்,
நாதனை, நரசிங்கனை, நவின்று
ஏத்துவார்கள் உழக்கிய,
பாததூளி படுதலால், இவ்
உலகம் பாக்கியம் செய்ததே,

பெரியாழ்வார் திருமொழி -4.4.6.

இராமாவதாரக்கதையில் நரசிம்மாவதாரக் கதை தோன்றியுள்ளது. அன்று, கம்பத்தின் நடுவில் உதித்த நரசிம்மத்தை, கவிச்சக்கரவர்த்தி, தமது இராம கதையின் இறுதியில் அவதரிக்கச் செய்து, கம்ப நாட்டாழ்வாராக விளங்குகின்றார். அதனை விளக்க எழுந்தது 'ஞானநாயகன்' என்றஇந்நூல். இந்நூலின் முதலில் தோற்றமளிக்கிறது ஒரு அணிந்துரை, அது புதுமைக்குரிய ஒன்றாகும். என்ன புதுமை?

கருத்து வளம் நிறைந்த நூல்கள், எந்த மொழியில் இருப்பினும், அந்தந்த மொழிகளின் வாயிலாகவே. நூல்களில் காணக்கிடக்கும் அறிவுச் செல்வத்தைத் தேடிப் பெறுபவர் பேராற்றல் படைத்தவராவார். அத்தகைய பேராற்றல் பெற்று அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கின்ற ஒருவர், தம்மை, மாணவ நிலையில் நிறுத்திக் கொண்டும், அந்த அறிவுச் செல்வத்தில் ஒரு சிறிதும் பெறாத ஒருவரை ஆசிரியஸ்தானத்தில் அமைத்துக் கொண்டும், ஒரு அணிந்துரை அவதரித்துள்ளது என்று சொன்னால் அது புதுமைதானே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏன் இந்தப் புதுமை?

எம்பெருமான் எடுத்த பத்து அவதாரங்களுள் நரசிம்மாவதாரம் ஒரு புதுமைத் தோற்றம் பெற்றது. எங்கும், எக்காலத்தும் யாவராலும் காணப்படாத ஒன்று, தோன்றுமேயானால், அதுதான் புதுமையைத் தழுவியதாகும், சிங்கத்தின் வலிமை காலில். மனிதனின் அறிவு ஆற்றல் தலையில். நரசிம்மம் காலினாலும், தலையினாலும் ஆற்றல் அற்ற இரண்டு உருவும் ஒன்றாக இசைந்தது. இது தோன்றிய இடம் அசேதனமாகிய கல், செய்த செயல் சேதனத்திற்குரியது.

அறிவு ஆற்றல் பெற்ற மனித உடல் கீழாகவும், அந்த ஆற்றல் அற்ற சிங்கத்தலை மேலாகவும் அமைந்த ஒரு திருவுருவம்தான் நரசிம்மம், இந்தத் திருவுருவம் ஆற்றிய செயல் ஆற்றல் மிக்கது: அற்புதமானது. அதனால், எல்லா வகையாலும் நரசிம்மாவதாரம் புதுமை பூத்துப் பொலிவது. தோற்றத்தால் புதுமை பெற்ற இந்த அவதாரம், காலத்தால் பழமைக்குரியது. கம்ப நாட்டாழ்வார் இந்தப் பழமையைத் தமது காவியத்தில் புதுமையாக்கினார். கம்பர் பாட வந்தது இராமாவதாரம். இது, நரசிம்மாவதாரத்திற்குப் பிந்தியது. காலத்தால் பிந்திய அவதாரக் கதையில், காலத்தால் முந்திய நரசிம்மாவதாரக் கதையைக் கொண்டு வந்து இணைத்தது ஒரு புதுமைதானே இதற்கு முன்பு எந்த மொழிக் கவிஞரும் செய்யாத ஒன்று இது. அதனால், இந்த இரு அவதார இணைப்பு ஒரு புதுமைக்குரியதுதானே!

அவதாரத்தாலும், இணைப்பாலும் புதுமைக்குரியதாக அமைந்தது இரணியன் வதைப்படலம். அதனை விளக்க வந்தது 'ஞானநாயகன்' என்ற இந்தநூல். அதனால், இதற்கு அமைந்த அணிந்துரையும் புதுமை பெற்றது போலும்! ஒரு நூலுக்கு அணி செய்வது, அந்த நூலைப் பற்றிய பிற அறிஞர்களது கருத்துரை. அந்தக்கருத்துரைகள் அந்நூலுள் அடங்கிய கருத்துக்களுக்கு, மேலும் பல விளக்கங்களையும் தெளிந்த சிந்தனைகளையும் தருமாறு அமையுமேயானால், அது அழகுக்கு அழகு தருவதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்படி அழகியதொரு அணிந்துரையை இந்த நூலுக்கு வழங்கியவர், 'அறிவுத்திலகம்' என்று அறிஞர்களால் போற்றப்படும் அம்மையார் ஒருவராவர்.

அவர், பேராசிரியர் திரு. K. R. சீனிவாச அய்யங்கார் என்ற அறிஞர் பெருமகனாருக்குத் திருக்குமார்த்தியாகத் தோன்றியவர்: ஸ்ரீரங்கத்துத் தாத்தாச்சாரியார் இல்லத்துக்குக் குல விளக்காக வாழ்பவர்: இளமை முதற்கொண்டே, காலத்தை வீழ் நாளாக்காது, வாழ்நாளாக்கும் முயற்சியில் கல்விப் பயிற்சி பெற்றவர்: இலக்கிய ஆய்வுத் துறையில், டாக்டர் பட்டம் பெற்றவர்: ஆங்கிலம், தெலுங்கு, தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் முழுப் புலமை பெற்றவர்: இம்மொழிகளில் நூல்கள் பல உருவாக்கிக் கொடுத்தவர்: மிகச் சிறந்த எழுத்தாளர்: நல்ல மொழி பெயர்ப்பாளர்: நடுநிலை குன்றாமல் ஆய்வுசெய்யும் இலக்கியத் திறனாய்வாளர்: சிறந்த நூல்களை, மனம் ஒன்றிப் படித்து உணர்ந்து அனுபவிக்கும் உயர்ந்த ரசிகர்: எல்லாவற்றுக்கும் மேலாக கற்றதன்படி, நெறி பிறழாது நடக்கும் வைணவ வாழ்வினர்! இவ்வளவு நிரம்பப் பெற்றிருந்தும், அ ட க் க மா க வே உருவாகத் திகழ்பவர். **பிரேமா நந்தகுமார்** என்ற திருநாமம் கொண்ட இந்தப் பெண் மணியை பற்றி அறியாத அறிஞர் யாரும் இலர் என்றே கூறலாம்.

'புயல் நிலைப்பதில்லை,' 'அமுத்துளி உதிர்ந்தது,' 'ஒரு நாள் பொழுது' என்ற சிறு கதைகளின் மூலமாகவும், மணிமேகலை, பாரதியார் பாடல் திருவிருத்தம் என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களின் மூலமாகவும், கிருஷ்ணதேவராயர் எழுதிய ஆமுக்தமால்யதா என்ற தெலுங்கு நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு மூலமாகவும், தினமணி, இந்து இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலிய இதழ்களில் எழுதிவரும் உயர்ந்த கட்டுரைகளின் மூலமாகவும் அறிஞர் உலகில் உலாவி வருபவர் திருமதி பிரேமா நந்தகுமார் அவர்கள்.

இவ்வளவு அளவற்ற அறிவுக் களஞ்சியமாகத் திகழும் பிரேமா நந்தகுமார் அவர்கள் எனது சிறு நூலுக்கு ஒரு அணிந்துரை கொடுத்திருக்கிறார் என்றால், அதுவே அவரது பெருந்தன்மையாகும். அதுவே யான் பெற்ற பெரும் பேறாகும். அதனை எண்ணி எண்ணி இன்புறுவேன்: அவர்க்கு என்றும் மறவா நன்றியை உரித்தாக்கி மகிழ்வேன்.

இராசிபுரம்
7—7—91

அன்புள்ள,
மு. இராமசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

ஞானநாயகன் பிரகலாதன்

"ஓம் நமோ நாராயணாய" என்று
உரைத்துஉளம் உருகி,
தான்அமைந்து, இருதடக் கையும்
தலைமிசைத் தாங்கி,
பூநிறக் கண்கள் புனல்உக,
மயிர்ப்புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன்;
அந்தணன் நடுங்க,

கம்பராமாயணம் 6211

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

'எங்கும் உளன் கண்ணன்' என்றமக னைக்காய்ந்து
'இங்குஇல்லை யால்' என்று இரணியன் தூண்புடைப்ப
அங்குஅப் பொழுதே அவன்வீயத் தோன்றிய, என்
சிங்கப் பிரான்பெருமை யாராயும் சீர்மைத்தே?

திருவாய் மொழி 2. 8. 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரபந்தப் பாசுரம் கண்ட பிரகலாதன்

எல்லை இலாத தவமும் வரமும் கருதி, அல்லல் செய்த இரணியனுக்கு அஞ்சி, இமையோர் இறைவனை அடைந்து, 'வணங்காமுடியான் உன்னை இகழ்ந்தான்; மூர்க்கன் செயலால் தளர்ந்தோம்: சரண்தா' என்ன, 'அரண் ஆவோம்; முரண் ஆனவனை முடிப்போம்' என்றான்.

பொன் பெயரோன் பள்ளியில் ஓதிவந்த தன் சிறுவன், இறைவனது ஆயிர நாமம் ஓத, பொறுப்பு இலன் ஆகி, பிள்ளையைச் சீறி, வெகுண்டு, தூண்புடைத்தான்.

அளந்திட்ட தூணை அவன் தட்ட, ஆங்கே வளர்ந்திட்டது ஓர் பிறை எயிற்று அனல்விழிப் பேழ்வாய் ஆள் அரி; அது கண்ட பொன்னன், வயிறு அழலவாள் உருவி எதிர்ந்தான். வாள் எயிற்றுக் கோளரியோ, ஏனோர் அஞ்ச, வெஞ்சமத்து எரி விழித்தது.

அப்போது, வானோர், 'எரித்த பைங்கண், இலங்கு பேழ்வாய், எயிற்றொடு, இது எவ் உரு?' என்று கலங்கி இரிந்தோட, நாத்தழும்ப நான்முகனும் ஈசனும் முறையால் ஏத்த, அந்திஅம் போதில் வந்த ஆள் அரி, உரம்பற்றி, இரணியனை உகிர் நுதியால் ஒள்ளிய மார்வு உறைக்க ஊன்றிச் சிரம்பற்றி, முடி இடியக் கண்பிதுங்க, வாய் அலற, ஒண்மார்பு அகலம் குருதி குழம்பி எழ, வள் உகிரால் மார்பு இரண்டு கூறாகக் கீறி, போழ்பட ஈர்த்துப் பிளந்து தெழித்தான். குலமகற்கு இன் அருள் கொடுத்தான். ★

★ இயற்பா-பக்-174 மர்ரே கம்பெனி-எஸ். ராஜம் வெளியீடு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

நூல்முகம்

'வித்தகக்கவி'

"அழகுச்சொல் அமுதப்பண் ஆழக்கருத்து, அற்புதக் கற்பனை, ஆர்வக்கனல் - எல்லாம் கம்பக்கலையில் பரந்து விரிந்து குவிந்து கிடக்கின்றன. கம்பன் வடித்த கவி அமுதில் அருள் மெருகேறிப் பொலிவது இரணியன் கதையே. இரணியப்படலம் அமரத் தன்மை பெற்ற அருட் சிறப்பாகும். சாணை பிடித்த மந்திரச்சொற்கள்: மலையருவி நடை: விண்ணோங்கும் வியப்பணி; வேதச்சுவை; பழுத்த யோகிகளும் வியக்கும் உள்ளனுபவம் - இரணியப் படலத் தின் சிறப்பாகும். தெய்வப் புலவனான கவியரசன் இங்கே வேத வித்தகச் சித்தனாகிறான். வித்தகக் கவி வாழ்க! இந்தப்படலமும் வேதம் கண்ணிய பொருளில் தொடங்கு கிறது.

இரணியன் கதை வால்மீகியில் இல்லாத புதுமை; அழகிய சிங்கர் சிலையே நெகிழ்ந்தது; சொற்சிங்கத்தைக் கற்சிங்கம் கைதூக்கி ஆசீர்வதித்தது கலை உருவான கம்பச் சித்திரத்தைக் கல்லுருவான நரசிங்கம் வியந்து போற்றி இன்பக் கூத்தாடியது. மில்தனும் தாந்தேயும் கேட்டால், கம்பனை உச்சிமேல் வைத்துக் கொண்டாடு வார்கள். ★

என்பது, யோகி சுத்தானந்த பாரதியார் அவர் களது இரணியன் வதைப்படலம் பற்றிய நுண் உணர்வுக் கருத்து.

இக் கருத்து, மேலும் ஆழமாக அழுத்தம் திருத்த மாக, பல ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்திப் பேசப் பட்டுள்ளது.

★ உங்கள் கம்பன் - பக்கம்- 104 பி - ஸ்ரீ - நூலகம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேராசிரியர் திருமணம் திரு. தி. செல்வக் கேசவ ராய முதலியார் அவர்கள், கம்பன் காவியத்தை பிற மொழிக் காவியங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்த சிறந்த இலக்கியத் திறனாய்வாளர்.

அந்தப் பேரறிஞரது திறனாய்வு :

"தமிழ் இராமாயணத்துக்கு வால்மீகியே முதல் நூல் என்று கம்பரே சொல்லி விட்டார், யுத்த காண்டத்தில் கூறிய இரணியப் படலம் கம்பருடைய படைப்பு. இராம சரிதத்தில் இரணிய வதையை இடைப் பெய்து கூறுவது மற்றொன்று **விரித்தல்** என்ற குற்றமாம் என்பர் சிலர். பாரகாவியம் செய்த ஆசிரியர் இது குற்றமாகுமென்று கொண்டால், அங்ஙனம் கூறார். பிரகலாத வரலாற்றில் மிகப் பற்றுடையராய் அங்ஙனம் கூறினாருமல்லர். இவ் வரலாற்றை வீடணன் கூற்றாகவன்றோ கூறினார்? சீராமனுடைய பெருமையை இராவணனுக்கு வற்புறுத்திக் காட்டி இராவணன் வணங்கி உய்யுமாறு எடுத்துரைத்தது இவ்வரலாறு. ஆகவே இது மற்றொன்று விரித்தலாகாது இரணியப்படலம் ஒன்று தவிர ஏனைக் கம்பராமாயணம் முற்றும் அழிந்து விட்டாலும், பெரிதன்று: கம்பருடைய கவித்திறமையினையும் இயற்கைப் புலமையினையும் காட்ட இப்படலம் ஒன்றுமே போதிய சான்றாகும். யுத்த காண்டமே கம்பராமாயணத்தில் மிக மிடுக்கான காண்டம் எனத் தமிழ் வல்லார் கூறுவதுண்டு. இவ்விரணியப் படலமோ, அக்காண்டத்தின் ஏனையப் படலங்களிலும் மிடுக் குடையது. ஆசிரியருடைய கருத்துக்களும், நடையும், மெய்ப் பாடுகளும் இப்படத்தில் அத்தனை உரம் பெற்றிருக் கின்றன." ✱

✱ கம்பநாடர் - பக். 62.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்பே, தெளிவாக்கப்பட்ட முதலியார் அவர்களது ஆய்வுரை, பாரதியாரது கருத்துக்கு நல்லதோர் அரணாக அமைந்துள்ளது.

கவிச்சக்கரவர்த்தியின் புதுமைப் படைப்பு இரணியன் வதைப்படலம் 176 கவிதைச் செல்வங்களைக் கொண்ட இந்தப்படலம் ஒன்றுமே போதும், உலகப் பெருங் கவிஞர்களின் பேரவையில் கம்பரை கவிச்சக்கரவர்த்தியாக வீற்றிருக்கச் செய்வதற்கு.

கம்பராமாயணக் காவியம் முழுவதையும் ஆழ்ந்து கற்று, அதில் தம்மைக் கரைத்துக் கொண்ட அறிஞர் பெருமக்கள் அனைவரின் கருத்தும் இதுவேயாகும்.

வ. வெ. சு. அய்யர் அவர்கள், தேசிய நல்லுணர் வினர்; சிறந்த இலக்கியத் திறனாய்வாளர்; தத்துவப் பேருண்மை கண்ட சமயப் பெருவாழ்வினர். இத்தகைய பேறறிஞரின் ஆய்வுரையும் இக்கருத்தை உறுதிப் படுத்துகிறது.

"கம்பராமாயணத்தின் பெருமையெல்லாம் இவ்வுத்த காண்டத்தில்தான் காணப்படும். இதுதான், கம்பராமாயண மாகிற விஸ்தாரமான துர்க்கத்தில் அரசன் உகந்து வாழும் அரண்மனையாகும். ஆகையால் கம்பன் தனது ரசனைத் திறன் அனைத்தையும் இங்கு காட்டியிருப்பான் என்று எதிர்பார்ப்பது முறையேயாகும். கம்பனும் அவ்வாறே, உண்மையில், தன் சக்தியனைத்தையும் இக்காண்டத்தில் காட்டியுள்ளான்.

அரக்கரின் மந்திரத்தில்தான், உபாக்கியான ரத்தின மாகிய இரணியன் வதைச் சரித்திரம் விபீஷணனால் ராவணனுக்கு சொல்லப்படுகிறது. ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப் பொம்மா போதன்னா ஆந்திர பாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப்படலம் வெகு சுலபமாக வென்று விட்டது."★

★கம்பன் கவிதை, கம்பராமாயண ரசனை - பக். ருச, ருரு (54, 55) வரகனேரி, வெங்கட சுப்ரமணிய அய்யர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது, அய்யரவர்களின் கம்பராமாயணரசனையில் கண்ட ஆழ்ந்த ஆய்வுரையாகும்.

இவ்வாறு, இரணியப்படலத்தின் இனிமையையும் பெருமையையும் கவிதைச் சிறப்பினையும் எடுத்துரைப்பவர்கள். கம்பச் சோலையில் கனிந்து தொங்கும் செவி நுகர் கனிகள் அனைத்தையும், சுவைத்துச் சுவைத்து இன்புற்ற ரசிகப் பெருமக்களாவார்.

அதனால் 'இவர்கள் கூற்று, உண்மையை உணர்த்துவதுதான்; வெறும் புகழ்ச்சி அன்று.' என்றே தெளிய வேண்டும்.

இப்படித் தெளிவு கொள்ளாமல், 'இக்கருத்து உண்மைதானா? இல்லை: வெறும் புகழ்ச்சிதானா?' என்று ஆய்வு செய்ய முற்பட்டால், அவர் அறியார் எதனையும் எந்த ரசனையையும் அறியார்தான்.

அந்த அறியார் குழுவில் ஒருவனாக அடியேன் அங்கம் வகித்த காலமும் ஒன்று உண்டு. அது அறியாக் காலம் என்று உணரும் அறிவு, தோன்றவில்லை அன்று அடியேனுக்கு.

அந்த அறியாக் காலத்தே, 'எது உண்மையான அறிவு' என்பதனை, தெளிவாக எடுத்துக்காட்டி, அடியேனைத் திருத்திப் பணிகொண்ட பெருமை, அண்ணார் திரு. எஸ். கே. இராமராசன் அவர்களுக்கே உரியதாகும். (வேலூர்)

அண்ணார் 'கல்விக்கடலாக' விளங்குபவர். எங்கு? தமிழகப் பேரறிஞர் குழுவில், பேரறிஞர்கள் எனப் பாராட்டுப் பெற்றவர்களும், இவரிடம்தான், பல இலக்கிய வரலாற்றுப் பேருண்மைகளையும், கவிதையைச் சுவைக்கும் முறையையும், கவிதைகளுக்குள் அடங்கிக் கிடக்கும் கருத்துச் செறிவையும், ஆழ்பொருளையும் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அவர்களும், இவரிடம்தான் கேட்டுத் தெரிந்தோம்? என வெளியில் சொல்லமாட்டார்கள். இவரும் கொடுத்தேன்' என்று சொல்லமாட்டார். அவ்வளவு அடக்கமானவர்; மிகு பொருள் அடங்கப்பெற்றவரல்லவா!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு வகையில், அடங்காதவர் இவர். என்ன அடங்காதவர்? ஆர்வம் அடங்காதவர். என்ன ஆர்வம்? வாழ்க்கைத் தத்துவப் பேருண்மைகள் அடங்கிய நூல்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம்: தாம் கற்றுத் தெரிந்த உண்மைகளைப் பிறர்க்குத் தெரிவிக்க வேண்டும் என்ற ஆர்வம். இவரது, அடங்காத இந்த இரு ஆர்வமும் எத்தனையோ இளைஞர்களை இலக்கிய இன்பத்தின் பால் ஈர்த்து வைத்துள்ளன.

கம்பராமனாய் வளர்ந்து வாழ்ந்து வரும் அண்ணார் கம்பன்பால் ஈடுபாடு அற்றவர்களையும் கூட, கம்பன் கவி அமுதைச் சுவைக்க வைத்து, அவர்களை, கம்பன் ரசிகர் குழுவில் இணைத்து வைக்கும் ஆற்றல் பெற்றவர். அந்த ஆற்றல்தான், எல்லாம் அறிந்தவன் போன்று, போலி மயக்கம் கொண்டவனாய், அறியார் குழுவில் கூடிக் குலாவிக் கொண்டிருந்த அடியேனை, கம்பன் ரசிகர் குழுவில் ஒருவனாக இணைத்து வைத்தது.

இந்த இணைப்பின் பயன். அடியேன், நாவின் இனிக்கப் பருகிய கம்பன் கவி அமுதச் சுவையை, எழுத்துருவில் வடித்து, புத்தகங்களாக வெளியீடு செய்வதாகும்.

வெளியீடு வரிசையில் ஒன்றாக இணைய வருவது இந்த 'ஞானநாயகன்' என்ற நூல்.

இது, நல்லதோர் உருப்பெற்று வெளி வருவதற்குக் காரணமாய் இருந்தது, அண்ணாரின் அன்புள்ளத் தூண்டுதல்தான்.

காரணம் :

"நம் பாரதநாடு பழம்பெரு நாடு, பாரினில் இதற்கு இல்லை ஈடு" என்று புகழப்பட்டது அன்று. இன்று, நாடு, சொல்லுதற்கு ஒண்ணாக் கொடுமைகளிலும் துயரங்களிலும் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது: பிறநாட்டு நல்லறிஞர்களின் இரக்கத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏன் இந்தக் கொடுமைகளும் துயரங்களும்? துயரங்களை அனுபவிப்பவர் பலர்: கொடுமைகள் இழைப்பவர் சிலர். நாட்டில், தம் வாழ்க்கையில் துயரங்களையே சந்திப்பவர் பலர் கொடுமைகளையே சிந்திப்பவர் சிலர்.

சிலரது கொடுமை உணர்வே, பலரது துயரங்களுக்கும் காரணமாகும்? எப்படி? ஆள்பவர் சிலர்: ஆளப்படுபவர் பலர்

நாட்டை ஆள வருபவர்கள் அரசியல் வாதிகள். ஆளப் படுபவர்கள் தேசியவாதிகள். ஆள வரும் அரசியல்வாதிகள் தன்னலக்காரர்களாய் அமைந்து விடுகின்றார்கள்.

தன்னலம் குடிகொண்ட உள்ளத்தில், பிறர் நலம் பேணும் பெருந்தகைமை சிறிதும் புக முடியாது. அந்த உள் ளத்தில் என்னதான் புகும்? தமது நலத்தைப் பேணிப் பாது காத்துக் கொள்ள வேண்டி, பிறர்க்குத் துயர் விளைக்கும் கொடுமை உணர்வே புகும்!

தன்னலம் மிகுந்த அரசியல் வாதிகள் ஆட்சிப் பொறுப் பில் அமர்ந்து விட்டால், அவர்களது செயல்களால், அந்தத் தேசத்தில் நாசமே விளையும்: நல்லது விளையாது.

நாட்டில் நல்லனவே விளைவிப்போம் என்று சொல்லிக் கொண்டு, ஆட்சிப் பீடத்தில் ஏறும் அரசியல்வாதிகள், சுய நலமிகளாக மாறிவிட்டால், அந்த நாட்டில் அல்லல்தான் விளையும். அல்லலை அகற்றுபவர் யார்? அரசியல்வாதிகள் அல்ல! அவர்களது சுயநலப்போக்கு, நாட்டின் துயரைப் போக்காது.

மக்களின் துன்பம் துடைக்க வந்தவர்கள் மாக்களாக மாறலாமா? இந்த மாற்றம் நாட்டு மக்களுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம்!

'மக்கள் தாமே ஆறறி உயிரே'
மாவும் மாக்களும் ஐயறி வினவே' ✱

என்று தொல்காப்பியர் மக்களுக்கும் மாக்களுக்கும் இலக்க ணம் கூறியுள்ளார்.

✱ தொல்காப்பியம் சூத்திரம் 588. 587

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித உருவில் உலாவிவரும் அரசியல்வாதிகள் உள்ளத்தில், சுயநலம் புகுந்து விட்டால், அது, அங்கு, ஏற்கனவே குடியிருந்த ஆறாவது அறிவை ஓட ஓட விரட்டிவிடும். ஆறாவது அறிவு அகன்றவர், ஆட்சிப்பீடம் அமர்ந்துஅதிகாரம் செலுத்த முற்பட்டு விட்டால், அங்கு, ஆளப்படும் மக்கள் படும் துயரங்கள் அளவு கடந்த தாகவே இருக்கும்.

அதிகாரம் எங்கு குவிகின்றதோ, அங்கு கொடுமை உணர்வே விரிகின்றது. காரணம் சுயநலத் தூண்டுதல்தான். சுயநலத் தூண்டுதலுக்கு ஆளாகி ஆணவம் நிறைந்த அரசியல் வாதிகளான சிலரால்தான், மக்கள் பலரும் பலப் பல விதமான துயரங்களுக்கு ஆளாகின்றனர்.

நாட்டின் இன்றைய நடப்பு, அத்தகைய நிலைக்கு நம் பாரதநாடு தள்ளப்பட்டு விடுமோ, என்ற அச்சம், தேசிய நல்லுணர்வு படைத்த பண்பாளர் உள்ளத்தில் தோன்றுவது இயல்பு.

அத்தகைய இயல்பினருள் ஒருவர் எம் அண்ணார். நல்லதோர் அச்சத்துக்கு ஆட்பட்ட அண்ணார் 'இன்றைய் நாட்டின் நடப்பை மாற்றுவது எப்படி?" என்று சிந்தித்தார். நீண்ட சிந்தனையில் தோன்றியது ஒரு தெளிவு. அந்தத் தெளிவின் விளைவு. இந்த ஞானநாயகன் வரவு.

அதிகாரம். எப்படி? சுயநலக்காரரின் ஆணவ வளர்ச்சிக்குத் துணைபோகிறது: ஆணவம் கலந்த அதிகாரம் அரசாங்க நிர்வாகிகள் பலரைப் பணியவைக்கிறது; தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறது: அவர்கள் மூலம் கொடுஞ் செயல்களை பலப்பல உருவில் பரப்புகிறது.

அதன் பயன், யார், நாட்டை ஆளும் அதிகாரத்தை அரசியல்வாதிகளுக்கு வழங்கினார்களோ, அந்த மக்களிடமே துயரங்களின் உருவில் வந்து ஆட்டி, மக்களை வாட்டி வதைக்கிறது அந்த அதிகாரம்.

மக்கள் துயரங்களின்றும் விடுபட வேண்டுமானால், கொடுமை பல புரியும் அதிகார ஆணவ அரசியலாரை அடக்கி அவரை, வெல்லும் ஆற்றல் படைத்தவர் நாட்டில் தோன்ற வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகார ஆணவத்தை அடக்கி, வெற்றி பெற்றவர் தோற்றம் இங்கு உண்டா?உண்டு. நம் பாரத நாடு, அத்தகைய ஆற்றல் பெற்றவர் பலரைத் தோற்றுவித்துள்ளது. அவர்களுள் முதன்மையாகத் திகழ்பவர் ஒருவர் உண்டு. அவர்தான் பிரகலாத ஆழ்வார்.

இது பழம் பெரும் வரலாறு. அன்பு வென்றது. ஆணவம் தோற்றது. வெற்றிக்குக் காரணம் அன்பு அனைவரையும் அணைந்துக் கொண்டது. தோல்விக்குக் காரணம் ஆணவம் அனைவரையும் அடிமையாக்கி, தனது அதிகாரத்துக்குப் பணிய வைத்துக் கொண்டது, ஆணவம், ஹிம்சையின் உச்சியில் நின்று ஆட்சி செலுத்தியது; அன்பு, அஹிம்சையின் மூலம், ஆணவத்தைக் கீழிறக்கி அழித்தது. இந்த வாழ்க்கைத் தத்துவத்தை, இரணியன், பிரகலாதன் என்ற இரண்டு பெரும் பாத்திரங்களின் மூலம் விளக்குகிறது, இந்தப் பழம் பெரு வரலாறு.

இதைப் பற்றி, தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் கூறியிருப்பது, நம் கவனத்தில் இருத்துதற்குரிய நல்லதோர் கருத்துச் செல்வமாகும்.

“பிரகலாதன் என்ற சத்தியாக்கிரகி உலகறிந்தவன் அவன் கல்வி பயிலத் தொடங்கிய போது, தன் தந்தை பெயர் கருதி, “இரணியாயநம:” என்று சொல்ல மறுத்து ‘ஹரி ஓம் நாராயணாய நம:’ என்றான். ஆசிரியன் பன்முறை வலியுறுத்தியும் பிரகலாதப் பெரியோன், ‘ஹரிஹரி’ என்றே முழங்கிக் கொண்டிருந்தான். தந்தை பேர் கூற மறுப்பது அறமோ என்று சிலர் வினவலாம். தந்தைக்குரிய கடனாற்ற இளைஞர்கோன் மறுக்கவில்லை. எழுத்துத் தொடங்கும் போது, அதற்குரிய எல்லாம் வல்ல இறைவன் திருப் பெயரைச் சொல்லாது, அதற்குப் பதிலாகத் திமிர்கொண்ட அரக்கன் பெயரை ஆசிரியர் சொல்வது அறமோ? அதைச் சொல்லுமாறு பிறரைவலியுறுத்துவது முறையோ? நெறியல்லா நெறிசெல்லச் சத்தியாக் கிரகிகள் என்றும் ஒருப்படமாட்டார்கள். தந்தையாயினுமாக: அரசனாயினுமாக, எவனாயினுமாக. அவர் செம்மைநெறி பிறழ்ந்து நடப்பாராயின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் வழிநில்லாது,அவரைத் திருத்தவும் நெறியைச் செம்மைப் படுத்தவும், சத்தியாக் கிரகிகள் முயன்றே தீர்வார்கள். தீ நெறி பற்றி உலகே உழலினும், சத்தியாக் கிரகி, 'கொல்லாமை' என்னும் அறவழி நின்று உலகை எதிர்த்தே தீர்வன். இங்கே பிரகலாதன் செயல் நோக்கற்பாலது உலகம் இரணியன் ஆணைக்கு அஞ்சி, அக்கொடியனை நாராயணனாகத் தொழுதது. நம் பிரகலாதச் செல்வம், உலகத்தோடொத்து நடக்க மறுத்தது; ஆசிரியன் ஆணைக் குக் கீழ்ப்பட்டு நடக்க இசையவில்லை, சக்தியாக்கிரகிகள் அறமென்னே! திறமென்னே! பிரகலாதன் உறுதி .... ஆத்மசக்தியின் வலிமையே வலிமை." ✱

திரு. வி. க. அவர்களின் இந்தக் கருத்துச் செல்வத்தில், தம் கவனத்தைச் செலுத்தினார் எம் அண்ணார். 'ஆம் ஆம் ஆத்மசக்தியின் வலிமைதான், இன்றைய அரசியல்வாதி களின் தன்னல ஆணவத் திமிரை அடக்கும்' என்ற தீர்மா னத்துக்கு வந்தார் அண்ணார். அதனால், தனது ஆத்மசக்தி யால், ஆணவத் திமிரை அடக்கிய பழம்பெரும் வரலாற்றுச் செல்வனான பிரகலாதனை, இன்றைய இளைஞர் உள்ளத் தில் புதுப்பித்துக் காட்ட விரும்பினார் அவர்.

அண்ணாரது தூய விருப்பம், தம்பியின் உள்ளத்தைத் தட்டி எழுப்பியது; ஊக்குவித்தது; உற்சாகப் படுத்தியது; எழுதும் கைக்கு, வலிமை சேர்த்தது, எப்படி?

'இன்றைய இளைஞர் உள்ளம், ஆத்மசக்தியின் ஆற் றலை உணரும் வண்ணம் எழுதப்படவேண்டும். இதற்கு, எந்தப் பெரியவர் கூறிய பிரகலாத வரலாற்றைப் பின்பற்று வது?" என்பது இந்தத் தம்பியின் கேள்வி.

'இரணிய பிரகலாத வரலாற்றை, கவிச்சக்கரவர்த் திக்கு முன்னும் பின்னும் எத்தனையோ அறிஞர் பெருமக்கள் எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், எதுவும், கம்பன் பாடிய இரணியப் படலத்துக்கு முன் நிற்க முடியாது. கம்பன் படைத்த இரணியன் வதைப்படலம், எளியது: இனியது: ஏற்றம் பெற்றது. அதனால் அதன் வழிச் செல்க' என்பது அண்ணார் இட்ட அன்பு ஆணை.

✱ மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும் - பக். 75, 76. (திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆணையைத் தலைமேற்கொண்டு கம்பன் காவியத்தை எடுத்தேன்: விரித்தேன்: இரணியன் வதைப்படலத்துள் நுழைந்தேன்: ஒவ்வொரு கவிதையாகப் படித்தேன்: சுவைத்தேன்: ஆழ்பொருளை ஆய்ந்தேன்: உண்மையை உணர்ந்தேன்: தெளிந்தேன்: சுவைத்து, உணர்ந்து தெளிந்ததை எழுதத் துணிந்தேன்.

துணிவுக்குப் பிறகு ஒரு ஐயம் குறுக்கிட்டது. சுவைத்ததை எழுதுவதா? ஆய்வு செய்ததை எழுதுவதா? இந்த ஐயம் அகன்றதால்தானே, எழுத்து ஓடும்: எழுத்தில் தெளிவு பிறக்கும்.

சுவைப்பது வேறு: ஆய்வு செய்வது வேறு. கவிதையைச் சுவைக்கும் போது, ஆய்வுக்குரிய அறிவுக்கு அங்கு வேலை இல்லை. கவிதையுள் அடக்கப் பெற்ற ஆழ்பொருளை ஆராய்ச்சி செய்யும் போது அறிவுதான் முன்னிற்க வேண்டும்.

உணர்வு சுவைக்கும்: அறிவு ஆராயும்.

கவிதையை நன்கு சுவைக்கத் தெரிந்தவன்தான், கவிதைப் பொருளை ஆராய முடியும். சுவை உணர்வு இல்லாதவன் கவிதைக்குள் நுழைந்தால், வெறும் வறட்சியைத் தான் காண்பான்.

'பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரில் பொழிந்த தீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே - நூலின்
நன்னய முற்றும் தெளிகுவமே!

என்பது கவிமணியின் விளக்கம். முதலில் பருக வேண்டும்: பிறகு, பொருளைத் தெளிய வேண்டும். பருகவும், தெளியவும் வல்லவனே கம்பனைக் கற்பவன் ஆவான்.

கவிமணியின் கவிதை விளக்கம் ஐயத்தை அகற்றியது. அதனால், இரணியப் படலத்துள், அடியேன் சுவைத்துணர்ந்த கவிதைச் சுவையையும், ஆய்ந்து தெளிந்த சமயதத்துவப் பொருளையும் எழுத்துருவமாக்க எண்ணம் கொண்டேன்.

அந்த எண்ணம் எந்த அளவு செயல்பட்டிருக்கின்றது என்பதை அடியேன் அறியேன்: வாசகர்கள் உணரலாம்.

இந்நூல்:

இரணியன் வதைப்படலத்துக் கவிதைகள், அடியேன் பெற்ற சிறு ஞானத்துக்கு ஏற்ப விளக்கம் பெற்றுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பருக்கு முன்பு, இந்த வரலாற்றுக்கு வடிவம் தந்த நல் அறிஞர்களின் கருத்துக்களும், கம்பருக்குப் பிறகு, இதனைத் தொட்டு வளப்படுத்திய கவிஞர்களின் விளக்கமும் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.

ஆழ்வார்களின் பாசுரப்படி அமைந்த பிரகலாத வரலாறும் இங்கு இடம் பெற்றுள்ளது.

இறுதியில், இரணியன் வதைப்படலம் மூலம் மட்டும் (176) தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

நன்றிக்குரிய நல்லோர் :

இந்நூலின் தோற்றத்துக்கு முதல் காரணமாக விளங்கும், அன்புத் தோற்றத்தினராய அண்ணார் திரு. எஸ். கே. இராமராசன் அவர்கள்.

இதனை, நாமக்கல் கம்பன் விழாவில் வெளியீடு செய்ய அனுமதிதந்த, நாமக்கல் கம்பன் கழகத் தலைவர் திரு. R. சுந்தரராஜு ரெட்டியார் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும்.

இதனைக் குறிப்பிட்ட காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய அன்புத்தம்பிகள் திரு. எஸ். சண்முகம் எஸ். வாசு அவர்கள். (சன்-மூன் அச்சகம். அம்மாப்பேட்டை, சேலம்) இவர்கள் அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

வணக்கத்துக்குரிய பெரியவர்கள் :

இதனைப் படித்து உணர்ந்து இன்புறும் இலக்கியச் செல்வர்கள்: அடியேன் அறியாது செய்துள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டும் சான்றோர்கள்: பக்தப் பிரகலாதனைப் போன்று கொடுமையை எதிர்க்கும் ஆற்றலைத் தம்மிடம் வளர்த்துக்கொள்ள விரும்பும் பண்பாளர்கள்: 'இந்நூலின் மூலம் நான் பயன்பெற்றேன்' என்று எழுதித் தெரிவிக்கும் பக்திப்பேருள்ளத்தினர்.

இவர்கள் அனைவரையும் வாழ்த்தி வாழ்த்தி வணங்கி மகிழ்வேன்.

நிறைவாக :

'இறுதியில் நாராயணனின் நினைவே வாழ்வில் பெறத் தக்க பெருலாபம்.'

'ஒவ்வொரு செயலின் இறுதியிலும், இது அவனால் நடந்தது என்று நினைப்பதே பெருலாபம்'

என்ற பிரம்ம ஸ்ரீ இராதாகிருஷ்ண சாஸ்திரிகளின் தத்துவ உரையை உள்ளத்து இருத்திக்கொண்டு நிறைவு பெறுகின்றேன்.

இராசிபுரம். அன்புள்ள அடியேன்,
24—5—91 **மு. இராமசாமி.**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. கவிச்சக்கரவர்த்திக்கு முன்னும் பின்னும்

செல்ல உணர்ந்தவர் செல்வன்தன்
சீரின்றிக் கற்பரோ?
எல்லை இலாத பெருந்தவத்-
-தால்பல செய்மிறை
அல்லல் அமரரைச் செய்யும்
இரணியன் ஆகத்தை
மல்லல் அரிஉரு வாய்ச்செய்த
மாயம் அறிந்துமே. ✱

1. வேதம் :

நமது இந்து சமயத்தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது வேதம். வேதம்தான் மிக மிகப் பழமை யானது. அது நான்கு வகைப்படும். அதனுள் ஒன்று அதர்வண வேதம். இதில் 'நிருஸிம்ஹதாபநீ உபநிஷத்' என்ற பகுதி உள்ளது. அதில் நரசிம்மத்தின் உபாசனை கூறப்படுகிறது. நரசிம்ம வரலாறு இல்லை.

'பூர்வதாபநீ' 5 உபநிடதங்களைத் தன்னகத்தே கொண்டது. இது, நரசிம்மரைத் துதிப்பதற்காகவே ஆயுளை அடைவோம் என்று கூறுகிறது.

'பாற்கடலில் படுத்திருப்பவராகவும், நரஸிம்ஹ மூர்த்தியாகவும், யோகிகளால் தியானம் செய்யப்படுபவருமா கவும் இருக்கின்றவரை பரமபதமாக அறிய வேண்டியது. அப்படி அறிந்தவன் அமிர்தத்துவத்தையும் அடைகின்றான்' 5-வது கண்டம்.

'விஷ்ணுவானவர் தன்வீரியத்தால் ஸிம்ஹமாகத் துதியை அடைகிறார்: பயங்கரம் இல்லாதவர்: பர்வதக்குகையில் இருக் கின்றவர்: தன்னுடைய பிரமன், விஷ்ணு, மஹேஸ்வரன் என்ற மூன்று பெரிய சொரூபங்களில் இருந்து கொண்டு புவனங்களை வசிக்கும் படிச்செய்கின்றவர்."3-வது கண்டம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

✱ திருவாய்மொழி 7. 5. 8.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதம், நரசிம்மத்தைப் பர்வதக்குகையில் இருப்பவராகக் கூறுவதால்தான், இந்த மூர்த்தியை, மலைக்குகைகளில் பிரதிஷ்டை செய்தனர் போலும்! நாமக்கல் மலைக்குகைக் கோயில் சிங்கவேழ்குன்றம் (அகோபிலம்) முதலிய தலங்கள் இதற்குச்சான்று பகர்கின்றன.

சிங்கவேழ் குன்றம் (ஏழுமலைகளில் நரசிம்மமூர்த்தி) இந்தத் தலத்தைப்பற்றி, திருமங்கை ஆழ்வார் பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். 'தெய்வமல்லால் செல்ல வொண்ணாச் சிங்கவேழ் குன்றமே' என்று, ஆழ்வார் பர்வதக் குகையின் அருமைமைப் பாடுகின்றார்.

நாமக்கல் மலைக்குகையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நரசிம்ம மூர்த்தியைப் பற்றி, நாமக்கல் தல புராணம் விரிவாக எடுத்துரைக்கின்றது.

'நரஸிம்ஹமூர்த்தி' என்ற வேதத் தொடரை, 'மல்லல் அரிஉரு,' என்றும், 'பயங்கரம் இல்லாதவர்,' என்பதை 'அழகியான்தானே அரிஉருவன்தானே' என்றும் ஆழ்வார்கள் அமுதத்தமிழில் பாசுரம் இட்டு அனுப்பவிக்கின்றனர்.

வேதம், நரசிம்ம மூர்த்தியின் தோத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. வரலாறு கூறவில்லை. ※

2. விஷ்ணு புராணம் :

வேதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துக்களை, மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு கதை உருவம் கொடுத்து விளக்க முற்பட்டன புராணங்கள். அவைகள் 18 வகைப்படும். பதினெண் புராணங்கள் என்று பெரியோர்களால் சொல்லப் படுவனவற்றுள், முதன்மையாக நிற்பது விஷ்ணு புராணம். இது பராசர முனிவரால் வடமொழியில் இயற்றப்பெற்றது. திரு. அரு. ராமநாதன் அவர்கள் இதனைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

※ இது, திரு. ந.சு. ராஜாராம் அய்யர் அவர்களால் வெளியீடு செய்யப்பெற்றது. இவர், பாரதியாரால் மிகவும் புகழப் பெற்றவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதில் பதினேழாவது கதையாக பிரகலாதன் சரிதம் என்ற பகுதி வருகிறது. இது பிரகலாத வரலாற்றுக்கு, முழுவடிவம் கொடுக்கின்றது. வேதத்துக்குப் பிறகு முதன் முதலாகக் கதை வடிவம் பெறுவது இந்தப் புராணத்தில் தான்.

"இத்தகைய கதைக்காட்டில் முதலாவது சத்தியாக் கிரகி என்று காந்தியடிகள் போற்றித் தனக்கு முன்மாதிரி யாகக் கொண்டிருந்த பிரகலாதனின் கதை உயர்வற உயர்ந்ததோர் இமாலய சிகரமாகக் காண்கிறது." என்று திரு அரு. ராமநாதன் அவர்கள் பிரகலாதக்கதையின் ஏற் றத்தை எடுத்துக் கூறுகின்றார் தமது மொழிபெயர்ப்பு நூலில். ❋

இந்த விஷ்ணு புராணத்தை, செய்யுள் வடிவில் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார் திரு. செ. சுப்பராய அய்யர் அவர்கள். நல்ல இலக்கிய வளம் நிறைந்தது இந்தத் தமிழ் நூல். இதன் பாடல் ஒன்று இங்கே, ஏழாவது தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

3. பாகவதம் :

இதை மேலும் விரிவுபடுத்துகிறது பாகவதம். இது வியாசமுனிவரால் வடமொழியில் இயற்றப்பெற்றது. 'செவ்வைச் சூடுவார்' என்ற அருந்தமிழ்ப்புலவர், இதனை, அருமையான செந்தமிழ்ச் செய்யுளில் வடித்துத்தந்துள்ளார், ஏழாம் ஸ்கந்தம் இரணியன் கதையோடு தொடங்குகிறது." அடியாருடைய பெருமையைக் கூறவும், மக்களுக்குப் பகவானிடம் பக்தி பெருகவும் நான் இக் கதையைச் சொல்லுகிறேன்" என்பது கதைத் தொடக்கம். சுகமுனிவர் பரீக்ஷித் அரசனுக்குச் சொல்லிக் கொண்டு வருவதாக அமைவது பாகவதம்.

"மண்ணில், வானின், மற்று உலகின், மன்னிவாழ்
எண்ணிலா உயிர் உடம்பு யாவையும்
தண்ணம் தாமரைத் தலைவி மேவிய
கண்ணனாகவே காணும் காட்சியான்" (1635)

என்பது, செவ்வைச் சூடுவார் காட்டும் பிரகலாதன் காட்சி, தமிழில் மற்றொரு பாகவதமும்- செய்யுள் வடிவில் உண்டு. அது, வரதராஜ அய்யர் அவர்களால் இயற்றப்பெற்றது.

❋ விஷ்ணு புராணம். தமிழ் மொழி பெயர்ப்பு பக். 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. பரிபாடல்

தமிழில் முதல் முதலாகப் பிரகலாதனைப் பற்றிக் கூறும் நூல் 'பரிபாடல்' என்ற சங்கத்தமிழ் நூல். இது எட்டுத் தொகை நூலுள் ஒன்றாகும். 'பிரகலாதன்' என்ற பெயரை 'பிருங்கலாதன்' என்று குறிப்பிடுகின்றது இந்நூல்.

"செயிர்தீர் செங்கண் செல்வ! நின்புகழப்
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாக்கின்,
பிருங்க லாதன் பலபல பிணிபட-அலந்துழி,
....
தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை." (பரிபாடல்-4)
(வரி 10-21)

(செல்வ! பிருங்கலாதன் அலந்துழி-தாதை மார்பில் வாய்ந்த உகிரினை) (உகிர்-நகம்) (ஆசிரியர்-கடுவன் இளவெயினனார்)

5. சீவகசிந்தாமணி:

"தரணி காவலன் சச்சந்தன் என்பவன்
பரணி நாள்பிறந் தான்: பகை யாவையும்
அரண் இலான், என்கண் தங்கிய அன்பினால்
இரணியன் பட்டது எம் இறை எய்தினான்." (1813)

விசையை, தனது கணவன் சச்சந்தன் இறந்து பட்ட நிலையை எடுத்துக் கூறுகின்றாள். சச்சந்தன் பிறந்த நட்சத்திரம் பரணி. இரணியன் பிறப்பும் அந்தப் பரணி நாளோ என்று எண்ணவேண்டியுள்ளது. "இரணியன் பட்டது' என்பதற்கு, "தன்னை இடிக்கும் துணையார் சொற்கொள்ளாதே (குறள் 447) வேறொரு தத்துவம் இன்றென்றதனால் கேடுவிளைந்து உதவியின்றி நின்ற நிலை." என்று விளக்கம் தருகின்றார் உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இரணியன் பட்டதை, ஒரு பழம்பெரும் ஆசிரியர் (திருத்தக்கதேவர்) உவமையாகக் கையாளுகின்றார் என்றால், அக்கதை நம்நாட்டில் எவ்வளவு பழங்காலத்திலிருந்து வழங்கி வந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது.

6. கல்லாடம்:

கல்லாடர் என்ற பழம்பெரும்புலவர், இயற்றிய கல்லாட நூலுள், நரசிம்மத்தின் தோற்றம் நயம்படக்கூறப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூறு அகவல் பாக்களைக் கொண்டது இந்நூல். நூறு அகப்பொருள் துறைகளுக்கு இலக்கியமாக விளங்குவது. 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்ற பழமொழியும், 'கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே' என்ற பழமொழியும் இதன் பெருமையை விளக்குவன.

"இரண்டு உடல் ஒன்றாய்க் கரைந்து, சண்படாமல்,
அளவு இயல் மணநிலை பரப்பும் காலம்,
தளைகரை கடந்த காமக் கடலுள்
புல் நுனிப் பனிஎன மன்னுதல் இன்றி,
பிரம் மலர்ந்த வயாவுநோய் நிலையாது,
வளைகாய் விட்ட புளிஅருந் தாது,
செவ்வாய் திரித்து வெள்வாய் பயவாது,
மனைபுகை உண்ட கருமண் இடந்து
பவள வாயில் சுவை காணாது,
பொற்குட முகட்டுக் கருமணி அமைத்தெனக்
குங்குமக் கொங்கையும் தலைக்கண் கறாது,
மலர அவிழ்ந்த தாமரைக் கயல்என
வரிகொடு மலர்த்த கண்குழியாது,
குறிபடு திங்கள் ஒருபதும் புகாது,
பொன்பெயர் உடையோன் தன்பெயர் கெடுப்ப,
தூணம் பயந்த மாண்அமர் குழவி."-(5)

'மகப்பேற்றுத் தாயின் நிலை பேசப்படுகிறது இங்கு. அந்தத் துயரம் ஒன்றும் இன்றியே, தூண், நரசிம்மத்தை ஈன்று விட்டது என்ற கதைப் பொருள் கலந்த கற்பனை நயம், கற்றார் இதயத்தைக் களிக்கச் செய்யும் ஒன்றாகும்.

'தூணம் பயந்த மாண் அமர்குழவி, என்ற தொடர் சுவைத்துச் சுவைத்து மகிழ்தற்கு உரிய ஒரு தொடராகும். பிரகலாதக் குழவிக்கு அருள் செய்வதற்கு, தூண் (நரசிம்மம்) ஒரு குழவியை ஈன்றுள்ளது.

நரசிம்மத்துக்குத் தூண் தாயாகிவிட்டது. பிரம்மனுக்கு, அந்தத்தூண் பாட்டி ஆகிவிட்டது என்று வேதாந்த தேசிகர் நயம் கண்டு மகிழ்கின்றார். (பிரம்மன் நாராயணனுக்கு மகன். நாராயணனுக்குத் தாய் தூண். அதனால், தூண் பிரம்மனுக்குப் பாட்டி உறவு ஆகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. திவ்வியப் பிரபந்தம் :

ஆழ்வார்கள் நரசிம்ம அவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட பாசுரங்களை அருளிச் செய்துள்ளார்கள். ஒவ்வொரு பாசுரங்களும், படிப்பார் மனத்தில் பக்தித் தேனைச் சொட்டச் செய்யும்.

இவ்வாறு வடமொழி நூல்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் சிறப்பாகப் போற்றிப் புகழப்படுகின்ற நரசிம்மத்தின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் தமது நுண்மாண் நுழைபுலம் கொண்டு ஆராய்ச்சி செய்துள்ளார் ஒரு பேரறிஞர்.

அவர், திரு. 'நா. வரதராஜுலு நாயுடு' என்ற திருநாமத்தினர்: வடமொழி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் முழுமையான புலமை பெற்றவர்: தமது மும்மொழி புலமைத் திறத்தால், அவரே எழுதியும், பதிப்பித்தும் வெளியிட்ட நூல்கள் பலப்பலவாகும்- அதனுள் ஒன்று 'இரணியன் வதைப்பரணி? என்ற நூல்.

இந்நூலின் 'கருத்தோட்டம்' பகுதியில் அவர் தெரிவித்திருப்பது அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தளிக்கும் ஒரு நற்செய்தியாகும்.

'மடங்கலின் வலிமையை மனிதன் நெடுங்காலமாக அறிவான். சிங்கம் அரசின் சின்னமாக நம் நாட்டுச் சமூகங்களில் மட்டும் அன்றி, பண்டைய எகிப்திய, சீன சமூகங்களிலும், பின் எழுந்த கிரேக்க உரோம சமூகங்களிலும் உலகெங்குமே கருதப்பட்டது. அரசு வீற்றிருப்பது அரி ஆசனத்தில்: அரி உருவம் பொறித்த தூண்களும், கொடிகளும், பல நாடுகளில் இருந்தன. சிங்கத்திற்கு இயற்கையாக அமைந்த மிடுக்கும், அஞ்சா நெஞ்சமும் எப்பாலும் ஒருங்கே நோக்கும் சிறப்பும், எதிரியை வெருவிக்கும் ஆழ்ந்த கர்ச்சனையும், முன் அடியால் யானை மத்தகத்தையும் பிளக்கக் கூடிய வலிமையும், மனிதனுடைய மனதை நெடும் பண்டைக் காலத்திலிருந்தே கவர்ந்தன. மனிதனுக்கு இயற்கையாக அமைந்த பகுத்தறிவும், சூழ்ந்து எண்ணும் திறனும், சிங்கத்தின் வலியோடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்தால், மானுட மடங்கல் எதையும் சாதிக்க முடியும் என்ற துணிவால், கவிஞர் அரியை மானுட மடங்கலாக்கி வெலற்கரிய இரணியனை வெல்வித்தனர்.

இவ்வாறு, "மகாபாரதத்தில் பிறந்த ஒரு உபகதை புராணங்கள் வாயிலாக வளர்ந்து, கவிஞர் கற்பனையில் செழித்து, ஸ்ரீ வைஷ்ணவக் கருத்துக்களைத் தாங்கி, மகா விஸ்ணுவின் விபவ அவதாரம் ஒன்றில் பக்திச் சுவையோடு இன்று விளங்குகிறது." ❋

7754

ஆய்வு எங்கு தொடங்கினாலும், பக்தி உணர்வில் நிறைவு செய்துள்ளார் திரு. N. V. நாயுடு அவர்கள். இது நரசிம்மப் பக்தர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் ஒன்றாகும்.

கம்பர் காலத்துக்கு முன்பு இரணியன் கதை பேசப் பட்டதில் சில கண்டோம். இனி, கம்பர் இக்கதையைச் சுவைப் படுத்தி தமது காவியத்துள் அமைத்த பிறகு கவிஞர்கள், இதனோடு எவ்வாறு நெருங்கியுள்ளார்கள் என்பதைக் காண்போம்.

1. இரணியன் வதைப்பரணி :

தமிழில் அமைந்துள்ள சிற்றிலக்கியங்கள் 96 வகைப் படும். அவைகளுள் ஒன்று 'பரணி' என்னும் பிரபந்தம். போரை அடிப்படையாக்கிக் கொண்டு உருப்பெறுவது இந்தச் சிற்றிலக்கியம்.

இந்த அமைப்பில், பிரகலாதனின் பக்திப் பெருமை யைத் தெரிவிக்கலாம் என விரும்பிய தமிழ்ப் புலவர் ஒருவர், இந்நூலை இயற்றியுள்ளார். புகழ் விரும்பாப் பெற்றியராய இப்புலவர் பெருமான், நூலை உருவாக்கிக் கொடுத்தாரே அன்றி, தமது திருப்பெயரை எங்கும் தெரிவிக்கவில்லை.

கம்பர் தந்த இரணியன் வதைப் படலத்துக் கவிதை களை நன்கு சுவைத்து சுவைத்து, அவைகளை தமக்குள் ஜீரணமாக்கிக் கொண்டார் இந்தப் புலமைப் பெருந்தகைமை. அதனை இந்த நூலுள் பல இடங்களிலும் காணலாம்.

❋ இரணியன் வதைப்பரணி. கருத்தோட்டம். பக். X, XI.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலை, நன்றாக ஆய்வு செய்து, பல குறிப்புக்களைக் கொடுத்து அழகுறப் பதிப்பித்து வெளியிட்டுள்ள திருN.V. நாயுடு அவர்கள், கம்பர் கவிதைகளால் நயம் பெற்ற இடங்களை வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார் இந்த நூலுள்.

கற்பனைத் திறனும், கவி நயமும், கருத்துச் செறிவும், தத்துவ விளக்கமும், நகைச் சுவையும் நிரம்பப் பெற்றது இந்நூல்.

'திரண்டு உலகம் பலகர்ணச் செம்பொன் தூணில்
சிறுமதலை பெருமைதலைச் செய்ய வேண்டி,
இரண்டு உருவின் திருஉருவாய் வந்து தோன்றும்
எங்கள்பிரான் இனிதுஊழி வாழி' என்றே ✱

என்பது இந்நூலின் முதல் செய்யுளை அடுத்த பாடல்.

சிறுமதலை, பெருமைதலை - முரண்தொடை; மதலை, தலை - இரண்டு 'தலை' என்ற சொற்கள். மதலை - குழந்தை (பிரகலாதன்) 'பெருமை தலைச் செய்ய' - பெருமையை உணர்த்த. இரண்டு உரு - மனிதன், சிங்கம், இரண்டாவது பாடல், எல்லாம் இரண்டு இரண்டாக அமைந்துள்ள நயம் கண்டு இன்புறுதற்குரியது.

இப்படியே பல செய்யுள்கள் நயம்பட அமைந்துள்ளன. கம்பனில் ஊறிய கவிதை உள்ள வெளிப்பாடு அல்லவா இந்நூல்? கம்பக்கலை போன்றுதானே இந்நூல் கவிதைகளும் சுவை தருவனவாக இருக்கும்?

2. பாத்மோத்ர புராணம்.

ஸ்ரீ மத். விலக்ஷணகவி. ஏ. வே. இராமானுஜ நாவலர் சுவாமிகளால் இயற்றியருளப் பெற்றது இந்தப் புராணம். இது *4123* பாடல்களைக் கொண்டது. 19- வது படலமாக 'நரமடங்கல் எழுந்த படலம்' அமைந்துள்ளது. *434* பாடல்களால் ஆகியது இப்படலம். அனைத்தும் சுவை நிரம்பப் பெற்றவைகள். நர - மனிதன்; மடங்கல் - சிங்கம், இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து எழுந்து வந்து செய்த செயலை நயமாக விவரிக்கிறது இந்தப் படலம்.

✱ 1. கடவுள் வாழ்த்து. ஆழிப்படை.
(இரணியன் வதைப்பரணி.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கண்இலான் கதிரை என்றும் இலைஎனக் கழறும் சொல்லைக்
கண்உளான் கொள்வது என்றும் கண்டதின்று ஆதலாலே
விண்உளார் பெருமான் ஊன விழியுளார்க்கு இலனாய், ஞானக்
கண்உளார் காணநின்றான், அவன் பெயர் யானேகற்றேன்.
(66)

இந்தப் பாடல், ஞானக்கண்-ஊனக்கண்-கடவுள்காட்சி உண்மை, இன்மை' என்ற கருத்தை கண் இலான் சூரியனைக் காணாமையும், கண்உளான் அதைக்கண்டமையும் என்ற உவமையைக் கொண்டு விளக்குகிறது.

மேலும், இந்தப்பாடல், 'எங்கணால் நோக்கிக் காண்டற்கு எங்கணும் உளன்காண். எந்தை!........... நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ'? என்ற கம்பனின் கவிதை மறுவடிவம் பெற்று வந்ததோ எனவும் எண்ண வைக்கின்றது

இவ்வாறாக பலப்பலபாக்களும் சுவை ததும்புவனவாய் அமைந்துள்ளன நரமடங்கல் எழுந்த படலத்துள்.

5 இராம செயத் திருப்புகழ்:

'பாலபாரதி' என்ற வைணவப் பெரும் புலவரால் இயற்றப்பெற்றது இந்தத் திருப்புகழ். இதில், நரசிம்மம். இரணியனது ஆணவத்தை அடக்கிய செயலைக் கூறும் பாடல் ஒன்று அழகாக அமைந்துள்ளது.

'வாழ்வு படைத்திருந்த இரணியன் மைந்தனொடு
ஆடிய சொற்குள் நின்று தறியின்- முழங்கி ஓர்
மானுட உக்ர சிங்க வடிவொடு வந்துதன்- மடியூடே
வாசலிடைப் பிளந்து குருதியை உண்டு உயி
-ரோடு குடல் பிடுங்கி நெடிய புயங்களில்
மாலை எனப்புனைந்த முகில், உனை வென்றிட
நரன் ஆனான்'' (207)

என்று அமைந்த பாடல், கம்பன் கருத்தை அடியொட்டிய தாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

'முகில் (மேகநிற வண்ணனான திருமால்) உனை (இராவணனாகிய உன்னை) வென்றிட (வெல்வதற்கு) நரன் ஆனான் (மனிதனாக- இராமன்)வந்துள்ளான்' என்று வீடணன் இராவணனுக்கு இந்த நிகழ்ச்சியைச் சொல்லுவதாக அமைந்துள்ளது இந்தப் பாடல் ஆகவே 'கவிச்சக்கரவர்த்தியின் கருத்தையே பிரதிபலிக்கிறது இது' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலை, நன்றாக ஆய்வு செய்து, பல குறிப்புக்களைக் கொடுத்து அழகுறப் பதிப்பித்து வெளியிட்டுள்ள திருN.V. நாயுடு அவர்கள், கம்பர் கவிதைகளால் நயம் பெற்ற இடங்களை வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார் இந்த நூலுள்.

கற்பனைத் திறனும், கவி நயமும், கருத்துச் செறிவும், தத்துவ விளக்கமும், நகைச் சுவையும் நிரம்பப் பெற்றது இந்நூல்.

'திரண்டு உலகம் பலகர்ணச் செம்பொன் தூணில்
சிறுமதலை பெருமைதலைச் செய்ய வேண்டி,
இரண்டு உருவின் திருஉருவாய் வந்து தோன்றும்
எங்கள்பிரான் இனிதுஊழி வாழி' என்றே ✱

என்பது இந்நூலின் முதல் செய்யுளை அடுத்த பாடல்.

சிறுமதலை, **பெருமை**தலை - முரண்தொடை; மதலை, தலை - இரண்டு 'தலை' என்ற சொற்கள். மதலை - குழந்தை (பிரகலாதன்) 'பெருமை தலைச் செய்ய' - பெருமையை உணர்த்த. இரண்டு உரு - மனிதன், சிங்கம், இரண்டாவது பாடல், எல்லாம் இரண்டு இரண்டாக அமைந்துள்ள நயம் கண்டு இன்புறுதற்குரியது.

இப்படியே பல செய்யுள்கள் நயம்பட அமைந்துள்ளன. கம்பனில் ஊறிய கவிதை உள்ள வெளிப்பாடு அல்லவா இந்நூல்? கம்பக்கலை போன்றுதானே இந்நூல் கவிதைகளும் சுவை தருவனவாக இருக்கும்?

2. பாத்மோத்ர புராணம்.

ஸ்ரீ மத். விலக்ஷணகவி. ஏ. வே. இராமானுஜ நாவலர் சுவாமிகளால் இயற்றியருளப் பெற்றது இந்தப் புராணம். இது *4123* பாடல்களைக் கொண்டது. *19*- வது படலமாக 'நரமடங்கல் எழுந்த படலம்' அமைந்துள்ளது. *434* பாடல்களால் ஆகியது இப்படலம். அனைத்தும் சுவை நிரம்பப் பெற்றவைகள். நர - மனிதன்; மடங்கல் - சிங்கம், இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து எழுந்து வந்து செய்த செயலை நயமாக விவரிக்கிறது இந்தப் படலம்.

✱ *1.* கடவுள் வாழ்த்து. ஆழிப்படை.
(இரணியன் வதைப்பரணி.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கண்இலான் கதிரை என்றும் இலைஎனக் கழறும் சொல்லைக்
கண்உளான் கொள்வது என்றும் கண்டதின்று ஆதலாலே
விண்உளார் பெருமான் ஊன விழியுளார்க்கு இலனாய்,ஞானக்
கண்உளார் காணநின்றான், அவன் பெயர் யானேகற்றேன்.
(66)

இந்தப் பாடல், ஞானக்கண்-ஊனக்கண்-கடவுள்காட்சி உண்மை, இன்மை' என்ற கருத்தை கண் இலான் சூரியனைக் காணாமையும், கண்உளான் அதைக்கண்டமையும் என்ற உவமையைக் கொண்டு விளக்குகிறது.

மேலும், இந்தப்பாடல், 'எங்கணால் நோக்கிக் காண் டற்கு எங்கணும் உளன்காண். எந்தை!........... நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ'? என்ற கம்பனின் கவிதை மறுவடிவம் பெற்று வந்ததோ எனவும் எண்ண வைக்கின்றது

இவ்வாறாக பலப்பலபாக்களும் சுவை ததும்புவனவாய் அமைந்துள்ளன நரமடங்கல் எழுந்த படலத்துள்.

5 இராம செயத் திருப்புகழ்:

'பாலபாரதி' என்றவைணவப்பெரும் புலவரால் இயற்றப்பெற்றது இந்தத் திருப்புகழ். இதல், நரசிம்மம். இரணியனது ஆணவத்தை அடக்கிய செயலைக் கூறும் பாடல் ஒன்று அழகாக அமைந்துள்ளது.

'வாழ்வு படைத்திருந்த இரணியன் மைந்தனொடு
ஆடிய சொற்குள் நின்று தறியின்-முழங்கி ஓர்
மானுட உக்ர சிங்க வடிவொடு வந்துதன்- மடியூடே
வாசலிடைப் பிளந்து குருதியை உண்டு உயி
-ரோடு குடல் பிடுங்கி நெடிய புயங்களில்
மாலை எனப்புனைந்த முகில், உனை வென்றிட
நரன் ஆனான்'' (207)

என்று அமைந்த பாடல், கம்பன் கருத்தை அடியொட்டிய தாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

'முகில் (மேகநிற வண்ணனான திருமால்) உனை (இராவணனாகிய உன்னை) வென்றிட (வெல்வதற்கு) நரன் ஆனான் (மனிதனாக- இராமன்)வந்துள்ளான்' என்று வீடணன் இராவணனுக்கு இந்த நிகழ்ச்சியைச் சொல்லு வதாக அமைந்துள்ளது இந்தப் பாடல் ஆகவே 'கவிச்சக்கர வர்த்தியின் கருத்தையே பிரதிபலிக்கிறது இது' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்பலாம். மேலும், இராமபிரானது ஜெயத்தை-வெற்றியைப் பாடவந்த திருப்புகழில், நரசிம்மத்தின் வெற்றியைப் பாடுவது இராமாவதாரக்கதையில் நரசிம்மாவதாரக் கதையை இணைத்த கம்பரது கவிதைப் போக்கை நினைவு படுத்துகிறது இந்தப்பாடல்.

4 கம்பன் பிள்ளைத் தமிழ்

பிரம்ம ஸ்ரீ நா. கனகராஜ அய்யர் அவர்களால் இயற்றப் பெற்றது இந்தப் பிள்ளைத் தமிழ். நல்ல வளமான நயம் நிறைந்த பாக்களைக் கொண்டது இந்தப் பிரபந்தம். ஆசிரியர், இரணியன் வதைப்படலத்தை வைத்து, கம்பன் புகழ்பாடுவது, கற்பார் உள்ளத்தில் என்றும் தங்கிக்கொள்ளும் நிலையான ஒரு கருத்தாகும்.

"என்னை ஆளுடையான் இராமனே என்பது
யாவரும் அறிதிர்என்று இசைக்கும்
இனியபைந் தமிழன்; இரணிய வதத்தை
ஏற்குமாறு இடம் அறிந்து அமைத்து
தன்னையே நிகரும் மறைமுடிப் பொருளை
தமிழினில் விளக்கிய தலைவன்." O

'வேதம் தமிழ் செய்த வித்தகன்' என்று நம்மாழ்வாரைச் சொல்வார்கள். அதற்கு ஏற்ப 'மறைமுடிப் பொருளை, தமிழினில் விளக்கிய தலைவன்; என்று கம்பனைச் சொல்கின்றார் ஆசிரியர். 'இரணியன் வதத்தை ஏற்குமாறு (இராம கதை படிப்பவர்களும் ஏற்கும் வண்ணம்) இடம் அறிந்து அமைத்து'- என்ற தொடரும், 'தன்னையே நிகர்க்கும் மறைப் பொருள்' என்ற தொடரும். கம்பனது புதுமைப் படைப்பாகிய இரணியப் படலுத்துள் அய்யர் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக்குகின்றன.

'ஆரியம் ஓதிய சீரிய நாவல!
ஆடுக செங்கீரை'

என்ற தொடர், 'ஆரியம் நன்கு உணர்ந்து தமிழின் ஆழம் அளந்து கண்டவன்' என்ற கம்பன் கவிதைக் கருத்தையே உரித்துக் கொண்டு வந்துள்ளது. இப்படி எத்தனை எத்தனையோ தொடர்கள் கம்பக்கலையில், அய்யர் தோய்ந்து தோய்ந்து சுவைத்துள்ளதனை வெளிப்படுத்தும்.

O கம்பன் பிள்ளைத்தமிழ். காப்புப்பருவம் 11

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 கம்பராமாயணக் கௌஸ்துபம்:

இந்நூல் திரு. கெ. என். சிவராஜபிள்ளை என்ற திருநாமம் கொண்ட பேராசிரியரால் இயற்றப் பெற்றது. இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில், முதல் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கிய பெருமகனார்.

'இந்தப் பேராசிரியப் பெருமகனார், இளமை முதலே கம்பராமாயணக்கடலுள் நன்கு திளைத்தவர் .... கம்பன் காவியத்தில் பேரீடுபாட்டோடு வாழ்ந்த தமிழ்க் குடும்பத்தில் வந்த பேராசிரியர், இந்நூலுக்கு ஓர் ஒப்பற்ற அணிகலமாகக் கௌஸ்துபத்தை ஆக்கியளித்துள்ளார். திருமாலின் பெருமை பேசும் கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து. அதன் ஒப்பற்ற பெரும் புகழை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக—இயற்றப்பட்ட இச் சிறு காவியத்திற்குக் கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார்.

இந்நூல் 422 செய்யுள்களைக் கொண்டது. பத்துப் படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அதனுள் 8வது படலம் 'புலமைத் திறன் படலம், என்பதாகும். கம்பனது புலமைத் திறனை வெளியிடுவதற்கு ஆசிரியர் எடுத்துக் கொண்ட பாடல் இரணியன் வதைப்படலத்தில் உள்ளதாகும்.

'சாங்கியம் யோகம் என்று இரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன
ஆங்களை உணர்ந்தவர்க்கு அன்றி அன்னவன்
ஓங்கிய மேனிலை உணர்தற்பால தோ?(31)

இரணியப் படலத்தில் ஆசிரியர் கொண்டிருக்கும் ஈடு பாட்டைக் காட்டுகின்றது. இந்தச் செய்யுளை இங்கு அமைத்துக் காட்டுவது.

இவ்வாறாக, கம்பன் கண்ட, இரணிய, நரசிம்ம, பிரகலாத, தோற்றத்தில் மூழ்கிக் களித்தவர்கள் தமது அனுபவத்தைக் கவிதைகளில் வடித்தவர் பலர்: உரைநடை யில் உரைத்தவர்களும் உண்டு. இது, எதைக் காட்டுகிறது? 'காலத்திற்கு ஏற்ப, இடம் அறிந்து, மக்கள்மனம் பண்பாடு அடைவதற்காக, பழமையைப் புதுப்பித்துக் கொடுக்கும் புரட்சிக் கவிஞனாக விளங்குகின்றான் கம்பன்' என்ற பேருண்மையை எடுத்துக் காட்டுகின்றது இரணியன் வதைப்படலத்தில் அறிஞர்கள் கொண்ட ஈடுபாடு.

O முகவுரை. பக். 111. (மு. சண்முகம் பிள்ளை)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

தோற்றுவாய்

மங்கிய வல்வினை நோய்காள்!
உமக்கும்ஓர் வல்வினை கண்டீர்;
இங்குப் புகேன்மின்! புகேன்மின்!
எளிது அன்று கண்டீர் புகேன்மின்
சிங்கப் பிரான்அவன் எம்மான்
சேரும் திருக்கோயில் கண்டீர்:
பங்கப்படாது உய்யப் போமின்
பண்டுஅன்று பட்டினம் காப்பே. ★

திருக்கோயில்:

ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களின் தொகுப்புக்கு திவ்வியப்பிரபந்தம் என்று பெயர். அதனுள் 24 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் முதலிடத்தில் இருப்பது பெரியாழ்வார் அருளிய பிரபந்தம். இது, பெரியாழ்வார் பிரபந்தம் என்றே பெயர்பெறும். 473 பாசுரங்களைக் கொண்டது இந்தப் பிரபந்தம்.

அதனுள் ஒரு பாசுரம் மேலே தோற்றம் அளிப்பது, ஆழ்வார், தமது மனத்தில் ஏற்கனவே இடம் பிடித்து, குடி கொண்டிருக்கும் வல்வினை நோய்களுக்கு எச்சரிக்கை கொடுப்பதாக அமைந்துள்ளது இந்தப் பாசுரம்.

பெரியாழ்வார் நேரிடையாகப் பேசுகின்றார். எதனிடம்? தம்மை இதுவரை ஆட்டி அலைக்கழித்துக் கொண்டிருந்த நோய்களிடம். அந்த நோய்கள் கொடிய பாவங்களால் (வல்வினை) வளர்ந்தவை. நோய்களின் வளர்ச்சி நிலையான் ஆத்மாவின் ஒளியை மழுங்கச் செய்து விட்டது. (மங்கிய - ஆத்துமாவை உருத் தெரியாதபடி மறைத்துவிட்ட) 'ஆத்மாவை மறையச் செய்த உங்களுக்கும் ஒரு அழிவு காலம் (மறையும் காலம்) வந்துவிட்டது. 'எப்படி? ஏன்?' என்று கேட்கின்றீர்களா?

★ பெரியாழ்வார் திருமொழி. 5.2.4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஆத்ம நாயகன் - எம்மான், நீங்கள் இதுவரை குடியிருந்து கொண்டிருந்த எனது மனத்துள் புகுந்து தங்கிக் கொண்டு விட்டான். அவன் எந்த உருவில் வந்தான் தெரியுமா? அவனுக்கு எத்தனையோ உருவங்கள் உண்டு. ஆனால் இப்போது இங்கு வந்தது சிங்கப் பிரானாக. ஏன்? ஆணவத்தை அழிப்பதற்கு, அது அழிந்தால், அங்கு, அன்பு தானாகவே வளரும். முன்பு உங்கள் வளர்ச்சி: அதனால் ஆத்மா மறைக்கப்பட்டது. இனி அன்பு வளர்ச்சி; ஆன்மா ஒளிவிட்டு விளங்கும்."

''எம்மான் (எமது தலைவன்- இறைவன்) சிங்கப் பிரானாக வந்து இங்கு தோற்றம் அளிப்பதால், இந்த இடத்துக்கு இனிமேல் திருக்கோயில் என்று பெயர். மனம் என்ற பண்டைய (பழைய) பெயர் திருக்கோயிலாக மாற்றம் பெற்று விட்டது. மனம், கோயிலாக மாறிய "பிறகு, நன்கு பாதுகாப்பு (பட்டினம் காப்பே) பெற்றுக் கொண்டு விட்டது.''

"அதனால் நோய்களே! பண்டே போல் கருதாதீர்கள் இங்கு நுழையாதீர்கள் உங்களுக்குப் பங்கம் (அவமானம் ஏற்படும் முன்பு) ஏற்படாமல் ஓடி விடுங்கள்." என்று நோய்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார் ஆழ்வார்.

'மனம் என்றஅளவில்' இருந்தபொழுது இங்கு புகுவது உங்களுக்கு எளிதாக இருந்திருக்கலாம். சிங்கப் பிரானது தோற்றத்தால், இது திருக்கோயிலாக மாற்றம் பெற்று உயர்வு உற்றபிறகு, நீங்கள் இங்குப்புகுவது எளிது அல்ல.' (எளிது அன்று கண்டீர்) என்பது ஆழ்வார், நோய்களுக்குக் கூறிய அறிவுரை.

பழைமையும் புதுமையும்:

மனமும் பழையதுதான்: அதில் புகுந்து, அதனைத் தன் வசப்படுத்தி ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த வல்வினைநோய்களும் (பாவங்கள்) பழையதுதான்: சிங்கப் பிரானும் முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்தான். பிறகு எது புதுமை?

அந்தச் சிங்கப் பிரான் மனத்துள் புகுந்ததுதான் புதுமை. எம்மான். சிங்கப்பிரானாகப் புகுந்த பிறகு மனம் திருக்கோயிலாக ஏற்றம் பெற்றது புதுமை. சிங்கப் பிரான் வந்து சேர்ந்த பிறகு 'மனம்' என்ற பழைய பெயர் கழிந்தது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்கோயில் என்ற புதுப் பெயர் புகுந்தது. சிங்கப்பிரானது சேர்க்கைதான் பழையதைக் கழியச் செய்யும்! புதியதைப் புகுதச் செய்யும்.

பழையதில் வல்வினையின் ஆட்சி: புதியதில் எம்மானின் (சிங்கப்பிரான்) ஆட்சி. புதுமை புகுந்த பிறகு, பழையது எவ்வளவு ஆற்றல் பெற்றதாக இருந்தாலும் அதை விரட்டி அடித்து ஓட்ட முடியும்.

சிங்கப்பிரான் சேர்க்கைதான் தீவினைகளைச் சிதறடிக்கும்: சிங்கப்பிரான் சேவை, கொடுமையை எதிர்த்து வெல்வதற்குத் தேவை.

இத்தகைய பேருண்மையைத் தெளிவாக்குகிறது இந்தப் பாசுரம்.

இது, பெரியாழ்வார் தமது வாழ்க்கையின் அனுபவமாகக் கூறிய அனுபூதிப் பாசுரம்.

அதனால், இது, 'உலகில் நிகழும் தீமைகளை - கொடுமைகளை - வல்வினைகளை எதிர்த்து அழிக்க வேண்டும்' என்ற நல்லெண்ணம் உடையவர்களைக் கவரும் ஒரு பாசுரமாக உள்ளது.

கம்பரைக் கவர்ந்தமை:

'இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர்' - அவர்கள், தமது நலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு, பிறர்க்கு எவ்வளவு கொடுமைகள் வேண்டுமானாலும் செய்வார்கள். அந்தக் கொடியவர்களை அழித்து, நல்லோர்களைக் காப்பதற்கு ஏற்பட்டது இராமாவதாரம்.

இந்த அவதாரக் கதையைக் காவியமாக்க வந்தவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

"ஆசை பற்றி அறையலுற்றேன், மற்று, இக்காசில் கொற்றத்து இராமன் கதைஅரோ" என்பது அவர்தம் திருவாக்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராம கதை பாட வந்த கம்பரின் ஆசை அத்தோடு நிற்கவில்லை. மேலும் நீண்டது எங்கு? ஏன்?

இராமாவதாரக் காலத்து அரக்கர் கூட்டத்துத் தலைவன் இராவணன். அவனைக் காட்டிலும் பன்மடங்கு ஆற்றல் பெற்று வாழ்ந்த அசுரன் ஒருவன் இருந் தான். எங்கும் தன் பெயரே சொல வாழ்ந்தவன் அந்தக் கொடியவன். அதனால் நல்லவர் வீழ்ந்தனர்.

எவரையும் சுதந்திரமாக வாழ விடாத கல் நெஞ்சி னன் அந்த அசுரன். அவன் நெஞ்சமோ கல். அவன் பெயரோ பொன். (இரணியம் - பொன்)

இக் கல் நெஞ்சினனிடமிருந்து உலகைக் காக்க வேண்டுமே? யார் செய்வது? காக்கும் பொறுப்புடைய வன்தானே அதனைச் செய்ய வேண்டும்! நல்லோர் களைக் காப்பதற்கு. அல்லோர்களை அழித்தேயாக வேண்டும்.

இந்தக் கல் நெஞ்சனை அழிப்பதற்கு, காக்கும் கடவுள், கல்லிலிருந்தே தோன்றினார். கல் நெஞ்சனைப் பிளப்பதற்கு, காத்தற் கடவுள், கல்லைப் (கல் தூண) பிளந்து கொண்டு வெளியேறினார். கல்நெஞ்சக் கயவன் பிறப்பை அறுப்பதற்கு, காத்தல் தொழிலைக் கடமையாக் கொண்ட கடவுள், கல்லையே, தம் பிறப்பிடமாக்கிக் கொண்டார்.

கல்லைப் பிறப்பிடமாக்கிக் கொண்டு, அதனைப் பிளந்துகொண்டு வெளியே வந்து தோற்றம் அளித்தது எந்த உருவில்? யாரும் எந்தக் காலத்திலும் எதிர்பாராத- எங்கும் - எப்பொழுதும் காண இயலாத ஒரு இரட்டை உருவத்தோடு தோன்றினார். நல்லோர்களைக் காப்பதற்கு, யாரை, எந்த உருவில், எந்த நேரத்தில், எந்த முறையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழிப்பது என்பது காத்தல் கடவுளுக்குத் தெரியும், மற்றையோர்க்கு அது புலனாகாது.

அழிக்கப்பட வேண்டியவன் வெளித்தோற்றத்தால் மனிதன் : உள்தோற்றத்தால் அசுரன். உடல் மனித வடிவம்: உள்ளம் அசுரத் தன்மை. அகத்தாலும் புறத்தாலும் இருவேறு வடிவினனை அழிப்பதற்கு வந்த கடவுளும் இருவேறுபட்ட உருவங்களை ஒன்றாக்கிக் கொண்டு வந்தார் போலும்!

நரனும் சிங்கமும் ஆகிய இரண்டு உருவமும் ஒன்றாய் இசைந்து வந்த ஒரு புதுமைத் தோற்றத்தை முதன் முதலாக வெளிப்படுத்திய பெருமை ஒரு கல்லுக்குத்தான் கிடைத்தது. இந்தச் சிங்கப் பிரான் - எம்மான் அந்தக் கல்லைச் சேர்ந்த பிறகு அது திருக்கோயில் ஆயிற்று.

சிங்கப்பிரான் சேர்வதற்கு முன்பு அது வெறும் கல்தான். சிங்கப் பிரான் சேர்க்கை அதைத் திருக்கோயிலாக ஆக்கிற்று.

திருக்கோயில் முன் தேவர்கள் கூடினார்கள்: பெருமானைத் துதித்தார்கள் எப்பொழுது? தாங்கள் சுதந்தரமாக வாழ முடியாதபடி தமக்கு இடையூறு செய்து கொண்டிருந்த இரணியனை இல்லாதபடி அழித்த பிறகு.

வல்வினை - கொடுஞ்செயல் செய்த இரணியனை எதிர்த்து நின்று அழித்தது சிங்கப்பிரான். இந்தப் பிரானது சேர்க்கைதான் கொடுமையை அழிக்கும், இந்த நரசிம்மாவதார நிகழ்ச்சி நடந்தது இராமாவதாரத்துக்கு முன்பு.

இராம கதை சொல்ல வந்த கம்பரது ஆசை, நரசிம்மாவதாரத்தின் பக்கம் நீண்டதற்குக் காரணம் இதுவேயாகும். பின்ன தன் வெற்றியைக் கூறுவதற்கு முன்ன தன் நிகழ்ச்சி அடிப்படையாக அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமாவதாரமும் பழமைதான்: நரசிம்மாவதாரமும் அதைவிடப் பழமையுடையதுதான். இராமாவதாரக் கதையில் நரசிம்மாவதாரத்தை இடமறிந்து இணைத்ததுதான் புதுமை.

கம்பராமாயணத்தில் இரணியன் வதைப்படலம் ஒரு புதுமைத் தோற்றம் பெற்றுவிட்டது; கம்பன் காவியத்தில் இந்தப் படலம் ஒரு திருக்கோயிலாகக் காட்சி அளிக்கிறது என்னலாம், ஏன்? இந்தப் படலத்தில்தானே 'சிங்கப்பிரான் அவன் எம்மான்' சேர்ந்துள்ளான்.

பெரியாழ்வார் அருளிச்செய்த பாசுரம் கம்பரைக் கவர்ந்ததால்தான், இரணியன் வதைப்படலம் இராமாவதாரக் கதையின் இடையில் தோற்றம் பெற்றதோ என எண்ண வேண்டியுள்ளது.

கவிச்சக்கரவர்த்தி, மூல நூலாகிய வால்மீகி ராமாயணத்தில் இல்லாத ஒன்றை, தாமாகவே முன் வந்து தமது காவியத்தின் இடையில் இணைத்ததற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு.

காரணம் : 1

நம்மாழ்வார் அருளியச் செய்த பாசுரங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

ஆழ்வார், கற்க வேண்டியவை எவை, என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார் தமது திருமொழிப் பிரபந்தத்துள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கற்பாற் இராம பிரானை அல்லால்
மற்றும் கற்பரோ ?'

என்று ஒரு கேள்வி அமைப்பில், 'மக்கள் உய்வு பெற வேண்டுமானால், அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது இராமாவதாரக் கதைதான்' என்று வற்புறுத்திக் கூறினார். கற்கும் கல்வியை அத்தோடு நிறுத்திவிடவில்லை ஆழ்வார். மேலும் தொடர்கின்றார்.

'செல்ல உணர்ந்தவர் செல்வன் தன்
சீர்அன்றிக் கற்பரோ'

என்று கேள்வி கேட்டு, அந்தச் செல்வன் யார் என்பதை, பாசுரத்தின் பின் பகுதியில் சொல்லுகின்றார் ஆழ்வார்.

'அல்லல் அமரரைச் செய்யும்
இரணியன் ஆகத்தை (பிளந்த)
மல்லல் அரிஉரு' - (நரசிம்மம்)

தேவர்களுக்குத் துன்பம் விளைவித்த இரணியனது உடலை இருகூறாகப் பிளந்த சிங்கப்பிரான் தான் செல்வன். இந்தப் பிரானது புகழைத் (சீர்) தான் கற்க வேண்டும் என்று சொல்கின்றார்.

ஆக, உய்வு பெற என்னும் மக்கள் கற்க வேண்டியது இராமாவதாரக் கதையும் நரசிம்மாவதாரக் கதையும்தான் என்பது நம்மாழ்வாரது அறிவுரை.

இந்த அறிவுரையைக் கடைப்பிடிக்க விருப்பம் கொண்ட கம்பர், தம் இராமகாதையில் நரசிம்மாவதாரக் கதையாகிய இரணியன் வதைப்படலத்தைத் தோற்றுவித்தார்.

காரணம் : 2

பாரகாவியம் என்றால், கிளைக் கதைகள் சில சேர வேண்டும். அந்தக் கதைகள், காவியத்தின் நிறைவுத் தன்மைக்கு உதவுவதாக அமையவேண்டும். அவைகள் பழைமை தழுவியதாகவும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியதாகவும் இருக்க வேண்டும். அந்தக்கிளைக்கதை, காவியப் பாத்திரங்களின் மனப் போக்கை மாற்றுவதற்கு உரியதாகவும் அமைதல் வேண்டும். இந்த இலக்கணங் களுக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது நரசிம்மாவதாரக் கதை. அதனால் கம்பர் தமது பாரகாவியத்தில் இந்தக் கிளைக் கதையை இணைத்தார்.

காரணம் : 3

பெரிய காப்பியம் என்றால், அதில் பக்திச் சுவை சிறப்பாக அமைய வேண்டும். பகவானிடம் கொண்ட ஆழமான பக்தி எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்கும் என்பதைக் கூறுவதற்கு, கம்பருக்கு இந்த இரணியன்வதைப் படலம்தான் பொருத்தமாக அமைந்தது. இராமனிடம், அந்தக் கதாப்பாத்திரங்கள் காட்டிய உள்ளத் தொடர்பை, அன்பு என்றுதான் கூறமுடியும். பகவானிடம் கொண்ட பற்றுள்ளத்திற்குத்தான் பக்தி என்று பெயர். அந்தப் பக்தியைப் பற்றிச் சொல்வதற்கு, பிரகலாதன் நாராயணன் பால் கொண்ட பற்றுள்ளம்தான் பொருத்தமாகும். அதற்கா கவும், இந்தப்படலத்தைத் தோற்றுவித்தார் கவிச்சக்கரவர்த்தி.

காரணம் : 4

நிலையான சமயதத்துவங்களை விரிவாகக் கூறப் படுவதும் பெரும் காப்பிய அமைப்பில் ஒன்றாகும். அப்படி, இந்திய சமயதத்துவங்களை விளக்குவதற்கு, இராமாயணத் தில் வேறு எந்த நிகழ்ச்சியிலும் இடம் இல்லை. அதனால், மக்கள் வாழ்க்கைக்கு நிரந்தரப் பயன் தரக் கூடிய சமயதத்து வங்களின் விளக்கத்திற்காகவும் இந்தப்படலத்தைப்படைத்துக் கொண்டார் கம்பர். இந்தப்படலத்தில்தான் சமயதத்துவம் விரிவாகக் கூறப்படுகின்றது.

காரணம் : 5

காத்தல் கடவுள், தக்கோரின் இடரைத் துடைப்பதற் காகத்தான் இந்த உலகத்தில் அவதாரம் செய்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராவணனை அழிக்க வந்த இராமாவதாரம் நீண்ட நெடு நாட்கள் மண்ணுலகில் வாழ்ந்து காட்டிய பிறகே, தன்னடிச் சோதிக்கு எழுந்தருளியது.

இந்த அவதாரத்துக்கு முன்பே, கல்லிடை அவதரித்த நரசிம்மத் தோற்றம், மிகக்குறுகிய நேரம்தான் காட்சியளித்தது அதற்குள், தான் வந்த காரியத்தை முற்றுவித்து, விட்டு உயர நின்றதோர் சோதியுள் சென்று கலந்து கொண்டு விட்டது.

நரசிம்மாவதாரம் காலத்தால் இராமாவதாரத்துக்கு முந்தியது: காட்சி கொடுத்த காலத்தால் மிக மிகக் குறுகியது. ஆயினும், வேதத்தால் துதிக்கப்பெற்றது. யோகிகளின் உபாசனா தெய்வமாக உயர்ந்தது. நீண்ட ஆயுள் வேண்டுவோர், உபாசனை செய்ய வேண்டிய தெய்வம் நரசிம்மமூர்த்தி என்று 'நிருஸிம்ஹதாபநீ உபநிஷத்' கூறுகிறது.

வேத காலப்பழமையும், யோகிகளின் உபாசனாமூர்த்தியாகவும் இருப்பதால், தமது இராம காவியத்தில் அமைத்து அந்தச் சிங்கப்பிரான் பெருமையைப்பாடி இன்புறுவதற்கும் கவிச்சக்கரவர்த்தி இரணியன் வதைப் படலத்தைச் சேர்த்துக் கொண்டார்.

காரணம் : 6

வேதமும் உபநிடதமும் இந்து சமயத்தத்துவ விளக்கத்துக்குப் பிரமாண நூல்கள் இந்த இரண்டும் சமயதத்துவத்தை விளக்குவதாக இருந்தாலும், இரண்டும் வெவ்வேறு வகையான போக்குகளை உடையன. இந்த இரண்டு வகையான நூல்களும் மானுட வாழ்க்கையின் உயர்விற்கு எவ்வாறு உதவுகின்றன? எதன் மூலம் மனிதன் பிறவித்துயர் அறுந்து பெருநிலையை எய்த முடியும்? என்பதை நன்கு விளக்கிக் காட்டத்திருவுள்ளம் கொண்டார் புலவர் பெருமான் தமது இந்த நல்ல விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் இந்தப்படலத்தை தோற்றுவித்துக் கொண்டார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணம் 7

வேதம் மிகமிகப் பழைமையது. அது மக்களின் நல் வாழ்க்கைக்கு வழி காட்டுகின்றது. காட்டும் வழிகாட்டு வழியாகவும் இருக்கும். மேட்டு வழியாகவும் அமையும். முதல் பகுதியாகிய கர்ம காண்டம் மனிதனைக் கர்மம் செய்யத் தூண்டுகிறது. அதன் மூலம் உலக வாழ்வில் உயர்த்துகிறது.

அடுத்த பகுதியாகிய ஞான காண்டம், மனிதனை ஞான வாழ்வுக்கு அழைக்கின்றது. அதன் மூலம் மனிதனை மண்ணுலக வாழ்வுக்கு அப்பால் பட்ட ஞானியாக வாழச் செய்கிறது: இறுதியில் நலமந்தமில்லதோர் நாட்டில் (பரமபதம்) புக வைத்து பேரானந்தம் அனுபவிக்க வைக்கிறது."

இந்த இருவழி வாழ்வும் வேதம் காட்டிய வழியில் வாழும் வாழ்வுதான். அதனால், இவைகளால் உலகில் ஏற்படுவது நன்மையாகத்தான் இருக்கும். என்று சாதாரண மக்கள் நம்பி விடுவர். இல்லை: இதனால் உலகில் தீமைகள் ஏற்படுவதும் உண்டு.

இதன் நன்மை தீமைகளை மக்களுக்கு எளிதாகப் புலப்படுத்துவதற்கு ஏற்ற கதையாக அமைந்தது இது. இரணியன், பிரகலாதன் என்ற இரண்டு பாத்திரங்களின் மூலம் வேதத்தின் கர்மகாண்டப் போக்கையும் ஞான காண்டப் போக்கையும் விவரித்துக் காட்ட திருவுள்ள பற்றிய கம்பர் இந்தப் படலத்தை, இக்காவியத்துள் தோற்றுவித்தார்.

காரணம் 8

'கர்ம காண்டத்தைப் பின்பற்றியவன் வாழ்வு எப்படி இருக்கும்? அவன் வாய், எதனைப் பேசிக் கொண்டிருக்கும் அவன் பிற உயிர்களோடு கொண்டிருக்கும் இணக்கம் எவ்வாறு அமையும்? அந்த இணக்கத்தால், மக்கள் அனுபவிப்பது எதுவாகயிருக்கும்?' என்பதையும், 'ஞான காண்டத்தைத் தொடர்ந்தவன் வாழ்வு எதனை நோக்கிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்லும்.' அவன் திருவாய் எதனை மந்திரமாக ஓயாது ஓதிக்கொண்டிருக்கும்? பிற உயிர்களிடம் அந்த ஞானி கொள்ளும் இணக்கம் எவ்வாறு அமையும்? அந்த இணக்கத்தால் உயிரினங்களின் அனுபவம் எப்படியிருக்கும்?' என்பதையும், எல்லாமக்களும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் சொல்வதற்கு ஏற்ற கதையாக இது இருப்பதாலும் இந்த இரணியப் படலத்தை இராமகாதையின் இடையில் தோற்றுவித்தார் புலவர் பெருமான்.

காரணம் : 9

ஞானி, ஓயாது ஓதிக்கொண்டிருக்கும் மந்திரத்தால் யார் யார் எத்தகைய நன்மை பெறுகிறார்கள்? அதனால், யார் யாருக்கு உய்வு கிடைக்கிறது? உயர்வு கிடைக்கிறது? என்ற பேருண்மையைச் சொல்வதற்கு, அந்த மந்திரத்தின் ஆற்றலையும் பெருமையையும் எடுத்துப் பேசவேண்டும்.

எது மந்திரம்? எந்த ஒரு சொல், நாவினின்றும் ஓயாது ஒலித்துக்கொண்டு வெளியேறுகின்றதோ, அது, ஓதுபவனது உள்ளத்தையும், கேட்பவனது உள்ளத்தையும் தட்டி எழுப்பி, செயல்படத் தூண்டுதல் செய்யவேண்டும். அத்தகைய சொல் தான் மந்திரம் எனப்படும்.

உள்ளங்களை நற்செயலுக்குத் தூண்டுவித்துக் கொண்டிருக்கும் அந்தச்சொல், பகவத் சிந்தனையை வளர்த்து, சொல்பவனையும் கேட்பவர்களையும் பக்தர்களாக ஆக்கினால், அதற்குத் திருமந்திரம் என்று பெயர்.

பகவத் சிந்தனையில் வளரும் பக்தன்தான். உலகியல் வாழ்வில் நடக்கும் தாங்க வொண்ணாக் கொடுமைகளைச் சகித்துக்கொண்டு, அதனை அழிக்கும் ஆன்ம வலிமை பெற்றவனாக விளங்குவான்.

அப்படி, ஆன்ம வலிமையைப் பெருக்கி மக்களைப் பகவானை. இமைப்பொழுதும் நீங்காத நெஞ்சினராய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தர்களாக வாழ வைக்கும் திருமந்திரத்தின் சிறப்பை எடுத்துப் பேசவேண்டுமே? திருமந்திரச் சிறப்பை செப்பவும், இப்படலம், இடையில் தோற்றம் பெற்றது.

காரணம் 10

அந்தத் திருமந்திரம் எது? நாத்தழும்பு ஏற நவில்பவரையும், அதனைச் செவி குளிரக் கேட்டுக் கேட்டு இன்புறுபவரையும் பக்தர்களாக உயர வைக்கும் அந்தத் திருமந்திரம் எது என்பதைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேலையில் கம்பர் ஈடுபடவில்லை.

அவரது ஈடுபாடு, ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரச் செல்வப் பெட்டகத்திடம். அந்தப் பெட்டகத்தில், திருமந்திரச் செல்வத்தைக் கண்டு களி பேருவகை கொள்கின்றார் கவிச் சக்கரவர்த்தி.

சக்கரவர்த்தி செல்வத்தைதானே காண்பார்: சேர்ப்பார், இந்தக் கவிச்சக்கரவர்த்தி, அந்தப் பெட்டகத்தில் கண்ட திருமந்திரச் செல்வம் 'ஓம் நமோ நாராயணாய' என்பதாகும்.

இந்தத் திருமந்திரச் செல்வத்தை முதன் முதலாகக் கண்டவர் திருமங்கை ஆழ்வார். அவர் சொல்கின்றார்: "நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் 'நாராயணா' என்னும் நாமம்' என்பது ஆழ்வார் தந்த திருமொழி. தமது அனுபவத்தை வெளியிட்ட ஆழ்வார், மக்களைப் பார்த்து அறிவுரை கூறுகின்றார். எப்படி? 'துஞ்சும்போது அழைமின்! துயர் உறில் நினை மின்! நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு 'நாராயணா' என்னும் நாமம்.' (துஞ்சுதல் - தூங்குதல்: மரணம் அடைதல். நஞ்சு - விஷம்)

அந்த நாராயண நாமத்தை எப்படிச் சொல்லவேண்டும் என்பதை விளக்குகின்றார் பெரியாழ்வார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நாடும் நகரமும் நன்கு அறிய நமோ நாராயணா என்று பாடுமின்' 'அப்போது நீங்கள் நல்ல பத்தராவீர்' (பக்தர்) என்று திருமந்திரத்தைப் பாடுமாறு கூறுகின்றார் பெரியாழ்வார். 'அப்படிப் பாடப்படுவதை, நாட்டில் உள்ளாரும் நகரத்தில் வாழ்பவரும் கேட்டு மகிழவேண்டும்' என்பது ஆழ்வார் தந்த அறிவுரை.

அதனால்,அந்த எட்டெழுத்துத் திருமந்திரச் செல்வத்தை யாவரும் பெற்று உய்யுமாறு கொடுத்த பிரகலாதன் பக்தியை நாட்டாரும் நகரத்தாரும் அறிந்துகொள்ளும் வண்ணம் இரணியப் படலத்தைப் பாடினார் கவிச்சக்கரவர்த்தி.

காரணம் : 11

இந்த எட்டெழுத்துத் திருமந்திரத்தை இடைவிடாது ஓதுபவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள். அவர்களது தத்துவக் கொள்கைக்கு விசிட்டாத்வைதம் என்று பெயர்.

விசிட்ட + அத்வைதம் = சேர்ந்த ஒன்று உலகம் உயிர் இறைவன் மூன்றும் ஒன்று சேர்ந்த அமைப்பு. விசிட்ட- சேர்ந்த : கூடிய' என்று பொருள்.

சங்கராச்சாரியார் கொண்ட அத்வைதத் தத்துவக் கொள்கையை விசிட்ட என்ற அடைமொழி சேர்த்து இராமானுஜர், அதனை மேலும் சிறந்த அத்வைதமாக விளக்கிக் காட்டுகின்றார்.

உலகம், உயிர், இறைவன் என்ற மூன்றும் என்றும் நிலையாக நிற்பன. இவைகள் மூன்றும் ஒன்றாக இசைய வேண்டியவை. மூன்றும் என்றும்: ஒன்றை விட்டு ஒன்று பிரியாதவைகள், கூடியேயிருக்கும். இந்தக் கூடுதலே விசிட்டாத்வைதமாகும். 'மரம்' ஒன்று இருக்கிறது: அதற்குப் பல கிளைகள் இருக்கின்றன. மரமும் சத்தியம்:கிளைகளும் சத்தியம். அதுபோல் பரம் பொருளும் அதிலிருந்து உண்டான உலகமும் சத்தியமே' என்று இராமானுஜ தத்துவத்தை ஒருவாறு விளக்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கூட்டத்தை - இணைப்பை 'ஓம்' என்ற பிரணவ மந்திரம் புலப்படுத்தும். 'அ, உ, ம்' என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையே 'ஓம்' என்ற பிரணவம்.

இறைவன், உலகத்தையும் அதில் வாழும் உயிர்களையும் தனக்கு உடலாகக்கொண்டு அதில் தங்கியுள்ளான். மேலும் தன்னுள் அவைகளைத் தங்கவைத்து அவைகளைத் தாங்கிக் கொண்டும் உள்ளான்.

உலகம் உயிர் ஆகியவற்றில் தங்கியும் அவைகளைத் தன்னுள் தாங்கிக்கொண்டும் இருப்பவனே காத்தற்கடவுள். அவன் நாராயணன்.

இந்த விளக்கத்தை உள்ளடக்கிக்கொண்டு அமைந்திருப்பது எட்டெழுத்துத் திருமந்திரம்.

எட்டெழுத்துத் திருமந்திரத்தின் பெருமையைச் சொல்லவந்த கம்பர், அதன் ரகசியார்த்தமான விசிட்டாத்வைதக் கொள்கையையும் விளக்க வேண்டுமல்லவா? அதற்கு ஏற்ற இடமாக அமைவது இரணியப் படலம்.

காரணம் : 12

ஆழ்வார்கள், மானுடமடங்கலாகிய நரசிம்மாவதாரத்தின் தோற்றத்திலும், அப்பெருமானது அருட் செயலிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். அளவற்ற அந்த ஈடுபாட்டின் காரணமாக, சிங்கப்பிரான் பெருமையைப் பற்றி ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நூற்றுக்கும் மேற்பட்டவைகள். திவ்வியப் பிரபந்தத்துள் பக்திமணம் பரப்பிக் கொண்டுள்ள நரசிம்மாவதாரப் பாசுரங்கள் அனைத்திலும், தம் மனத்தைப் பறிகொடுத்தவர் கம்பர்.

'புக்க அரி உருவாய் அவுணன் உடல்,
கீண்டு உகந்த சக்கரச் செல்வன்' என்றும்,
'கடுத்தபோர் அவுணன் உடல் இரு பிளவாக்
கையுகிர் ஆண்ட எங்கடலே' என்றும்

இதுபோன்ற பல தொடர்கள் நரசிம்மத்தைப் பற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழகிய தமிழ்ப் பாசுரங்களில் வந்துள்ளன. நரசிங்கத்திடம் ஆழ்வார் எத்தகைய ஆழ்ந்த ஈடுபாடு கொண்டார்களோ, அதுபோன்று அந்தப் பாசுரங்களில் அவ்வளவு ஈடுபாடு கொண்டார் கவிச்சக்கரவர்த்தி.

'அந்தியம் போதில் அரிஉரு வாகி
அரியை அழித்தவனை,
பந்தனை தீரப் பல் லாண்டுபல் லாயிரத்
தாண்டு என்று பாடுதுமே"

என்று, நரசிம்ம மூர்த்திக்குப் பல்லாண்டு பாடவருமாறு பக்தர்களை அழைக்கின்றார் பெரியாழ்வார். அந்த அழைப்புக்குத் திருச்செவிசாத்தினார் கவிச்சக்கரவர்த்தி. ஆழ்வாரின் அன்புக்கட்டளையின்படி நரசிம்மாவதாரத்துக்குப் பல்லாண்டு பாட இரணியப் படலத்தைத் தோற்றுவித்துக் கொண்டார் புலவர் பெருமான்.

காரணம் : 13

'......அவனடியார் சிறுமா மனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரியவே'– (8.10.3) என்பது நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழித்தொடர் அடியாரை, 'சிறுமாமனிசர்' என்று சொல்கின்றார். 'சிறு' என்பதும்'மா' (பெரிய) என்பதும் ஒன்றற்கு ஒன்று முரண்பட்டது. மனிதர் சிறுமையும் பெருமையும் பெற்றார் என்றால் எப்படிப் பொருத்தமாகும்?

பொருத்தம் கண்டார்கள் வைணவ ஆச்சாரியப் பெருமக்கள் முரண்பட்ட இரண்டு சொற்களின் பொருள்களையும் ஒன்றாக இணைத்துக் காட்டினார்கள் 'மானுடம் சிம்மம்' என்ற இரண்டு மாறுபட்ட உருவங்கள் ஒரே திருமூர்த்தியாக இசைந்து வந்த பெருமானை வழிபடும் ஆச்சாரியர்களுக்கு முடியாதது என்ன இருக்கிறது?

அரி- சிங்கம்: அரி-பகைவன்: (இரணியன்) அந்தியம்போது-மாலை நேரம்; பந்தனை-பிறப்புக்கட்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த
இரணியன் அகல்மார்வம் கீண்ட, என்
முன்னைக் கோளரியே !
முடியாததது என் எனக்கே" (2.6.6.)

என்பதும் ஆழ்வார் திருவாக்குதான்.

சிங்கப் பிரானைத் தமது சிந்தையில் இருத்தி, அந்தப் பெருமானை வழிபாடு செய்யும் பக்தர்களுக்கு முடியாத காரியம் என்பது என்ன இருக்கிறது? எல்லாம் வெற்றியாகவே முடியும் என்பது ஆழ்வாரது திண்ணமான எண்ணம்.

அதனால், வைணவ ஆச்சாரியப் பெருமக்கள் சிறுமை யையும் பெருமையையும் ஒன்றாக இசைத்துக்காட்டி விட்டார்கள். அடியார்கள் வயதால் சிறியவர்: உள்ளத்தால் பெரியவர். வயதில் மிகச் சிறுமையும் மனத்துப் பக்திப் பெருக் கில் மிகப் பெருமையும் உடையவர்களே அடியவர்கள். இது ஆச்சாரியர் கண்ட உரை வளம்.

இத்தகைய ஒரு சிறுமா மனிசரை தமிழ் கூறும் நல்லு லகுக்குக் காட்டத் திருவுள்ளம் பற்றினார் கம்பர். அத்தகு திருவுள்ளம், பக்த பிரகலாதனைப் படைத்த இரணியன் வதைப்படலமாக மலர்ந்தது.

காரணம் 14 :

கவிச் சக்கரவர்த்தி கம்பர், நம்மாழ்வாரிடத்தில் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர். இவர் கொண்ட ஈடுபாடு 'சடகோபரந்தாதி' என்ற ஒரு அருமையான பிரபந்தமாக வெளிப்பட்டது. நூறு கலித்துறைப் பாக்களைக் கொண்ட இந்தப் பிரபந்தத்தை முழுமையாக நிதானமாகப் படித்தவர்க ளுக்குப் புரியும் கம்பர் ஆழ்வார்பால் கொண்டிருந்த எல்லை யற்ற பக்தி.

அந்தப்பக்திப் பெருவெள்ளத்தால், ஆழ்வாரது திருவாய் மொழியை, தன்னுள்ளத்தில் குழைத்துக்கரைத்துக் கொண் டார் கம்பர். உன்னை என்னுள்ளே குழைத்த எம்மைந்தா! வான் ஏறே இனி எங்குப் போகின்றதே' (2.6.9.) என்று. ஆண்டவன், ஆழ்வார் உள்ளத்தில் குழைத்துக் கொண்டதைச் சொன்னார் ஆழ்வார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தப் பாசுரங்களை தன்னுள் குழைத்துக் கொண்டார் இந்தப் புலவர் பெருமான். தமது திருவுள்ளத்தில் குழைத்துக் கரைத்துக் கொண்ட அந்த உயர்வற உயர்ந்த தத்துவக் கருத்துக்களைத் தமது காவியத்தில் ஆங்காங்கு தெரிவித்துள்ளார் கம்பர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைதத்துவத்தை ஆழ்வாரைப் போன்று எளிமையாக்கிச் சொன்னவர் யாரும் இல்லை என்பது கம்பரின் திடமான எண்ணம்.

இறைவனை உண்டு என்பாரும் உண்டு: இல்லை என்பாரும் உண்டு. உண்டு என்று சொல்லும் ஆத்திகர் களுக்கும், இல்லை என்று சொல்லும் நாத்திகர்களுக்கும், அவனே பொருளாக விளங்குகின்றான் எப்படி?

உளன்எனில் உளன்அவன்: உருவம் இவ்உருவுகள்:
உளன்அலன் எனில்அவன் அருவம்இவ் அருவுகள்:
உளன்என, இலன்என இவைகுணம் உடைமையில்,
உளன்இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே. (1.1.9)

பாசுரம் எவ்வளவு எளிது? இதில் ஒரு சொல் கூட அரியது அல்ல! எல்லாச் சொற்களும் எளியனவே, "அவன் உள்ளவன் என்று சொன்னால் உருவமாக உள்ளான். அவன், இல்லை என்று சொன்னால் அருவமாகி விடுகின்றான். 'உள்ளவன், இல்லவன்' என்று சொல்லக் கூடிய இரண்டு குணத்திற்கு உரியவன் இறைவன். அதனால் ஒழிவு இல்லாது எங்கும் பரந்து விரந்துள்ளான்." என்பது இதன் பொருள்.

எதைப் போல உள்ளான்?

'உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்' உயிர், உடல் முழுவதும் பரவி, தன்னை மறைத்துக் கொண்டு இருப்பதைப் போல உலகப்பொருள் எல்லாவற்றிலும் மறைந்தும் நிறைந்தும் உள்ளான் இறைவன்.

மறைந்து இருப்பது எதுவோ, அதுதான் எங்கும் நிறைந்தும் இருக்கும். எங்கும் பரந்து நிற்கும் பொருள் கரைந்துதான் நிற்கும். இதுதான் இயற்கை இறைதத்துவம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்கும் மறைந்தும் நிறைந்தும் இருப்பவன் எப்படிக் காணப்படுவான்?

'பத்துடை அடியவர்க்கு எளியவன்:
பிறர்களுக்கு அரிய வித்தகன்' (1.3.1)

பக்தி உளம் கொண்ட பக்தர்களுக்குக் காண்பதற்கு மிக எளியவன்! பக்தியில்லாத-பண்பற்றவர்களுக்கு, காண்பதற்கு மிக மிக அரியவன் அந்த இறைவன். எளிமையும் அருமையும் உடையவன் அவன். அத்தோற்றம் காண்பவர் தம் உள்ளத்தைப் பொறுத்தது.

இந்த இறை தத்துவத்தை மக்களுக்கு எளிமையாக உணர்த்துவதற்கு இரணிய பிரகலாத வரலாறே பொருத்தம் என எண்ணினார் கம்பர். அந்த எண்ணத்தின் விளைவே, நாத்திக ஆத்திகப் போராட்டமாக அமைந்த இரணியன் வதைப்படலம்.

காரணம் 15 :

அடியவர்கள் பிராட்டியின் மூலம்தான் பெருமாளை அடைய வேண்டும் என்பது வைணவ சமய சம்பிரதாயம். பிராட்டி, புருஷகாரம் பெற்று விளங்குகின்றாள் சம்பிரதாயத்தில்.

திருமகள் தனது அருளால் அடியார்களைத் திருத்தியும், தனது அழகால் பெருமாள் திருவுள்ளத்தை அடியவர் பால் திருப்பியும் இருவரையும் ஒன்று சேர்த்து வைப்பவள் என்று வைணவ சமயாச்சாரியர்கள் சொல்லுவார்கள்.

தாயாரை வணங்கி அவள் திருவருளைப் பெற்றுக் கொண்ட பிறகு திருமாலை வழிபடச் செல்ல வேண்டும் என்பதை வைணவ சமய சாத்திர நூல்கள் கூறும்.

அதனால், பிராட்டிக்குத் தனிப் பெருமை கொடுக்கப் படுகிறது ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே, திருமகளை – பிராட்டியைத் துதிக்கும் பகுதியைத் தமது காவியத்தில் சேர்க்கும் கடப்பாட்டுக்கு உரியவராகின்றார் கம்பர்.

அந்தக் கடமையை நிறைவேற்றுகின்றது இரணியன் வதைப்படலம்.

இரணியனின் ஆகத்தைப் பிளந்த சிங்கப்பிரான் சீற்றத்தோடு தோற்றம் அளிப்பதால், தேவர்கள் அங்கு செல்ல அஞ்சுகின்றனர். அந்தச் சீற்றத்தை மாற்றுவதற்கு, திருமகளை சிங்கப்பிரான் பக்கலில் போகுமாறு வேண்டிக் கொள்கின்றனர் தேவர்கள்.

இந்த இடத்தில், புருஷகாரமாக விளங்கும் திருமகளுக்குத் தமது கவிதை மாலைகளைப் புனைவித்துக் கடமையை நிறைவேற்றிக் கொள்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

திருமகள் வடிவம் காட்டும் இந்தக் கவிதைகள் மிக மிக அற்புதமானவைகள். அவைகளை ஊன்றிக் கற்பார் உள்ளத்தில் இலக்குமி அப்படியே ஊன்றிக் கொள்வாள்.

இவ்வாறாகப் பலப்பல காரணங்களால், இரணியன் வதைப்படலம் இராமாவதாரக் கதையின் இடையில் தோற்றம் பெற்றுள்ளது.

கதைக்களம் :

'நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழியவாகை சூடும் இராம'கதை பாடுவது கம்பன் காவியம். இந்தக் கதையின் இடையில் நரசிம்மாவதாரக் கதையை எப்படிச் சேர்ப்பது? கதை, பெருங்கதையில் ஒரு சிறு கிளைக்கதைதான். ஆயினும் பெரியதில் சிறியது ஒட்டி வர வேண்டும். இரண்டுக்கும் உள்ள தொடர்பு விடுபடாததாக அமைய வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளவில் சிறியதாகயிருக்கும் ஒன்று, பெரியதாக வளர்ந்து கொண்டிருக்கும் ஒன்றோடு நன்றாகப் பொருந்திக் கொண்டு விட்டால், இதுவும் வளர்ச்சி பெற்று நிலையானதாக நின்று விடும்.

அளவில் சிறியதாக அமைந்தது;தான் இரணியன் வதைப்படலம். இந்தச் சிறிய கதைப்பகுதியை, பெரிய கதையில் இணைப்பதற்கு நல்ல ஒரு களத்தைக் கண்டார் கம்பர்.

இரண்டு கதைகளையும் இணைக்கும் களத்தை இலங்கையிலேயே ஏற்படுத்திக் கொண்டார் கவிச்சக்கரவர்த்தி இலங்கைதானே இராமகதை. உலகில் நடப்பதற்குக் காரணம். அதனால் நரசிம்மக்கதையையும் அங்கிருந்தே தொடரலாம் என எண்ணிக் கொண்டார் போலும் புலவர் பெருமான்;

மந்திராலோசனை :

இலங்கை நகர்முழுவதும் அழிந்தது. யாரை அழிப்பதற்கு. இலங்கைக் காவலன் இராவணன், வாலில் நெருப்பை வைத்தானோ, அந்த அனுமன் மூலமாகவே. நெருப்பால் வெந்து அழிந்தது நகர். பிறரை அழிக்க எண்ணுபவன் யாராக இருப்பினும், (எவ்வளவு ஆற்றல் பெற்றவனாக இருந்தாலும்) காலப்போக்கில் அவனே அழிந்து ஒழிவான்.

இராவணன், அனுமன் வாலில் வைத்த நெருப்பு, அனுமனைச் சுடவில்லை. வைத்த இராவணன் பக்கமே, அது திரும்பியது; இலங்கை நகரைச் சுட்டுஎரித்தது. பிறகு, 'மயன்' என்ற அசுரத்தச்சனைக் கொண்டு இலங்கை நகரை விரைவில் புதுப்பித்துக் கொண்டு விட்டான் இராவணன்.

நடந்து முடிந்த அவமானத்துக்குப் பரிகாரம் தேடுவதற்கு ஒரு ஆலோசனை நடத்தினான் இராவணன். இந்த ஆலோசனை மண்டபத்துக்கு மந்திரிகள் அனைவரையும் அழைத்தான் இலங்கைமன்னன். அவன் தம்பிகளும் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவமானம் வருவதற்குரிய செயலைச் செய்யும்போது, யாரையும் யோசனை கேட்பதில்லை. அவமானம் வந்தபிறகு, அதனைப் போக்கிக்கொள்ள, பிறரது யோசனை தேவைப் படுகிறது.

தனது புலன் இன்பத்துக்காக, எவன் ஒருவன் வரம்பு மீறிய, பழிதரும் செயலில் இறங்குகின்றானோ, அவன் இழிவு என்ற தண்டனையை அனுபவித்தேயாகவேண்டும். அந்தத் தண்டனையினின்றும் அப்பழிகாரன் தப்பித்துக் கொள்ளவே முடியாது. இது இயற்கை நீதி, இதுவே நியதி.

இந்த இயற்கை நீதியினின்றும் தப்பித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தோடு பாவச்செயலில் எவன் ஒருவன் இறங்குகின்றானோ, அவன் மனிதன் அல்லன் அரக்கனே. இந்த இயல்புடையவன் எங்கு இருந்தாலும், எந்தக் காலத்தில் இருந்தாலும் அவன் அரக்கனே - அவனைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அரக்கர்களே.

அத்தகைய அரக்கர் கூட்டத்தலைவன் இராவணன், இப்போது பிறரது யோசனையை நாடி நிற்கின்றான்.

இராவணனது ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் அனைவரும், தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ள விரும்புபவர்களே. பதவியின்மேல் பற்றுக் கொண்டவர் எவராயினும், அவர் தமது நாட்டுக்கு வரும் பழியைப் பற்றியோ, துயரங்களைப் பற்றியோ சிறிதும் கவலைப்படமாட்டார்கள்.

அத்தகைய மனம் படைத்த மந்திரிகள் தமது மன்னனுக்குக்கூறும் யோசனை எப்படியிருக்கும்? மன்னனின் சுயநலப் போக்குக்கு ஏற்ற வண்ணம் பேசும் மந்திரிகளே மந்திராலோசனைச் சபையில் முதலிடம் பெறுவர்.

இந்த முறையில் முதலிடம் வகிக்கும் மந்திரிகள் சூழ்ந்த இலங்கை மன்னனது பேரவையில் தமது அண்ணன் யாவரும் போற்றும் வண்ணம் உயர்ந்த நல்வாழ்வு வாழ வேண்டும் என்று உளமார விரும்பும் இருதம்பிகளும். யோசனை கூறுவதற்கு அமர்ந்திருந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் நடுவில் அமர்ந்திருந்த இராவணன், தனது ஆளுகைக்கு உட்பட்ட இலங்கை நகருக்கு ஏற்பட்ட அவமானத்தையும். அதனால் இலங்கை மக்கள் பட்ட துயரங்களையும் எடுத்து விவரிக்கின்றான்.

'சுட்டது குரங்கு ; எரிசூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் : கிளையும் நண்பரும்
பட்டனர் : பரிபவம் பரந்தது எங்கணும் :
இட்டஇவ் அரியணை இருந்தது என்உடல்.' O

....

'முற்றுவது என் இனி? பழியின் மூழ்கினாம்?

இது, இராவணன், அவையினர்க்குத் தெரிவித்த, இலங்கைக்கு நேர்ந்த அவமான நிலை. மானத்தோடு-பெருமையோடு,கொடிகட்டி வாழ்ந்த நகரத்துக்கு ஏற்பட்ட அவமானம் (பரிபவம்)-(ஒரு குரங்கு சுட்டு எரித்துப் பொசுக்கி விட்ட. செய்தி) வெளியிடங்களில் எல்லாம் சென்று பரவி விட்டதே என்பதுதான், இலங்கை மன்னன் மனத்தை மிக மிக வருத்திக் கொண்டிருக்கின்றது.

இதற்குப் பரிகாரம் என்ன? இதுதான் பேரவையினர் முன் வைக்கப்பட்ட கேள்வி.

இராவணன் 'ஆயிரமறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்த அரசன்'தான். ஆயினும், அந்த மறைப்பொருள் காட்டும் திசையில் செல்லவில்லை. அது காட்டும் நல் திசைக்கு எதிர்த்திசையில் சென்றான். இந்தத் திசையில் சென்றால் எதனைச் சந்திக்க வேண்டிவரும் என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காதவனாகச் செயல்பட்டான்.

இப்போது அவமானச் சந்திப்பு தானாகவே வந்து சேர்ந்தது அதனால் அமைச்சர்களைத்தானாகவே அழைத்துச் சந்தித்தான்: இந்த கேள்வியை அவர்கள் முன் வைத்தான் இராவணன்.

'நீ சென்ற திசை சரியானது அல்ல! அதனால்தான் இந்த அவமானம் வந்தது. இனிமேலாவது சென்ற திசையின் பக்கம் திரும்ப வேண்டாம்' என்று யோசனை கூறும்.

O க. ராமாயணம்-6082. எரி-நெருப்பு : கிளை-சுற்றம் : பரிபவம்-அவமானம் : பரந்தது-விரிந்தது : அரியணை-சிம்மாசனம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணிவு, அங்கு இருந்த அமைச்சர்களுள் ஒருவருக்கும் இல்லை.

ஆனால், அந்தத் துணிவு தம்பியர் இருவருக்கும் இருந்தது. அண்ணனை நல்வழிப்படுத்த வேண்டும், என்ற நல்லெண்ணம் கொண்டவன் ஒரு தம்பி. அதனால் கண்டித்தான் அண்ணனை அந்த நல்லெண்ணத்தோடு, தீய வழியில் சென்ற அண்ணனைத் திருத்துவதற்குப் பொருத்தமான அறிவுரையைப் பக்குவமாகக் கூறும் ஆற்றலும் பெற்றவன் ஒரு தம்பி.

நல்லெண்ணம் கொண்ட தம்பி. கும்பகர்ணன். அவன் தனது அண்ணன் செய்த தீய செயலை எடுத்துக்கூறி, அதற்கேற்ற தண்டனைதான் இந்த அவமானம் என்று சுட்டிக் காட்டினானே அன்றி, இராவணனைத் திருத்த முற்படவில்லை. காரணம் அவன் சாதி நெறியிலேயே நின்றவன்.

மற்றொருதம்பி வீடணன் இவன் அறிஞரின் அறிஞன்: மேதாவிகட்கு எல்லாம் மேலான மேதாவியான்: முழுதுணர் புலவன் (தீர்க்கதரிசி) அதனால் சாதி நெறியை உதறிவிட்டு, நீதிநெறியில் நிலையாக நின்றான்.

வீடணனது நீதிநெறியின் நிலை, அண்ணனைத் தீ நெறியில் அலையவிடாதபடி தடுக்க முயன்றது. ஆனால், முயற்சிக்கு வெற்றி கிட்டவில்லை.

புலன் இன்பத்தில் மூழ்கி, தீ நெறியில் செல்பவன், தான் செய்த செயலை நியாயப் படுத்தத்துணிவானே அன்றி, தீயது என்று ஒத்துக் கொள்ளமாட்டான்.

தனது தீய செயலை நியாயப் படுத்தி, பிறரை நம்ப வைக்கும் கொடியோன் ஒருவன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால், அவனால் அவனைச் சார்ந்தோர் அனைவர்க்கும் நாட்டுமக்களுக்கும் சொல்லொணாத்துன்பமே விளையும்.

நிகழ்காலத்து இன்பத்துக்காக, எதிர்காலத்துப் புகழைப் பலியிடுபவன் அரக்கனே அந்த அரக்க இனத்தினன் இராவணன். அதனால் வீடணன் கூறிய அறவுரையை ஏற்கவில்லை இராவணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய், என,
நொந்தனன் ஆதலின் நுவல்வதாயினேன்.'

என்ற முன்னுரையோடுதான் தொடங்கினான் வீடணன் தனது அறவுரையை.

புலன் இன்பம் ஒன்றையே நாடும் புல்லறிவாளனாக இராவணன் இருந்ததால், இந்த நல்லறிஞன் (வீடணன்) கூறிய அறவுரையை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

இருப்பினும், தனது அறவுரையின் முடிவுரையாக, முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கூறி அண்ணனைத் திருத்த விரும்பினான் வீடணநீதியான்.

அந்த விருப்பமே, இரணியன் கதையாக விரிந்தது. ஏன் இரணியன் கதை?

இராவணன், எந்த அறவுரையையும் கேட்டுக்கொள்ளாமல், துணிந்து தீமை செய்வதற்குக் காரணம், எல்லை அற்ற ஆற்றல் தன்னிடம் மிகுந்திருக்கின்றது என்ற அகம்பாவ எண்ணமே. 'அகங்காரக்குதிரை, தன்மேல் ஏறி சவாரி செய்யும் வீரனை, ஒரு காலத்தில் அவனைக்கீழே தள்ளி, அவன் எழ முடியாதபடி, தன் காலாலேயே மிதித்து அழித்துவிடும்' இந்த உண்மையை, அகங்காரக்குதிரையின் மேல் ஏறிச்சவாரி செய்யும் இன்பத்தில் மூழ்கியிருக்கும் போது. மனிதன் உணருவதில்லை. அப்படித் தான், இராவணனும், வீடணன் கூறிய அறவுரையின் உண்மையை உணராதவனாகயிருந்தான்.

அதனை உணர்த்துவதற்காகத்தான், 'ஆணவத்தால் நிமிர்ந்து. அகம் பாவப் போக்கால், யாரையும் மதிக்காமல் வாழ்ந்த இரணியன் எவ்வாறு அழிந்தான்' என்ற பழைய நிகழ்ச்சியை எடுத்துக் கூறினான் வீடணத்தம்பி.

நல்லதையே அன்றி, தீயதன்பக்கம் சிறிதும் திரும்பிப் பார்க்காத ஒரு சிறந்த தம்பி, தீயதையே அன்றி, நல்லதன் பக்கம் ஒரு சிறிதும் திரும்பப் பார்க்காத அண்ணனுக்கு, அறவுரை சொல்லும் பகுதியை. இரணியன் கதைக்குக்களமாக அமைத்துக்கொண்டு விட்டார் கவிச்சக்கரவர்த்தி.

ஒரு பெருங்கதையில் ஒரு சிறு கிளைக்கதையை பிரித்துக்காண முடியாதபடி நன்றாகப் பொருத்தி வைத்து விட்டார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்பு :

இரணியப் படலம் அளவில் சிறியது, ஆனால் சிறப்பில் அளவு கடந்தது.

1 பாரதம் மிகப்பெரிய காவியம். அதில் வரும் பகவத் கீதை அளவில் சிறியது. ஆனால் அதன் சிறப்பை நோக்கும் போது, அதற்குச் சமமாக நிற்கும் நூல் உலகில் எதுவுமே இல்லை என்று கூறலாம்.

இராமாயணமும் மகாபாரதமும் இந்தியாவின் இரண்டு பெரிய இதிகாசங்கள்- ஒன்றில் பகவத் கீதை. மற்றொன்றில் நரசிம்மக்கதை.

கீதையில் கிருஷ்ணாவதாரக் காட்சி. இரணியன் வதைப்படலத்தில் நரசிம்மாவதாரக் காட்சி.

2 கம்பராமாயண காவிய உலகில் இரணியன் வதைப் படலம் ஒரு திருக்கோயில். இங்கு சிங்கப் பிரான் சேர்ந்திருக் கின்றான் அல்லவா?

மற்றொரு வகையிலும் காத்தல் கடவுள் காட்சி அளிக்கும் கோயில்தான் இது.

முன்னொரு காலத்தில் திருக்கோயிலூர் என்ற புண்ணியத்தலத்தில் ஆழ்வார்கள் மூவர் ஒன்று சேர்ந்தார்கள் அவர்களுக்கு முதலாழ்வார்கள் என்று பெயர். அவர்கள் சேர்ந்த திருக் கூட்டத்தில் இறைவனும் வந்து கலந்து கொண்டு காட்சி அளித்தான். இறைவன் சேர்ந்ததால் திருக்கோயிலூர் ஆயிற்று.

இங்கு, கதை சொல்பவர் வீபீஷணாழ்வார். கதையில் வருபவர் பிரகலாதாழ்வார். சொல்ல வைப்பவர் கம்ப நாட்டாழ்வார். ஆக இந்தப் புதுமைப்படலத்தில் சேரும் மூவரும் ஆழ்வார்கள் இந்த மூன்று ஆழ்வார்கள் கூட்டத்தில் இறைவன் சிங்கப்பிரானாக வந்து காட்சி கொடுக்கின்றார். அதனாலும் இந்தப்படலம் ஒரு திருக்கோயில் என்ற சிறப்பை பெறுகிறது.

3. 'இந்த இராமாவதாரக் காவியம். திருவரங்கம் மேட்டழகிய சிங்கர் திரு முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது' என்ற கொள்கையைப்பலரும் ஏற்பர். அந்த அரங்கேற்ற காலத்தில்,இந்த இரணியன் வதைப்படலம் கம்பரால் படிக்கப் படும் போதுதான், அந்த அழகிய சிங்கர் கல்லுருவம் நீங்கி இன்பக் கூத்தாடி, தமது அங்கீகாரத்தை அளித்தார் என்ற ஒரு செவி வழிச்செய்தி உண்டு. இச்செய்தியும் இப்படலத்தின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3
வரம்பில் ஆற்றலான்

தொகுத்த வரத்தனாய்த் தோலாதான் மார்வம்
வகிர்த்த வளைஉகிர்தோள் மாலே!-உகத்தில்
ஒருநான்று நீஉயர்த்தி உள்வாங்கி நீயே,
அருநான்கும் ஆனாய் அறி.(நான்முகன் திருவந்தாதி-5)

இரணியனை, 'தொகுத்த வரத்தன்' என்றும், 'தோலாதான்' என்றும் திருமழிசை ஆழ்வார் கூறுகின்றார். ஆழ்வாரை அடிஒட்டி, இரணியன் தொகுத்திருந்த (திரட்டி வைத்திருந்த) வரங்களையும், எப்படி அவன் தோலாதவனாக விளங்கினான் என்பதையும் கவிச்சக்கரவர்த்தி, இரணியன் வதைப்படலத்தின் தொடக்கத்திலேயே விவரிக்கின்றார்.

தொகுத்தவரங்கள்:

இரணியன், உலகம் படைத்த பிரம்ம தேவனையே. தனக்குவேதம் கற்பிக்கும் ஆசிரியனாகப் பெற்றது. அறிவைப் பெருக்கிக் கொண்டு அதன் மூலம், தனக்குப்பாடம் கற்பித்த பிரம்மனிடமே, எல்லை அற்ற ஆற்றலை வேண்டிப் பெற்றது, பெற்ற ஆற்றலால், ஐம்பெரும் பூதங்களையும் தன் விருப்பப்படி மாற்றுதல் ஆக்கும் அயன் காக்கும் திருமால், அழிக்கும் அரன், வேதகணங்கள், யோகசித்தர் இவர்கள் எல்லாம் தமது உரிமை இழந்து இவனுக்கு அடங்கி நடக்கச் செய்தல், முப்பெரும் தேவரும் ஆக்கி, அளித்து, அழிக்கும் உலகத்திற்கு அப்பால் உள்ள அண்டபகிரண்டங்களிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்துதல், சூரிய சந்திரர்கள், எட்டுத்திக்குப் பாலகர்கள் இவர்களது உரிமையைப் பறித்து, தானே அவர் கடமையை நடத்துதல், மூவரையும் தேவரையும், 'இரணியனேபரம்; இரணியாயநம:' என்றே சொல்லி, தன்னை வணங்கச் செய்தல், தனது ஆணையையே, எங்கும் பரப்புதல், இவைபோல்வன பிறவும் அவன் தவம் செய்து பெற்றவரங்கள். எல்லையிலாத பெருந் தவத்தால் பல செய்மிறை அல்லல் அமரரைச் செய்யும் இரணியன் என்பது நம்மாழ்வாரின் கணிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொழுது போக்கு :

(அஷ்டதிக்கஜங்கள்) எட்டுத்திசையானைகளைப் பிடித்து, அவைகளின் துதிக்கைகளைப் பிணைத்து மோத விட்டு வேடிக்கை செய்து மகிழ்தல், ஆழக்கடல்கள் எல்லாம் அவனது கணைக்கால் அளவே ஆதலின், அவைகளில் இறங்கி நடத்தலில் இன்பம் காணுதல்,வண்டலிட்டு ஓடும் ஆற்றுநீரும், கொண்டல் (மேகம்) நீரும் அவனது குளுமைக்குக்காணாது. ஆகையால், அண்டத்தைப் பொத்துச் சென்று அப்பால் உள்ள கடலில் மூழ்கிக் களித்தல், நாககன்னிகைகளுடன் காலை உணவு உண்டு இன்புறுதல், பகல்பொழுதை இந்திரலோகத் தில் கழித்தல், இராப்போதில் பிரம்மலோகம் சென்று கொலு வீற்றிருத்தல், சந்திர விமானத்தில் ஏறி சிறிது நேரம் செல வழித்தல். சூரியத்தேரில் ஏறி உலாவுதல் இவை முதலாயின இரணியனது அன்றாடப் பொழுது போக்கு நிகழ்ச்சிகள்.

தோற்றம் :

இரணியனது தோள்கள் உயரமும் அகலமும் வலிமையும், கண்டாரை வியக்கவைக்கும் தோற்றமும் பெற்றவைகள். பெரிய தண்டாயுதம் அவைகளின் மேல் தங்கி அவற்றை அழகு செய்து கொண்டிருக்கும். பாற்கடலைக்கடைந்த மந்திர மாலை கூட இவைகளின் பக்கத்தில் நிற்க அஞ்சச் செய்வன இவைகள்.

இந்தத் தோள்களை ஒட்டித் தொங்கும் காதுகளுக்கு உதயகிரியும் அஸ்தமனகிரியுமே குண்டலங்களாகும். இந்த இருகுண்டலங்களும் ஊசலாட, தண்டாயுதம் தாங்கி இரணியன் நடக்கத் தொடங்கினால், அவன் அடியைத் தாங்காது. பூமியைத் தாங்கி நிற்கும் ஆதிசேடனே அயர்ந்து போவான்: நலிந்து போவான்.

இரணியன் நடக்கும் போது, அவனது முடியைத் தொட்டுப் பார்க்கும் பாக்கியம் அண்டகோளமுகட்டுக்குக் கிடைக்கும்: அவன் நடை போடும்போது பஞ்ச பூதங்களும் நடக்கும். உலகமே தட தட என ஆடும்.

இத்தகைய பெருந்தோற்றத்தைப் பெற்றவன் இந்த இரணியன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாரமை :

'சாதலின் இன்னாதது இல்லை' என்றவள்ளுவத்தின் படி 'இறந்துபோதல்' என்ற நிலையைக் காட்டிலும் துன்பம் தருவது எதுவும் இல்லை: அதனைக் கண்டு அஞ்சாதவரும் எவரும் இல்லை, அந்த இறத்தல் என்பதே இரணியன் பக்கம் வருவதற்கு அஞ்சும்.

பெண், ஆண், அலி, பிறமண்ணுலகத்துயிர்கள் எதன் மூலமும் அவனை மரணம் நெருங்காது; கண்ணில் காண்பன, கருதுவன, மண்- விண், உள், வெளி, ஆகிய எந்த இடங்களிலும் இறப்பு இல்லை இவனுக்கு. பகல், இரவு ஆகிய நேரங்களும் இவன் உயிருக்குப் பாதுகாப்பளிப்பன. ஆயுதங்கள், அல்லாதவைகள் இவைகள் போல்வன எவற்றாலும் இவனுக்கு அழிவு இல்லை.

அழிவற்ற ஆயுளைப் பெற்றவனாய் ஆணவத்தால் நிமிர்ந்து வாழ்ந்தவன் இரணியன். இவனது வரம்பில் ஆற்றலுக்கு முன்னால், உலகத்து உயிர்கள் எதுவும் மிக மிகச் சிறுமை படைத்தவைகளேயாகும்.

ஈது அவன் நிலை; எவ்வுலகங்கட்கும் இறைவன்' என்று, சொல்லி முடிக்கும் கவிச்சக்கரவர்த்தி பதினெட்டுக் (18) கவிதைகளில் இரணியனது வரத்தைத் தொகுத்தும், தோலாமையை வகுத்தும் காட்டுகின்றார்.

இந்தப் பதினெட்டுக் கவிதைகளும் மிகமிக அற்புதமானவைகள்: இரணியனின் அகத் தோற்றத்தையும் புறத் தோற்றத்தையும், கற்பார் கண்களின் முன் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றல் பெற்றவைகள். கதாப் பாத்திரங்களைக் கற்பார் உள்ளத்தில் அப்படியே தங்க வைக்கும் கவித்துவம் பெற்றவைகள் கம்பரின் கவிதைகள் அனைத்தும். ஆயினும், இந்தப் படலத்தின் தொடக்கத்தில் தோற்றம் அளிக்கும் 18 கவிதைகளுக்குத் தனிமகத்துவம் இருப்பதை, ஆழ்ந்து கற்பார் உணரலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்றலும் நிற்றலும் :

மனிதன், தனது வாழ்க்கையை வளம்பெற அமைத்துக் கொள்வதற்காகவே, பலப்பலவிதமான பொருள்களைப் பெற முயல்கின்றான். அம்முயற்சியினால் பெறவேண்டியவைகளுள் மிகமிக முக்கியத்துவம் பெறுவது எது? அதனை, வள்ளுவர் நன்கு சுட்டிக் காட்டுகின்றார். வாழ்க்கை வளத்திற்கு வழிகாட்டுபவர் அல்லவா அவர்!

அதனால், அந்த வள்ளுவப் பெருந்தகை சொல்வதற்கு எவரும் செவிகொடுத்துதான் ஆகவேண்டும்.

'வளமான-நலமான வாழ்க்கைக்கு மிகப்பெரும் துணையாக அமைவது கல்வி. அதுதான் கேடில் (கேடு+இல்) விழுச் செல்வமாக' நிரந்தரமாக இருப்பது, என்பது வள்ளுவர்தரும் அறிவுரைச் செல்வம்.

அதனால், 'கற்க' என்று ஆணையிட்டார் வள்ளுவப் பெருந்தகை அதனைத் தொடர்ந்து எப்படிக் கற்கவேண்டும்? எதனைக் கற்கவேண்டும்? கற்றபிறகு என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்விகளுக்குத் தெளிவான விடைகூறும் முறையில்,

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' என்றஒரு திருக்குறளை (391)

கவிச்சக்கரவர்த்தி கம்பர். வள்ளுவர் நெறி செலும் வள்ளலாகவும், திருக்குறள் விரிவுரை செய்பவராகவும் விளங்குபவர். ஆதலால், கல்வி பற்றிய இந்தக்கருத்தை தமது மனத்தில் இருத்திக் கொண்டு, புதுமைப்படைப்பாகிய இரணியன்வதைப் படலத்தைத் தொடங்குகின்றார் கம்பர்.

கற்பவை எவை? என்ற கேள்விக்கு வள்ளுவத்தில் வெளிப்படையாக விடை இல்லை, திருவள்ளுவரின் உள்ளம் அறிபவராகையால், கம்பர் இந்தக் கேள்விக்கு வள்ளுவத்தை ஒட்டி விடை கண்டு கொண்டு விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதனை மனிதனாக நன்கு வாழச் செய்து, பின்பு தெய்வ நிலைக்கு உயர்த்துவது எதுவோ அதுதான் கல்வி. அந்தக் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நூல்கள் தான் கற்கப்பட வேண்டியவைகள்.

அவைகள் வேதம், உபரிடதம், பிரம்மசூத்திரம், பகவத் கீதை போன்றவைகள். இதனை நன்கு உணர்ந்து தெளிந்தவர் கவிச் சக்கரவர்த்தி.

அதனால், தமது பெருங் காவியத்துள் (இராமகாவியம்) ஒரு சிறு காவியமாக அமையும் இந்தப் படலத்தை 'வேதம்' என்ற சொல்லை வைத்தே தொடங்குகின்றார் புலவர் பெருமான்.

இந்தப்படலத்துக் கதாப்பாத்திரமாகிய இரணியனை, அவன் பெற்ற கல்வியை வைத்தே அறிமுகப்படுத்துகின்றார் கம்பர்.

வேதம் கண்ணிய பொருள்எலாம்
விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரம்எலாம்
தாக்கொண்டு போந்தான்;
காதும் கண்ணுதல், மால்அயன்
கடைமுறை காணாப்
பூதம் கண்ணிய வலிஎலாம்
ஒருதனிப் பொறுத்தான். (6189)

என்பது, இரணியனை அறிமுகம் செய்து வைக்கும் முதல் கவிதை. இந்தக் கவிதையின் பொருள், இதற்குப் பின்னால் தொடர்ந்து வரும் கவிதைப் பொருள்களுக்கு ஒரு முன்னுரை போன்று அமைந்துள்ளது என்னலாம். இதன் விளக்கமே, இதனைத் தொடர்ந்த பிற கவிதைகள்.

இந்தக் கவிதை, இரணியன் அறிமுகத்தோடு நிற்கவில்லை: கவிச்சக்கரவர்த்தி, இந்த உலக மக்களுக்கு என்ன அறிவுரை, அறவுரை, சொல்ல வேண்டும் என எண்ணியுள்ளாரோ, அத்தனை ஆழ் பொருளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழிவுப் பாதையில் அடி எடுத்து வைத்துள்ள தனது அண்ணன் இராவணனை, அப்பாதையில் செல்லாமல் தடுத்து நிறுத்துவதற்காக, மேதையாகிய வீடணன் கூற்றாக அமைந்தது இந்தக் கவிதை.

இந்தக் கவிதையின் மூலம், 'மக்கள் எதனைக் கற்க வேண்டும்? எப்படிக் கற்க வேண்டும். அக்கல்வியின் பயன் யாது? அதை எப்படி அணுகினால் பயன் பெற முடியும்? பயனைப் பெறமுடியாதபடி தடுக்கும் அணுகுமுறை எது? பயனைத் தடுக்கும் அணுகு முறை, அந்தக் கல்வியாளனை எந்த உருவில் வளரச் செய்யும்? என்பன போன்ற நுண்ணுணர்வுக் கேள்விகளுக்குத் தெளிவான விடைகளை அளிக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

அதனால், வாழ்க்கையைச் செந்நெறியில் செலுத்த வேண்டும் என்று விரும்புபவர்கள் அனைவரும், இந்த முதல் கவிதையை முழுமையாக நின்று நிதானமாகக்கற்று, இதன் ஆழ்பொருளை உணர்ந்து தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

வேதம் :

'வேத்' என்றால் அறிவு என்று பொருள். அறிவு விளக்கத்துக்கு இருப்பிடமாக இருப்பது எதுவோ, அது வேதம் அந்த அறிவின் பயன் அதுவோ, அது வேதத்தின் அந்தம். வேதாந்தம். வேதத்தோடு நிற்பது அறிவுக் கல்வி. வேதாந்தத்திற்குச் (வேதம்+அந்தம்=வேதாந்தம்) (அந்தம்-முடிவு) செல்வது அறிவுக் கல்வியின் பயன்.

'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை
விட்டு சித்தன் விரித்தனனே'

என்பது பெரியாழ்வாரின் அனுபூதிப் பாசுரத் தொடர் - (359)

கல்வி அறிவுப்பயன், அந்த ஞான ஒளியைப் பெற வேண்டும் என்ற நுண்ணிய கருத்தைப் புலப்படுத்துவதற்காகவே, வேதக் கல்வியிலிருந்து இந்தப் படலத்தைத் தொடங்குகின்றார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வேதம், (மனிதர்களின் நல்வாழ்வுக்காக எவைகளைப் பெறவேண்டும் என்று) குறிக்கின்றதோ, அந்தக் கருத்துப் பொருள்கள் அனைத்தையும் நான்முகக் கடவுளே, (இரணிய னுக்கு) கொடுத்தான். அதனைப் பெற்றுக்கொண்ட இரணியன், தனது அறிவு (என்ன என்ன) கருதுகிறதோ, அதனை எல்லாம், (தனக்கு வேதக் கல்வி கற்பித்த அந்தப் பிரம்ம தேவனிடம் வரமாகக் கேட்டு) அவன் கொடுக்க, அதனைத் தனக்கு வலிமை தரும் ஒன்றாகப் பெற்றுக்கொண்டு வந்தான்'.

'(பிரம்மனிடம் பெற்றுக்கொண்ட வரத்தின் ஆற்றலால்) அழித்தற் கடவுளாகிய நெற்றிக் கண்ணன், (சிவபிரான்) திருமால், பிரம்மன், எல்லை காண முடியாத ஐம்பெரும் பூதங்கள் (கொண்டுள்ள) மதிக்கத் தக்க வன்மையை, தான் ஒருவனாகவே, நின்று தாங்கிக் கொண்டான், (இரணியன்)'

என்பது, இந்தக் கவிதையின் மேலெழுந்தவாரியான பொருள்.

உள்ளடங்கிய பொருள் :

'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்ற முதுமொழிக்கு ஏற்ப, இரணியனை வேதம் ஓதுவித்தவன் நான்முகன். (பிரம்மன்) இந்தத் தேவன், கல்வித் தெய்வமான கலைமகளுடைய, கணவன், அதனால், கல்வி கற்பிப்பதற்குத் தலைவனாகின்றான். (உரிமை பெற்றவனாகின்றான்.

ஓதுவித்தவன் பிரம்மன்: ஓதியவன் இரணியன் ஓதப் பட்டது வேதம். கற்பித்தவன் தேவன்: கற்றவன் அசுரன்: கற்றுக் கொடுக்கப்பட்ட நூல் வேதம்.

'வேதம் கண்ணிய பொருள்' என்றதனால், இதனை கற்பித்த நான்முகன், ஒரு முகமாக நின்று, வேதத்தின் அந்தமாகிய அறிவுப் பயன்வரை முழுமையாக, இரணியனுக்குக் கற்பித்துள்ளான் என்று உணரலாம்.

கற்பித்த ஆசிரியனும் மிக மிக உயர்ந்தவன்: 'விரிஞ்சனே' என்பதில் உள்ள ஏகாரம் இந்த உண்மையை உணர்த்துகின்றது. கற்பிக்கப்பட்ட நூலும் மிகப் பழைமையானது: மேலானது: உயர்ந்தது. வேதத்தினும் உயர்ந்த நூல் எது?

விரிஞ்சன் - பிரம்மன்: ஈந்தான் - கொடுத்தான்: போந்தான் - வந்தான்: போதம் - அறிவு; நுதல் - நெற்றி; காதுதல் - அழித்தல்: அயன் - பிரம்மன் - பொறுத்தான் - தாங்கினான் - கண்ணிய - குறித்த: கருதிய: மதிக்கத்தக்க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்படியிருந்தும் கற்றுக்கொண்ட மாணவன், மனித னாகக் கூட உயர்வு பெறவில்லை. அசுரனாகவே தாழ்ந்தான்' என்ற குறிப்புப் பொருளை வெளிப்படுத்துகின்றது கவிதை யின் இரண்டாவது அடி.

'போதம் கண்ணிய வரம்தான்' இரணியன் - தனக்கு வேதபாடம் கற்பித்த பிரம்மதேவனிடம் கேட்டது. உலகியல் அறிவு எதனைக் கேட்கவிரும்பும்? உலகியல் வாழ்வில் உயர்வு பெற்று வாழவேண்டும், அதற்குத் தேவையானவற்றைத் தரக் கூடியது எதுவோ அதைத்தான் இவன் பெற்ற அறிவு, வர மாகக் கேட்கத் தூண்டுகின்றது.

வேதம், கர்ம காண்டத்தில் தொடங்குகிறது: ஞான காண்டத்தில் நிறைவெய்துகிறது. வேதத்தின் முற்பகுதி கர்ம பலன்: அறிவு. பிற்பகுதி ஞானநிலை: அறிவின் பயன்.

வேதம் கண்ணியது (குறிப்பது) தன்னிடம் வரும் மனி தனை நிறை நிலை எய்த வைப்பது: மனிதன் ஞானியாக வேண்டும் என்பது.

ஆனால், வேதத்தைக் கற்ற இரணியனோ, முற்பகுதி யிலேயே நின்று விட்டதால் அறிவு விரும்பும் வரத்தையே கேட்டுப் பெற்றான்.

இரணியன் வேதத்தின் மூலம்தான், அறிவு பெற்றான், ஆயினும் அந்த அறிவு, அவனை மனிதனாக வாழும் நிலைக்கு உதவவில்லை, அசுர வாழ்க்கைக்கே அவனை இட்டுச் சென்றது.

ஏன்? இது ஆய்வுக்குரிய ஒன்று.

மனிதனும் அசுரனும் :

இரணியன் அறிவு பெற்றது உண்மை. ஆனால், அது அதற்குரிய முறையில் செயல்படவில்லை.

மனம் படைத்தவன் மனிதன், அந்த மனம், உடலில் உள்ள பொறிபுலன்களின் மூலம் இன்பம் பெறத் துடிக்கின்றது பெறும் இன்பம் எம்முறையில் வந்தது என்பது பற்றி மனத்துக்குக் கவலையில்லை. மனம் நாடுவது இன்பம் ஒன்றே. அந்த இன்பம், மனம் தங்கியிருக்கும் உடலின் மூலம் தான் கிடைக்கிறது. அதனால் உடல் வளமே தனது நலம் என மனம் எண்ணுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த எண்ணத்தின்படி உடல் இயங்குகின்றது. உடலின் இயக்கம் நல்வழியிலா? அல்வழியிலா? நல்வழியில் இயங்கினால் மனிதன் இயக்கம் அல்வழியில் அமைந்தால் அசுரன்.

மனித உருக்கொண்ட ஒருவனை அல்வழியில் இயங்க வைத்து, அவனை அசுரனாக வாழச் செய்வது அவனுடைய மனம் அது, மனிதனை அசுரனாக்கியது எதற்கு? தனது இன்பத்துக்காக.

இப்படி மனிதனை அசுரனாக மாற்றும் ஆற்றல் பெற்ற மனத்தை, நல்வழிப்படுத்துவதுதான், அறிவு செய்ய வேண்டிய செயல்.

அறிவும் அறிவின் பயனும் :

மனம் போன போக்கில் எல்லாம் போய்க் கொண்டிருப்பவன் மனிதன் அல்லன்: அவன் அசுரன். இந்த மனத்தினன் பெற்ற அறிவு, என்ன செய்திருக்க வேண்டும்? அதனைச் செய்யவில்லை. அதனால் மனித உருவில் வந்த இரணியன் அசுரனாகக் காட்சி அளிக்கின்றான்.

'எது அறிவு? அந்த அறிவின் பயன் எது இதற்குத் தெளிவான விளக்கம் தருகின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். மனித வாழ்க்கைக்கு வழி காட்டவந்தவரல்லவா அந்தத் தெய்வத் திருமகனார்! அவர் காட்டும் வழியே அசுர இயல்பை ஓட்டும் வழியாகும்.

"சென்ற இடத்தால் செலவிடா தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"-(422)

'எது அறிவு?' என்ற கேள்விக்கு வள்ளுவர் தந்த விடை இது.

'மனத்தை அது சென்ற புலத்தின்கண் செல்ல விடாது அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு.' என்பது. இந்தக் குறளுக்கு, உரையாசிரியர் பரிமேலழகர் தரும் விளக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மேலும் - குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் (வீரன்) போல, வேறாக்கி, மனத்தைப் புலமறிந்து செலுத்து வது அறிவு, என்றார்' அஃது உயிர்க்குணம் ஆகலின்,' என்று ஒரு உவமையின் மூலம் தெளிவுபடுத்துகின்றார் உரையாசிரியர்.

மனம், ஒரு குதிரை. அறிவு. அதன்மேல் ஏறி உட் கார்ந்து அதனை வழிநடத்திச் செல்லும் வீரன். வீரனுடைய நல்வாழ்க்கைக்குத்தான் குதிரை. குதிரைக்காக, வீரன் இல்லை. குதிரை செல்லும் வழியில் எல்லாம், வீரன் செல்ப வனாக இருந்தால். குதிரையும் அழியும்; வீரனும் அழிவான். குதிரையை நல்வழியில் நடத்திச் சென்றால், வீரனும் பெருமை பெறுவான். குதிரையும் பெருமைக்குரியதாகயிருக்கும்.

மனக் குதிரையை, அறிவு, வீரனாக நின்று அடக்க வேண்டும். மனம் அடங்க வேண்டும்; அறிவு அடக்க வேண்டும்.

தீயதன் பக்கம் நோக்கும் மனத்தைத் திருப்பி, நல்லதன் பக்கம் செலுத்துவது எதுவோ அதுதான் அறிவு.

"ஆம்புடைத் தெரிந்து வேந்தற்கு

'**அறிவு**' எனும் அமைச்சன் சொன்னான்" (232) என்று, திருத்தக்க தேவர் தமது சிந்தாமணிக் காவியத்துள் அறிவை அமைச்சனாகக் காட்டி விளக்குகின்றார்.

"ஆவிபோம் வேலைவாய் **அறிவு** தந்து அருளினாய்" என்றும். (4063)

'ஆவ நீ ஆவது என்று **அறிவினார்** அருளினார்' (4065) என்றும் கம்பநாட்டாழ்வார் அறிவு செய்யும் வேலையைத் தெளிவு படுத்தியுள்ளார்.

இத்தகைய அறிவை. ஒருவன் பெற்றிருக்கின்றான் என்பதை எவ்வாறு தெரிந்துகொள்வது? அதனையும், வள்ளு வரிடமே கேட்போம்.

அறிவின் பயன் இன்னதுதான் என்பதை, வள்ளுவப் பெருந்தகை, கேள்வி அமைப்பின் உருவில், ஒரு குறளைத் தந்து தெளிவு படுத்துகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை? (315)

என்பது, திருவள்ளுவர் 'அறிவின் பயன் எது?' என்பதற்குத் தந்த விளக்கம்.

'துறந்தார்க்கு, உயிர் முதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினான் ஆவதொரு பயன் உண்டோ, பிறிதோர் உயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவா இடத்து?' என்று இந்தக்குறளுக்கு விளக்கம் கொடுத்த பரிமேலழகர், இதனை, மேலும் விவரிக்கின்றார்.

'குறிக்கொண்டு காத்தலாவது: நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தம் தொழில்களானும், பிறவாற்றானும், உயிர்கள் உறுவனவற்றை முன்னே அறிந்து, உறாமல் காத்தல். இது பெரும் பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணிய உடம்பு உடையவற்றைப் பற்றி வருதலின் பொதுப் படப் பிறிதின் நோய்' என்றும், 'மறப்பான் அது துன்புறினும் நமக்கு இன்னா செய்தலாம்' என்று அறிந்து காத்தல் வேண்டும் ஆகலின் 'அது செய்யாவழி **அறிவால் பயன் இல்லை**' என்றும் கூறினார்,' என்பது உரையாசிரியர் தமது நுண்மாண் நுழைபுலம் கொண்டு 'அறிவின் பயன் இன்னது தான்' என்று தெளிவுபடுத்திய விளக்கமாகும்.

பிற உயிர்களின் துன்பத்தைத் துடைக்க முற்படுவதே அறிவு பெற்றதன் பயன் ஆகும்.

'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் உளன் ஒரு தக்கோன்.' என்று, அறிவின் பயனைப் பிரகலாதன் பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார் கம்பர்.

மன்னுயிர்க்கு எலாம் அன்பினனாதல் அறிவின் பயன். இந்த அன்புக்கு அடிப்படை பக்தி, பிரகலாதன் கொண்ட பகவத் பக்தி, இந்த சீர்மைச் செல்வனை, மன்னுயிரெல்லாம் தன்னுயிராகக் கருதும் அன்பன்' என்ற அளவிற்கு வாழ வைத்துள்ளது.

'யாழின் இசையே! அமுதே! **அறிவின் பயனே!** அரியேறே!' ✱ என்று நம்மாழ்வார் நாராயணனை அழைக்கின்றார்.

✱ திருவாய்மொழி 5. 8. 6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிவின் பயனாக விளங்குபவன் இறைவன், அவன் எல்லா உயிர்களிலும் தங்கியுள்ளான். அதனால் பகவானிடம் பக்தி செலுத்தும் பக்தன், எல்லா உயிர்களோடும் இணைந்தவனாகின்றான்: அறிவின் பயனைப் பெற்றவனாகின்றான். தந்தை பெற்றது அறிவு: அது நான் முகனிடம் வேதக் கல்வி கற்று பெற்றது: முழுமைபெறாதது. கற்றதன்படி நிற்க(நடக்க)வில்லை. ஆனால், தான் நிலையாக நிற்க விரும்பினான். மைந்தன் பெற்றது அறிவின்பயன்: யாரிடமும் சென்று கற்று பெற்றது அல்ல இது: முழுமைப்பெற்றது. அதன்படி நின்றான். (நடந்தான்) தான் நிலையாக நிற்க வேண்டும் எனவிரும்பவில்லை. இவைகளுக்கு நடுவில் நடக்கும் போராட்டத்தை விவரிப்பதுதான் இரணியன் வதைப்படலம்.

வலிமையும் வாழ்வும் :

பிரம்ம தேவனிடம் கேட்டுப்பெற்ற வரத்தால், இரணியன், அளவு கடந்த வலிமையை, தன்னிடம் வளர்த்துக் கொண்டு விட்டான். ஒருவனிடமே வளரும் வலிமை, பலரது சுதந்திர வாழ்வையும் உரிமையையும் பறித்துக்கொள்ளும் இயல்புடையதாகிவிடும். இந்த உண்மையை இரணியன் தனது வாழ்வில் நிரூபித்துக் காட்டிவிட்டான்.

இரணியனது இந்த நிலையை, கவிதையின் பின் இரண்டு அடிகளும் விளக்கிக் காட்டுகின்றன.

உலக இயக்கம் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஆக்கல், அளித்தல் (காத்தல்) அழித்தல் என்ற மூன்று பெரும் செயல்களை, அயன், அரி, அரன் என்ற முத்தேவர்களும் ஏற்றுக் கொண்டிருந்தனர். ஐம்பெரும் இயற்கை அமைப்புகளும் (மண், விண், நீர், நெருப்பு, காற்று என்ற பஞ்ச பூதங்களும்) உலக இயக்கத்துக்குத் தமது சக்திகளை வழங்கும் பொறுப்புடையனவாக அமைந்திருந்தன.

இரணியன் முத்தேவர்களின் செயல் உரிமையைப் பறித்துக் கொண்டான்: ஐம்பெரும் பூதங்களின் சக்திகளையும் தனக்கே உரிமையாக்கிக் கொண்டான். எல்லாவற்றையும் தானே தாங்கிக்கொண்டான். அவ்வளவு வலிமையுடையவனாக விளங்கினான் இரணியன்.

இதனை. 'காதும்.........வலிஎலாம் ஒரு தனிப்பொறுத் தான்.' என்ற கவிதையின் பிற்பகுதி கூறுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தகையதனித்ததேரர் ஒப்பற்ற வலிமை உடையவன் எப்படி வாழ்ந்தான் என்பதை அடுத்த கவிதை எடுத்துரைக்கின்றது.

'எற்றை நாளினும் உளன்எனும்
இறைவனும். அயனும்,
கற்றை அம்சடைக் கடவுளும்,
காத்து, அளித்து அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ?
அதன்புறத்து உலவா
மற்றை அண்டத்தும், தன்பெயரே
சொல வாழ்ந்தான்.' (6190)

எங்கும், எவரும் இரணியனது பெயரையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அப்படியாவரும் இவன் பெயரையே சொல்லும் வண்ணம் தனது வலிமையைக் காட்டி அவர்களை அடக்கி வைத்து வாழ்ந்து கொண்டிருந்தான் இரணியன்.

'இரணியாயநம:' என்ற பெயர் எங்கெங்கெல்லாம் பேசப் பட்டன என்பதைக் கூறுகின்றது இக் கவிதை.

அண்ட கோளங்கள் பல உண்டு. அவற்றுள் ஒரு அண்ட கோளத்தில்தான், மும்மூர்த்திகளின் தொழில்கள் நடைபெறுகின்றன. மும்மூர்த்திகளின் தொழில்களுக்கு அப்பாற்பட்ட அண்ட கோளங்களும் இரணியனது ஆட்சிக்கு உட்பட்டன. அதனால் எந்த இடத்தில் வாழ்பவராக இருந் தாலும், அவர்கள் அனைவரும் இரணியன் பெயரையே சொல்லியாக வேண்டும்.

இரணியன்தான் இறைவன்: இவன் அன்றி வேறு யாரையும் இறைவனாக யாரும் கருதவும் கூடாது. சொல்லவும் கூடாது இது இரணியனது ஆணை.

'ஒற்றை அண்டம், மற்றை அண்டம்' என்று வெவ்வேறாக அண்டங்களைப் (உலகம்) பிரித்துக் காட்டுகிறது இக்கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எல்லாக்காலத்திலும் (ஊழிக்காலத்தும்) இருப்பவன் என்று(வேதங்களால்) கூறப்படுகின்ற திருமாலும், பிரம்மனும், தொகுதியாக அமைந்த சடையினைக்கொண்ட சிவபெருமானும், காத்து, படைத்து, அழிக்கும் தொழில் நடைபெறக் கூடிய ஒற்றை அண்டத்தில் மட்டுமா? அதன் வெளிப்புறத்தில், அழியாத நிலையுடைய பிற அண்டங்களில் உள்ளவர்களும் தன்னுடைய பெயரையே (இரணியாயநம:) சொல்லிக்கொண்டிருக்கும் படியாக, (ஆணவத்தோடு) வாழ்ந்தான். (இரணியன்)'

இக்கவிதையின் பொழிப்புரை இது.

உலக இயக்கத்துக்குரிய வலிமை அனைத்தையும் இவன் ஒரு சேரப் பெற்றிருப்பதால், தன் பெயரை அன்றி, வேறு எவர் பெயரையும் கடவுளாக வைத்துச் சொல்லக் கூடாது என்பது இரணியன் பிறப்பித்த ஆணை. இது அவனுடைய 'வலிமையும் ஆணவ வாழ்வும் ஆகும்.

வாழ்வின் விரிவு :

இரணியன் நடத்திய ஆணவ வாழ்வை விவரிக்கின்றன இதனைத் தொடர்ந்துவரும் மற்றைய கவிதைகள்.

'அகன்றபேர் ஆழி ஏழும் தன் இரு தாள் அளவு எனக் கடந்து ஏறும்.'

'அண்டத்தைப் பொதுத்து. அப்புறத்து அப்பினால் ஆடும்'
'இரவின் ஓலக்கம் நான்முகன் உலகத்துள் இருக்கும்.
'மேருமால் வரை உச்சிமேல் அரசு வீற்றிருக்கும்'
'உலகின் வலியும் செய்கையும் வருணன் தன் கருமமும் மாற்றும்.'
'ஓம வேள்வியின் இமையவர் பேறுஎலாம் உண்ணும்.'

இரணியன், தனது ஆணவப் பெருக்கால் நடத்திய பொழுது போக்குச் செயல்களை விவரிக்கும் கவிதைகளில் சில தொடர்கள் இவைகள்.

இரணியன் நடத்திய ஆணவ வாழ்வுப்பெருக்கு, பிறரது வாழ்வுப் பெருமையை எவ்வளவு சிறுமை ஆக்கியது என்பதை, கம்பர் இரண்டு கவிதைகளில் சுருக்கிச் சொல்கின்றார்.

'ஆழி—கடல்: தாள்-கால்: அப்பு-தண்ணீர்: ஓலக்கம்-அரசனாய் வீற்றிருத்தல் : மால்-பெரிய: வரை-மலை: கருமம்-செயல்: வேள்வி-யாகம்: இமையவர்-தேவர்: உண்ணும்-எடுத்துக் கொள்வான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"காவல், காட்டுதல், துடைத்தல் என்று இத்தொழில் கடவ
மூவரும், அவை முடிக்கிலர்: பிடிக்கிலர் முறைமை:
ஏவர் மற்றவர்? யோகியர் உறுபதம் இழந்தார்:
தேவரும்அவன் தாள் அலால் அருச்சனை செய்யார்.' (6197)

"மருக்கொள் தாமரை நான்முகன், ஐம்முகன் முதலோர்
குருக்களோடு, கற்று ஓதுவது அவன் பெருங் கொற்றம்:
சுருக்கில் நான்மறை, தொன்று தொட்டு உயிர்தோறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் 'இரணிய' னே! நம! என்னும். (6198)

இரணியனது ஆணைக்கு அஞ்சி, மும்மூர்த்திகளும், தமக்கே உரிய தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்பவைகளைச் செய்து முடிக்க இயலாதவர்களாயினர். அதனால், தமது முறைமையைக் கடைப்பிடிக்காமல் நெகிழ விட்டனர். தலைமைத் தேவர்களது நிலைமையே இப்படி என்றால், தாம் விரும்பிய செயலைச் செய்து முடிக்க வல்ல ஆற்றலுடையவர் வேறு எவர் தாம் உள்ளார்?

அதுமட்டும் அல்ல! யோகப் பயிற்சியில் கை தேர்ந்த யோகிகளும் கூட, தமது யோக பலத்தால் பெறக்கூடிய உயர்ந்த பதவிகளை இழந்து விட்டார்கள்.

யாவராலும் வணங்கப்படும் சிறப்பினை உடைய தேவர்கள், என்ன செய்கின்றார்கள்? அவ்வளவு பெருமைக்குரிய அந்தத் தேவர்களும், இரணியனுடைய பாதங்களையே நாள் தோறும் வணங்குவார்கள். இந்த அசுரனது பாதங்களை அன்றி, வேறு யாவருக்கும், எதற்கும் அருச்சனை செய்து வழிபட மாட்டார்கள் தேவர்கள்.

தேவர்கள், இவனையே கடவுளாக மதித்து வழிபாடு செய்வது மட்டுமல்ல!

இவனது பெரும் வெற்றிப் புகழையே அந்தத் தேவர்கள் நாள் தோறும் ஓதிக்கொண்டிருக்க வேண்டும். இந்த வெற்றிப் புகழையாரிடமிருந்து கற்றுக்கொள்வது? இரணியனுடைய புரோகிதரிடமிருந்து (குருக்கள்) கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படி,

காட்டுதல்-படைத்தல்: துடைத்தல்-அழித்தல்: மரு-வாசனை: ஐம்முகன்- சிவன்: கொற்றம்- வெற்றி: குருக்கள் - புரோகிதர்: மறை- வேதம்: நம- வணக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகழை ஓதுபவர்கள் யார்? நான்முகனும் ஐம்முகனும் ஒருமுகமாய் நின்று ஓதுவார்கள். நான்முகன்-பிரம்மன்; ஐம்முகன்-சிவபிரான். நான்கு, ஐந்து முகங்களை உடையவர் களாகயிருந்தும், ஒருமுகம் உடைய இரணியன் ஆணைக்கு அஞ்சி, அவன் பெரும் கொற்றத்தையே (வெற்றி) ஓதுபவர்களாகின்றனர்.

தனது வெற்றிப் புகழை தேவர்களையே ஓதச் செய்ததோடு நிற்கவில்லை இரணியன் இட்ட ஆணை. அதற்கு மேலும் சென்று, தொன்றுதொட்டு வந்த - காலம் பல கடந்து வந்த ஒரு நிலையான கொள்கையை அவனது காலத்தில் மாற்றி வைத்து விட்டது அசுரனின் ஆணை.

சுருக்கமாகச் சொல்வது என்றால், நான்கு வேதங் களும் கூட, அவனையே தெய்வம் என்று சொல்லித் துதிக்க வைத்துவிட்டான் இரணியன்.

தெய்வம், உயிர்கள் தோறும் உறைவது என்பது தொன்று தொட்டு வந்த நம் நாட்டுப் பழங்காலக் கொள்கை. அதனால், எங்கும் நிறைந்த ஒன்றாக, வெளியில் தோன்றாமல் மறைந்து நிற்பதாகத் தெய்வம் இருப்பதால், வேதம் அந்தத் தெய்வத்தைத் துதித்துக்கொண்டிருந்தது. இவன் காலத்தில், அது மாற்றப்பட்டது. அந்த வேதம் 'இரணியாய நம' என்று சொல்லி இவனையே துதிக்க வேண்டும்.

இது எப்படி நடந்தது?

வேதம் ஓதுபவர்கள் வேதியர்கள். அவர்கள் வேதத்தை ஓதத் தொடங்கும் போது 'ஓம் நமோ நாராய ணாய' என்று இறைவன் திருமந்திரத்தைச் சொல்லுவார்கள். 'நாராயணன் என்றால்' எங்கும் எதிலும் என்றும் தங்கியிருப் பவன், அவைகளைத் தாங்கியும் இருப்பவன்' என்று பொருள், அதனால், வேதியர்கள் வேதத்தை தொடங்கும் போது, 'நாராயணனாகிய இறைவனே உனக்கு வணக்கம்'. என்று சொல்வது தொன்றுதொட்டு வரும் ஒரு நிலையான வழக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த வேதியர்கள், இரணியனது ஆட்சிக்கு உட்பட்டு நடப்பவர்கள்தானே! ஆகவே, அவனது ஆணவ ஆணையை மீற இயலாதவர்களாய், 'இரணியனாகிய தெய்வமே' உனக்கு வணக்கம்' என்று சொல்லிவிட்டு வேதத்தை ஓதுபவர்களானார்கள். அதனால், 'நான்மறை, 'இரணியனே! நம!' என்னும்' என்று சொல்லப்பட்டது.

இரணியனது ஆணவப் பெருவாழ்வு, மும்மூர்த்திகளையும், யோகியர்களையும் தேவர்களையும் தமது சுதந்திரத்தை இழந்து வாழச் செய்தது.

சுருங்கச் சொல்வதென்றால், வேதம் ஓதும் வேதியர்களும், நாராயணனை வணங்கும் அவர்களது ஆன்மச் சுதந்திரம் பறிக்கப்பட்டு, இரணியனே! நம!' என்று சொல்லி. இந்த அசுரனையே தெய்வமாகக் கருதி வாழ வேண்டியவர்களானார்கள்.

இரணியத் தெய்வம்:

தெய்வத்துக்கு அழிவு இல்லை: மரணம் என்பது மண்ணில் வாழும் உயிரினங்களைச் சேருமே அன்றி, தெய்வத்தின் பக்கம் நெருங்காது.

மரணம், எந்த உருவத்திலாயினும் மன்னுயிர்களிடம் நெருங்கி, உடல்களினின்றும் அவைகளைப் பிரித்துக்கொண்டு போய்விடும்.

மரணம் எந்த இடத்தில், எந்த நேரத்தில், எந்த உருவில், எந்த முறையில் மனிதனை நெருங்கும் என்பது யாருக்கும் முன்கூட்டித் தெரியாத ஒன்றாகும். ஆனால், அது வரும் என்பது மட்டும் உறுதி. மரணப் பிடியினின்றும் யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

இரணியன் தப்பித்துக்கொள்ள முயன்றான். அவனது முயற்சிக்கு, அவன் பெற்ற அறிவு (போதம் கண்ணிய வரம்) உதவியது, அவன் செய்த தவ வலிமையால், பிரம்மதேவனையே தன் பக்கம் வரச்செய்தான். மரணம் தன்னை எந்தவகையிலும் அணுக முடியாதபடி வரம்கேட்டான் அவன். பிரம்மதேவன் வரம் கொடுத்தான். அதனால் அழிவு அற்றவன் ஆனான் இரணியன். ஆகவே தன்னையே தெய்வமாகக் கொண்டு அனைவரையும் வணங்கச் செய்தான் இரணியன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதனது அறிவு, எவ்வளவுதான், தனக்கு அழிவு வராதபடி அணைபோட்டுக் கொண்டாலும், எல்லாவற்றையும் கடந்து மேல் நின்று இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சக்தி உரிய நேரத்தில், அந்த அணையை உடைத்தெறிந்துவிடும். இந்த உண்மையை உணர்ந்து கொள்ள மனிதனது அறிவு மறுக்கிறது. உண்மையை உணராத ஒன்று, சிற்றறிவுதான் என்றும், மனிதன் தெரிந்து கொள்வதில்லை, தெரிந்து கொள்ள முயல்வதும் இல்லை! தெரிந்து சொன்னால் கேட்பதும் இல்லை.

இத்தகைய நிலையினனாக வாழ்ந்தவன் இரணியன். தனக்கு எந்த வகையிலும் அழிவு வராது என்ற முழுமையான நம்பிக்கையால் ஆணவமே வடிவமாக நின்றான் அவன்.

சாகா நிலை :

'நீரில் சாகிலன்: நெருப்பினும் சாகிலன்: நிமிர்ந்த
மாரு தத்தினும், மண்ணின்மேல் எவற்றினும் மாளான்:
ஒரும் தேவரும், முனிவரும் பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும் அனையவன் தனைச்சென்று சாரா?
(6204)

உள்ளில் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையும் கொல்லா;
நள்ளின் சாகிலன்: பகலிடைச் சாகிலன்: நமனார்
கொள்ளச் சாகிலன்: ஆர்இனி அவன்உயிர் கொள்வார்?
(6205)

'ஈது அவன் நிலை: எவ் உலகங்கட்கும் இறைவன்' 'ஆர் இனி அவன் உயிர் கொள்வார்?' என்ற ஒரு கேள்வியை வாசகர் முன் வைத்து, அவர்களைச் சிந்திக்கச்செய் கவிச்சக்கரவர்த்தி, உயிரைக் கொள்பவரை (கொல்பவரை) அடுத்த கவிதையிலேயே காட்டிவிடுகின்றார்.

இது, சுவையோட்டம் குறையாமல் கதையை நடத்திச் செல்லும் கம்பரது தனித்திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

---

0 மாருதம்-காற்று: மாளான்-இறக்கமாட்டான்: உலக்கிலன்-அழியான்:-உலவா-அழியாத: நமன்-எமன்:சாகிலன்: இறவான் நள்ளின்-நடுஇரவு:.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

அறிஞரின் அறிஞன்

ஆய வன்தனக்கு அருமகன், அறிஞரின் அறிஞன்,
தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான்,
நாயகன், தனி ஞானி, நல் அறத்துக்கு நாதன்,
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன், உளன்ஒரு தக்கோன்.
(6207)

பிரகலாதச் செல்வனை அறிமுகப் படுத்தவந்த இந்தக் கவிதை கம்ப சூத்திரமாகவும் கம்பசித்திரமாகவும் விளங்கு கின்றது என்னலாம். எப்படி?

தந்தை இரணியனை, அவன் கற்ற வேதக்கல்வியின் தொடக்கமாக அறிமுகப்படுத்தி, அவன் வாழ்வை, பதினெட்டுக்கவிதைகளில் விரிவு படுத்திய கம்பர், மைந்தன் பிரகலாதனை கதைக்களத்தில் கொண்டு வந்து நிறுத்து வதற்கு ஒரே கவிதையைப் போதுமானதாக்கிக் கொண்டார்.

இந்தக் கவிதையின் மூலம் முதன் முதலாக இக் கதையில் அறிமுகமாகின்ற பிரகலாதன், வயதில் மிகமிகச் சிறியவன்: அறிவினாலும், அன்பினாலும் மிகமிகப் பெரியவன். நம்மாழ்வார் திருவுளக் கருத்தின்படி 'சிறுமாமனிசர்' பிரகலாதன்.

இந்தப்பக்திச் செல்வனைக் கதைக்களத்தில் கொண்டு வந்து நிறுத்தும் இந்தக் கவிதையும் அளவால் சிறியது; இதனுள் அடங்கிக் கிடக்கும் பொருள் நுணுக்கத்தால் மிக மிக உயர்ந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தையாகிய இரணியனை அவனது அகத்தோற்றத்தாலும், புறத்தோற்றத்தாலும், அறிமுகப்படுத்தி விவரித்த கம்பர் பெருமான், அவனுடையமகன் பிரகலாதனை அறிமுகப்படுத்துவதற்கு, அந்தச் செல்வனது அகத்தோற்றத்தை மட்டுமே எடுத்துக்கொண்டார். 'புறத்தினும், அகமே உயர்ந்தது' என்பது காவியக்கலை கைவந்த கவிஞர்களுக்குத் தானே தெரியும்!

பிரகலாதப் பெருஞ் செல்வனது அகத்தோற்றத்தை வெளிப்படுத்துவதற்கு, கவிச்சக்கரவர்த்தி கையாண்ட தொடர்களே, தனித்ததோர் அழகு படைத்தனவாகும். அப்படி வந்த தொடர்கள் எட்டு. ஏன் எட்டுத் தொடர்கள்? எட்டெழுத்துத் திருமந்திரத்தின் பெருமையை, (ஓம் நமோ நாராயனாய) தனது அப்பாவுக்கும், தனது ஆசிரியர்க்கும், அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்ட வந்த பக்தன் அல்லவா இந்தப் பிரகலாதன்!

அதனைத் தமது திருவுள்ளத்தில் இருத்திக்கொண்டு தான், கவிஞர் பெருமான், இந்தப் பக்தனை அறிமுகம் செய்யும் தொடர்களையும் எட்டு என்ற எண்ணிக்கைக்கு உரித்தாக்கிக் கொண்டார் போலும்!

1. அறிஞன் :

அந்த எட்டுத் தொடர்களுள்ளும் முதலில் நிற்பது 'அறிஞன்' என்ற அருமையான தொடர். 'அறிஞன்' முதலில் வருவதே இந்தக் கவிதைக்குத் தனி அழகு. எப்படி?

இந்த அறிஞனுக்குத் தந்தை இரணியன். 'போதம் (அறிவு) கண்ணிய வரமெலாம் தரக்கொண்டு போந்தான்' என்று அறிமுகப்படுத்தப்பட்டவன். 'ஆயவன் தனக்கு அருமகன்' எத்தகையவன் தெரியுமா? அவன் 'அறிஞரின் அறிஞன்' என்று தொடங்குகிறது கவிதை.

தந்தை அறிஞன்: மைந்தன், அந்த அறிஞனினும் மிக மிக மேம்பட்ட அறிஞன், தந்தை அறிவு, பிரம்மனிடம் வேதக்கல்வி பயின்றதால் வந்தது. மைந்தன் அறிவு, யாரிடமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதனையும் பயில்வதற்கு முன்பே, இயல்பிலேயே வளர்ந்தது. தந்தையிடம் வந்த அறிவு, அவனை உலகியல் அளவில் உயர்ந்து வாழச் செய்தது: மைந்தனிடம் இயல்பாக வளர்ந்த அறிவு, அவனை, உலகியலைக் கடந்து அப்பால் உயர்ந்து நிற்கும் ...ன்றனோடு ஒன்றி வாழச் செய்தது. தந்தை பெற்ற அறிவு, அவனை ஆணவத்தால் நிமிரச் செய்தது: அசுர இயல் பினனாகத் தாழச் செய்தது. மைந்தன் பெற்ற நல்லறிவு, அவனை, ஆருயிர்கட்கு எல்லாம் அன்பினன் ஆக வாழச் செய்தது: உயர்வற உயர்ந்த அமர வாழ்வு எய்தும் நிலைக்கு உயர்த்தியது. தந்தையின் அறிவு, அனைத்து உயிரினங்களை யும் அவனுக்கு அடிமையாக்கிக் கொள்ள உதவியது: மைந்தனின் அறிவு, அனைத்து உயிரி னங்களிடமும் அன்பு காட்டி வாழச் செய்து, அவன், தன்னை, ஆண்டவனுக்கு அடிமையாக்கிக் கொள்ள உதவியது.

தந்தை, தனது அறிவால் அசுரனான்: மைந்தன் தனது அறிவால் அடியவனான். அசுரன் அனைத்து உயிர்களையும் தனக்கு அஞ்சி வாழச் செய்தான்: அடியவன், அனைத்து உயிர்களையும் தன்னோடு அணைந்து வாழச் செய்தான். ஆயவன் (எவ் உலகங்கட்கும் இறைவனாகத் தன்னைக் கருதச்செய்த இரணியன்) அறிஞன்: அவன் தனக்கு அருமகன் அறிஞரின் அரிஞன். தகப்பனைவிட, மகன் எவ்வளவு உயர்ந் தவன் என்பதை இந்த முதல் தொடரே (அறிஞன்) விளக்கு கிறது.

அறிஞரின் அறிஞன் :

'அறிஞரின் அறிஞன்' என்ற இந்தத் தொடர், 'தந்தை யைவிட மேம்பட்டவன் பிரகலாதன்' என்ற பொருளை உணர்த்துவதோடு நிற்கவில்லை. இந்த உலகில், யாம் அறி வுடையோம்' என்று யார்யார் எல்லாம் சொல்லிக் கொள்கின் றார்களோ, அவர்கள் யாவரினும் உயர்ந்த பேரறிவினை உடையவன் இந்தப்பக்தன்' என்ற பொருளையும் தருகின்றது இந்தச் சொல் தொடர். 'கற்றோர் யாவரும் அறியா அறி வினன்' என்ற திருமுருகாற்றுப்படைத் தொடருக்கு எடுத் துக் காட்டாக விளங்குபவன் இந்தப் பக்தப் பிரகலாதன். எப்படி?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றையோர், யாரையாவது ஒருவரை ஆசிரியராகப் பெற்று, அவரிடம் கல்வி பயின்று, அதனால் அறிவு பெற்ற வர்கள். இந்தப் பக்திச் செல்வனோ, எந்த ஆசிரியரையும் நாடிச்சென்று படிக்காமல் இயல்பாகவே அறிவு பெற்றவன். பிறரெல்லாம் வ ந் த அறிவினர். பி ர க லா த ன் சொந்த அறிவினன்.

வநத அறிவு, மலையிலிருந்து ஓடி வரும் ஆற்று நீர் போன்றது. சொந்த அறிவு. தானாக நிலத்திலிருந்து பொங்கி எழுந்துவரும் ஊற்று நீர் போன்றது. ஆற்று நீர் இருகரைகளிலும் உள்ள குப்பை கூளங்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு கலங்கலாக ஓடிவரும். ஊற்று நீரோடு வெளிக் குப்பைகள் எதுவும் சேர முடியாது.

ஆற்று நீர், களங்கம் (குற்றம்) பெற்றது: ஊற்றுநீர் தூய்மை உற்றது. அதனால் இதுவே அனைத்து உயிர் களுக்கும் உண்ணுநீராக அமைகின்றது.

பிறரிடம் கற்று, பெற்ற அ றி வி ல், அ றி ந் தோ, அறியாமலோ குற்றம் வளர வாய்ப்பு உண்டு. குற்றம் வளர்ந்த அ றி வு டை யோன் தூய்மையை இழக்கின்றான். ஓதாது உணர்ந்த அறிவுடையயோன் தூய்மையனாகவே இருப்பான். இந்த அறிஞன் ஓதாது உணர்ந்த உத்தமன். அதனால் இவனது தூய்மையை விளக்க அடுத்த தொடர் வருகிறது.

தூயான் :

தூய்மை உடையவன் இந்தப் பக்தன். சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தூ ய வ ன் பிரகலாதன், இந்தச் செல்வனிடம் காணப்பட்ட அறிவு, தூய சிந்தையிலி ருந்து ஊற்றெழுந்து வருவதால், சொல்லிலும் குற்றம் கல வாது: செய்கையிலும் குற்றம் கலவாது. பொய் கலவாது, மெய் கலந்து வரும் சொல்லாகவே இருப்பதால், பிரகலாதன் சொல்லால் தூயவன். தந்தையாகயிருப்பினும், அரசனாக இருப்பினும், அவனுக்கு அஞ்சாமல், அனைத்து மக்களுக்கும் உய்வு தரும் திருமந்திரத்தை இ டை வி டா து சொல்லிக் கொண்டே செயல்பட்டுக் கொண்டிருந்தமையால், செய்கையா லும் தூயவனாக விளங்கினான் இந்தப் பக்தன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூய்மைக்கு இலக்கணம் கூற வந்த திருவள்ளுவர், 'தூய்மை என்பது அவா இன்மை' என்றார். 'அது எப்போது வரும்?' என்ற கேள்விக்கு விடையாக, 'மற்றது வாய்மை வேண்ட வரும்' என்று சொல்லி, திருக்குறளை நிறைவு செய்கின்றார் வள்ளுவ ஆசான்.

'தூஉய்மை என்பது அவாஇன்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.' (364)

என்ற குறளின் கருத்துப்படி, 'உலகப் பொருள்கள் எதனிடத்தும் சிறிதும் ஆசையில்லாது இருத்தல்தான் 'தூய்மை' ஆகும். அது உண்மையை (வாய்மை) ஒட்டிக்கொண்டு வரும்'. என்பதாகும்.

பிரகலாதனின், அறிவு, 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருளின் மெய்ம்மைத் தன்மை எது என்பதைக் கண்டு உணரும் அளவுக்குத் தெளிவு பெற்றது. அதனால், அவ்வறிவு, உலகியல் பொருள் எதிலும் ஆசை வைப்பதற்கு இடம் கொடுப்பது இல்லை. ஆகவே அது தூய்மைக்கு உரியதாக விளங்குகின்றது.

எந்த ஒன்றன் உயர்வைக் கூறுவதற்கும், ஒரு உத்திகையாளப்படுகின்றது கவிஞர்களால். அதற்குச் சமநிலையில் நிற்கும் வேறு ஒரு பொருளோடு ஒப்பிட்டுக் காட்டி, அதனினும் உயர்ந்து நிற்பதனைச் சுட்டிக் காட்டுவதே அந்த உத்தி. அந்த உத்தி, இந்தக் கவிதையில் தூய்மையின் உயர்வுக்குக் கையாளப்பட்டுள்ளது.

2. தூயர் என்பவர் யாரினும் தூயான் :

இவர்கள் தூய்மை பெற்றவர்கள் என்று சமுதாயத்தினரால் யார் யார் மதிக்கப்படுகின்றார்களோ, அவர்கள் யாவரினும் சிறந்த தூயவன் பிரகலாதன். அது எப்படி? என்ற ஒரு கேள்வி எழலாம். இந்தக்கேள்வி எழும் என்று முன்கூட்டியே உணர்ந்தவர்தான் கம்பர். அதற்கு ஏற்பதான், இதனை அமைத்துள்ளார் கவிஞர் பெருமான்.

தேவர், முனிவர், யோகியர், கற்றோர், மற்றோர் முதலிய பெரியோர்கள் தூயவர்கள்தான், ஆனாலும் அவர்கள் தமது தூய்மைக்குக் களங்கம் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். அவா இன்மை (ஆசையற்று இருத்தல்) தானே தூய்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்கள் தங்களது உயிரின்மேல், பதவியின்மேல் கொண்ட ஆசை காரணமாக, அசுரனுக்கு அஞ்சி இரணியாய நம: என்று சொல்லி அவனையே தெய்வமாக வணங்கத் தலைப்பட்டு விட்டார்கள். நாராயணன்தான்' முழுமுதற் பொருள் என்று அறிந்திருந்தும், அந்த உண்மையைத் (வாய்மை) தமது வாய்விட்டுச் சொல்லாமல், இல்லாததைச் சொல்லி (பொய்மை பேசி) சொல்லின் தூய்மையை இழந்தார்கள் இவர்கள். காரணம், 'இரணியாய நம:' என்று சொன்னால்தான் இந்த உலகத்தில் உயிர் வாழலாம்.

உலக வாழ்வில் கொண்ட ஆசையாலும் அவர்களது தூய்மை மாசு அடைந்தது: உண்மைக்குப் புறம்பானவற்றைப் பேசியதாலும் (இரணியாய நம:) அவர்களது தூய்மை மறு உற்றது. (மாசு, மறு-குற்றம்).

தேவர் முதலியோர் தமது, சிந்தையாலும், சொல்லாலும் செய்கையாலும் தூய்மை இழந்தனர். இந்தப் பக்திச் செல்வனோ, அரச ஆணைக்குச் சிறிதும் அஞ்சாமல் நின்று எந்த உண்மையைக் கூற வேண்டுமோ, அதனை எங்கும், எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் 'தூயர் என்பவர் யாரினும் தூயவனாகக்' காட்சி அளிக்கின்றான்.

5. மறையினும் தூயான் :

தூய்மை உடையோம் என்று சொல்லிக் கொள்ளும் பெரியவர்களோடு ஒப்பிட்டு, பிரகலாதனின் தூய்மை உயர்வைப் புலப்படுத்திய கவிஞர் பெருமான், அத்தோடு நிற்கவில்லை. உலகத்திலேயே தூய்மை பெற்றது இதுதான் என்ற சொல்லப்படுகின்ற வேதத்தையும் கொண்டுவந்து இந்தப் பக்தனின் தூய்மைக்கு முன்னால் நிறுத்துகின்றார் கம்பர்.

'வேதம் எழுதாக் கிளவி' (கிளவி-சொல்) என்றும், எல்லா உண்மைகளையும் தம்பால் மறைத்து வைத்துள்ளது' என்றும், 'அது மனிதர்கள் வாயினின்றும் வந்தது அல்ல! தேவவாக்கு' என்றும் சொல்லப்படுகிறது, அதனால் அவ் வேதம் தூய்மையே வடிவமாகக்கொண்டது என்று ஞானிகள் கூறுவார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்தகைய வேதம் கூட, இந்த அசுரனது ஆட்சியில் தனது உண்மை வடிவத்தைக் காட்டவில்லை, 'நாராயணனாய நம:' என்று சொல்வதற்குப் பதிலாக, தெய்வமாக இருக்கும் இரணியனே உனக்கு வணக்கம்' என்று கூறுகின்றது. 'நான்மறை......தெய்வமும் இரணியனே நம!' என்பது கம்பர் தந்த கருத்துத் தொடர், அதனால், இரணியன் ஆட்சியில் வேதமும் தூய்மை இழந்து நிற்கின்றது.

பிரகலாதச் செல்வனோ. எதற்கும் அச்சம் இன்றி, ஆசை இன்றி, ஆண்டவன் திருப்பெயர் ஒன்றையே ஓதிக் கொண்டிருந்தான். அதனால், மறையினும் (வேதம்) தூயவன் ஆகின்றான் மகன். அறிஞனாய் தூயனாய் வாழ்ந்தவன் என்ன செய்தான் என்பதை இதனை அடுத்துவரும் தொடர் விளக்குகிறது.

4. நாயகன் :

நாயகன்– நடத்திச் செல்பவன். (சேனைநாயகன்-சேனையை நடத்திச் செல்பவன்) இந்தப் பக்தன், தன்னையும் அப்பாவையும், ஆசிரியரையும் அனைத்து உயிரினங்களையும் நடத்திச் செல்பவன், எங்கு நடத்திச் செல்வான். எங்கு சென்று சேர்ந்தால் வாழ்வுப் பயணம் நிறைவு எய்துமோ அந்த இடம் நோக்கி நடத்திச் செல்வான் பிரகலாதன்.

உலகத்தை நடத்திச் செல்லும் திறமை எளிதில் யாவர்க்கும் கிட்டிவிடாது, தூய்மையான அறிவு நிரம்பப் பெற்றவர் யாரோ, அவர்தான் உலகத்தை நடத்திச் செல்ல முடியும்.அத்தகைய தூய்மைகலந்த அறிஞன் பிரகலாதப் பெருஞ்செல்வன், அதனால் அந்தச் செல்வன் நாயகனாக (நடத்துபவன்) விளங்குகின்றான்.

தந்தை இரணியனும் உலகத்தை நடத்திச் சென்றான். அவன் தனது ஆணவம் கலந்த அறிவால் உலகத்தை நடத்தினான். அதனால் வழியல்லா வழியில் நடத்திச்சென்று உலக உயிரினங்களை அச்சத்தில் ஆழச் செய்தான் அவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகத்தை, தந்தையும் நடத்திச் சென்றான். மைந்தனும் நடத்திச் சென்றான். நடத்துதலை இருவரும் செய்தாலும், அதில் உள்ள வேறுபாட்டை விளக்க வேண்டுமே! அடுத்து வரும் தொடர், வேறுபாட்டை விளக்கும் வேலையைச் செய்கின்றது.

5. தனி ஞானி :

ஒப்பற்ற ஞானம் பெற்றவன் பிரகலாதவன், ஞானம் என்பது மெய்யுணர்வைக் குறிக்கும் ஒரு சொல். உலகப் பொருள்களின் மெய்ம்மையையும் பொய்ம்மையையும் பிரித்து உணரும் ஆற்றலை வளர்ப்பது ஞானம்: உணர்ந்த பிறகு மெய்ம்மையைத் தழுவச் செய்து, பொய்ம்மையை அகலச் செய்வது ஞானம்: புறத்தோற்றம் பொய்ம்மையானது, அகத் தோற்றம் மெய்ம்மையானது என்ற உண்மையை உணர்த்துவது ஞானம்.

புறத்தோற்றம் பொய்யானது: நிலையில்லாதது. அகத் தோற்றம் மெய்யானது: நிலையானது. நிலையல்லாதவற்றை நிலையானது என்று உணர்த்துவது அஞ்ஞானம்; நிலையல் லாத புறத்தோற்றத்தை அப்புறத்தே தள்ளி வைத்து, அகத் தோற்றத்தோடு அணையச் செய்வது மெய்ஞ்ஞானம். உலகப் பொருளின் புறத்தோற்றப் பொலிவில் மயங்கினான் தந்தை இரணியன். அந்தப் பொருள்களை எல்லாம் இயங்கச் செய்து அதற்கு பொலிவு அளித்துக் கொண்டிருக்கும் அகப்பொருட் சக்தியை உணர்ந்தான் மைந்தன் பிரகலாதன்.

அழியும் பொருளை, அழியாத ஒன்றாக நினைத்துச் செயல்பட்ட இரணியன், அஞ்ஞானியாகின்றான். என்றும் அழியாத மெய்ப்பொருளோடு தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்ட பிரகலாதன் தனி ஞானியாகின்றான். அஞ்ஞானி, உலகத்தை, நடத்திச் செல்வது அழிவை நோக்கி. ஆனால், எதனை நோக்கி உலகத்தை நடத்துகின்றோம் என்பது அவ னுக்கும் தெரியாது: அந்த அஞ்ஞானியைத் தொடர்ந்து செல் லும் உயிரினங்களுக்கும் எதனை நோக்கி நடக்கின்றோம் என்று தெரியாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்ஞ்ஞானி, உலக உயிரினங்களை, மெய்ப்பொருளை நோக்கி நடத்திச்செல்வான். இந்த ஞானி தானும் மெய்ப்பொருளைச் சென்று சேர்வான். தன்னைத் தொடர்ந்து வருபவர்களையும் அந்த மெய்யான நிலையான ஒன்றனோடு இணைய வைப்பான். உள்ளதை உள்ளபடி உணர்வது எதுவோ, அது 'பிரம்ம ஞானம்' என்று சொல்லப்படும். அதுவே தனி ஞானம் ஆகும். இல்லாததை இருப்பதாகவும் இருப்பதை இல்லாததாகவும் எண்ணச் செய்வது எதுவோ, அது விபரீத ஞானம் எனப்படும். அதுவே அஞ்ஞானம் ஆகும். தனி ஞானி. எதனையும் தனது அகக் கண் கொண்டு நோக்கி, ஆனந்தத்தில் மூழ்கியிருப்பான். அஞ்ஞானி எதனையும் தனது முகக்கண்களால் கண்டுபார்த்து, புறத்தோற்றம் பொலிவிலேயே மயங்கியிருப்பான்.

பிரம்மஞானியாகிய பிரகலாதன், உலகத்தை, தான் கண்ட ஆனந்த வாழ்வை நோக்கி நடத்திச் சென்றான். அஞ்ஞானியாகிய அசுரன், உலகத்தை, அழிவுப் பாதையில் நடத்திச் சென்றான், இதுவே இருவரது செயலுக்கும் உள்ள வேறுபாடாகும்.

உலகமக்களை ஆனந்த வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் தனிஞானி, உலக மக்களிடையில் எவ்வாறு விளங்குவான்? அதற்கு விடையாக வருவது அடுத்த தொடர்.

6 நல்லறத்துக்கு நாதன்:

நாதன்-தலைவன். நல்ல அறச்செயல்கள் உலகத்தில் நடைபெறுவதற்குத் தலைவனாக விளங்குவான். ஞானத்தில் முதிர்ந்தவன், தனக்கு என எந்தப் பொருளையும் வேண்டும் என்று விரும்பமாட்டான், எதனிடத்திலும் சிறிதும் ஆசை வையாத ஞானி, உலகமக்கள், அறத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்று விரும்புவான்.

மக்கள் அறவாழ்க்கையை மேற்கொள்வார்களானால், எதற்கும் அஞ்ச மாட்டார்கள் ஆனந்தமாக வாழ்வார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நல்லெண்ணம், ஞானிகளிடம்தான் வளரும். அத்தகைய நல்லெண்ணம் கொண்ட தனி ஞானியாக, பிரகலாதன் இருப்பதால், உலக மக்கள் அற வாழ்க்கையை மேற்கொண்டு, தன்னைப்போலவே, அச்சம் இன்றி ஆனந்தமாக வாழ வேண்டும் என விரும்புகின்றான். அதனால், 'உலகத் தலைவன்' என்று சொல்லப்படும் அளவுக்கு உயர்வு பெறுகின்றான் இந்தப் பக்தன். தந்தை, தனது தவ வலிமையால் - அறிவாற்றலால், வரம் பெற்று, ஆணவத்தோடு தன்னை உலகத் தலைவனாக்கிக் கொண்டான்.

மைந்தன், தனது தூய அறிவால், ஞானியாக நின்று, உலகத்தில் நல்ல அறச் செயல்களை வளர்ப்பதால், உலக மக்களிடைத் தலைவனாக விளங்குகின்றான்.

தந்தை இரணியன் தலைமை, செயற்கையானது. மைந்தன் பிரகலாதன் தலைமை இயற்கையாக அமைவது. ஆணவத்தலைமை அசுரனுடையது: அன்புத் தலைமை அடியவனுடையது. ஆணவத் தலைமைக்கு அழிவு வரும்: அன்புத் தலைமைக்கு ஆனந்தம் வரும். ஆசையற்ற ஞானியின் சொற்படி, உலகில் அறச் செயல்கள் நடைபெறுவதால், 'நல்லறத்துக்கு நாதன்' என்று பிரகலாதன் பேசப்படுகின்றான். தலைவனாக விளங்கும் இந்த ஞானி உலக உயிரினங்களோடு எத்தகைய தொடர்புடையவனாக இருப்பான் என்பதை, இதனை அடுத்து வரும் தொடர் விளக்குகின்றது.

7. மன்னுயிர்க்கு அன்பினன் :

மன் - நிலையான. மன்னுயிர் - நிலையான உயிர். உயிரைத் தாங்கியிருக்கும் உடல்தான் நிலையில்லாதது என்றும் நிலையான உயிர்களிடத்தில் நிலையான அன்பைச் செலுத்துபவன் பிரகலாதன். 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே' என்ற புறநாற்றுத் தொடர், நிலையானது எது? நிலையில்லாதது எது? என்பதைத் தெளிவாக்குகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகத்துப் பொருள்கள், காட்சிப் பொருள் என்றும் கருத்துப் பொருள் என்றும் இருவகைப்படும். இதனை உருவப் பொருள் என்றும் அருவப்பொருள் என்றும் கூறலாம். காட்சிப் பொருள் உருவமுடையது: கருத்துப் பொருள் அருவமானது உருவத்தை, முகக் கண்ணால் காணலாம். அருவத்தைக்காண அகக்கண் வேண்டும். முகக் கண்ணால் காணக்கூடிய, உருவம் பெற்ற பொருள்கள் அனைத்தும்,ஒரு காலத்தில் நிச்சயமாக அழியும்: நிலையற்றது அகக்கண்ணால் காணக்கூடிய, அருவப் பொருள்கள் அனைத்தும் என்றும் அழியாதது: நிலையானது.

உயிர் அருவமானது: அதைத்தாங்கியிருக்கும் உடல் உருவம் பெற்றது. உருவம் பெற்ற உடல், காட்சிப் பொருள். அதில் தங்கியுள்ள உயிர், அருவமானதால் கருத்துப்பொருள். அருவமான உயிர் அழியாதது: உருவமான உடல் அழியும்.

அழியும் உடலின் பால் கொள்ளும் தொடர்புக்கு ஆசை என்று பெயர். அழியா இயல்பினதாகிய உயிரின் பால் கொள்ளும் தொடர்புக்கு அன்பு என்று பெயர். உடலும் அழியும்: அதனிடம் கொண்ட ஆசையும் அழியும், உயிரும் அழிவற்றது: அதன் பால் கொண்ட அன்பும் அழிவற்றது. ஞானிகள், நிலையற்ற உடலின்பால் ஆசைவைக்க மாட்டார் கள், அவர்களது நோக்கம் நிலையான ஒன்றின் பால் செல்வதால், நிலையான உயிர்களிடத்தில் தொடர்பு கொள்வார்கள். அந்தத் தொடர்பு அன்பினால் ஏற்படுவது.

தனி ஞானியாகிய பிரகலாதச் செல்வன், மன்னு யிர்கள் அனைத்திடமும் நிலையான அன்பு செலுத்தி வாழ்ந்தான். மன்னுயிர்க்கு அன்பினன். இந்த ஞானி, உயிர்களிடம் காட்டிய அன்பு எத்தகையது? ஞானி ஆசை யற்றவன்: ஆனால் அன்பு மிகுந்தவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசையுள்ளவர்களிடமும் அன்புயிருக்கலாம். ஆசையற்றவன் காட்டும் அன்புக்கும், இதற்கும் வேறுபாடு உண்டு. உலகப் பொருளின்பால் ஆசை கொண்டவன் காட்டும் அன்பு, பொருள் அழிந்தால், அந்த அன்பும் மறையும். ஆனால் ஆசையற்றவன்பால் தோன்றும் அன்பு, என்றும் மறையாதது: அழியாதது. நிலையான உயிரைத் தாங்கியிருக்கும் உடலிடத்தில் ஆசைகொண்ட ஒருவன், அந்த உயிரிடத்தில் அன்பு காட்டுவான். அந்த உடல் அழிந்தால் ஆசையும் அகலும்: அன்பும் அகலும், ஆகவே, ஆசையற்றவன் காட்டும் அன்பே, அழியாது நிற்கும்.

ஞானி காட்சிப் பொருளாகிய, உருவம் பெற்ற உடலிடத்தில் ஆசை கொள்ளான். அந்த உருவ உடலிடத்தில் தங்கியிருக்கும் உயிரின்பால் அன்பு காட்டுவான். ஆசையற்ற தனி ஞானியாகிய இந்தப் பிரகலாதச் செல்வன், மன்னுயிர்களிடம் அன்பு செலுத்தினான். அந்த அன்பை விளக்குவதற்கு ஒரு உவமை கையாளப்பட்டுள்ளது இங்கு.

தாயும் சேயும்:

ஒரு தாய்' தான் ஈன்றெடுத்த குழந்தையிடம் காட்டும் அன்புக்கு ஈடு இணை எதுவும் இல்லை. தாய் தனது குழந்தை நன்கு வளர்வதற்கு அவள் எடுத்துக்கொள்ளும் ஆர்வம் கலந்த முயற்சியை எண்ணிப் பார்த்தால், அவளது அன்பின் ஆழம் தெரியும். குழந்தையைத் தன் மடியிலிருத்தி அதற்குப் பாலூட்டுகின்றாள்: தொட்டிலில் கிடத்தி,தாலாட்டுகின்றாள்: நோய் நொடியின்றி வளர்க்கின்றாள் அதற்கு வரும் நோய் தீர்வதற்கு, தான் மருந்து உண்கின்றாள்: அதன் கண்ணில் நீர் வடிந்தால், தன் நெஞ்சில் உதிரம் சொட்டுவதாகக் கருதி வருந்துகின்றாள்: குழந்தையின் முக மலர்ச்சியில் தனது மகிழ்ச்சியைக் காண்கின்றாள் தாய். இவைகள் எல்லாம் ஒரு தாய், தனது (சேய்) குழந்தையிடம் கொண்ட அளவு கடந்த அன்பில் மலர்ந்த செயல்கள். சேயின் வளர்ச்சி, தாயின் அன்பில் அடங்கியுள்ளது. செடிகளின் வளர்ச்சிக்குத் தண்ணீர் தேவை. சேயின் வளர்ச்சிக்கு, தாயின் அன்பு நீர் தேவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வளவு அன்பு காட்டி அந்தக்குழந்தையை வளர்ப்பதற்கு, அதனிடமிருந்து எந்தப் பயனை எதிர்பார்க்கின்றாள் தாய்? தனக்காக ஒரு பயனையும் எதிர் பார்த்துச் செய்வதில்லை தாய்.

மனிதன், எந்த செயலைச் செய்தாலும், அந்தச் செயலின் முடிவில் தனக்கு என்ன பயன்-பலன்-நன்மை கிடைக்கும் என்று எண்ணுகின்றான். தான் எதிர் பார்க்கும் நன்மை, தனக்குக் கிடைப்பதாக இருந்தால் தான், செயலில் ஈடுபடுகின்றான் மனிதன். பயன் கருதாமல் யாரும் பணி செய்வதில்லை.

இப்படிப்பட்ட உலகத்தில், எந்தப் பயனையும் எதிர் பாராமல், தனது குழந்தை எல்லா வகையிலும் உயர்வு பெற்று வளர்வதற்காகவே அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கும் தாயின் செயல், எவ்வளவு உயர்ந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பயன் கருதாது, பணி செய்தலையே தனது கடமையாகக் கொள்ளும் அளவுக்கு, தாயைத் தூண்டுவித்தது எது? அதுதான் அன்பு. 'பலன் எதையும் எதிர் பார்க்காமல் பணி செய்தலையே, உனது கடமையாகக்கொள்' என்பதுதான். கண்ணபிரான் கீதையில் கூறிய நிறைவான உபதேசம்.

இந்த உபதேசத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து நிற்பவள் தாய். இந்த உபதேசம், தாயின் செயலாக வருவதற்குக் காரணம், அவள் உள்ளத்தில் ஊற்றெழுந்து ஓடிவரும் அன்பு நீர்ப் பெருக்குதான். அதனால்தான், தாயின் அன்பு, எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்ததாக மதிக்கப்படுகின்றது.

ஆண்டவன், தனது அடியவர்கள் பாடல் கொண்ட அன்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுவதே தாய் அன்புதான்.

'பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து, நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி, உள்ஒளி பெருக்கி,
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம் - புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து, சிக்கெனப் பிடித்தேன்:
எங்குஎழுந் தருளுவது இனியே?' என்றும்.

o திருவாசகம். பிடித்த பத்து 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்மையே! அப்பா! ஒப்புஇலா மணியே!
'அன்பினில் விளைந்த ஆர்அமுதே' (பிடித்தபத்து. 3)

என்றும், மணிவாசகப் பெருந்தகையார், தாய் அன்பை கடவுள் அன்புக்கு இணையாக்கிக் காட்டுகின்றார், அதனால்தான், 'தாயின் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்றும். ஈன்றாளின் எண்ணக் கடவுளும் இல்லை' என்றும் பெரியோர்கள் சொல்லி வைத்துள்ளனர். அத்தகைய தாய் அன்பை, மன்னுயிர்களிடம் காட்டுகின்றான் பிரகலாதன், பிரகலாதப் பெருஞ்செல்வன் உயிர்களிடம் செலுத்தும் அன்புக்கு, 'தாய் தனது சேயிடம் காட்டும் அன்பு' உவமையாக்கப்பட்டுள்ளது.

கவிச்சக்கரவர்த்தி, பிரகலாதனின் அன்பை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்ட விரும்புகின்றார். அந்த விருப்பம், **'தாயின்** மன்னுயிர்க்கு அன்பினன் என்ற தொடராக உருவம் பெற்று விட்டது. தாயின்- தாயை விட: தாய் தனது சேயிடம் காட்டும் அன்பை விட உயர்ந்தது, பிரகலாதன் நிலை பெற்ற உயிர்களிடம் செலுத்தும் அன்பு, எப்படி. தாய் தனது குழந்தையிடம் மட்டுமே அன்புகாட்டுவாள்? வேறு பிள்ளைகளிடம் அவ்வளவு ஆழ்ந்த அன்பைச் செலுத்த மாட்டாள். தாய் அன்பு உடல் உறவால் வளர்ந்து வருவது. இந்தத் தனிஞானியின் அன்பு, உடல் உறவுக்கு அப்பால் பட்டது. எல்லா உயிரினங்களோடும் உறவு கொண்டது, பிரகலாதனின் அன்பு. 'எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணும்' உயர்நிலையை எட்டியது இந்தப் பக்தனின் அன்பு.

தனது குழந்தை என்ற உடல் உறவால் எழுந்து வந்த தாய் அன்பைக் காட்டிலும், உலகத்து அனைத்து உயிரினங்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு, அவைகளின் பால்காட்டும் இந்தத் தனி ஞானியின் அன்பு உயர்ந்ததுதானே! அதனால், கம்பர், பிரகலாதனை, **'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்'** என்று அறிமுகப் படுத்தும் தொடர்களுள் ஒன்றாக இதனை இணைத்து வைத்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8 தக்கோன் :

தக்கோன்- தகுதியுடையவன். தகுதி- பொருத்தம். எதற்குப் பொருத்தமானவன் பிரகலாதவன்? 'அறிஞன்' என்றும், 'தூயான்' என்றும், 'நாயகன்' என்றும், 'தனிஞானி' என்றும், 'நாதன்' என்றும், 'அன்பினன்' என்றும் பாராட்டப் படுதற்குப் பொருத்தம் (தகுதி) உடையவன். இப்படியும் சொல்லலாம். அருமகன் - அருமையான (பெறுதற்கு அருமை யான) மகன் என்று கூறப்படுவதற்குத் தகுதியானவன் இந்தச் செல்வன். இப்படியும் பொருள் கொள்ளலாம். இவைகளினும் மேலான பொருள் ஒன்று கொள்ள இங்கு இடம் உண்டு. உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் படிப்படியாக முன்னேறி, இறுதியில் இறைவன் திருவடியைச் சென்று சேர வேண்டும்.

கடலினின்றும் புறப்பட்ட தண்ணீர், மேகம், மழை, ஆறு, குளம், என்று பல பெயர்களைப் பெற்று உலகில் இயங்கிய பிறகு, இறுதியில் கடலையே சென்று அடை கின்றது. அதுபோல, இறைவனிடமிருந்து புறப்பட்ட உயிர்கள் அனைத்தும், உலகில் பலவித உருவங்களைப் பெற்று நடமாடிய பிறகு, இறுதியில், புறப்பட்ட இடத்தைச் சென்று அடைந்து விடவேண்டும்.

தொக்கிலங்கி யாறுஎல்லாம், பரந்தோடி, தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத: மற்றவைபோல்,
மிக்கிலங்கு முகில் நிறத்தாய்! விற்றுக்கோட்டுஅம்மா, உன்
புக்கிலங்கு சீர்அல்லால் புக்கிலன்காண் புண்ணியனே?

என்பது பெருமாள் திருமொழிப்பாசுரம்.

குலசேகராழ்வார், 'ஆறுகடலை நோக்கிச் செல்வது போல, நான் உன்னை நோக்கி வருகின்றேன்? என்று இறைவனிடம் கூறுகின்றார். மண்ணுலகத்து உயிர்கள்- எங்கும் சுற்றி, பலப்பல உருவம் பெற்று, உலகில் உழன்று திரிந்த பிறகு, இறைவனைச் சென்று சேர்வதற்கு உரிய தகுதியைப் (பொருத்தத்தை) பெறும்.

O திவ்வியப் பிரபந்தம் 695 பெருமாள் திருமொழி- 48யாறு- ஆறு: பரந்து-விரிந்து: புறம்-வெளியில்: முகில்-மேகம். விற்றுவக்கோடு-108 திவ்யத்தலங்களுள் ஒன்று. மலை நாட்டுத்திருப்பதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரகலாதன் எங்கும் சென்று எதிலும் உழலாமல், இளமையிலேயே. இறைவனை அடைவதற்கு உரிய தகுதியை பொருத்தத்தைப் பெற்றுவிட்டான்.

இத்தகைய தக்கான் ஒருவன் (தகுதியுடையவன்) இறைவனை அடையும் தகுதியில்லாதவன் ஆயவன் தனக்கு அருமகனாய்த் தோன்றி உள்ளான்.

தந்தை, இறைவன் பக்கம் திரும்பிப் பார்க்கும் தகுதி சிறிதும் இல்லாதவன். மைந்தன், இறைவன் பக்கமே நோக்கும் தகுதியுடையான்.

தகுதியில்லான் ஒருவனுக்கு, தக்கான் ஒருவன் அருமை மகனாக அவதாரம் செய்துள்ளான். அந்த அருமையை உணராதவனாகச் செயல்படப் போகின்றான் இரணிய அசுரன் என்பது குறிப்பு.

எண் குணத்தான் :

இறைவனை 'எண்குணத்தினன்' என்று திருக்குறள் கூறும். அப்படி எட்டுவகையான குணத்தினனாகப் பிரகலாதன் இந்தக் கவிதையில் காட்டப்படுகின்றான். ஆண்டவனுக்குத்தான் "எண் குணத்தான்" என்ற பெயர் உண்டு. அடியவனை அப்படி "எண் குணத்தினன்" என்று சொல்லலாமா? என்ற ஒரு கேள்வி எழக்கூடும். இப்படலத்தின் இறுதியில், நரசிம்மம், பிரகலாதனை நோக்கி, 'நானாவளர்க' என்று வரம் கொடுப்பதாகக் கவிதை அமைந்துள்ளது. 'என்னைப்போலவே (இறைவனைப் போலவே) உலகில் நீ நிலைத்து நிற்பாய்' என்பது இதன் பொருள். அதனால், பிரகலாதன் இறைநிலை எய்துகின்றான். ஆகவே, இந்தப் பக்தனும் பகவானைப் போன்று 'எண் குணத்தினன்' என்று சொல்லப்படுவதற்குத் தகுதி (பொருத்தம்) உடையவனாகின்றான். உளன் ஒரு தக்கோன்.

'அறிஞனாய், தூயவனாய், நாயகனாய், ஞானியாய், நாதனாய், அன்பினனாய், தக்கோனாய், விளங்கும் ஒருவன். ஆயவன் தனக்கு அருமகனாக உளன்' என்று கவிதைப் பொருளை முடித்துக் கொள்ள வேண்டும்.

கம்பசூத்திரமாகவும் கம்பசித்திரமாகவும் அமைந்த இந்தக் கவிதையை ஆழ்ந்து கற்பார் உள்ளத்தில், பக்தப்பிரகலாதனே வந்து தங்கிக்கொள்வான். அவ்வளவு அருமையான கவிதை இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

ஓதுவானும் உணர்ந்தானும்.

'தேனும் பாலும் அமுதும் ஆய
திருமால் திருநாமம்

நானும் சொன்னேன் நமரும் உரைமின்
நமோநா ராயணமே'. (பெரிய திருமொழி-6.10.6)

காலமாற்றம்:

'இரணியாயநம:' என்று, தேவர், முனிவர், யோகியர், வேதம் ஓதும் வேதியர் முதலிய மதிக்கத்தக்க பெரியவர்கள் அனைவரும், அசுரனின் ஆட்சிக்காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தனர். எங்கு திரும்பினாலும் 'இரணியனேநம:' என்ற ஒலியே ஒலித்துக்கொண்டிருந்த காலம் அது.

அந்தக்காலம், மாற்றம் பெறப் போகிறது. கால மாற்றத்திற்குக் காரணமாக இருப்பவர் யார்? தன்னுடைய பெயரையே தெய்வப் பெயராக எவன் ஒருவன் யாவரையும் உச்சரிக்க வைத்தானோ, அந்த இரணியனே, காலமாற்றத் துக்குக் காரணமாகிவிடுகின்றான், எவன் ஒருவன் அதி காரம் அனைத்தையும் தன்னிடமே குவித்து வைத்துக் கொண்டு. ஆணவ ஆட்சி நடத்துகின்றானோ, அவன் மூலமாகவே, அந்தக் கொடுங்கோலாட்சி ஒழிந்து நல்லாட்சி நிலவும் காலம் வரும்.

காலமாற்றத்துக்கு அவனையே காரணமாக்குவது இயற்கை நியதி. இந்த இயற்கை நியதியைப் புரிந்து கொள்ள விடுவதில்லை மனிதனது ஆணவப்போக்கு. அப்படிப் புரியாத நிலையில் செயல்பட்டான் இரணியன். அதன் காரணமாகவே, 'இரணியாய நம: என்று ஒலித்துக் கொண்டிருந்த இடத்தில், காலத்தில், 'நமோநாராயணாய' என்ற உண்மை ஒலிக்கத் தொடங்கி விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரணியன் எதிர்பாராத இந்த ஒலி எப்படி ஒலிக்கிறது? 'நானும் சொன்னேன்: நமரும் உரைமின்! நமோ நாராயணமே' என்று எல்லோரையும் சொல்லுமாறு அழைக்கிறது அந்த ஒலி, அந்த நாராயணநாமம், தேனும் பாலும் அமுது போன்று தித்திக்கும்: அதனால் யாவரும் அந்தத் திருநாமத்தை ஓதுங்கள் என்று பெருங்குரல் ஒலி எழும்பி விட்டது இரணியன் ஆட்சி செய்த தேசத்தில், காலத்தில். இந்தக் காலமாற்றம் அவன் எதிர்பாராத ஒன்று. இதற்கு அவனே காரணமானான், எவ்வாறு?

கல்வி :

இரணியன், தான் பிரம்மதேவனிடம் வேத பாடம் கற்றுக்கொண்டு, தனது அறிவாற்றலால், உலகத்தை ஆண்டு கொண்டிருப்பது போன்று, தனது மகனும் முதலில் வேதத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். அதற்காக, தனது ஆட்சியில் புரோகிதராக - ஆசிரியராக வேலை செய்துவரும் ஒருவரிடம் தன்னுடைய மகனைக் கல்வி பயில்வதற்கு ஒப்படைத்தான் இரணியன். 'ஆழி ஐய! நீ அறிதியால் மறை' என்று தனது மைந்தனிடம் கூறிய இரணியன், அந்தணனாகிய ஆசிரியனைப்பார்த்து, 'நன்று நீ இவற்கு உதவுதி மறை,' என்று நவின்றான். (மறை-வேதம்)

'வேதத்தைக் கற்றுக் கொள்வதுதான் கல்வி. அதனைக் கற்றுக்கொள்' என்று தனது மைந்தன் பிரகலாதனிடம் கூறினான் இரணியன், அந்தணனிடமும் வேதத்தைக் கற்றுக் கொடுக்குமாறு ஆணையிட்டான் அவன். ஆனால், 'வேதத்தின், அந்தம் என்ன? அதனைக் கற்கும் கல்வியின் பயன் யாது? என்பதை, தந்தை அறியான். அதனை ஓதுவிக்க வந்த அந்தணனும் அறியான். வேதத்தை (மறை) ஓத வந்த அந்தணனுக்கும், ஓதுவிக்கத் தூண்டிய அப்பனுக்கும், கல்வியின் பயனையும், வேதத்தின் அந்தத்தையும் எடுத்துச் சொல்லப் போகின்றான் இந்தச் செல்வப்பிள்ளை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வி பயில்வானும் பயிற்றுவிப்பானும்:

'அன்று, நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான், அந்தணக்குரு. ஓதத் தொடங்கும் போதே. குருவுக்கும், சீடனுக்கும் பேச்சு வார்த்தை நீளுகிறது. கல்வி பயிலும் பள்ளியில் அந்தணனுக்கும் அந்தப் பாலகனுக்கும் நடந்த உரையாடலைக் கம்பர் தமக்கே உரிய முறையில் அழகாகக் கவிதையில் வடித்துத் தருகின்றார்.

'ஓதப்புக்கபின், ''உந்தைபேர் உரை'' எனலோடும்,
போதத் தன்செவித் தொளைஇரு கைகளால் பொத்தி,
''மூதக்கோய்! இதுநல் தவம்அன்று'' என மொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்தான்
(6210)

"ஓம்நமோ நாராயணாய!'' என்று உரைத்து உளம் உருகி,
தான்அமைந்து, இருதடக் கையும் தலைமிசைத் தாங்கி,
பூநிறக் கண்கள் புனல்உக, மயிர்ப்புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன், அந்தணன் நடுங்க?
(6211)

கல்வி கற்பிக்க வந்த அந்தணன், எல்லா மாணவர் களிடமும் சொல்வது போன்று, இந்தச்செல்வச் சிறுவனிடமும், 'இரணியாய நம: என்று ஓதுக எனச் சொன்னான் இங்கு, ஒரு மாற்றம் செய்தான் அந்த ஆசிரிய அந்தணன்.

'இந்தப் பெயரை ஓதுவதில், மற்றைய பிள்ளைகளை விட. உனக்குத் தனி உரிமையும் பெருமையும் உண்டு. என்பதைக் குறிக்கும் முறையில், 'உந்தை-(உன் தந்தையின்) பேர் உரை' என்பது ஆசிரியன் செய்த மாற்றம்.

'யாருக்குக் கல்வி கற்பிக்கப் போகின்றோம்' என்பதை மனத்தில் பதிய வைத்துக் கொண்டுதான், உந்தைபேர்உரை' என மாற்றம் செய்தான் அந்தணன்.

இந்த மாற்றம், ஆசிரியனுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கப் போகின்றது என்பதை அவன் முதலில் அறியான்.

ஓத- கல்வி கற்க: உந்தை- உன் தந்தை: போத- நன்றாக: பொத்தி- மூடிக்கொண்டு மூதக்கோய்- மூத்த அறிஞனே: தவம்-ஒழுக்கம்: மொழியா- மொழிந்து: (சொல்லி) புனல்-நீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியன் அறியான்தான், அறிஞன் அல்லன். அசுர னின் ஆணைக்கு அஞ்சி, அந்தண ஆசிரியனது அறிவு வெளி யேறிவிட்டது. அதனால், ஆசிரியன் அந்தணனாகயிருந்தும், ஓத வேண்டிய உண்மையை மறந்து, ஓத வேண்டாத பொய்ம் மையை ஓதிக்கொண்டு, வளரும் இளம் பிள்ளைகளையும் ஓதச் செய்து கொண்டிருக்கின்றான். அந்தண ஆசிரியன், தன் பதவிமேல், உலக வாழ்வின் மேல் கொண்ட ஆசையால், அரச ஆணைக்கு அஞ்சி, அவனும் அறிவிழந்து, இளங் குழந் தைகளையும் அறிவு இழக்கச் செய்யும் வேலையில் ஈடுபட்டி ருக்கின்றான்.

அறியானுக்கு அறிவிக்கும் காலம் பள்ளியில் தொடங்கு கின்றது. பள்ளியில் கல்வி பயில வந்த மாணவன் பயிற்று விக்க வந்த ஆசிரியனுக்கு, உண்மைக் கல்வி எது?' 'கல்வி யின் பயன் யாது'? என்பதை விளக்கிக் கூறும் நிலை பள்ளி யில் உருவாகிறது.

அச்சத்தோடு 'இரணியாயநம:' என்று சொல்லி வந்த காலம். மாற்றம் பெறும் இடம், பள்ளிக்கூடம் ஆயிற்று. உண் மைக் கல்வியை உலகுக்கு உணர்த்துவது பள்ளியாகத்தானே இருக்க வேண்டும்! 'பொய்ம்மை விளையாடிய உலகத்தில், மெய்ம்மை வெளிப்படும் போது, எத்தகைய மாற்றம் ஏற் படும்' என்ற இயற்கை நியதியை, கவிச்சக்கரவர்த்தி இந்தக் கவிதைகளில் எவ்வளவு அழகாகக் காட்டுகின்றார்!

அந்தண ஆசிரியன், 'இரணியாய நம:' என்று சொல் லும் போது, மற்றைய பிள்ளைகள் அதனைத் திரும்பச் சொல்வதற்கு, தமது வாயைத் திறப்பார்கள். அது, அந்தண னுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால், இப்போது நடக்கும் நிகழ்ச்சியோ, ஆசிரிய அந்தணனை நடுங்கவைத்து விடுகிறது.

'உந்தை பேர் உரை' என்று ஆசிரியன் கூறியதும், எதி ரில் அமர்ந்த சீர்மைச் செல்வன், வாயைத் திறப்பதற்குப் பதி லாக, தனது இருகாதுகளையும் நன்றாக மூடிக்கொண்டு விட்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறக்க வேண்டிய வாய், தானாக மூடிக்கொண்டு விட்டது. திறந்திருந்த இருகாதுகளும் கைகளால் நன்றாக மூடப்பட்டு விட்டன. (போதத்தன் செவித்தொளை இருகைகளால் பொத்தி) கேட்கத்தகாத சொற்கள் புகும் வழி காதுகள் தானே! அதனால், அந்த வழியை முதலில் அடைத்துவிடுவது சான்றோர்களின் இயல்பு. செவி சுடும் வசவுச் சொற்களை உள்ளே புகாதவாறு தடுத்து நிறுத்துவது சான்றோர் செய்யும் முதல் வேலை. அது நடந்தது இங்கு.

'உந்தைபேர் உரை' என்ற சொல், 'அவ்வளவு கேட்கத் தகாத தீய சொல்' என்பதை, பிரகலாதன் தனது இரு செவிகளையும் நன்றாகப் பொத்திக்கொண்டு விட்டதிலிருந்து தெரிகின்றது.

அது 'சொல்லத் தகாத தீய சொல்' என்பது கற்பிக்கும் ஆசிரியனுக்குத் தெரியவில்லை. அது, 'கேட்கத் தகாதது' என்பது, கற்றுக்கொள்ள வந்த மாணவனுக்குத் தெரிகின்றது. தெரிந்தவன், தெரியாதவனுக்குச் சொல்லிக் கொடுக்கும் இடம், பள்ளிக்கூடம் தானே! 'எல்லாம் தெரிந்தவன்' என்று நினைத்துக்கொண்டு எவன் பள்ளிக்கு வந்தானோ அவன் தெரியாதவனாகின்றான். தெரியாத ஆசிரியனுக்கு, தெரிந்த மாணவன், தெரிந்துகொள்ள வேண்டியதை, விவரித்துச் சொல்லத் தொடங்குகின்றான்.

தொடக்கம், 'மூதக்கோய்! இது நல்தவம் அன்று' என்ற மொழியாகும். இது, மாணவன் கூறும் விரிவுரைக்கு முன்னுரையாக அமைகின்றது. சொல்லத்தகாத சொல்லைச் சொன்ன அந்தன ஆசிரியன் 'தக்கோய்!' என்று அழைக்கப் படுகின்றான். அதுவும் மூ, தக்கோய் என அழைக்கப்படும் போது, அவனது தகாத தன்மை சுட்டிக்காட்டப்படுகிறது. வயதில் முதிர்ந்து, அனுபவத்தில் நிறைவுபெற்ற தகுதி உடையவன் என்பது இதன் பொருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதிர்ந்த வயதும், நிறைந்த அனுபவமும் பெற்றிருந்தும், தாங்கள் சொல்லத் தகாததாயும், சிறுவனாகிய நான் கேட்கத் தகாததாயும் உள்ள தீய சொல்லைச் சொல்லி விட்டீரே, என்ற தனது கருத்தை, 'மூதக்கோய்!' என, ஆசிரிய அந்தணனை அழைப்பதன் மூலம் புலப்படுத்தி விட்டான் பிரகலாதச் செல்வன். இது, சொல்லவும், கேட்கவும் தகாதது என்பதை அந்தணன் அறியவில்லை: அப்பாலகன் அறிந்து கொண்டு விட்டான். அறியாமல் சொன்ன அந்தணனது நிலை இப்போது எப்படி அமைந்துள்ளது என்பதை, அழைப்பினை அடுத்து வந்துள்ள சொல் தொடர் விளக்குகின்றது.

'நல்தவம் அன்று' என்பது, 'மூதக்கோய்' என்றதனை அடுத்து வந்த தொடர். 'நல்ல ஒழுக்கம் அல்ல' என்பது இதன் பொருள். அந்தணன் என்பவன் நல்ல ஒழுக்கம் நிறைந்தவனாகயிருக்க வேண்டும். அதுவும் ஆசிரியப் பணியை மேற்கொள்ளும்போது, ஒழுக்கத்தில் இன்னும் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் கேட்டுப் பயன் பெறத்தக்க சொற்கள் எதுவோ, அதனைத்தான் ஆசிரியன் சொல்ல வேண்டும். இதுதான், அந்தண ஆசிரியரின் ஒழுக்கம். தகாத வார்த்தையைச் சொன்னதால், அந்தண ஆசிரியரின் நல்ல ஒழுக்கம் குறைவு பட்டதாகச் சுட்டிக் காட்டுகின்றான் சிறு வயதுச் சீடன்.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

'மறந்தும் கூட, தீய சொல்லைச் சொல்ல மாட்டார்கள் ஒழுக்கம் உடையவர்கள்' என்பது வள்ளுவர் தரும் ஒழுக்க இலக்கணம். இதற்கு மாறாக அமைந்ததால், 'மூதக்கோய்' 'இது நல்தவம் (ஒழுக்கம்) அன்று' என மொழிந்தான் மாணவச் சிறுவன். இப்படி மொழிந்த மாணவன், அடுத்து என்ன செய்தான்? அதனை, இந்தக் கவிதையின் ஈற்றடி எடுத்துக் கூறுகிறது.

'விரித்தான்' எதனை விவரித்தான்?

---

0 திருக்குறள் 139. ஒல்லா-முடியா: வழுக்கியும்-மறந்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தண ஆசிரியன் எந்தப் பெயரினைக் கூறினால், அவன் ஒழுக்கம் உள்ளவனாகக் கருதப்படுவானோ, அந்தப் பெயரை எடுத்து விவரித்தான் பிரகலாதன்.

அந்தப் பெயர் எங்கு இருப்பது? வேதத்து உச்சியில் (அந்தம்) இருப்பது. அது எப்படி இருப்பது? 'மெய்ப்பொரு ளாக' இருப்பது.

'வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித் தான்' என்பது இந்தக் கவிதையின் இறுதி அடி. இது, **'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கைவிட்டு சித்தன் விரித்தனனே'** (4. 3. 11) என்ற பெரியாழ்வாரின் பாசுரப் பகுதிதான்' கவிச்சக்கரவர்த்தியின் மூலமாக மறு அவ தாரம் செய்துள்ளதோ என்று எண்ண இடம் அளிக்கிறது.

வேதத்தின் உச்சியில் சொல்லப்படும் திருப்பெயர்தான் மெய்ப்பொருளானது. மற்றைய பெயர்கள் எல்லாம் பொய்ப் பொருளைத் தருவன.

ஆசிரியன் சொன்ன பெயர் பொய்ப் பொருளுக்கு உரியது. மெய்யானவற்றைதானே ஆசிரியன் சொல்ல வேண் டும்? அதற்கு மாறாகச் சொன்னதால், மெய்ப்பொருளை நாடிய மாணவன், அதைக் கேட்காமலிருக்க வேண்டி தனது காதுகளை நன்றாக மூடிக்கொண்டு விட்டான்.

மெய்ப் பொருட் பெயரின் விரிவு :

அந்தத் திருப்பெயர் எது? அதைச் சொல்லும்போது, உள்ளம் எப்படியிருக்கும்? உடலின் நிலை எவ்வாறு அமையும்? உடல் உறுப்புகள் என்ன செய்யும்? என்பதை இந்தக் கவிதையைத் தொடர்ந்து வரும் கவிதை விவரிக்கின் றது. 'ஓம் நமோ நாராயணாய' என்பது, வேதாந்தத்தின் மெய்ப்பொருட் பெயர். இந்தத் திருப்பெயரை உரைத்தான் பள்ளியில் ஓதவந்த சிறுவன்.

இந்தத் திருப்பெயரை உரைக்கும்போது, அவன் உடல் அசைவற்றிருந்தது. அவனது உள்ளம் கசிந்து உருகியது; இரண்டு கைகளும் குவிந்த நிலையில் தலையின் மேல் தங்கின; கண்கள் ஆனந்த நீரைப் பொழிந்தன; மெய்ம்மயிர் சிலிர்த் தன: திருப்பெயரை உரைத்த சீர்மைச் செல்வன் தியானத்தில் அமர்ந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாராயண நாமத்தைச் சொல்லும் போது தமக்கு ஏற்பட்ட அனுபவ நிலையை, திருமங்கை ஆழ்வார் சொல்லியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

'உள்ளெலாம் உருகி, குரல்தழுத் தொழிந்தேன்:
உடம்பெலாம் கண்ணநீர் சோர,
நள்ளிருள் அளவும் பகலும் நான்அழைப்பன்
நாராயணா என்னும் நாமம்' *

இது, திருமங்கை ஆழ்வாரின் அனுபூதிப் பாசுரம்.

இந்த அனுபூதி நிலையை, பிரகலாதச் சொல்வனின் தோற்றத்தில் காணும் வண்ணம் இந்தக் கவிதையை அமைத்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி.

இந்தத் திருப்பெயரை உச்சரிக்கும் போது, எத்தகைய ஆனந்தம் ஏற்படும் என்பது, அதனைச் சொல்லி அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். மற்றையோர்க்குத் தெரியாது.

பிரகலாதன் இந்த எட்டெழுத்துத் திருமந்திரத்தை உளங்குளிர ஓதும் போது அவன் எவ்வளவு பெரிய ஆனந்தப் பெரு நிலையில் அமர்ந்திருந்தான் என் ப தை, அப்போது இருந்த அவனது தோற்றம் வெளிப்படுத்துகிறது.

அவன் வாய், உரைத்தது திருநாமம் (திருப்பெயர்) அவன் கண்ணுக்கு முன்னால் வந்து நின்றது நாமி. (நாமத்துக்கு உரியவன்) அதனால், பிரகலாதனது கைகள் குவித்து தலை மேல் நின்றன. இறைவனை வணங்கி வழிபடு வேண்டுமல்லவா? பிரகலாதச் செல்வன், அந்தத் திருப்பெயரை உரைக்கும் போது, அவ்வளவு ஆழ்ந்த பக்தனாகி விட்டான் என்பதை கை குவிதல் காட்டுகின்றது.

இப்படி ஆழ்ந்த பக்தனாக இருந்தவன் யார்? அவன் தான் 'ஞானநாயகன்-' ஞானத்தை நடத்திச் செல்பவன்-ஞானத்துக்குத் தலைவன்.

பிரகலாதன் ஞானநாயகனாக இருந்ததால், இந்தத் திருப்பெயரை உரைக்கும் போது ஆனந்தநிலையை அடைந்தான்: ஆசிரிய அந்தணன் அஞ்ஞானியாக இருந்ததால், அச்ச நிலையை அடைந்தான்; நடுங்கிக்கொண்டிருந்தான்.

---

* பெரிய திருமொழி 1.1.5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடுங்கிய அந்தணன் நவில்தல் :

**'கெடுத்தொழிந்தனை, என்னையும்: உன்னையும்: கெடுவாய்!
படுத்தொழிந்தனை; பாவி! எத்தேவரும் பகர்தற்கு
அடுத்தது அன்றியே அயல்ஒன்று பகர, நின் அறிவில்
எடுத்தது என்இது? என்செய எண்ணிலை? என்றான்(6212)**

அந்தணனுக்கு எதனால் நடுக்கம் ஏற்பட்டது என்பதை அவன் பேசிய பேச்சு காட்டுகிறது.

'கெடுமதி படைத்தவனே ! என்னையும் உன்னையும் கெடுத்து விட்டாய். நம் இருவரையும் இறந்தொழியச் செய்து விட்டாய். பாவியே! எந்த உயர்ந்த தேவரும் சொல்லுகின்ற பெயரைச் (இரணியாயநம :) சொல்லாமல், வேறு ஒரு பெயரைச் சொல்ல, உனது அறிவில் மேற்கொண்ட துணிவு என்ன! நீ என்ன செய்ய நினைத்திருக்கின்றாய்' என்பது ஆசிரியன் கூறிய நடுக்கம் கலந்த பேச்சு.

ஆசிரியனிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவன் உரைத்த திருப்பெயர் இதுவரை இந்த ஆட்சியில் யாரும் சொல்லாத ஒன்று. அந்தப் பெயர் இரணியனுக்கு எதிரானது. மாணவன் சொல்வதற்கு ஆசிரியன்தானே பொறுப்பு! அதனால், தன்னை, இரணியன் தண்டித்து விடுவானே என்ற அச்சத்தால்தான், என்னையும் உன்னையும் கெடுத்து விட்டாய் என்று அந்தணன் கூறினான்.

பிரகலாதன் பதில் :

'கெடுத் தொழிந்தனை' என்று கூறிய அந்தணனைத் தேற்றுவதற்கு, பிரகலாதன் கூறிய பதில் மிகமிகத் தெளிவானது, ஆசையும் அச்சமும் இல்லாத இடத்திலிருந்து தான், தெளிவான வார்த்தைகள் தோன்றும்!

**'என்னை உய்வித்தேன்: எந்தையை உய்வித்தேன்: இனைய
உன்னை உய்வித்து- இவ் உலகையும் உய்விப்பான் அமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்:
என்னை குற்றம் நான் இயம்பியது? இயம்புதி. ''என்றான்
(6213)**

குற்றம் செய்பவன்தான் கெடுவான்: அவனோடு இருப்பவனும் கெடுவான். தான்செய்த குற்றம் யாது? எனக் கேட்கத் துணிந்த பாலகன், தான் சொன்ன தன்பயனை விவரிக்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஓம்' என்பது, மிக மிகப் பழங்காலந்தொட்டு வழங்கி வருகின்ற பிரணவ மந்திரச் சொல். இது வேதத்தின் முதலிலேயே சொல்லப்படுகின்றது. இச்சொல்லின் மெய்ப்பொருள் பெயர் நாராயணன்' என்பது.

இதனை யார் ஒருவர் சொல்கின்றாரோ, அவர் பிறவித் துயர் நீங்கி உய்வு பெறுவார்கள். அதனை நான் சொன்னதால், என்னை உய்வித்தேன்: நான் உய்வு பெறுவதால், என்னை மகனாகப் பெற்ற என் தந்தையும் உய்வு பெற்றான்: இந்தத் திருமந்திரத்தை நீங்கள் காதாரக் கேட்டதால், நீங்களும் உய்வுபெற்றீர்கள். இந்தத் திருமந்திரத்தின் ஒலி, வெளியிடம் முழுவதும் பரவப் போவதால் உலக உயிர்கள் அனைத்தும் உய்வு பெறும்.

'இப்படி அனைவரும் உய்வு பெறுவதற்குரிய, பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலம் தரும் சொல்லாகிய 'நாராயண' மந்திரத்தைத்தானே நான் சொன்னேன் இது எப்படிக் குற்றமாகும்?' என்பது பிரகலாதனின் தெளிவுரையில் மலர்ந்து வந்த ஆணித்தரமான கேள்வி.

இந்தக் கேள்வியைக் கேட்டவன் பாலன்தான் (சிறுவன்) ஆனால், நமக்கு அப்பாலனாய் (அப்பாற்பட்டவனாய்) இருக்கிறானே' என்ற ஏக்கம் அந்தண ஆசிரியனுக்கு ஏற்பட்டு விட்டது.

ஏக்கத்தின் இயல்பால் :

முந்தை வானவர் யாவர்க்கும் முதல்வர்க்கும் முதல்வன்
உந்தை; மற்றுஅவன் திருப்பெயர் உரைசெயற்கு உரிய
அர்தணாளனேன் என்னினும் அறிதியோ? ஐய!
எந்தை! இப்பெயர் உரைத்து எனைக்கெடுத்திடல் என்றான்'
(6214)

அனைவரையும் உய்விக்க வந்த நாராயண மந்திரம் தன்னை எப்படிக்கெடுக்கும் என்பதை, ஏக்கத்தோடு விவரிக்கின்றான் அந்தண ஆசிரியன்.

'ஐயனே! உனது தந்தையாகிய இரணியன், யாவர்க்கும் முதல்வனாக விளங்குபவன், பழைமையான தேவர்களும், முதல்வர்கள் எனப்படுகின்ற மும்மூர்த்திகளும் கூட இரணியனுக்குப் பிற்பட்டவர்கள்தான். அதனால், அவன் திருப்பெயர், யாவரும் சொல்லுவதற்கு உரிமை பெற்றதாகும்.?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நான், வேதம் ஓதுவதற்கு உரிய அந்தணன்தான். அப்படியிருந்தும் உனது தகப்பனது பெயரைத்தான் உரைத்துக் கொண்டிருக்கின்றேன். வேதம் ஓதும் அந்தணா ளனாகிய என்னைக் காட்டிலும் நீ அதிகம் அறிந்துகொண்டு விட்டாயா? நீ என்னிடம் கல்விகற்க வந்தவன். நீ சொல்வது, நான் சொல்லிக் கொடுத்ததாகத்தான் உன் தகப்பன் தீர்மானிப்பான். அதனால், உன் தந்தைக்கு எதிரான இந்தப் பெயரைச் சொல்வதே எனக்குக் கேடாக முடியும்.?' 'ஆகவே. ஐயனே! இங்கு சொல்லத்தகாத சொல்லைச்சொல்லிஎன்னைக் கெடுத்துவிடாதே' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் ஆசிரியன். 'நாராயணாய நம:' என்பது சொல்லத்தகாத சொல்லாக ஆசிரியனுக்குத் தோற்றுகிறது, 'இரணியாய நம:' என்பது சொல்லத்தகாத சொல்லாக மாணவனுக்குத் தோற்று கிறது. ஏன் இந்த நிலை? இதனைத் தெளிவு படுத்து கின்றான் ஞானநாயகன்.

ஞானநாயகனின் நல்லுரை :

'வேத பாரகன் இவ்உரை விளம்பலும், விமலன்,
'ஆதி நாயகன் பெயர்அன்றி, யான்பிறிது அறியேன்:
ஓத வேண்டுவது இல்லை: என்உணர்வினுக்கு ஒன்றும்
போதி யாததும் இல்லை" என்று இவைஇவை
புகன்றான்.' (6220)

'என்னைக் கெடுத்துவிடாதே' என்று சொன்னவன் வேதங்களை நன்கு கற்றுத்தெளிந்த ஆசிரியன். அவன் அந்தணனாகயிருந்தும் வேதங்களைக் கற்றானேயன்றி, உண்மையை உணரவில்லை. அந்தணனை ஆசிரியனாகக் கொண்ட மாணவன், (விமலன்) தூய்மையானவன். அதனால், யாரிடமும் சென்று எதனையும் ஓதிக் கற்காமலேயே, உணர வேண்டிய உண்மையை உணர்ந்துகொண்டு விட்டான்.

அதனால், தனது நிலைஇது என்று தெளிவாக்குகின்றான் ஞானப்பெருஞ் சீலன். "முழுமுதற் கடவுளாகிய நாராயணன் பெயர் அன்றி, வேறு எந்தப்பெயரையும் சொல்லுவதற்குரிய தாக யான் அறியேன்: அதனால் கற்கவேண்டியது எதுவும் இனி இல்லை: அந்தத்திருப்பெயர். எனது அறிவுக்கு உணர்த் தாது எதுவும் இல்லை: ஆகவே, நான், வேறு யாரிடமும் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை.

வேதபாரகன் - வேதங்களின் எல்லை கண்டவன்: விமலன் - தூயவன்: ஆதிநாயகன் - முழுமுதற் கடவுள்: (திருமால்) போதியாதது-உணர்த்தப்படாதது: போதித்தல்-உணர்த்து தல்: பாரகம் - எல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று, இதனை தனது நல்லுரைக்குத் தொடக்கவுரையாக்கிக் கொண்டு, ஆசிரியன் உள்ளத்தில் பதியும் வண்ணம் தனது ஞான நிலையை விளக்க முற்படுகின்றான் பிரகலாதப் பெருஞ் செல்வன்.

பிரகலாதன் தரும் ஞான விளக்கத்தை ஆறு கவிதைகளில் விவரிக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி. இந்த ஆறு கவிதைகளிலும், இந்தியநாட்டுத் தத்துவக் கருத்துக்கள் வேதத்தின் நுண்ணிய உண்மைகள், உபநிடதங்களின் சாரங்கள். திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் பக்திப் பெருக்கு, இவைகளெல்லாம் ஆறாக ஓடி வருகின்றன என்னலாம்.

அது மட்டும் அல்ல! இந்தக் கவிதைத் தொகுப்பு, நம்நாட்டுப் பண்டைய ஞானப் பெருமக்கள் வழங்கிப்போன தத்துவ வெள்ளத்தில் மூழ்கிக் களித்த கம்பரின் திருவுள்ளத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாகவும் விளங்குகின்றது என்னலாம்.

பிரகலாதன், உண்மை உணர்ந்ததற்கான காரணத்தை வெளிப்படுத்துவது முதல் கவிதை.

“தொல்லை நான்மறை வரன்முறைத் துணிபொருட்டு எல்லாம்
எல்லை கண்டவன் அகம்புகுந்து இடம்கொண்டது, என்உள்;
இல்லை, வேறுஇனிப் பெரும்பதம்; யான்அறி யாத
வல்லையேல், இனி ஓதுவி நீதியின் வழாத.” (6216)

'நான் ஓதுவது எல்லாம் நீதிக்கு உட்பட்டது. ஏன் எனில், என் வாய் வழி வரும் வார்த்தையெல்லாம் எனது, உள்ளத்திலிருந்து புறப்படுவது. அந்த உள்ளமோ, நாராயணனைத் தன்பால் இருத்தி வைத்துக்கொண்டது, அந்த நாராயணனோ, எல்லாப் பொருள்களுக்கும் முடிவு எல்லையாக விளங்குபவன். அந்தப் பொருள்கள், நான்கு வேதங்கள், மரபு வழுவாது அறுதியிட்டுக் கூறியபொருள்கள். வேதங்களோ பழமை வாய்ந்த நீதிக்கு உரியவைகள்.'

'வேதத்துள் கூறப்படும் எல்லாப் பொருள்களும் தனக்குள் அடங்க, தான் அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குகின்ற முதல்வனாகிய நாராயணன், எனது சிறிய மனத்துள் வந்து புகுந்து. அதனைத் தனக்குரிய கோயிலாக்கிக்கொண்டு விட்டான். அதனால், அந்தப் பகவானது திருப்பெயர் அன்றி யான் சொல்வதற்கு வேறு பெரிய பெயர் எதுவும் இல்லை (பதம்)'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஆகவே, என்னால் அறியப்படாத அருமறைப்பொருள் ஏதாவது இருப்பின் எனக்குக் கற்பிக்கலாம். அது, அறநூல் முறைக்கு மாறுபடாதவனவாக இருக்க வேண்டும்.' 'எனது மனத்துள் இறைவன் இருத்தலால் என் பேச்சு உண்மையை உணர்த்தும் நீதிக்குட்பட்டது. உமது மனத்துள் இரணியன் இருத்தலால், உம் வாயிலிருந்து வரும் வார்த்தை, அச்சத்தால் பொய்ம்மை கலந்து, அநீதிக்கு உட்பட்டதாகின்றது.

'வல்லையேல் ஓதுவி' அறநெறிக்கு மாறாமல் சொல்லும் வலிமை உமக்கு இருக்குமானால், கற்பிப்பாய் என்று சொல்வதன் மூலம், உம்மிடம் அத்தகைய வன்மை இல்லை என்பது குறிப்பிக்கப்படுகிறது.

'எல்லை கண்டவன் அகம்புகுந்து இடம் கொண்டது என் உள்' என்ற கவிதைத் தொடர், '**முடிவு இல்லது ஓர் நீலமேனி ஐயோ நிறைகொண்டது என் நெஞ்சினையே**' என்ற திருப்பாணாழ்வாரின் பாசுரத் தொடரை நினைவுபடுத்துகின்றது.

'பாரமாய பழவினை பற்றுஅறுத்து, என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான்: வைத்தது அன்றி
என்னுள் புகுந்தான்.'
கோரமாதவம் செய்தனன் கொல் அறியேன்
அரங்கத் தம்மான் திரு
ஆர மார்பதன்றோ அடியேனை ஆட் கொண்ட தே' O

என்ற திருப்பாணாழ்வார் பாசுரம், கம்பரை ஆட்கொண்டதால்தான், 'எல்லை ... என் உள்' என்ற கருத்தை உருவாக்கினாரோ என்று எண்ணவும் இடம் உண்டு. 'பொருள்களின் எல்லை கண்டவன் (இறைவன்) என்னுள் புகுந்து தங்கிக் கொண்டு விட்டதால், எல்லாப் பொருள்களின் உண்மையையும் நான் உணர்கின்றேன். அதனால், நான் சொல்வது எல்லாம் உணர்ந்து சொல்வதாகும்.' என்று மாணவச் செல்வன், ஆசிரிய அந்தணனுக்குத் தனது கருத்தைத் தெளிவுபடுத்தினான்.

O அமலனாதிபிரான்-5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரம்பொருள்:

'பொருள்களில் எல்லாம் மேலானது எதுவோ அது தான் பரம்பொருள். அதனினும் மேலானது எதுவும் இல்லை. அதுதான் உயர்வற உயர்ந்து நிற்பது. அந்தப் பரம்பொருளின் திருப்பெயரைத்தான், உயிர்களிடம் செந் தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள், வேதம் ஓதும் வேதியர்கள் உபநிடதங்கள். தேவர்கள், முனிவர்கள் அனைவரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அத்தகைய பெருமைக்குரியவர்கள் பரம்பொருளின் பெயராக எந்தத் திருப்பெயரைச் சொல்லிக் கொண்டிருந்தார்களோ, அதனைத் தானே நானும் சொன்னேன். அதனால், மக்கள் சொல்லத் தக்கது இந்தத் திருப்பெயர் அன்றி வேறு என்ன இருக்கிறது?

ஓதிக்கேட்பது:

'மக்கள் ஓதுவதற்கும். கேட்பதற்கும் உரிய பரம் பொருளின் திருப்பெயரைத்தான் உங்கள் முன் நான் சொன்னேன். அந்தத் திருப்பெயரை ஓதுவதாலும் கேட்ப தாலும் கிடைக்கக்கூடிய பயனைப் பெறுவதற்கு, சிலர், வேதத்தைக் கற்கின்றார்கள்: சிலர் வேதத்தில் சொல்லப் பட்ட யாகம் செய்கின்றார்கள்: இன்னும் சிலர் தத்துவ ஞானத்தால் மெய்யுணர்வு கைவரப் பெற்றவர்களாகின்றனர்: மற்றும் சிலர் தவம், பூசனை முதலிய உபாயங்களை மேற் கொள்கின்றனர்.'

'இவ்வளவு முயற்சி செய்து பெறக் கூடிய பயனை, நான் இங்கிருந்தே, அந்தப்பரம் பொருளின் திருப்பெயரை ஓதுவதால் பெற்றுக் கொண்டு விட்டேன். காரணம்: திருப் பெயருக்கு உரியவன், என் நெஞ்சைத் தனது சொந்த இட மாக்கிக் கொண்டு என்னுள்ளேயே அமர்ந்து விட்டான்.

பெற்ற செல்வம் :

'மக்கள் பலரும் செல்வம் பெறுவதற்குத்தான் முயல் கின்றார்கள். ஆனால் அந்தச் செல்வம் அவர்களை விட்டு வெளியில் சென்று விடுகிறது. முயன்று பெற்ற ஒன்று, அவர்களிடமிருந்து செல்லாமல் இருந்தால் தான், அது சிறந்த செல்வமாகும். அத்தகைய சிறந்த செல்வத்தைப் பெறுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளும் கடுமையானதாக இருக்க வேண்டும்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அம்முயற்சிகளுள் மிகக்கடுமையானது தவம்ஆகும் அந்தத் தவத்தை முறையாக மேற்கொள்வதற்கு, மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டிற்காவது மலைக்காவது செல்ல வேண்டும். இயற்கையாக அமைந்த தலை மயிரை (மொட்டை) மழிக்க வேண்டும்: அல்லது நீட்ட வேண்டும். இத்தகைய தவ முயற்சியினால் கிடைக்கும் செல்வம் வீடுபேறு (மோட்சம்) ஆகும். தவம்செய்த ஞானிகள் பெறும் வீடு பேற்றுச் செல்வத்தைவிட, யான் பெற்ற திருநாமம் ஓதுதலாகிய செல்வம் மிகச் சிறந்தது. அதனால் இதனைவிட பெறக் கூடியது என்னயிருக்கிறது?' என்று தெளிவு படுத்தினான் ஞானநாயகன்.

விழுமிது என்று உரைக்கும் மாடு (செல்வம்) பெற்றனன் மற்று இனி என் பெற வருந்தி.' என்பது கவிதைத் தொடர்.

''செல் கதிக்கு உய்யும் ஆறு எண்ணி,
நற்றுணையாகப் பற்றினேன் அடியேன்,
நாராயணா என்னும் நாமம்''

அதனால்,

''சொல்லு கேன் வம்மின்!
நற்பொருள் காண்மின்! பாடிநீர் உய்மின்!
நாராயணா என்னும் நாமம்''

என்று திருமங்கை அழ்வார் தமது அனுபவத்தில் கண்ட நாராயண நாமத்தின் பெருமையைச் சொல்லுவதை இதனோடு இணைத்துப் பார்த்து இன்புறலாம்.

ஓதாது உணர்தல்:

பள்ளியில் சென்று, ஆசிரியரிடம் கல்வி கற்று பெற்றுக் கொள்ளக் கூடிய அறிவினை, ஓதாமலேயே உணர்ந்து கொள்ளக் கூடிய வழிமுறை ஒன்று உண்டு. அதைக் கேளுங்கள் என்று பிரகலாதன் சொல்கின்றான்.

''செவிகளால் பல கேட்டிலர் ஆயினும், தேவர்க்கு
அவிகொள் நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார்:
கவிகள் ஆகுவார்: காண்குவார் மெய்ப்பொருள்:- காலால்
புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையின் புக்கார்,''
(6226)

'கற்றிலனாயினும் கேட்க' என்ற அறவுரைக்கு ஏற்ப கற்றறிந்த பெரியோர்கள் சொல்லும் அறிவுரைகளைக் கேட்பது மிகவும் பயனுடையதாக இருக்கும். அப்படி, அறிந்தோர் சொல்வதைத் தமது காதுகளால் கேட்டுக் கொள்ளவில்லை என்றாலும், உரிய பயனைச் சிலர் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள் அவர்கள் யார்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் அடியவர்கள் யாருக்கு அடியவர்கள்? அடியார்க்கு அடியார். அந்த அடியார் யாருக்கு அடியவர்? நாராயணனுக்கு அடியவர்கள். அந்த நாராயணன் மக்களை அடியவர்களாக்கிக் கொள்ள என்ன செய்தான்? அன்று ஒரு நாள் மகாபலிக்காக, தனது திருவடியால் உலகம் முழுவதும் அளந்தான். தனது திருவடியை உயிரினங்களின் தலைமேல் வைத்து தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். 'புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையில் புக்கார்' புவி-பூமி: நாயகன்-தலைவன்: திருமால்) என்பது கவிதைத் தொடர்.

'வாமனனாக வந்து திருவிக்கிரமனாக வளர்ந்து, உலகத்தைத் தனது திருவடியால் அளந்த அவதாரச் செயல் பக்தர்கள் பலரையும் அடியவர்களாக்கிவிடும்,' என்ற உண்மையை ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் வெளியிட்டு உள்ளார்கள்.

'மாலுக்கு, **வையம் அளந்த மணாளற்கு**
....
....
ஏலக்குழலி இழந்தது சங்கே.'

என்பது, நம்மாழ்வார் அகப் பொருளாகக்கண்ட தாயார் பாசுரம். 'ஓங்கி உலகு அளந்த உத்தமன்' செயலை, மக்களுக்கு நல்வாழ்வு காட்ட வந்த வள்ளுவரும் மறவாமல், தமது திருக்குறளில் உரிய இடத்தில் பொருத்தி வைத்துள்ளார்.

'மடிஇலா மன்னவன் எய்தும் **அடிஅளந்தான்**
தாயஅது எல்லாம் ஒருங்கு' (610)

என்பது திருக்குறளில் வந்த அடி.

இப்படி அடி அளந்தானுக்கு அடியவர்கள் யாரோ, அந்த அடியார்களுக்கு அடியவர் பயன் பெறுவர். அவர் பெறும் பயன் யாது? நான்கு வேதங்களில் சொல்லப் பெற்றுள்ள வெளிப்படையான பொருளையும், அதன் உள்ளுரையாக அமைந்த பொருளையும் தாமே உணரப் பெறுவார்கள். (நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார்) அந்த வேதங்கள், தேவர்களுக்கு அவி உணவை அளிக்கும் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்டவைகள். (தேவர்க்கு அவி கொள் நான்மறை) இந்த மந்திரங்கள் கூறும் பொருளின் தத்து வார்த்தத்தையும் அடியவர்கள், பிறர் சொல்லாமல் தாமே உணர்ந்து கொள்வார்கள்.

✱ திருவாய்மொழி. 5.6.1 வையம்-உலகம்: ஏலம்-வாசனை: குழலி - கூந்தலை உடையவள்: சங்கு-சங்கினால் ஆன வளையல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அகப்பொருள் புறப் பொருள்' என்ற கவிதைத் தொடரின் மூலம், தமிழ் இலக்கண இலக்கிய அகப்பொருள் புறப் பொருள் நூல்களை நினைவில் இருத்துகின்றார் கவிச் சக்கரவர்த்தி. நான்மறையின் அகப்பொருள் புறப்பொருள் அறிவதோடு மட்டுமல்ல அடியவர் பெறும் பயன்! தெய்வத் தன்மையையே பாடும் தெய்வப் புலவர்களாக உயர்வார்கள். (கவிகளாகுவர்) 'என் நாவில் இன்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்: என்னானை, என் அப்பன் எம்பெருமான் உளனாகவே.' ✱ என்று நம்மாழ்வார் சொல்வது போன்று, அடியார்க்கு அடியார், இறைவனையே பாடும் பரமஇன் கவிகளாக உயர்வு பெறுவார்கள்.

இதற்கு மேலும் அடியவர் பெறும் பயன் ஒன்று உண்டு. வேதங்களாலும் இன்ன தன்மையன் என்று உரைக்க முடியாத பரம் பொருளைத் தமது உள்ளத்தில் வைத்து இன்புறுதலோடு, கண்ணாரக் கண்டும் மகிழ்வர் அடியவர்கள். (காண்குவர் மெய்ப்பொருள்.) இத்தகைய பெரும் பயன்களைப் பெறுவார்கள், நாயகனுக்கு அடியவர்க்கு அடிமையில் புக்கவர்கள். அதனால், இந்தப்பக்தர்கள் எந்தப் பள்ளிக்கும் செல்ல வேண்டியதில்லை, யாரிடமும் எதையும் ஓத வேண்டியதில்லை. ஓதாமலேயே உணர்ந்தவர்களாவர் இவர்கள்.

'நானும் அப்படி, ஓதாமல் உணர்ந்ததனால்தான், ஓதியும் உணராதவரான உமக்குச் சொல்கின்றேன்' என்று பிரகலாதன் ஆசிரிய அந்தணனுக்கு இறுதியாக ஒன்று சொல்லி நிறுத்துகின்றான்.

"எனக்கும், நான்முகத்து ஒருவற்கும், யாரினும் உயர்ந்த
தனக்கும் தன்நிலை அறிவுஅரும் ஒருதனித் தலைவன்
மனக்கு வந்தனன்: வந்தன யாவையும்: மறையோய்
உனக்கும் இன்னதின் நல்லது ஒன்றுஇல்"என
உரைத்தான்" (6227)

'வேதத்தில் வல்லவனாகிய அந்தணனே! உமக்கு நல்லதாக இருக்கக்கூடிய ஒன்றை உறுதியாகச் சொல்கின்றேன். கவனமாகக் கேட்டீர்.'

✱ திருவாய்மொழி 3.9.1. நா-நாக்கு: என்+ஆனை யானை, ஆனை என வந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறுதி தரும் இறுதி வார்த்தை:

எனக்கு வேத நூல் பொருள் யாவும் நன்றாகப் புலனாயிற்று. (வந்தனயாவையும்) ஏன் தெரியுமா? ஒப்பற்ற முழுமுதற் பொருளாகிய நாராயணன் என் மனத்துள் வந்து புகுந்து கொண்டு விட்டான். (ஒருதனித் தலைவன் மனக்கு வந்தனன்) அந்த ஒரு தனித்தலைவனது தன்மை, இன்னது தான் என்று யார்க்கும் அறிய ஒண்ணாதது. ஒரு சிறிதும் கல்விப் பயிற்சியில்லாத எனக்கும், நான்கு வேதங்களையும் முழுமையாகக் கற்றுணர்ந்த பிரம்மதேவனுக்கும் அறிய முடியாதது. எல்லாரினும் உயர்ந்த இறைவனாகிய தனக்கும் கூட தனது நிலை இன்னது தான் என்று அறிய முடியாதது.

அப்படிப்பட்ட தலைவன் மனக்கு வந்தனன். அதனால் யாவையும் வந்தன.

"எனக்கே ஆட் செய்! எக்காலத்தும்," என்று,
மனக்கே வந்துஇடை வீடுஇன்றி மன்னி,
தனக்கே யாக, எனைக் கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே.'※

என்ற நம்மாழ்வாரின் அனுபவ நிலை, இங்கு நினைத்துப் பார்ப்பதற்குரிய ஒன்றாகும். 'யாரினும் உயர்ந்த தனக்கும் தன் நிலை அறிவு அரும் ஒரு தனித் தலைவன்' என்ற கவிதைத் தொடர், 'தன்மை பிறரால் அறியாத தலைவா'O எனவும், 'தன்பெருமைதான் அறியாத் தன்மையன்' ⚘எனவும் கூறும் மணிவாசகரது பாடல் தொடர்களை நினைவுக்குக் கொண்டு வருகின்றது. மேலும், 'தனக்கும் தன் தன்மை அறிவு அரியானை...... கண்டேனே.O' என்ற நம்மாழ்வார் கூற்றையும் நினைத்துப் பார்க்கச் செய்கின்றது. ஆதலால், கற்பனவெல்லாம் நன்கு கற்றுக் கொண்ட அந்தண ஆசிரியனாகிய உமக்கும், இந்தத் திருப்பெயரைச் சொல்லுவதைக் காட்டிலும் நல்லது வேறு ஒன்றும் இல்லை என்று உறுதியாகச் சொன்னான் ஓதாது உணர்ந்த உத்தமச் சிறுவன்

கற்றதன் பயன் எது? இறைவனின் திருப்பெயரைச் சொல்லிக் கொண்டு அவன் திருவடியைத் தொழுவது தானே! மற்றையோரைத் தொழுவது கல்வியின் பயன் அல்ல.

"கற்றத னாலாய பயன்என் கொல் வாலறிவன்
நல்தாள் தொழாஅர் எனின்" என்று, வள்ளுவர்கூறும் கல்விப்பயன் பிரகலாதன் கூற்றில் வெளிப்படுகின்றது.

※திருவாய் மொழி 2-9-4. O 8.4.6. O திருவாசகம் திருச். சதகம்59. ⚘திருச் சாழல் 1 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

பேதையும் மேதையும்

'மதித்ததிண் வயிரக் கோட்டு
வாரணம் அனையான் தன்பால்,
உதித்தனன் பிரகலாதன்
என்று ஒரு புதல்வன்! யார்க்கும்
நிதிக்குலம் அனையான்! ஞானம்
நிறைந்தவன்: தருமசீலன்:
பதித்தஅன்பு உடையான், செம்புள்
பாகன்பொன் பதத்து மன்னோ.'✳

மாறுபாடு:

மாறுபட்ட கருத்துடைய இருவர்கள் சந்தித்தால் முதலில் குழப்பம் நிலவும்: இறுதியில், உலகத்துக்கு எது நன்மையோ அது, தானே வந்து சேரும். இது ஒரு இயற்கை நியதி.

உலகத்தின் இயக்கமே, எதிரும் புதிருமாகத்தான் ஓடிக்கொண்டிருக்கின்றது. உலகத்தின் வெளிப்புறமும் மாறுபட்ட அமைப்பு: உள் அமைப்பும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவைகளே. மலை, கடல்: வெயில், மழை: பகல், இரவு: மண், விண்: மக்கள், மாக்கள். இவை போன்றவைகள் வெளித் தோற்றமாறுபாடுகள். உடைமை, இன்மை: வறுமை, செம்மை: நன்மை, தீமை: இளமை, முதுமை பழமை, புதுமை: பெருமை, சிறுமை: ஒருமை, பன்மை: மென்மை, வன்மை: மெய்ம்மை, பொய்ம்மை: இவை போன்ற மாறுபாடுகள், உலக உள் அமைப்பில் ஒட்டிக் கொண்டிருப்பவைகள். இவைகளே உலகத்தை ஓட்டிக் கொண்டிருப்பவைகள் என்றும் கூறலாம்.

உலக ஓட்டத்தில், ஒன்று நிற்கும் இடத்தில், அதற்கு மாறுபட்ட மற்றொன்று நிற்பதில்லை. ஆனால், ஒன்று நின்ற நிலையை "அதற்கு மாறுபட்ட ஒன்று சந்திக்க வருமேயானால், அங்கு, ஒரு போராட்டமே நிகழும். போராட்டத்தின் இறுதியில் வெற்றி பெறுவது எது?

✳ விஷ்ணு புராணம் பிரகலாத சரித்திரம் உரைத்த அத்தியாயம் 6. கோடு- தந்தம்: வாரணம்- யானை: நிதி- செல்வம் செம்புள்- செம்மை- பாகன்- செலுத்துபவன்: (திருமால்)பதம் திருவடி- நிறமான பறவையாகிய கருடன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலக நன்மைக்கு எது தேவையோ அதுதான். இறுதியில் வெற்றியைத் தழுவும். முதலில் தருமத்தைச் சூது கவ்வும்: இறுதியில் தருமம் வெல்லும். அதர்மத்தின் ஆட்சி, தலை தூக்கி நிற்கும்போதுதான், அதனை எதிர்த்துப் போராடுவதற்கு அதன் முன் வந்து நிற்கும் தருமம். நின்ற நிலை அதர்மத்தினுடையது: வரு நிலை தர்மத்தினுடையது. நிற்பது மறைவதும், வருவது நிற்பதும்தான், உலக நன்மைக்கு நடக்க வேண்டிய ஒன்று. சொல் தொடரில் நிலைமொழி வருமொழி என்பது உண்டு. அதில் இரண்டும் ஒன்று சேர்ந்து ஒரே தொடராக அமைந்துவிடும். பால்+கடல் இரண்டும் ஒன்றாக இணைந்து பாற்கடல் என்ற ஒரே சொல் தொடராகிவிடும். இது, தொடர் அழகு.

ஆனால், வாழ்க்கைத் தொடரில், அது போன்று நின்ற நிலையும் வருநிலையும் ஒன்றாக இணைவது இல்லை. நின்ற நிலையை, வருநிலை எதிர்த்து வென்று, அதனை இருந்த இடம் தெரியாமல் விரட்டிவிடும். மாறுபட்ட இரண்டு கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று நேருக்கு நேராக, மோதும் போது தான், அதன் வன்மை மென்மைகள் வெளிப்படுகின்றன. வெல்லுவது வன்மை. தோற்பது மென்மை.

புதுமைக் காட்சி :

உலக வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கிக் காட்டுவதில், இங்கு ஒரு புதுமையைக் கையாண்டுள்ளார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். தோற்கப் போகும் மென்மையை வலிமையான இடத்திலும் வெல்லம் போகும் வன்மையைமெலிவான இடத்திலும் வைத்து அவைகளை மோதச் செய்து காட்டுவதே கம்பர் படைத்த புதுமை.

'பேதை' தோல்வியைத் தழுவ வேண்டிய மென்மை, இது, வலிமையே ஓர் உருவாக அமைந்த இரணியனிடம் உள்ளது. 'மேதை' வெற்றிக் கொடி நாட்டப் போகும் வன்மை; இது மென்மை தவழும் இளைஞன் பிரகலாதனிடம் உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேதை-அறிவின்மை: மேதை-அறிவுடைமை., வாழ்க்கை விளக்கம் கூற வந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர், இந்த இரண்டன் இயல்பையும் எடுத்துக்காட்டுகின்றார். ஒன்றன் இயல்டை வெளிப்படையாகவும், மற்றொன்றைக்குறிப்பாகவும் உணர்த்துகின்றது அவர் தந்த திருக்குறள்.

> பேதைமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதங்கொண்டு
> ஊதியம் போக விடல். (831)

'பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைக் குற்றங்கள் எல்லாவற்றிலும் மிக்கதொன்று, அதுதான் யாதுஎன்று வினவின், தனக்குக்கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு, ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல்,' என்பது பரிமேலழகர் கூறும் உரைப்பொருள்.

மேலும், அவர், 'கேடு-வறுமை, பழிபாவங்கள், ஆக்கம்-செல்வம், புகழ், அறங்கள்: தானே, தன் இருமையும் கெடுத்துக் கோடல் என்பதாம்.' என்று தன் உரைக்கு விளக்கம் தந்துள்ளார். (ஏதம்-குற்றம்: ஊதியம்-செல்வம்).

பேதைமைக்கு வள்ளுவர் தந்த வெளிப் படையான விளக்கத்தில், ஆக்கம் பயப்பனவற்றை (ஊதியம் கொண்டு) பெற்றுக்கொண்டு, குற்றத்தை, (ஏதம்) வராதபடி தடுத்து விடுவது மேதைமை என்ற குறிப்பு அடங்கிக் கிடக்கிறது.

வள்ளுவர் இலக்கணப்படி பேதையாகக் கருதப்பட வேண்டியவன் இரணியன். மேதை ஸ்தானத்தில் நிற்பவன் இளைஞன் பிரகலாதன்.

இரணியப்பேதை, புறத்து அளவில் எல்லா வகையிலும் ஆற்றல் நிரம்பப் பெற்ற வன்மையாளன் பிரகலாத மேதை, புறத் தோற்றத்தில் ஆற்றல் அற்ற மென்மையாளன்.

பேதையாகிய இரணியன் தன்னையே.மேதை என்று கருதுகின்றான். மேதையாகிய பிரகலாதனை, பேதை என்று பேசுகின்றான். இதுவே, அவனது பேதைமை.

'பேதைப் பிள்ளை நீ' என்பது இரணியத்தந்தை பிரகலாதமைந்தனை அழைத்த அழைப்புத் தொடர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் பேதையும் மேதையும் மோதும் காரியத்தைத் தோற்றுவித்தவர் யார்? மேதைக்கு ஓதவந்த ஆசிரிய அந்தணாளன். இவனே இதற்குக் காரணமாகின்றான்.

மேதையின் திருவாயிலிருந்தும் வெளியேறிய ஒலி, 'நாராயணநாமம்.' இந்த ஒலி, உலகத்தின் நடுக்கம் தீர்க்க வந்தது. ஆனால் அதனைக் கேட்டு நடுங்கியவன் ஆசிரிய அந்தணன்.

கேட்கத்தகாததைக் கேட்டதாக நடுக்கத்தோடு சென்று சொன்னான் அந்தணன், அசுரனிடம். 'கேட்கத்தகாத அந்தச் சொல் என்ன?' என்பது இரணியன் கேள்வி. 'அது, சொல்லத் தகாதது' என்பது அந்தணன் பதில்.

'தகாத அந்தச் சொல்லைச் சொன்னவன்யார்' என்பது அசுரனின் அடுத்த கேள்வி. 'உன் மைந்தன்' என்று சுருக்கமான பதில் தந்தான் அந்தணன்.

'அவன் இயம்பியது என்ன சொல்? இயம்புதி' என்பது, இரணியனின் அதிகாரத் தோரணையில் அமர்ந்த, ஆணை. ஆணைக்கு அஞ்சிய அந்தணன், 'யான் உனக்கு உரை செயின், நரகம் எய்துவன்: நாவும் வெந்து உகும்' என்று நவின்றான்.

இதனைக்கேட்ட கனகன் (இரணியன்) கனன்றான். (கோபம் கொண்டான்) தக்கோன் (அறிஞரின் அறிஞனாய பிரகலாதன்) சொன்ன சொல், 'கேட்கத்தகாததும், என்னால் சொல்லத்தகாததும்' என்று சொன்ன அந்தணனும் இப்போது, ஓதத் தெரியாத ஒரு பேதையாகின்றான். இவன் பேச்சைக் கேட்டு கோபவசத்தனாகிய இரணியனும் பேதை ஸ்தானத்தில் நிற்கின்றான்.

'கொணர்க மைந்தனை' என்று கொடியோன் ஆணையிட்டான். ஆணையை நிறைவேற்ற ஏவலர்கள் ஓடினார்கள். ஏவலர்கள் மூலம், வந்த அழைப்பை ஏற்று, இரணியன் முன்வந்து நின்றான் இளைஞன்.

தனது தாதை (தந்தை) பேதையாகயிருந்தாலும், இந்த மேதை, அவனைத் தொழுதான்: பணிந்து நின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தையும் மைந்தனும்:

தொழுதமைந்தனை, தந்தை, அன்பினால் இறுகுறத் தழுவிக் கொண்டான்: தனது மடியில் இருத்திக் கொண்டான்: மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான், 'அன்புச் செல்வனே! நீ ஆசிரிய அந்தணனிடம் சொன்னது யாது? அதனைச் சொல்.' என்று இரணியன் இளைஞனாகிய பிரகலாதனைப் பார்த்துக் கேட்டான்.

தந்தை கேட்டதற்கு, மைந்தன் பதில் கூறுவதாக அமைந்த கவிதை மிக மிகச் சுவையானது, 'கேட்கத்தகாத சொல்லை உன்மைந்தன் சொன்னான்' என்ற அந்தணன் கூறியதைக் கேட்ட இரணியனை, கேட்கும் ஆர் வித்தனனாக மாற்றி வைப்பது, இந்தக் கவிதைப் பொருள்.

"சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன
ஒருவன்; யாவர்க்கும் நாயகன் திருப்பெயர் உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து இடர்க்கடல் கடக்க
உரிய மற்றுஇதின் நல்லதுஒன்று இல்"என உரைத்தான் O

'தந்தையே! நான் சொன்ன திருப்பெயர், வேதத்தைச் சொல்லத் தொடங்கும் போதும், முடிக்கும் போதும் சொல்லப் படுவது: அந்தத் திருப்பெயர், அறிவினால் ஆராய்ந்து உணர்ந்து தெளியத்தக்கது: எல்லாராலும் உள்ளத்தால் நினைக்கத்தக்கது! யாவராலும் காதால் கேட்கத்தக்கது: நாவினால் பொருள் விளங்கச் சொல்லத்தக்கது: யாவரும் தமது துன்பக்கடலைக் கடக்க உதவுவது.'

'நான் நாவால் சொல்லவும், காதால் கேட்கவும், உள்ளத்தால் நினைக்கவும் தக்கதைத்தானே சொன்னேன்!, நான் தகாததைச் சொல்லவில்லையே!,

'நான்சொன்ன திருப்பெயருக்கு உரியவன் ஒப்பற்ற வன்: (ஒருவன்) தேவர்முதலிய யாவர்க்கும் தலைவனாகிய இறைவன். 'உலகம் உய்வுபெறுவதற்கு, இந்த இறைவன் திருப்பெயரை ஓதுவதைவிட நல்லதொரு சாதனம் வேறு எதுவும் இல்லை.' என்று உரைத்தான் ஓதாது உணர்ந்த உத்தமச் செல்வன்.

O க. ராமாயணம். 6228. சுருதி-வேதம்: ஆதி-முதல்: எல்லை-முடிவு: நாயகன்—தலைவன்: இடர்—துன்பம்: உணர்தல்-அறிவினால் ஆராய்ந்து தெளிதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனது மைந்தன் சொன்ன திருப்பெயரின் பெருமைகள் அனைத்தும் தன் பெயருக்கே உரியது என்று எண்ணுகின்றான் இரணியன்: 'ஆசிரியன் அந்தணன்தான் தகாததைச் சொல்லி விட்டான்' என்றும் நினைக்கின்றான் அவன். 'குருவுக்கும் சீடனுக்கும் பள்ளியில் என்ன நடந்தது' என்பது இந்த அசுரனுக்குத் தெரியாது. இப்போது மைந்தன் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகின்றான் அசுரத்தந்தை. இங்கு, இந்தக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைத்துப் பார்த்தற்கு உரியது.

கலிகாலப் பிரகலாதன் :

'புட்டபர்த்தி' என்பது ஆந்திரமாநிலத்தில் உள்ள ஒரு பெரும் புண்ணியத்தலம். முன்பு, ஒரு சிறு கிராமமாக இருந்த இந்த இடத்தை, பலப்பல நாட்டு யாத்திரிகர்களும் வந்து தங்கியிருந்து பெரும் புண்ணியம் பெற்றுச் செல்லும் திருத்தலமாக்கிய பெருமை, அங்கு அவதாரம் செய்து, அனைவர்க்கும் அருள் ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் சுவாமிகளைச் சேர்ந்ததாகும்- தெலுங்குமொழியில் 'புட்ட' என்றால் 'பிறந்த' என்று பொருள். 'பர்த்தி' ஊர்களுக்கு இடப்படும் பொதுப்பெயர். சுவாமிகள் அந்தச்சிறுகிராமத்தைத் தமது பிறப்பிடமாக்கிக் கொண்டதால், ஊர்ப் பெயர் பொருத்தம் உடையதாயிற்று.

இந்தத்தலம் சித்ராவதி நதிக்கரையில் உள்ளது. அந்த நதியின் ஒருகரையில், புட்டபர்த்தி, மறுகரையில் 'புக்கபட்டணம்' என்ற ஊர் உள்ளது. இந்த ஊர்ப் பள்ளியில் சுவாமிகள், 'ஸத்யா' என்ற திருப் பெயரோடு சிறு வயதில் படித்துக் கொண்டிருந்தார், இவருடைய ஆசிரியர் கோவிந்தன் என்ற பெயருடையவர்.

ஒரு நாள், இந்த ஆசிரியருக்கும் 'ஸத்யா' என்ற மாணவருக்கும் (சுவாமிகள்) பள்ளியில் நடந்த நிகழ்ச்சி, அந்தக் காலத்தில் அந்தண ஆசிரியருக்கும் பிரகலாத மாணவருக்கும் நடந்த நிகழ்ச்சி போன்று அமைந்துள்ளது. அதனால், புட்டபர்த்திசத்யசாயி பாபா சுவாமிகளைக் கலிகாலப் பிரகலாதன் என்று கூறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோவிந்தன் என்ற ஆசிரியர் கூற்று :

''நான் ஒரு பாடம் டிக்டேட் செய்தேன். இவன் (சத்யா) அதை எழுதாமல் வேறேதோ கிடுகிடுஎன எழுதிக் கொண்டிருப்பதாகப் பட்டது.

'என்ன எழுதுகிறாய்?' என்று கேட்டேன்.

இவன் பொய் சொல்லவில்லை, 'மற்றைப் பிள்ளைகளுக்குத் தருவதற்காக அஷ்டோத்தரம் காப்பி பண்ணுகிறேன் என்றான்.

'நான் தருகிற டிக்டேஷனை எழுதாமல் ஏன் இப்படிச் செய்கிறாய்?' என்று மிரட்டினேன். சந்தர்ப்பம் கிடைத்த சந்தோஷம் எனக்கு.'

'அதற்கு அவன், 'இந்தப்பாடம் எனக்கு ஏற்கனவே மனப்பாடம், நீங்கள் வேண்டுமானால் கேள்வி கேளுங்கள். தப்பாகப் பதில் சொன்னால் தண்டியுங்கள்.' என்று பணிந்தே பதில் சொன்னான் என் பழிவாங்குகிற புத்தியில் இந்த நியாயம் ஏறவில்லை. ஏறு பெஞ்சுமேலே' என்றேன். இப்போது நான்படுகிற அவஸ்தயைப் பார்த்தால்..........' O

சத்யா பெஞ்சுமேல் நின்றதால், ஆசிரியர் உட்கார்ந்த நாற்காலி அவரை விடவில்லை. சத்யாவே உட்காரச் சொன்ன பிறகுதான், நாற்காலி ஆசிரியரை விட்டது. அஷ்டோத்தர மந்திரமாகிய இறை நாமத்தின் மகிமையை விளக்குகின்றது இந்நிகழ்ச்சி: நாராயண நாமம் அன்று, பிரகலாதனின் அந்தண ஆசிரியரை நடுங்கச் செய்தது: அரசனிடம் ஓட வைத்தது.

இன்று, அஷ்டோத்தர மந்திரமாகிய இறைவன், திருப்பெயர் சத்ய சாயிபாபாவின் ஆசிரியரை நாற்காலியோடு ஒட்ட வைத்து விட்டது. அதனால் இறைவன் திரு நாமத்தை எதிர்ப்பவர்கள் யாரும், தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்பதை உணரலாம்.

O'ஸ்வாமி' முதற்பகுதி- ரா. கணபதி. பக்- 67.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனது மைந்தன் பிரகலாதன் சொன்ன திருப்பெயரின் பெருமைகள் அனைத்தும், தன் பெயரைச் சார்ந்ததே என்று நம்பிய தந்தை இரணியன். 'யாவது அவ் உரை? இயம்புதி, இயம்புதி' என்று ஆர்வம் பெருகக் கேட்டான், 'அந்த ஆர்வம், மைந்தன் சொன்னதைக் கேட்டபிறகு அனலாகப் பறக்கும், என்பது இரணியப் பேதைக்கு முன்கூட்டித் தெரியாது. உடல் உறவால்தான், தந்தை மைந்தன் என்ற தொடர்புடையவர்கள் இவர்கள் இருவரும்.' இதனைத்தான் பெரிதாகக்கருதினான் அசுரன்.

உள்ளத்து உணர்வால் இவர் இருவரும் ஒருவர்க்கு ஒருவர் மிக மிக மாறு பட்டவர்கள். உடல் உறவால் தந்தையாக இருந்தவன், உயிர் (உள்ளம்) உணர்வால் பகைவன் ஆகின்றான்.உடல் உறவால் மைந்தனாக இருந்தவன், பக்தன் ஆகின்றான், உடல் உறவு ஒழியும்: உயிர் உறவு ஒழிக்க ஒழியாது.

ஒழியும் உறவை, ஒழியாததாகக் கருதிச்செயல் படுகின்றான் தந்தை: ஒழிக்க ஒழியாத (உள்ளத்து உணர்வையே) உயிர் உறவையே உயர்வாகக்கருதிச் செயல் படுகின்றான் மைந்தன்...

அழிவதை அழியாத ஒன்றாக எண்ணுவது பேதையின் இயல்பு. உள்ளதை உள்ளபடி அறிவது மேதையின் இயல்பு. உடல் உறவு உருவத்தால் ஆனது. உயிர் உறவு அருவத்தால் ஆனது, உருவம் உடையது, எதுவாக இருந்தாலும் அழியும்: அருவம் என்றும் எங்கும் நிலையானது.

நில்லாதனவற்றை நிலையின என்று நம்பும் நிலையில் நிற்கின்றான் தந்தை இரணியன். அதனால் அவன் பேதை. நிலையானது எதுவோ அதனையே அழுத்தமாகப் பற்றிக் கொண்டு நிற்கின்றான் மைந்தன் பிரகலாதன். அதனால் இவன் மேதை.

மைந்தன் மேதையாக உயர்ந்துவிட்டான் என்பதையும், தந்தை, பேதையாகத் தாழ்ந்த நிலையில் நிற்கின்றான் என்பதையும் வெளிப்படுத்தும் முறையில் அமைகின்றது பிரகலாதன், இரணியன் முன்னிலையில் பேசும் பேச்சு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாராயண நாம மகிமை:

பிரகலாதப் பெருஞ்செல்வன், இரணிய அசுரனிடம் பேசிய பேச்சை ஐந்து கவிதைகளில் விவரிக்கின்றார் கம்பர். அந்தக் கவிதையின் பொருள்கள் பிரகலாதனின் மேதைத் தன்மையை தெளிவாக்கிக் காட்டுவன.

'காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்,
சேம வீடுஉறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபயன் உய்ப்பதும், ஒருவன்
நாமம் அன்னது கேள்! நமோ நாராய ணாய' (6230)

'அப்பா! நான் சொன்ன திருப்பெயர், உலக உயிர்கள் தமக்கு என்ன வேண்டும் என்று விரும்புகின்றனவோ அவைகள் அனைத்தையும் கொடுக்கும்: தாம் பெற்ற நற்பேறுகளை எல்லாம் ஆரத்துய்த்து அவற்றின் மேல் வைத்த பற்றை விட்ட பிறகு, அவ்வுயிர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கும் மோட்சத்தையும்(வீடு பேற்றையும்) தரும்: அதற்கும் மேலாக, அக்கினி வளர்த்து செய்கின்ற யாகத்தினால் கிடைக்கக்கூடிய பயனையும் தரும்.

அந்த ஒப்பற்ற இறைவன் திருநாமத்தைக்கேள். அது தான், 'நமோ நாராயணாய' என்பதாகும், என்று சொல்லி முடித்தான் ஞானநாயகன். நாராயண நாமம் தரும் பயன்களைக் கூறும் இந்தக் கவிதை,

'குலம்தரும்: செல்வம் தந்திடும்: அடியார்
படுதுய ராயின எல்லாம்,
நிலந்தரம் செய்யும்: நீள்விசும்பு அருளும்:
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும்; மற்றும் தந்திடும்: பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை, நான்கண்டு கொண்டேன்
நாராய ணா' என்னும் நாமம்'O

என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரத்தின் சாரமாக விளங்குகிறது என்னலாம்.

O பெரிய திருமொழி 1.1.9

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுருதி ஆதியில் தொடங்கும் போது சொல்லுவது 'ஓம்' என்ற பிரணவ மந்திரம். அதனை முதலில் சொல்லிக் காட்டி, அதன் விரிவாகிய 'நமோ நாராயணாய' நாமம் இது என்றும், அது இம்மையிலும் மறுமையிலும் தரக் கூடிய பயன்கள் இவை இவை என்றும் விரிவு படுத்திக் கூறினான் பக்தப் பிரகலாதன் :

எண்ணத் தக்க எட்டெழுத்து:

'அப்பா! நான் சொல்லும் திருப் பெயர். எட்டெழுத்துத் திருமந்திரம் என்று கூறப் பெறுவது. இந்தத் திருமந்திரம் மண்ணுலகம் முதல் பிரமலோகம் வரையுள்ள எல்லா உலகத்து உயிர்களின் உணர்வாக இருப்பது. அவ்வுயிர்கள் நிற்பன நடப்பனவாக (இயங்குதிணை, நிலைத்திணையாக) இருந்தாலும் இந்த எட்டெழுத்து மந்திரமே. அவைகளின் உணர்வாக இருக்கும். அது மட்டும்அல்ல! மனம் முதலிய கருவிகளைக் கடந்து தோன்றும் மெய்யுணர்வாக இருப்பதும் இந்த எட்டெழுத்தே?

'எல்லா உயிர்க்கும் மனம் முதலிய கருவிகளின் வழிப் பட்டு இயங்கும் உயிர் உணர்வாலும், மனம் முதலாகிய கருவிகளை ஒரு வழிப் படுத்துகின்ற இறைவன் திருவருளால் தோன்றுகின்ற உயிர் உணர்வின்மேம்பட்ட மெய்ஞ்ஞான உணர்வாலும் எண்ணத்தக்கது இந்தத் திரு எட்டெழுத்தே.' 'பொறி புலன்களுக்கு உட்பட்டுத் தோன்றுவது உயிர் உணர்வு, இது இம்மைக்கு உரியது. பொறி புலன்களைக் கடந்து தோன்றுவது மெய்யுணர்வு. இது மறுமைநலம் காணத்துடிப்பது. 'இம்மை நலம் நாடுவோரும், மறுமை நலம் நாடுவோரும் எண்ண வேண்டிய திருமந்திரம் இந்த எட்டெழுத்தே. இதனின் பிறிது இல்லை.'

மறந்தவர் இறந்தார்:

'உயிர் உணர்வுக்கும் மெய்யுணர்வுக்கும் நலம் பயப்பதாக அமைந்துள்ள இந்தத் திருமந்திரத்தை மறந்தவர் யாரோ, அவர் இறந்தவராகவே கருதப்பட வேண்டியவராவர்,? 'மக்கள், தேவர் யாராயிருப்பினும் அவர்களை உயிர் வாழச் செய்யும் இத்திருமந்திரத்தின் உட்பொருளை நுணுகியறிந்து அறிவித்தல் என்பது எளிதில் இயலாததாகும். உணர்தலும் அரிதாகும்.? 'புக்குக் காட்டுவது அரிது இது' என்பது கவிதைத் தொடர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்படியானால் இதன் உட்பொருளை அறிந்து சொல்பவர் யாரும் இல்லையா? கேட்டு உணர்பவர்கள் யாரும் இல்லையா? உண்டு.' 'பொதுவுறக் காண்பார் அறிந்து சொல்வர்: ஒக்க நோக்கினர் உணர்ந்து கேட்பர்.'

'ஓரிடத்தில். ஒருகாலத்தில், இருந்த படியே இருந்து. மூவிடத்தும் முக்காலத்தும் நடப்பதை, தமது யோகக் காட்சியால் வேற்றுமையறக்காணும் யோகிகள், இந்த எட்டெழுத்தின் உட்பொருளை நுணுகி ஆராய்ந்து சொல்லும் ஆற்றல் பெற்றவர்களாவார்கள். இவர்களைப் பொதுவுறக் காண்பார்' என்பர்.'

'அவர்கள் கூறும் மெய்ப் பொருளின் தகுதி அறிந்து, ஒன்றியிருந்து கேட்கும் நல்லியல்பு நிரம்பப் பெற்ற மாணாக்கர்கள், அதனை உணரும் ஆற்றல் பெற்றவர்களாவர். இவர்களை 'ஒக்க நோக்கினர்' என்பர்.'

'இவர் அல்லார் இதன் நிலை உணரார்.'

'அப்பா. ஒக்கநோக்கும் நோக்க உணர்வு

உம்மிடம் இல்லை, அதனால், நீர் இந்த எட்டெழுத்துத் திருமந்திரத்தின் பெருமையையும் உட்பொருளையும் உணர மாட்டீர்.' என்று ஓதாது உணர்ந்த உத்தமச் சிறுவன் தன்னுடைய தந்தைக்குக் கூறினான்.

வேதாந்த தேசிகர், பக்தி, ஞானம், யோகம் முதலியவற்றோடு இணைந்திருந்து, சீடர்களுக்குத் தீதில் நன்னெறி காட்டிய சிறந்த ஆச்சாரியப் பெருமகனார். இவர், திருஎட்டெழுத்தின் உட்பொருளை விளக்கிக்காட்டும்முறையில், 'திருமந்திரச்சுருக்கு' என்ற தமிழ்ப் பிரபந்தத்தை அருளியுள்ளார்கள். பத்துப் பாசுரங்களைக்கொண்டது இந்தப் பிரபந்தம். 'இறுதிப் பாசுரத்தில், இத்திருமந்திரம், 'பண்டுநான் மறையோர் காக்கும் மாநிதி' என்று சொல்கின்றார் தேசிகர். (மாநிதி–சிறந்த செல்வம்)

'கண்டவர் விள்ளார்: விள்ளக்கருதுவார் காண்கிலாரே? 'இதனை உணர்ந்தவர்கள் தகாதவர்களுக்குச் சொல்ல மாட்டார்கள்: தகாதவர்களுக்குச் சொல்லத்துணிந்தவர்கள் இதனை உள்ளவாறு அறிந்தவராக மாட்டார்.' என்ற தேசிகரது கருத்து இந்தஇடத்தில் சிந்தித்துப் பார்க்கத்தக்கதொன்றாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மங்கல மாற்றம் :

அப்பா! பேசுகின்ற ஒவ்வொருவரும் தமது பேச்சு (மாற்றம்) மங்கலமாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதுபோன்று கேட்பவர்களும் தமது காதில் மங்கலச் சொற்களே (மாற்றம்) விழவேண்டும் என்று விரும்புவார்கள்? (மாற்றம்-சொல்)

'சொல்பவர்கள், கேட்பவர்கள் இவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றத்துக்கு (சொல்லுக்கு) மங்கலமாக அமைவது இந்தத்திருமந்திரமே.' 'இந்த மந்திரம். மங்கலமாக இருப்பது மட்டும் அல்ல! மரக்கலமாகவும் இருக்கும். மங்கலம், மரக்கலமாவது எப்படி?' (மரக்கலம்-கப்பல்)

'பிறவி என்பது ஒருகடல்போன்றது. இந்தப்பிறவியாகிய கடலினின்றும் ஏறி அக்கரையாகிய வீடு பேற்றை அடைய வேண்டும் என்று விரும்பும் பக்தர்களுக்கு, இந்தத் திருமந்திரம் நல்ல கப்பலாக வந்து நின்று உதவும்.' 'சுழி நின்று ஏற்றும் நன்கலன்' கலன்-மரக்கலம். (கப்பல்)

'மந்திரம், மரக்கலமாக நின்று உதவுவது மட்டும் அல்ல! நன்கலனாக (நல்லஅணிகலன்-ஆபரணம்) அமைந்து யாவரையும் அழகு படுத்தும்' 'இவ்வாறு, மங்கலமாகவும், நன்கலனாகவும், அருங்கலனாகவும் அமைந்துள்ள இந்தத்திரு மந்திரம் வேதத்தின் முடிவில் தெளிவாகச் சொல்லப்படும் மெய்ப்பொருளாகயிருப்பது. ஆகவே, இதனை விட சிறந்தது வேறு ஒன்றும் இல்லை' என்று கூறினான் அறிஞரின் அறிஞன்.

உறுதி :

ஞான நாயகன் தனது தந்தைக்கு இறுதியாகச் சொன்ன உறுதி மொழி.

'உன் உயிர்க்கும் என் உயிர்க்கும், இவ்உல கத்தின் உள்ள
மன் உயிர்க்கும்' ஈது உறுதி, என்று உணர்வுற மதித்துச்
சொன்னது இப்பெயர் என்றனன் அறிஞரின் தூயோன்
மின் உயிர்க்கும் வேல், இரணியன் தழல்எழ விழித்தான்'
(6240)

மேதையாகிய மைந்தன் மொழிந்ததையும், பேதையாகிய தாதை (தந்தை) விழித்ததையும் கூறுகின்றது இந்தக் கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்பா! இந்தத்திருமந்திரம், நன்றாக. எல்லாவற்றின் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து தெளிந்த (உணர்வுற மதித்து) பிறகு நான் சொன்னதாகும்: இது நன்மை பயப்பது. யார் யாருக்கு?'

'உனது உயிர்க்கும், எனது உயிர்க்கும், இந்த உலகத்தில் உள்ள எல்லா உயிர்க்கும், வேறுபாடு இல்லாமல் நன்மை தரக் கூடியது. (உறுதி - நன்மை) இந்தத் திருப்பெயர்? என்று கூறினான். யார்? 'அறிஞரின் தூயோன்? அறிஞர்கள் என்று மதிக்கப்படுவர் யாரோ. அவர்கள் எல்லோரைக் காட்டிலும் மிக மிகத் தூய்மையானவன். அவன் கூற்று இது.

உயிர்கண்ணுக்குத் தெரியாதது: அதற்கு வேண்டிய நன்மையும் வெளியில் தெரியாதது: அந்த நன்மையைத்தரும் திருப்பெயருக்கு உரிய இறைவனும்,புறக்கண்களுக்குப் புலனா காதவன். இதனைத் தனது மெய்யுணர்வால் உணர்ந்து உரைத்த பிரகலாதன் அறிஞரின் தூயோன்.

தூயோன் உரையைத்தனக்குத் தீமை பயப்பதாக எவன் கருதுகின்றானோ, அவன் எத்தகையவனாகயிருப்பான்? தீயோனாகத்தான் இருப்பான்.

மைந்தன் தூயோன். அவன், தந்தை தீயோன். ஏன்? தூய உரையைக் கேட்டு கோபியானான். தீயது. தூயதை ஏற்குமா? மைந்தனின் தூய மாற்றத்தால் (சொல்) தந்தை தீய சீற்றம் உற்றானே அன்றி மனமாற்றம் பெற்றான் இல்லை. சீற்றம்-கோபம்)

'மின் உயிர்க்கும் வேல் இரணியன் தழல்எழ விழித் தான்' என்பது கவிதையின் ஈற்றடி, இரணியன் கையில் உள்ள வேல், எப்போதும் மின்னல் போன்றஒளியை வீசிக் கொண்டிருக்கும். இப்போது, அவன் முகத்தில் உள்ள கண்கள், சினமாகிய கனலை வீசிக்கொண்டிருக்கின்றது. (சினம்-கோபம்: கனல்-நெருப்பு: தழல்-கனல்.) இந்தக் கோபக் கனலை யார் மேல் வீசப் போகிறான் இந்தத் தீயோன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது வரை, எவன் ஒருவனை, தனது மடிமேல் வைத்து மார்புறத் தழுவி, அன்பால் அணைத்துக் கொண்டிருந்தானோ அந்த மைந்தன் மேல்தான் தனதுகோபத்தீயை வீசப் போகின்றான் இந்த இரணியத் தீயோன். தந்தையும் மைந்தனும் இப்பொழுது இருக்கும் நிலையைத் தன் மனக்கண்ணால் கண்டு, அதனைத் தான் கண்டவாறே சொல்கின்றார் திருமங்கை ஆழ்வார்.

'பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயிலோர் ஆயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போத, ஆங்கு அதனுக்கு:
ஒன்றும்ஓர் பொறுப்பில னாகி,
பிள்ளையைச் சீறி, வெகுண்டுதூண் புடைப்ப,
பிறைஎயிற்று அனல் விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை,
திருவல்லிக் கேணிக் கண்டேனே.' ※

என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரம், பக்தனாகவும் பகைவனாகவும் மாறிய மைந்தன் தந்தை செயலைத் தெரிவிப்பதற்குத் தெள்ளிய வடிவமாக வந்துள்ளது.

தீயோனின் கோபத்தீ:

தூயோனாகிய மைந்தனின் பேச்சைக் கேட்ட தீயோனாகிய தந்தை, முதலில் தனது கோபத்தை, செயலாக மைந்தன் பால் காட்டினான். இரணியனின் கோபம், மைந்தனை அணைத்திருந்த கைகளை அகற்றியது: மடியில் இருந்தவனைப் பிடித்து இழுத்துக் கீழே நிறுத்தியது: அனல் பறக்க அவன் மேல் பார்வையைச் செலுத்தியது. பிறகு அந்தக் கோபம், சொல்லுருவமாக வெளிவருகின்றது. அதனைப் பத்துக்கவிதைகளில் விரிவு படுத்திக் காட்டுகின்றார் கம்பர்.

'இற்றை நாள்வரை யான்உள நாள்முதல், இப்பேர்
சொற்ற நாவையும் கருதிய மனத்தையும் சுடும்என்
ஒற்றை ஆணை:மற்று யார்உனக்கு இப்பெயர் உரைத்தார்?
கற்றது ஆரொடு? சொல்லுதி விரைந்து' எனக் கனன்றான்
(6235)

※ பெரிய திருமொழி. 2.3.8. போத-வந்த: சீறி-கோபித்து: வெகுண்டு- கோபத்தோடு: புடைப்ப- தட்ட: எயிறு- பற்கள்: அனல்- நெருப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நீ பேதை! (அறிவிலி) நான் சொல்வதைக் கவனமாகக் கேள். எந்த ஒரு பெயர். உயிர்களால் சொல்லவும், கருதவும் உணரவும் உரியது என்று கூறினாயோ, அந்தப் பெயரைச் சொன்ன நாக்கையும், கருதிய மனத்தையும் சுட்டு எரித்து விடும் எனது ஆணை. (கட்டளை) அது ஒப்பற்றது. இந்த ஆணை எப்பொழுதிருந்து செயல்பட்டுவருகின்றது தெரியுமா?'

'நான், உண்டான நாள் முதல், இன்று வரை, எனது ஆணை அகில உலகத்திலும் செலுத்தப் பட்டுவருகின்றது. அப்படியிருக்க, இப்படிச் சொல்வதற்கு இந்தப் பெயரை யார் உனக்குக் கூறினார்கள்? யாரிடத்திலிருந்து இதனைக் கற்றாய். உடனே சொல்.'

'கற்றது ஆரொடு? சொல்லுதி விரைந்து!' எனக் கனன்றான்'

உலகில் எங்கும் என்றும் எந்த ஒரு திருப்பெயர், நெஞ்சால் நினைக்கவும், வாயால் சொல்லவும் தக்கதாக யிருக்கிறதோ, அது, நினைக்கவும், சொல்லவும் தகாததாகக் கருதப்படுகின்றது இரணியனால்.

இந்தத் தகாத சொல்லை, யாரிடமாவது இருந்து இவன் கற்றிருக்கவேண்டும். கற்காமல் இது இவனுக்குத் தெரிய முடியாது. அதனால் 'கற்றது யாரொடு?' என்று கனன்றான் கனகன். (இரணியன்)

'மைந்தன் ஓதாது உணர்ந்த மேதை,' என்பதை பேதையாகிய தாதை (தந்தை) எவ்வாறு உணர்வான்? அதனால், 'யார் உனக்கு இப்பெயர் உரைத்தார்?' என்று, கோப உணர்வு, கேள்வி வடிவாக வெளிவந்தது இந்தக் கொடியோனிடம்.

அந்தப் பெயர் 'நினைக்கவே தகாதது' என்பதை 'கருதிய மனத்தையும் சுடும் என் ஒற்றை ஆணை' என்று இரணியன் இயம்பியதன்மூலம் தெரிவிக்கின்றான். 'சுடும், என்பதால், இவனுக்கு விருப்பம் இல்லாதது வெளிவந்தால்' கோபம் நெருப்பாகத்தான் வெளியேறும் என்று தெரிகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'யாராயிருப்பினும் அவர் நினைவது என் இருகழலே! அவர் ஓதுவது என் பெயரே! மைந்த. நீ யாரிடை அறிந்தாய்?' அடுத்து அவன் கேட்ட கேள்வி. பிரகலாதன் உரைத்த பெயர், சொல்லத் தகாதது ஏன்? இதற்குக் காரணம் கூறுகின்றான் இரணியன்.

'எனது தம்பி, இரணியாட்சன் என்ற பெயருடையவன். அவன், தனது 'வயிற்றினுள் உலகுஏழினோடு ஏழையும் வைக்கும்.' ஆற்றல் பெற்றவன். அவனை, நீ சொல்லும் பெயருக்கு உரியவன், பன்றி உருவம் எடுத்து, தனது பல்லினாலேயே கொன்று விட்டான்.' (ஏனம் ஒன்று ஆகி எயிற்றினால் எறிந்து இன் உயிர் உண்டவன்) (ஏனம்-பன்றி எயிறு-பல்).

'அவன், நமது குலத்துப் பகைவன். பகைவன் பெயரை நாம் சொல்லலாமா?' மேலும், அப்பெயர் சொல்லத்தகாதது என்பதற்கும் தனது பெயரே எல்லோராலும் சொல்லத்தக்கது என்பதற்கும், அவன் அறிவால் அறிந்த காரணத்தை,எடுத்துக் கூறுகின்றான் இரணியன்.

ஒரு பொருளின் உண்மை நிலையை அறிவதற்கு இரண்டு அளவைகள் உண்டு, ஒன்று காட்சி அளவை. அதாவது பிரத்தியட்சம். மற்றொன்று. கருதல் அளவை. அதாவது அனுமானம். காட்சியை, 'கரும்ம்' என்றும்: கருதலை காரணம் என்றும் குறிக்கப்படுகின்றன கவிதையில்.

'காட்சி அளவையால், (பிரத்தியட்சமாக) ஒரு பொருளின் நிலையைக் கண்டறிந்து உண்மையைத் தெரிந்து கொண்ட பிறகு, கருதல் அளவைக்குச் செல்ல வேண்டியது இல்லையே' என்பது இரணியன் கட்சி.

'படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் என்னால்தான் நடைபெறுகின்றன. அதனால் நானே, அகில உலகத்துக்கும் தலைவன். இதனை, தேவர், மக்கள் முதலிய அனைவரும் தெரிந்துகொண்டு, தலைவனாகிய என்னையே தெய்வமாகப்போற்றி, என் பெயரைச்சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.' 'இதனைக்காட்சி அளவையால் (பிரத்தியட்சமாக) நீ காண்கின்றாய். பிரத்தியட்சமாகத் தெரிவதை ஒதுக்கிவிட்டு. அனுமானமாக நீ வேறு, இறைவனைத்தேட முயல்வது எதற்கு?'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்த உலகத்துத் தலைவன் நானேஎன்பதை, இங்கு நடக்கும் செயல்களைக் கொண்டு, நேராகக் காண்கின்றாய். இது உண்மையல்ல என்று தள்ளுகின்றாய். கண்ணுக்குத் தெரியாத ஒன்று, அனுமான அளவையால், உள்ளது என்று ஏற்றுக் கொள்ளுகின்றாய்.

'நீ நேரில் காண்பது காரியத்தின்விளைவு: அனுமானத்தால் காண விரும்புவது காரணப் பொருள்.'

'காரியத்தைக் காட்டிலும் காரணம் உயர்ந்தது என்று எந்த வேதம் சொல்கின்றது?'

'கருமத்தால் அன்றிக் காரணத்தால் உள்ள காட்சி
திருவிலி! மற்றுஇது எம்மறைப் பொருள்எனத் தெரிந்தாய்.'

என்பது இரணியன் கேள்வியாக வந்த கவிதைப்பகுதி

'திருவிலி' என்று தனது மைந்தனை அழைக்கின்றான் இரணியன். 'செல்வத்தை இழந்தவனே' என்பது இதன் பொருள்.

'எனது அரசச் செல்வத்தை உனக்குக் கொடுக்க வேண்டும்: அதற்கு உன்னைத் தகுதியுடையவனாக ஆக்குவதற்கு. உன்னைக்கல்வி கற்கச் செய்தேன். அதனை மறந்து, நீ, நம் குலப் பகைவன் பெயரைச்சொல்லி, அரசச் செல்வம் இல்லாதவனாக ஆகப் போகின்றாய், என்றகுறிப்பு. இத் தொடரில் அடங்கி உள்ளது.

தானே, உலகத்தலைமை ஏற்பதற்கு ஏற்ற தகுதி உடையவன் என்பதை, வேதத்தின் மூலமாகவும் நிரூபித்துக் காட்ட முயல்கின்றான் இரணியன்.

'ஆதி அந்தங்கள் இதனின்மற்று இல்லைபேர் உலகில்'
வேதம் எங்கனம் அங்கனம் அவைசொன்ன விதியால்
கோதுஇல் நல்வினை செய்தவர் உயர்குவர் குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர்: இதுமெய்ம்மை தெரியின் O

ஒருவன் செல்வாக்குடன் உயர்ந்து வாழ்வதற்கும்,வாழ்க்கையில் தாழ்ந்து போவதற்கும் உரிய காரணம் இதில் காட்டப்பட்டுள்ளது.

O க. ராமாயணம் 6241. ஆதி-முதல்: அந்தம்-முடிவு: விதி-முறை: கோது-குற்றம்: தீது-தீமை: மெய்ம்மை-உண்மை: தெரியின்-ஆராய்ந்தால்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வேதங்கள் எவ்வாறு அறிவுரை கூறுகின்றனவோ, அவ்வாறே குற்றம் இல்லாத தவம் முதலிய நல்வினையைச் செய்தவர்கள் வாழ்க்கையில் உயர்வு பெறுவார்கள்: அந்த முறைக்கு மாறாக தீயசெயலைச் செய்தவர்கள், தாங்கள், இருந்த நிலையிலிருந்து தாழ்ந்து விடுவார்கள்? இந்தப்பெரிய உலகத்தில், அறிவு. ஆண்மை, ஆற்றல், பெருமை திறமை முதலியவற்றால் மேலும் மேலும் வாழ்க்கையில் உயர்வு பெற்றவர்கள். வேதத்தில் கூறிய முறைப்படி நல்வினை செய்தவர்களே. வேதத்தின் முதலிலிருந்து முடிவுவரை ஆராய்ந்தால் இதுதான் உண்மை என்று உணரலாம். 'ஒருவரது உயர்வையும் தாழ்வையும் வைத்து. அவர்கள் நல்வினை செய்தவர்களா? தீயதைச் செய்தவர்களா? என்பதை அறியலாம்?

'நான், உலகத் தலைமையாகிய உயர்வைப் பெற்று விளங்குவதற்குத் காரணம், வேதத்தில் கூறப்பட்ட முறையான நல்வினையைச் செய்ததே ஆகும். 'யான் தவம் இயற்றி, பொய்இல் நாயகம் பூண்டேன்' இதை யார் மறுக்க முடியும்? நீதான் மறுத்துப் பேசுகின்றாய்!

'பேதைப் பிள்ளைநீ பிழைத்தது பொறுத்தனென்: பெயர்த்தும்
ஏதுஇல் வார்த்தைகள் இனையன விளம்பலை: முனிவன்
யாது சொல்லினன் அவைஅவை இதம்என எண்ணி
ஓதி:போதி' என்று உரைத்தனன் உலகுஎலாம் உயர்ந்தோன்?

'நான் சொன்ன காரண காரியங்களை,நீகுழந்தையாக இருப்பதால் அறிந்து கொள்ளவில்லை. நீ தவறாகப் பேசியதைப் பொறுத்துக் கொண்டு விட்டேன். உன் தவறுதலுக்கு இப்போது தண்டனை இல்லை. இனிமேல் இத்தகைய குற்றமான வார்த்தைகளைப் பேசாதே. ஆசிரியன் என்ன சொல்கின்றானோ, அதையே, உனக்கு நல்லதென்று நினைத்து, ஓதுவாய். பள்ளிக்குச் செல்' என்று சொன்னான்

சொன்னவன் யார்? உலகு எலாம் உயர்ந்தோன் - உலகங்கள் எங்கும் உயர்வு பெற்று விளங்குபவன் - இரணியன். பேதைமை- நல்லது எது? தீயதுஎது? என்று அறியும் அறிவு அற்றமை: ஏது இல்வார்த்தை- பகைவனைப் போற்றிப் புகழும் புகழ்மொழிகள் ஏதின்மை- பகைமை. ஏது இல்வார்த்தை' என்பதற்கு, 'எந்தப் பயனும் இல்லாத வீணான வார்த்தைகள் என்றும் பொருள் கொள்ளலாம்.

கம்பராமாயணம். 6244, பேதைப்பிள்ளை- அறிவற்ற குழந்தை பிழைத்தது- தவறாகச் சொன்னது: ஏது- குற்றம்: விளம்பலை- சொல்லாதே: இதம்- நன்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

7

கருமமும் பயனும்

கருமமும் கரும பலனும் ஆகிய காரணன் தன்னை
திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத் தேவ பிரானை
ஒருமை மனத்தினுள் வைத்து உள்ளம் குழைந்து எழுந்து ஆடி
பெருமையும் நாணும் தவிர்ந்து பிதற்றுமின் பேதைமை
தீர்ந்தே

இரணியன் கொள்கை:

'கருமம் செய்தால், கருமத்துக்கு ஏற்ற பலன், தானே வந்து கிட்டும்: வேதத்தில் சொல்லப்பட்ட, யாகம், தவம் முதலிய நற்கருமங்களைச் செய்ததால், உலகத் தலைமைப் பதவியாகிய பயன் வந்து கிட்டியது. இதை உணராத நிலையே பேதைமை என்பது இரணியனின் கொள்கை.

'கருமம் செய்தாலும், கருமத்துக்கு ஏற்ற பயனைக் கொடுப்பதற்கு ஒருவன் இருக்க வேண்டும். அந்த ஒருவன் தான், அவரவர்கள் செய்த கருமத்துக்கு உரியதை ஏற்றத் தாழ்வு இல்லாமல் - நடுநிலையோடு கொடுப்பான். செய்த கரும பலனை அனுபவிக்கச் செய்வதற்கு அந்த ஒருவனே காரணன் ஆவான். அவன்தான் முதல்வன்: தலைவன், இறைவன். இதை உணராத நிலையே பேதைமை' என்பது பிரகலாதன் கொள்கை.

கருமத்தால் கிட்டும் பயனைமட்டும் எடுத்துக்கொண்டு உண்மையைக் காண முயல்வது காட்சி அளவை. கருமப் பயனைக் கொடுக்கும் காரணனைக் காண, காட்ட உதவுவது அனுமான அளவை. காட்சி அளவையோடு நிற்பவன் தந்தை. அந்த அளவையைக்கடந்து அனுமான அளவையால் உண்மையை உணர்த்துபவன் அறிஞரின் அறிஞனாகிய மைந்தன்.

காட்சி அளவைக்கு ஆதாரமாக இருப்பது வேதத்தின் கர்ம காண்டம். அனுமான அளவைக்கு அடிப்படையாக அமைவது வேதத்தின் ஞான காண்டம். வேத அந்த மாகிய (முடிவு) வேதாந்தம் வேதம் கற்றவன் தந்தை: வேதாந்தம் கண்டவன் மைந்தன்.

திருவாய்மொழி 3.5.10. வண்ணம்-நிறம்: குழைந்து-நெகிழ்ந்து: தவிர்ந்து-விட்டு: பேதைமை-அறிவின்மை: பிதற்று மின்-பாடுமின்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதாந்தம் கண்ட பிரகலாதன், வேதம் கற்ற இரணியனிடம் பேசத் தொடங்குகின்றான். அப்பேச்சில் தந்தையின் காட்சி அளவைக் கொள்கை மறுக்கப்படுகிறது. மைந்தனின் அனுமான அளவைக் கொள்கை நிலைநாட்டப் படுகின்றது.

சொல்பவன் மேதை: கேட்பவன் பேதை: அறிவிப்பவன் அடியான்: அறிய வேண்டியவன் கொடியான். உணர்த்துபவன் தூயோன்: உணரவேண்டியவன் தீயோன். பிரகலாதன் விரிவாக எடுத்துரைக்கும் தத்துவப்பொருளை விளக்கிக் காட்டுவதற்கு, கவிச் சக்கரவர்த்தி அமைத்துக்கொண்ட கவிதைகள் இருபத்திரண்டு.

இந்தக் கவிதைகள் அரிதின் உணரத்தக்க இந்திய தத்துவ ஞானக் கருத்துக்களை எளிமையாக்கித் தெளிவுபடுத்துவன: அந்த எளிமையான தெளிவுக்கு, ஆழ்வார்களது பாசுரக் கருத்துக்களை ஆதாரமாக்கிக் கொண்டுள்ளன: கம்பநாட்டாழ்வார் பக்திப் பெரு வெள்ளத்தில் மூழ்கிக் களித்த எவ்வளவு பெரிய தத்துவ ஞானக் கவிஞர் என்பதையும் புலப்படுத்துவன.

கரையும் பிரையும் :

"உரைஉளது உணர்த்துவது: உணர்ந்து கோடியேல்;
விரைஉள அலங்கலாய்! வேத வேள்வியின்
கரைஉளது; யாவரும் கற்கும் கல்வியின்
பிரைஉளது" என்பது மைந்தன் பேசினான்" (6245)

'மணம் நிறைந்த மாலையை அணிந்தவனே! நான் கூறுவதனை, நீ உணர்ந்து ஏற்றுக் கொள்வதாக இருந்தால், உனக்கு என்னால் உணர்த்துவதற்கு உரிய வார்த்தை (உரை) உள்ளது. அந்த வார்த்தை (உரை) நீ கற்ற வேதத்துக்கும், நீ செய்த யாகத்துக்கும் முடிந்த எல்லையாக (கரை) அமைவது: யாவராலும் கற்கப் படும் கல்வியாகிய பாலுக்கு உறை மோர்த் துளியாக (பிரை) அமைவது..

'இந்த உண்மையை, பிரகலாதனாகிய மைந்தன் தந்தையாகிய இரணியனுக்கு எடுத்துரைத்தான்.' என்பது இந்தக் கவிதையின் பொருள்.

※ உரை-வார்த்தை: கோடி-கொள்ளுதல்: விரை-மணம்: (வாசனை) அலங்கல்-மாலை: வேள்வி-யாகம்: கரை-எல்லை: பிரை-உறை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரகலாதனின் தத்துவப்பேச்சு, வேள்விப் பயனையும், கல்விப் பயனையும் இன்னதுதான் என்பதைத் தெளிவாக்கும் நிலையில் அமைவது. ஆனால் அதனை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற மனம், மன்னனுக்கு வரவேண்டும். அவன் (இரணியன்) மார்பில் புரளும் மாலையில் **மணம்** உண்டு. ஆனால், அவனுக்கு, மைந்தன் பேச்சைக்கேட்டு உணரும் **மனம்**தான் இல்லை. 'விரை உள அலங்கலாய்' என்ற தொடர் இந்தக் குறிப்பை அடக்கிக் கொண்டுள்ளது.

வித்தும் விளைவும் :

"வித்துஇன்றி விளைவதுஒன்று இல்லை: வேந்த! நின்
பித்துஇன்றி உணர்தியேல் அளவைப் பெய்குவேன்:
உய்த்துஒன்றும் ஒழிவு இன்றி உணர்தற் பாற்று" எனா
கைத்துஒன்று நெல்லிஅம் கனியின் காண்டியால்? (6246)

இரணியன் கொள்கை, 'வெளியில் தெரியும் விளைவைப் பார்த்து பொருளுண்மையை உணர்தல்? 'வெளியில் காணப் படும் விளைவுக்குக் காரணமாக அமைவது ஒன்று இருக்க வேண்டும். அது வெளியில் தெரியாமல் இருக்கும்: அனுமானத் தால் காணவேண்டியது.' என்பது பிரகலாதன் கொள்கை.

தனது கொள்கையை,வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை? என்ற உவமையின் மூலம் விளக்கத் தொடங்கு கின்றான் தூயோன். விதையில்லாமல் முளைக்கக்கூடிய தாவரவகை ஏதேனும் உண்டா? இல்லையே! அதுபோன்று தான். இவ்வுலகம் தோன்றி நிலை பெறுவதற்குக் காரணமாக ஒரு முழுமுதற் பொருள் இருந்தேயாக வேண்டும்.

'விளைவு உண்டு, அதற்கு விதை இல்லை' என்று எண்ணுவது மயக்க உணர்வு. (பித்து) இது இருப்பது இரணிய னிடம். 'இந்த மயக்க உணர்வு இல்லாமல் கேட்டால், இவ் உலகம் தோன்றுவதற்கு ஆதாரமாக இருக்கும் முழு முதற் பொருளை உணர்வதற்குரிய பிரமாணத்தினை உனது மனத் தில் பதியும்படி சொல்வேன்.'

'அதனைக் கேட்டபிறகு, அந்த மெய்ப்பொருள்தான், இடையீடு இல்லாமல், தியானித்து உணரத்தக்க சிறப்புடை யது என்ற உண்மையை, உள்ளங்கை நெல்லிக் கனிபோல் காண்பாய்.'

வித்து-விதை: பித்து-பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள் (மயக்க உணர்வு) அளவு-பொருளுண்மை துணிவதற்குக்கருவியாகிய பிரமாணம்: கைத்து-கையகத்தது: ஒன்றுதல்-பொருந்துதல்: கனி-பழம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று மைந்தன் தந்தைக்கு எடுத்துரைத்தான். ஒருபொருளை நேராகப் பார்த்து உறுதியாக உணரும் முறைக்கு, உவமையாக, உள்ளங்கை நெல்லிக் கனியைக் கூறுதல் கவிஞர்களின் இயல்பு, 'அங்கையுள் நெல்லி யதன்பயம்' என்ற புறப்பொருள் வெண்பாமாலைத் தொடர் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. (பு. வெ. கரந்தை. வெ. 15)

தங்குதலும் தாங்குதலும் :

கண்ணால் காணப்படும் காட்சி அளவைக்குரிய எந்தப் பொருளாகயிருந்தாலும், ஏதாவது ஒன்றன் மேல் தங்கியிருக்கும். அல்லது ஒன்றனைத் தாங்கிக் கொண்டிருக்கும். ஆனால், ஒரேசமயத்தில், எந்தப் பொருளின் மேல் தங்கியிருக்கிறதோ, அதனையே தாங்கிக் கொண்டிருக்கும் நிலையினை உலகப் பொருள் எதனிடத்திலும் காண இயலாது. இந்த இரண்டன் செயலுக்கும் உரிய ஒன்றை அனுமான அளவையால் தான் காண இயலும். அத்தகைய அனுமானத்துக்குரிய பொருள்தான் பரம்பொருள். (பரம்-மேலான) மேலான பொருள் அனுமான அளவைக்குரியது. காட்சி அளவைக்குரியது கீழான பொருள்.

இந்தக் கீழான பொருளிலேயே நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கும் கீழோனாகிய தந்தைக்கு, மேலோனாக ஓங்கிக்கொண்டிருக்கும் மைந்தன், இந்தத் தத்துவமாக விளங்கும் இறைநிலையை மேலும் விவரிக்க முற்படுகின்றான்.

'தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின்இலன், முன்இலன் ஒருவன் பேர்கிலான்:
தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ' (6247)

தன்னை ஒத்து நிற்பவர் யாரும் இல்லை என்று சொல்லப்படும் அளவுக்கு, உயர்வற உயர்ந்து நிற்பவன் இறைவன் அவன், தன்னுள்ளேயிருந்து, எல்லா உலகங்களையும் வெளியில் தோற்றுவிப்பான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியில் தோற்றுவித்த அந்த உலக உயிரினங்களைக் காப்பதற்காக, அவைகளைத் தன் பொறுப்பில், தன்னிடத்தில் தங்கவைத்துக் கொள்வான். அத்தோடு நில்லாமல், அவைகளின் இயக்கத்திற்காக, ஒவ்வொரு உலகப் பொருள்களினுள்ளும், அவைகளுக்குத் தெரியாமல், தங்கிக் கொள்வான் அந்த இறைவன்.

தனக்கு மூலமாக எதுவும் இல்லாதவன். (முன் இலன்)
தனக்கு இறுதியாக எதுவும் இல்லாதவன் (பின் இலன்)

'மூலமே இல்லா முதல்வனே!' என்பது இராமபிரானைப் பார்த்து கவந்தன் துதித்த துதி.

'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே'!

என்ற திருவாசகக் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

எல்லாப் பொருள்களையும், தானே படைத்தும், அவைகளைத் தன்னுள்ளே தங்கவைத்தும், தன்னை அவற்றுள் தங்கவைத்துக் கொண்டும், தனக்கு முன்னும், பின்னும் எதுவும் இல்லையாக்கிக் கொண்டும், (தானே ஆதியும் அந்தமும்) இந்த இயல்பினின்றும் சிறிதும் மாறுபடாது இருப்பதும் ஆகிய இவைகள், அந்த இறைவனது பழம்பெரும் நிலைகள்.

இத்தகைய இயல்புடைய பரம் பொருளின் தன்மை ஒருவரால் அறுதியிட்டுக்கூறும் எளிமை உடையதோ? (தொல் நிலை ஒருவரால் துணியற்பாலதோ)

'ஒருவரால் துணியற் பாலதோ' என்று கம்ப நாட்டாழ்வார் சொல்வதற்குக் காரணம், நம்மாழ்வாரே, 'அறிகிலேன்' என்று சொல்லியிருப்பதுதான். அந்த ஆழ்வாரின் பாசுரம் தான், இந்த அழ்வாரின் கவிதையாக உருவெடுத்துள்ளது என்பதை, இரண்டனையும் கற்பார் உணர்வர்.

'அறிகிலேன், தன்னுள் அனைத்துலகும் நிற்க,
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும்பிரான்:
வெறிகமழ் சோலைத் தென்காட்கரை என்னப்பன்,
சிறியஎன் ஆருயிர் உண்ட திருவருளே.'

திருவாய்மொழி 9. 6. 4. நெறிமையால் - முறைதப்பாதவாறு: பிரான் - உபகாரகன்: வெறி-வாசனை: தென்காட்கரை - மலை நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தன்னுள்ளே அனைத்து உலகும் நிற்க, தானும் அவற்றுள் நிற்கும் பிரான், என்னுள்ளும் தங்கி, சிறிய என் ஆருயிரை உண்டு விட்டான் இது அவனது திருவருள். இதை நான் அறியவில்லை.' என்று நம்மாழ்வார் தமது அனுபவத்தை, எடுத்துரைத்தார். அதனால்தான், 'தொல் நிலை ஒருவரால் துணியற்பாலதோ' என்றார் கம்பர். நம்மாழ்வாரின் ஆருயிரை, பிரானாகவும் அப்பனாகவும் உள்ள நாராயணன் உண்டான். (அழித்தான்) அது, அவனது திருவருள் அதனால் இறைமயமாக ஆனார் ஆழ்வார்.

இந்த ஆழ்வாரின் பாசுரம், கவிச்சக்கரவர்த்தியின் கருத்தைக் கவர்ந்தது. உண்டது. அதனால் இவரும் ஆழ்வார்மயமாகிக் கம்பநாட்டாழ்வாராக நின்று இந்தக் கவிதையைச் செய்துள்ளார் என்று எண்ணவேண்டியுள்ளது. எல்லாப் பொருள்களினுள்ளும் தங்கிக் கொண்டும், அவைகளை, தான் தாங்கிக்கொண்டும் இருக்கும் தத்துவப் பொருளை அடக்கிக் கொண்டிருக்கும் திருப்பெயர்தான் 'நாராயணன்' என்பதாகும்.

நாரம் + அயணம்- நாரம்- உலகம்- அயணம். தங்குதல் உலகத்தில் தங்குதல். தன்னுள் உலகம் தங்குதல்.

தங்கியும் தாங்கியும் நிற்கும் இறைவன் நிலையை, 'உடல் மிசை உயிர்' என்ற உவமையின் மூலம் விளக்குகின்றார் நம்மாழ்வார். உயிர் கண்ணுக்குத் தெரியாதது. அது, கண்ணுக்குத் தெரியும் உடலில் தங்கியுள்ளது அந்த உயிர் உடலைத் தாங்கிக் கொண்டும் உள்ளது. அதனால் தான், உடல் இயங்கிக் கொண்டிருக்கிறது. தன்னைத் தாங்குவது எதுவும் இல்லை என்றால் அந்தப் பொருள் தானாகவே கீழே விழுந்து விடும்; செயலற்றுக் கிடக்கும் உடல் கீழே விழாமல் இயங்கிக் கொண்டிருப்பதாலேயே, இதனை உயிர் தாங்கிக் கொண்டிருப்பதை உணரலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் பரந்துளன்' என்ற திருவாய்மொழிப் பாசுரத் தொடர், நாராயண நாமப் பொருளை நன்கு தெளிவாக்குகின்றது.

உடல் முழுவதும் உயிர் நிறைந்திருக்கிறது: அதே சமயம், வெளியில் தெரியாமல் மறைந்தும் இருக்கிறது. அது போன்று, இறைவனும், உலகம் முழுவதும் நிறைந்தும்(பரந்து) வெளிப்புறத்தில் தெரியாமல் மறைந்தும் இருக்கின்றான். நிறைவும் மறைவும் கொண்டதுதான், எங்கும் என்றும் இருக்கும். இதுதான் நிலையானது: அழிவற்றது.

இந்த இறைத்தத்துவத்தை,நற்றிணையில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடலில் காணலாம்.

'மாநிலம், சேவடி யாகத்தூநீர்,
....
இயன்ற எல்லாம் பயின்று, அகத்துஅடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதுஅற விளங்கிய திகிரி யோனே.' O

இப்பாடல், உலகத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள சக்கராயுதத்தைஉடைய நாராயணனே வேதமுதல்வன் என்று கூறுகின்றது. இந்த முதல்வனே அழிவற்றவன்: நிலையானவன்; இறைவன்.

நில்லாதனவற்றை நிலையின என்று உணர்வது மயக்க உணர்வு. இந்த உணர்வுதான் 'பித்து' என்று சொல்லப்பட்டது. அதனால்தான் 'பித்து இன்றி உணர்தியேல்' இறைத் தத்துவத்தை உணர்த்துவேன்' என்று பேச்சைத் தொடங்கினான் பிரகலாதச் செல்வன்.

இறைவனின் தனிநிலையை உணர்தற்கு உரியவர் யார் என்பதை, பிரகலாதன், மேலும் தெளிவாகப் புலப்படுத்துகின்றான்.

சாங்கியம், யோகம் என்றுஇரண்டு தன்மைய
வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன:
ஆங்குஅவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ? (6248)

O நற்றிணை-1. தீது - கெடுதல்: திகிரியோன் - சக்கராயுதத்தை உடைய திருமால்: வேத முதல்வன் - வேதத்தில் கூறப்பட்ட இறைவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உலகப் பொருள்கள் பலவாக மிகுந்துள்ளன. அந்தப் பொருள்களை எல்லாம் வெவ்வேறாகப் பகுத்துப் பார்த்து அதன் உண்மைத் தன்மையை உணர்தற்கு இரண்டு நெறிகள் உள்ளன. ஒன்றுக்கு, 'சாங்கியம்' என்று பெயர்: மற்றொன்றுக்கு 'யோகம்' என்று பெயர்.' 'சாங்கிய நெறியையும், யோக நெறியையும் உள்ளவாறு உணர்ந்து தெளிந்தவர் தான், வேத முதல்வனது உயர்வற உயர்ந்த சிறப்பியல்பினை அறிய முடியும்.' 'இந்த இரண்டு நெறிகளின் இயல்பினை நன்கு தெளிந்தவர்க்கு அன்றி, மற்றையோரால் இறைவன் சிறப்பினை உணர முடியுமா?'

என்பது இக்கவிதையின் பொருள்.

இந்த இரண்டு நெறிகளும் ஒன்று பட்டனவா? வெவ்வேறானவையா? ஆய்தல் வேண்டும். ஒன்று என்றால், தனித் தனியாகக் கூற வேண்டியதில்லை. வேறுபட்டதென்றால், ஒன்றனோடு ஒன்றை இணைத்துக் கூற வேண்டுவதில்லை. சாங்கியமும், யோகமும் பொருளின் உண்மையை ஆராயும் நெறிகள் என்ற அளவில் ஒற்றுமை உடையவைகள். ஆராய்ந்து கண்டு, காட்டும் முடிவில் வேற்றுமை பெற்றவைகள். தொடக்கத்தில் ஒன்றாகவும் முடிவில் வேறுபட்டும் நிற்பன இந்த இரண்டு நெறிகளும்.

சாங்கியம்:

சாங்கியம் என்ற சொல்லுக்கு **பூரண அறிவு** என்று பொருள், எனவே, மூலப்பொருள் பற்றிப் பூரண அறிவைத் தரும் மதத்துக்குச் சாங்கியம் என்ற பெயர் ஏற்படலாயிற்று என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

'ஆராய்ச்சியால் வரும் ஞானம்' என்று சாங்கியத்துக்கு பொருள் கூறுவர் சிலர். உலக இயக்கத்தை 25 தத்துவப் பொருள்களில் அடக்கிக் காட்டுகின்றது சாங்கியம்.

'தன் மாத்திரைகள் ஐந்து. பூதங்கள் ஐந்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானேந்திரியங்கள் ஐந்து, கருமேந்திரியங்கள் ஐந்து, மகாந், அகங்காரம், மனம், மூலப்பிரகிருதி, புருஷன்'' என்பவைகள் சாங்கியமதம் கூறும் 25 தத்துவங்கள். உயிரை, புருஷன் என்று சொல்கின்றது இந்தமதம். புருடன், மூலப் பிரகிருதி யிலிருந்து பிரிந்து விடுதலே இதன் இறுதி நிலை. இம்ம தத்துக்குக் கடவுள் நம்பிக்கையில்லை.

யோகம்:

'யோகம், என்ற சொல்லுக்கு, 'பிரிதல்' என்றும்: சேர்தல், என்றும் பொருள்கூறுகின்றனர் அறிஞர் பெருமக்கள். யோகம் என்பதற்கு 'அராய்ச்சியால் வரும் ஞானத்தை அனுபவமாகச் செயல் படுத்தும் நிலை' என்று விளக்கம் கொடுப்பார்கள் சில தத்துவப் பெரியோர்கள்.

ஆன்மா, மூலப் பிரகிருதியிலிருந்து பிரியவேண்டும். யோகம் இதைக் குறிக்கும்போது பிரிதல் என்ற பொருளில் நிற்கின்றது. பிரிந்த ஆன்மா பரம்பொருளோடு சென்று சேரவேண்டும். யோகம் இந்த நிலையைக் குறிக்கும்போது 'சேர்தல்' என்ற பொருளுக்கு உரிய சொல்லாக இருக்கிறது.

உலகியலினின்றும் பிரிந்த சீவன்-உயிர்-ஆன்மா, பரம் பொருளோடு சென்று சேர்ந்தாக வேண்டும். ஜீவாத்மா, பரமாத்மாவோடு கலக்கும் நெறியைக்கூறும் யோகம், எட்டு அங்கங்களை உடையது. அவைகள்:- இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி, என்பவைகள்.

இந்த இரண்டு நெறிகளின் வேற்றுமையைப்பற்றி, பேராசிரியர். திரு. கி. லக்ஷ்மணன் அவர்கள், தமது இந்திய தத்துவஞானம் என்ற நூலுள் கூறியிருப்பது ஏற்புடைய தாகயிருக்கின்றது.

'இறைவன் நமது கற்பனை என்பது பொருந்தாது: இறைவன் உண்மையில் உளன். இதுவேயோகமதத்தினர் கடவுள் உண்டு என்பதை நிரூபிக்கும் விதம்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சாங்கியம் கடவுள் உண்டென்பதை ஒப்புக் கொள் வதில்லை. யோகம் ஒப்புக் கொள்கிறது சாங்கியம் ஞானத்தை வற்புறுத்துகிறது: யோகம், தியானத்தை வற்புறுத்துகிறது..? 'கடவுளை ஒப்புக் கொள்ளாத சாங்கியத்தில் பக்திக்கு இடம் இல்லை. புருடன் தானாகவே, தன்சுய முயற்சியாலே வீடு பேற்றை அடையவேண்டும்.' 'கடவுளை ஒப்புக் கொள்ளும் யோகத்திலே பக்திக்கு இடம் உண்டு. இறைவனிடத்திலே பக்தி செலுத்தினால் அவன் அருள் கிடைக்கும். இடர்கள் நீங்கிஈடேறுவது இலகுவாகும்.' ⁕

என்பது, பேராசிரியரின் சாங்கியம், யோகம் முடிவு பற்றிய ஆய்வுரை.

இதை வைத்துப் பார்க்கும் போது, 'கடவுளே இல்லை, நானே எனது முயற்சியினால், இந்த உயர்ந்த நிலையை எய்தினேன்' என்று சொல்கின்ற இரணியன் சாங்கிய நெறியினன் என்றும், இறை நம்பிக்கையோடு பக்தி பற்றிப் பேசுகின்ற பிரகலாதன் யோக நெறியினன் என்றும் அறியலாம்.

இரணியன் சாங்கிய நெறியினனாக இருந்தாலும், அதிலும் அவன் பூரண அறிவை எட்டவில்லை என்று தெரிகின்றது. சாங்கியம், இருபத்து ஐந்தாவது தத்துவ மாகிய புருடன், பிரகிருதியிலிருந்து (உலகியலிருந்து) பிரிந்து (விடுபட்டு) மோட்சத்தை அடைய வேண்டும் என்று கூறு கின்றது. இரணியன் 'வீடுபேறு' பற்றிப் பேசவே இல்லை. அதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. முயற்சி ஒன்றே மனிதனை உயர்த்தி விடும்: அதுவே வாழ்க்கை: இதற்கு, யாருடைய உதவியும் தேவையில்லை.' இதுவே இரணியன் கண்ட சாங்கிய நெறி.

⁕ இந்திய தத்ததுவஞானம். பக் 217, 218.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளவை:

பக்தியில் தோய்ந்த யோக நெறியினனாகிய பிரகலாதன், மேலும், இறைநிலையை விளக்கிக் காட்டமுயல்கின்றான். முடியாத நிலையையும் கூறுகின்றான்.

'அளவையான் அளப்பஅரிது: அறிவின் அப்புறத்து
உளவைஆய் உபநிட தங்கள் ஓதுவ:
கிளவியால் பொருள்களால் கிளக்கு றாதவன்
களவை,யார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார்.' O

'அந்த வேத முதல்வனின் தன்மை உலகத்தில் சொல்லப் படும் அளவைகளால் (பிரமாணங்களால்) அளந்து காண முடியாதது ஆனால், உயிர்களது அறிவுக்கு அப்பாற்பட்டுள்ள மறைபொருளை ஆராயும் உபநிடதங்கள், அந்த இறைநிலை இயல்பை எடுத்துரைக்கின்றன.'

'இத்தகைய இயல்பினனாகிய இறைவன், உலகத்து வழங்கும் சொற்களாலும், பொருள்களாலும் விளக்கிக்காட்ட ஒண்ணாதவன். இவன்மாயத்தன்மையை யார்தாம் அறிய வல்லவர்? அவனது உண்மைநிலையினை உள்ளவாறு எவரும் கண்டிலர்.' என்றுமைந்தன் உரைத்தான். 'அதனால், நான் உரைத்தது ஓரளவேஆகும்? என்பது குறிப்பு.

பொருள் உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு உரிய அளவைகளைப்பற்றி, சிவஞானசித்தியார் சொல்லுவது இங்கு சிந்தித்துப்பார்ப்பதற்கு உரிய ஒன்றாகும்.

'அளவை, காண்டல், கருதல், உரை,
அபாவம், பொருள், ஒப்பு ஆறுஎன்பர்
.... அவை எல்லாம்,
காண்டல், கருதல், உரை என்ற
இம்மூன்றில் அடங்கிடுமே. (சிவஞான சித்தியார். 1)

இந்த அளவைகள் ஆறினையும் மூன்றனுள் அடக்கிக் கொள்ளலாம் என்பது இதன்கருத்து.

O க. ராமாயணம் 6250. ஓதுவ-கூறுகின்றன: கிளவி-சொல்: கிளக்குறாதவன்-விளக்கமுடியாதவன். களவை-மாயம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளின் உண்மை நிலையைக் கண்டு தெளிவதற்கு காண்டல் அளவை (கருமம்) ஒன்று மட்டுமே போதும் என்று கணித்துக் கொண்டுள்ள தந்தைக்கு, 'நான் சொல்லும் இறை நிலையைக் கண்டு தெளிவதற்கு. உலகத்துள்ள எந்த அளவைகளும் போதாது' என்று மைந்தன் உரைக்கின்றான்.

எல்லாம் அவனே:

'எந்த அளவைகளாலும் அளந்து காண்டற்கு அரியவன் அந்த இறைவன்' என்ற உண்மையை மேலும் விவரிக்கின்றான் பிரகலாதச் செல்வன்.

'மூவகை உலகும்ஆய், குணங்கள் மூன்றும் ஆய்,
யாவையும் எவரும்ஆய், எண்இல் வேறுபட்டு,
ஓவல்இல் ஒருநிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ? (6251)

ஒப்பற்ற அந்த இறைவன், ஒழிதல் இல்லாமல், என்றும் எங்கும் எதிலும் கலந்திருக்கின்றான். உலகங்கள், கீழ், மேல், நடு என்று மூன்று குணங்கள்: சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று: உலகப் பொருள்கள், அறிவு அற்றவைகள்: அஃறிணைப் பொருள்கள். உலகில் இயங்குபவர்கள் அறிவுடையவர்கள். (யாவையும், எவரும்) கணக்கற்ற வேறுபாடு உடையவைகள். இப்படிப்பட்ட எல்லாவற்றோடும் கலந்து கிடப்பது அந்த இறைவன் நிலை.

எந்த இடத்தில், எந்தக் காலத்தில்,எந்த முறையில் உலக இயக்கத்திற்குரிய செயலைச் செய்வது என்பது அவனுக்குத் தெரியும். 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது?

இத்தகைய இறைவன் செயலை விண்ணுலகத்துத் தேவர்களும், மண்ணுலகத்து முனிவர்களும் புகழ்ந்து பேசினாலும் பேசி முடியாது. இவர்கள் புகழ்வதற்குரிய அளவுக்கு அது சுருங்கி விடுமா? தேவர்களாலும் முனிவர்களாலும் கூட பேசி முடியாத அளவுக்கு, அந்தச் செயலின் புகழ் விரிவு பெற்றதாகும். (ஓவுதல்- ஒழிதல்: (நீங்குதல்) தேய்தல்- அளவிற்பட்டுச் சுருங்குதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயம் தோறும்,
தோய்விலன்; புலன்ஐந் துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி"
(திருவாய் மொழி - 3.4.10)

என்ற நம்மாழ்வாரது பாசுரக் கருத்து, இந்தக் கவிதையில் ஒளி வீசி நிற்பதைக் காணலாம். இறைவன், தடஸ்தலட்சணமும் சொருப லட்சணமும் உடையவன், அதாவது செயற்கை நிலையினனாகவும் இயற்கை நிலையினனாகவும் இருப்பது அப்பெருமான் இயல்பு. யாவையும் அவருமாய் என்ற தொடர் இறைவனது தடஸ்த லட்சணத்தைத் தெரிவிக்கின்றது. அதாவது அவன் அறிவற்றவைகளோடும், அறிவுள்ளவர்களோடும் கலந்துநிற்கும் நிலை. இது அப்பெருமானது செயற்கை நிலை. 'தானாய் என்பது அப்பெருமான் எதனோடும் கலக்காமல், தனித்து நிற்கும் நிலையைக் காட்டுவது 'இது சொருபலட்சணம்' என்று சொல்லப்படும். இறைவனின் இயல்பான நிலைமை. 'தானேயாகி நிறைந்தெல்லா உலகும் உயிரும் தானேயாய். என்று பிற இடங்களிலும் இறைவனது இரண்டன் இயல்புகளையும் கூறுவார் நம்மாழ்வார்.

இதனைத் தமது கருத்துள் இருத்திக் கொண்ட கம்பநாட்டாழ்வார், 'யாவையும் எவரும் ஆய்' என்று இறைவனின் தடஸ்த லட்சணத்தையும் 'ஒருவன்' என்று சொருப லட்சணத்தையும் இந்தக் கவிதையில் காட்டியுள்ளார்.

இறைவனின் சொருபலட்சணத்தை 'தான்' என்ற சொல்லாலேயே அடுத்த கவிதையில் குறிக்கின்றார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருமையும் பெருமையும்:

'கருமமும் கருமத்தின் பயனும், கண்ணிய
தருமுதல் தலைவனும், தானும், தான்; அவன்
அருமையும் பெருமையும் அறிவ ரேல்,அவர்
இருமைஎன்று உரைசெயும் கடல்நின்று ஏறுவார்.'(6252)

'நல்வினை எது? தீவினை எது' என்று அறிந்து கொண்டு செய்யும் வினைகளாகவும், அந்த வினைகளின் விளைவாகிய பயனாகவும், அந்த வினைகளைக்கு ஏற்ற பயனைத் தருகின்ற விதியாகவும். இவற்றுக்கெல்லாம் அந்தர்யாமியாகவும் இருப்பவன் இறைவன். அத்தகைய இறைவனது அரிய செயல்களையும், பெருமைக்குரிய கல்யாண குணங்களையும் யார் அறிகின்றாரோ, அவர், இம்மை மறுமை என்று சொல்லப்படுகின்ற பிறவிக் கடலினின்றும் ஏறி, அக்கரையாகிய வீடுபேற்றை அடைவார்கள்.' என்பது இக்கவிதையின் பொருள்.

'கருமமும், கருமபலனும், ஆகிய காரணன்' என்ற நம்மாழ்வாரின் இறைத் தத்துவத்துக்கு விளக்க உரையாக அமைந்துள்ளது இந்தக் கவிதை. 'கருமமாகவும், கரும பலனாகவும் அவற்றிற்குக் காரணமாகவும் இருப்பவன் நாராயணன்' என்று நம்மாழ்வார் கூறினார்.

இந்தக் கருத்தைத் தன் வயமாக்கிக் கொண்ட கம்ப நாட்டாழ்வார் அந்த மூன்றோடு, அந்த வினைப் பயனைப் படுத்துக் கொடுப்பவனும் அந்த முதல்வனே என்று கூறுகின்றார். மிக நுணுக்கமாக, நாராயண நாமத்தின் தத்துவத்தை இந்தக் கவிதையில் உணர்த்துகின்றார் கம்பர்.

உலக உயிர்கள் அனைத்திலும் தங்கிக் கொண்டும், அவைகளைத் தன்னுள்ளே தங்க வைத்துக் கொண்டும் இருப்பவன் நாராயணன். தங்குதலும் தாங்குதலும் உடையவன் எவனோ அவன்தானே வினைகளுக்குப் பொறுப்பு. கருமம் செய்பவன், பிறகு அந்தக் கருமப் பயனை ஊட்டுபவனும் அவனாகத்தானே இருக்க வேண்டும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆதலால், கருமம், கருமபலன், காரணம் காரியம் ஆகிய நான்காக நாராயணனே அமைந்துள்ளான் என்ற தத்துவப் பேருண்மை நுணுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. இக் கவிதையில்.

இந்த நான்குவகைப் பொருளையும், சேக்கிழார், தமது பெரிய புராணத்தில் சொல்லியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

இந்தக் கருத்தை, கவந்தன் இராமபிரானைப் பார்த்து, துதித்த துதியில் அமைத்து வைத்துள்ளார் கம்பர்.

'மண்பால் அமரர் வரம்புஆரும் காணாத
எண்பால் உயர்ந்த எரிஓங்கும் நல்வேள்வி
உண்பாய்நீ: ஊட்டுவாய்நீ: இரண்டும் ஒக்கின்ற
பண்புஆர் அறிவார்? பகராய் பரமேட்டி.' (3687)

'உண்பானும் இறைவனே, ஊட்டுபவனும் அவனே.' எல்லாம் இறை செயலே. எல்லாம் அவனாகயிருந்து செயலாற்றிக் கொண்டிருப்பதை அறிவரேல், பிறவிக் கடலைக் கடக்கலாம் என்பது, பிரகலாதன் வாயிலாகவந்த கவிதைப் பொருளாகும்.

'செய்வினையும், செய்வானும், அதன்பயனும், கொடுப்பானும்,
மெய்வகையால், நான்குஆகும், விதித்தபொருள்:'
(பெரி-சாக்கிய நாயனார் 5)

வினை, வினைப்பயன், ஊட்டுவானாகிய இறைவன், வினை செய்வானாகிய உயிர் இந்நான்குமாகி விளங்குதலே இறைவனின்! அருமை பெருமைகள். இதனை ஞானிகள் உணர்வர். உணர்ந்ததனால், பிறவிக் கடல் நீந்துவர்.

இப்படி நான்குமாகி உலகத்தோடு கலந்து நிற்கும் இறைவனின் அருமை பெருமைகளை மேலும் விரித்துரைக் கின்றான் பிரகலாதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காண்டலும் காட்டுதலும் :

'கண்ணினும் கரந்துளன்: கண்டு காட்டுவார்
உள்நிறைந் திடும்உணர்வு ஆகி, உண்மையால்,
மண்ணினும், வானினும் ,மற்றை மூன்றினும்,
எண்ணினும் நெடியவன் ஒருவன், எண்இலான்.' (6259)

'அந்த நாராயணன், உலகப்பொருள்களைக்கண்டு தன்னையும்,காணவிரும்புபவரது கண்ணில் மறைந்துள்ளான்: தன்னை அகக்கண்ணால் கண்டு,பிறர்களுக்கு எடுத்துக்காட்டு பவரான ஞானிகளுடைய மனத்தில் நிறைந்துள்ளான்: நிலத்தின் பரப்பைக் காட்டிலும், விசும்பின் உயர்ச்சியைக் காட்டிலும், மற்றைய நீர், தீ, காற்று இவைகளைக் காட்டிலும் நெடியவனாக விளங்குவான்: தன்னைப் பற்றி எண்ணுவாரது எண்ணத்துக்கு எட்டாமல் கடந்து நிற்பான் தனக்குச் சமமாக இருப்பவர் எவரும் இன்றி ஒருவனாக உள்ளான்: எல்லாப் பொருள்களுமாகிக் கலந்து எண்ணற்ற வடிவினனாகத் திகழ்கின்றான்.'

என்பது கவிதைப் பொருள். இந்தக் கவிதையுள், நம்மாழ்வார் அருளிச்செய்த இரண்டு பாசுரங்களின் தத்துவக் கருத்துக்களை அடக்கி வைத்துள்ளார் கம்பநாட்டாழ்வார்.

'பண்ணுளாய்! கவிதன்னுளாய்! பத்தி யின்உள்ளாய்!
பரமீசனே! வந்துஎன்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்! சொல்லுளாய்!
ஒன்று சொல்லாயே' (7.1.6.)

'திட விசும்பு, எரி, வளி நீர், நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதும் ஆய்அவை அவைதொறும்,
உடல்மிசை உயிர்எனக் கரந்துஎங்கும் பரந்துளன்.
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே.' (1.1.7)

என்ற இருபாசுரங்களும் கம்பர் வாயிலாக மறு அவதாரம் செய்துள்ளதோ என்று எண்ணும் படி உள்ளது இந்தக் கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும், 'கரந்த சில் இடந்தொறும், இடந்திகழ் பொருள் தொறும் கரந்து எங்கும் பரந்துளன் இவை உண்ட சுரனே.' (1.1.10.) என்ற திருவாய் மொழிப் பாசுரக் கருத்தும் இதனுள் அடங்கியிருப்பதை உணரலாம். 'கண்டு காட்டுவான்' என்ற தொடர், மெய் கண்டார் அருளிச் செய்த சிவஞான போதம் என்ற நூலுள் 11ம் சூத்திரமாகிய 'காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' என்ற தொடரை நினைவுபடுத்துகின்றது. காரைக்கால் அம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி (20) யில் வரும், 'அறிவானும் தானே, அறிவிப்பான்தானே, அறிவாய் அறிகின்றான்தானே' என்ற வெண்பாப்பகுதி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இறைவன், தான் ஒருவனாக இருந்தும், அன்பர்களது எண்ணத்துக்கு ஏற்ப, பலவிதமான திருவுருவங்கள் கொண்டு, பொருள்கள் தோறும் கலந்து நிற்பதை 'ஒருவன் எண்ணிலான்' என்ற தொடர் காட்டுகின்றது. இதே பொருளில், 'தான் ஒருவனுமே பலவாகி, நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ.' என்று திருவாசகத்தில் வருவதைக் கண்டு ஒப்பு நோக்கி மகிழலாம். (திருத்தோணோக்கம்-5). 'ஒருவன் எண்ணிலான்' என்று பொதுப்படக் கூறப்பட்ட இறைவன் எந்த, திருப்பெயருக்கு உரியவனாய் விளங்குகின்றான் என்பதை அடுத்த கவிதை தெளிவாக்குகின்றது.

சந்தியும் பதமும் :

'சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்:
இந்தியம் தொறும்உளன்: உற்றது எண்ணினால்,
முந்தைஓர் எழுத்துஎன வந்து, மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான்' (6260)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணிலானாகிய அந்த இறைவன், உயிர்களின் மனத்திலும்.செயல்களிலும், சொல்லிலும் கலந்திருக்கின்றான். அதுமட்டும் அல்ல! ஒவ்வொரு உயிர்களின், மெய், வாய்,கண், மூக்கு, செவி என்ற ஐந்து இந்திரியங்களிலும் இயைந்துள்ளான். இந்த நிலைமை ஆராய்ந்து பார்த்தால், ஒரு உண்மை புலப்படும். அந்த உண்மைதான், அந்த இறைவன், எந்தத் திருப்பெயரில் செழித்த இயல்பினனாக விளங்குகின்றான் என்பது. அந்தத் திருப்பெயர், முதலில், பழைமையான ஒரு எழுத்தாக வந்தது பிறகு மூன்று புணர்ச்சியாக நான்கு பதமாக விரிந்தது. இப்படி அமைந்த திருப்பெயரில்தான் தனது செழித்த இயல்பைக் காட்டிக் கொண்டுள்ளான் அந்த இறைவன். முந்தை ஓர் எழுத்து என்பது 'ஓம், என்றபிரணவ மந்திரமாகும், இதுதான், வேதத்தில் சொல்லப்படுகின்ற மிகப் பழயதான ஒரு எழுத்து. இது, அ, + உ + ம் என்ற மூன்று எழுத்துக்களாலான ஓர்-ஒப்பற்றமந்திரம். 'அ'என்பது பரமாத்மாவைக்: குறிப்பது. 'ம்' என்பது ஜீவாத்மாவைக் குறிப்பது. 'உ' என்பது. இரண்டு ஆத்மாக்களுக்கும் இணைப்பை ஏற்படுத்து கின்ற பிராட்டியைக் குறிப்பது.

'எழுத்துக்களுள் நான் அகரமாகயிருக்கின்றேன்' என்று கிருஷ்ணபரமாத்மா கீதையில் சொல்லியிருப்பது இந்த உண்மையைப்புலப்படுத்தும். இந்த 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தின் விரிவு-விளக்கம் 'நமோ நாராயணாய, என்பது. இதுதான், நம + நார + அயண + ஆய — என்று மூன்று புணர்ச்சியாய் (சந்தி) நான்கு பதமுமாக அமைகின்றது. இப்படி அமைந்த 'ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்துத் திருமந்திரப் பெயரில் இறைவன் தழைத்த இயல்பினனாக உள்ளான். இதன் பொருள், 'அந்தர்மியாய் எல்லாவற்றோடும் கலந்துள்ளான்' என்பதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆலமும் வித்தும்:

நாராயணன் அந்தர்யாமியாய், எல்லாப் பொருள் களோடும் கலந்தும், அவைகளைத் தன்னுள் வைத்துக் கொண்டும் நிற்கும் உண்மையை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக் காட்ட முற்படுகின்றான் பிரகலாதன்.

'காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப்
பால்அமை பயனும்ஆய், பயன்துய்ப் பானும்ஆய்,
சீலமும் அவைதரும் திருவும்ஆய், உளன்
ஆலமும் வித்தும்ஒத்து அடங்கும் ஆண்மையான், O

'ஆலமரமும், அதனைத் தன்னகத்தே கொண்ட விதையும் போன்று, உலகம் எல்லாவற்றையும் தனது நுண்ணுருவில் அடக்கிவைத்துக் கொள்ளும் பேராற்றல் பெற்றவன் நாராயணன், இது, எதனையும் தாங்கிக்கொள்ளும் அவனது அளவற்ற ஆற்றலைக் காட்டுகிறது.'

'அத்தகைய இயல்பினான இறைவன், உலகத்தில், தொழில் நிகழ்ச்சிக்கு இன்றியமையாத காலமாகவும், அத்தொழில் செய்வதற்குரிய கருவியாகவும், அது நடைபெறு வதற்கு ஏற்ற இடமாகவும், அத்தொழிலின் பயனை அனுப விக்கும் கருத்தாகவும் உள்ளான்? 'மேலும், அவ்வுயிர்களைத் தூய்மைப்படுத்தும் நல்ல ஒழுக்கமாகவும். அவ்வொழுக்கம்தரும் செல்வமாகவும் அந்த இறைவன் விளங்குகின்றான்.'

என்பது கவிதையின் விளக்கப் பொருள்.

ஆலம்விதை மிக மிக நுண்ணியது. அதனுள், பேரரசர் களும் தனது பெரும் படையுடன் தங்குதற்கு ஏற்றநிழலைத் தரும் பெரிய ஆலமரமே அடங்கியுள்ளது என்பது வெளியில் தெரியாது. அந்த நுண்ணியவிதை, மண்ணைச் சேர்ந்ததும் தனக்குள் அடங்கியிருந்த தனது ஆற்றலை வெளிப்படுத்து கின்றது.

O. க. ராமாயணம். 6262. கடைப்பால் - இறுதியில்: சீலம் - ஒழுக்கம்: திரு - செல்வம்: ஆண்மை - அளவுகடந்த பேராற்றல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது போன்று, அணுவினும் சிறிய தனது திருவுருவத்தில், பெரிய உலகத்தையே அடக்கி வைத்துக் கொண்டுள்ளான் இறைவன்.

விதை, மண்ணைச் சேர்ந்ததும் விண்ணளவு உயரும் மரமாக வளர்வதுபோன்று, இறைவன், குறள் உருவாய்(வாமனனாக) வந்து மண்ணைத் தொட்டதும், (மண்ணுலகில் கால் வைத்ததும்) விண்ணுற நீண்ட திருவிக்கிரமனாக உயர்ந்தான்.

இந்த உவமை விளக்கத்தை, கம்ப நாட்டாழ்வார், பாலகாண்டத்திலேயே, காட்டி விட்டார்.

'நீல நிறத்து நெடுந்தகை வந்து, ஓர்'
ஆல்அமர் வித்தின் அருங்குறள் ஆனான்., — (413)

எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் இறைவனது பேராற்றலை உவமை கூறி விளக்கிய பக்தப் பிரகலாதன், அடுத்து, எல்லாவற்றையும் இயக்குகின்ற இறை ஆற்றலையும் ஒரு உவமையின் மூலம் விளக்கிக் காட்டுகின்றான்.

யாழும் இசையும் :

'உள்ளுற உணர்வுஇனிது உணர்ந்த ஓசைஓர்
தெள்விளி யாழிடைத் தெரியும் செய்கையின்.
உள்உளன்; புறத்துஉளன்; ஒன்றும் நண்ணலான்.
தள்ளஅரு மறைகளும் மருளும் தன்மையான்.' ★

'யாவராலும் விலக்க இயலாத தன்மையது வேதம். அந்த வேதமே, இறைவன் தன்மையை இன்னது என்று தெரியாது மயங்குகின்றது.'

'வேதமும் மயங்கும் தன்மையனாகிய இறைவன், அகத்திலும் உள்ளான். புறத்திலும் உள்ளான். எப்படி? இசைவல்லார்களது, உள்ளத்துள், இசைக்குரிய உணர்வு தோன்றுகின்றது. அந்த இசை உணர்வு, வீணையாகிய கருவியின் மூலம் ஓசையாக வெளிவருகின்றது.'

★கம். ராமாயணம் 6263. தெள்விளியாழ்-தெளிந்த இசைக்கு இடமாகிய வீணை: நண்ணலான்-சேராதவன்; தள்ள-விலக்க: மருள்-மயக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இசை உணர்வு தோன்றிய இடம் இசைக் கலைஞரது உள்ளம். அந்த இசை உணர்வு, ஓசையாக வெளியேறுவதற்குக் கருவியாக இருப்பது யாழ். இது வெளியில் தெரிவது.' இசை உணர்வு அகத்தில் (உள்ளத்தில்) தோன்றாது போனால், புறத்தில் உள்ள இசைக் கருவியாகிய வீணை, இசையை வெளிப்படுத்த முடியாது. 'புறத்தில் உள்ள இந்தக் கருவி இல்லை என்றால், அகத்தில் தோன்றிய இசை உணர்வு செம்மையான நல்ல ஓசையாக வெளிவர முடியாது.'

'ஆகவே, அகமும் புறமும் ஒன்று சேர்ந்தால்தான், நல்ல இசை வெளியில் வந்து, அனைவரது காதுகளிலும் இன்பத் தேனைப் பாய்ச்சும்.' 'இறைவன் தான், கலைஞரது உள்ளத்தில் தோன்றும் இசை உணர்வாகவும், அதனை, யாழின் வழியாக வெளிப்படுத்தும் இசையாகவும் இருக்கின்றான்.'

'இப்படியாழாகவும், யாழின் இசையாகவும் அவன் இருந்தாலும், எதனோடும் ஒட்டியிருக்கமாட்டான். (நண்ணலான்), இந்தக்கவிதை காட்டும் தெளிபொருள் இது.

இறைவனை, இசையாகவும், இசைக்கருவியாகவும் காண்பது பக்தர்கள் இயல்பு. 'முன்நல்யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே' என்றும், 'நுடங்குகேள்வி இசை என்கோ, இவற்றுள் நல்ல மேல் என்கோ, என்றும் பண்ணினைப் பண்ணில் நின்றதோர் பான்மையை.' என்றும் நம்மாழ்வார்து அனுபவிக்கின்றார். ,ஏழிசையேழ் நரம்பின் ஓசையை, என்றும், ஏழிசையாய் இசைப்பயனாய், என்றும் சுந்தரமூர்த்தி நாயனர் அனுபவிக்கின்றார்.

அருணந்தி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவஞான சித்தியார் என்ற நூலுள்உள்ள, 'இவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றித்தானே நிலவு சீர் அமலனாகி நின்றனன் நீங்காதுஎங்கும்.' என்ற அருள்தொடரை 'ஒன்றும்நண்ணபான்' என்ற தொடரோடு ஒப்பு நோக்கிப் பார்த்து இன்புறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்ற திருவாசகத் தொடரும், (சிவபுராணம் 34.35). 'தள்ள அரும் மறைகளும் மருளும் தன்மையான்' என்ற இந்தக் கவிதைத் தொடரும் கருத்து ஒற்றுமை உடையனவாக உள்ளன. உள்ளும் புறமுமாக இருந்து உலகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் இறைவன் செயலை காரண காரியத்தோடு விளக்குகிறது அடுத்த கவிதை. இதிலும் ஒரு உவமை கூறப் படுகின்றது.

தூமமும் கனலும் :

'ஓம்எனும் ஓர்எழுத்து அதனின் உள்உயிர்
ஆம்அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்:
தாமமு உலகமும் தமுவிச் சார்தலால்,
தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான் ❋

'ஓம்' என்ற பிரணவ மந்திரமாகிய ஓரெழுத்தில் அதன் உள் உயிராகத் திகழுவது 'அ' என்ற எழுத்து. 'அ.உ.ம்.' என்ற மூன்றும் சேர்ந்த பிரணவமந்திரம்தான் 'ஓம்' என்பது. இதில் உள்ள அகர உயிராகத் திகழ்பவன் இறைவன். அவன், உலகத்து உயிர்களின் அறிவுக்கெல்லாம் உள் நின்று உணர்த்தும் ஞானமாகவும் விளங்குகின்றான்.'

'அந்த இறைவன் பரந்த இடமாகிய மூன்று உலகங்களிலும், எங்கும் நீக்கமறத் தழுவிப் பொருந்தியிருக்கின்றான்.' 'அதனால், இவன் இயல்பு, புகையும் அதற்குக் காரணமாகிய நெருப்பும் போன்று, காரண காரியத் தொடர்புடையதாக அமைந்துள்ளது.' இக்கவிப் பொருள் இது: புகை காரியம்: நெருப்பு காரணம். நெருப்பு இன்றி புகை யில்லை. அதுபோல உலக இயக்கம் காரியம். இறைவன் உலகத்தோடு இணைந்திருத்தல் காரணம்.

❋ கம். ராமாயணம் 6264. தாமம்-பரந்த இடம்.
தூமம்-புகை: கனல்-நெருப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தூமமும் கனலும்' என்பது உவமை. இதனை உவமேயத்தோடு பொருத்திப் பார்த்தால்தான், உலகமும், அதன் தலைவனுமாக விளங்கும் இறைத்தத்துவத்தை, எவ்வளவு நுணுக்கமாக. ஆழமாகக் கவிச்சக்கரவர்த்தி இக்கவிதையுள் அடக்கி வைத்துள்ளார் என்பது புலனாகும்.

புகை மேலோங்கி நிற்கிறது. அது தூரத்தில் இருந்து பார்ப்பவர்க்கு நன்றாகத் தெரிகின்றது. புகை உண்மையினைத் தெளிவதற்குக் காட்சி அளவையே போதும். புகை கண்ணுக்குக் காணும் அளவுக்கு அதனைத் தோற்றுவித்த நெருப்பு. தூரத்தில் இருப்பவர்க்குத் தெரிவதில்லை. ஆனால், அதன் உண்மையை நிருபிப்பதற்கு அனுமான அளவை வேண்டும்.

காரியம் கண்ணுக்குப் புலனாகின்றது; காரணம் கண்ணுக்குப் புலனாவதில்லை. ஆனால், 'காரணம் இல்லாமல் காரியம் இல்லை' என்ற உண்மை, காண்பதற்கு அனுமான அளவையே உதவும்.

உலகமும் அதன் இயக்கமும் கண்களால் காணக் கூடியவைகள். இதன் தோற்றத்துக்குக் காரணம் வேண்டுமல்லவா! அந்தக் காரணன் தான் நாராயணன் இந்தக்காரணன் இன்றி, உலகமோ, அதன் இயக்கமோ நிச்சயமாகத் தோன்ற முடியாது. இது உவமேயம்.

உலகத்தையும் அதன் இயக்கத்தையும் காட்சி அளவையால் கண்டு, அதன் உண்மையைத் தெளியும் இரணியன் அதன் காரணமாகிய இறைவனை, அனுமான அளவையால் காண மறுக்கின்றான்.

'காரணம் இல்லாமல் காரியம் இல்லை' என்ற உண்மையை இன்மையாக்க முயல்வதே இரணியின் பேதைமை: இந்தப் பேதைமையைப் போக்குவதற்குத்தான், எல்லாருக்கும் எளிதில் விளங்கக்கூடிய 'புகையும் நெருப்பும்' என்ற எளிய உதாரணத்தை எடுத்துக்கொண்டான் மேதைப் பிரகலாதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிலும் 'தொடர்ந்த தோற்றத்தான்' என்ற தொடர். இறைத் தத்துவத்தை மிக நுணுக்கமாகத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டுள்ளது. 'உலகம், உயிர். இறை' என்ற மூன்றும் என்றும் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிலையாக நிற்பன. இவைகள் நிலையாக நிற்பதற்குக் காரணம் ஒன்றை விட்டு ஒன்று பிரியாமல் இணைந்து நிற்பதே ஆகும். இவை மூன்றும் தொடர்பு கொண்டவைகளே. இந்தத் தொடர்புப் பொருள்களுள், வெளியில் காணப்படுவது உலகம் (பிரகிருதி) ஒன்றுமே. அந்த உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் உயிரினங்களின் தோற்றம், அவைகளது உடலால் வெளிப்படுகிறது. உடலை நடமாடச் செய்து கொண்டிருக்கும் உயிர், கண்ணுக்குப் புலனாவதில்லை. உயிர் இல்லை என்றால் உடலின் நடமாட்டம் இல்லை. அந்த உயிரை உடலின் நடமாட்டத்திற்கு உரியதாக்குவது இறை. இந்த இறைவனே, கண்ணுக்குத் தெரியாத உயிரையும், கண்ணுக்குத் தெரியும் உடலையும் அந்தர்யாமியாக, நின்று இயக்கிக் கொண்டிருக்கின்றான்.

'உலகம், உயிர், இறைவன்' இந்த முப்பொருள் உண்மையை உணர்த்துவதுதான் வைணவ சமயம். அதனால்தான், வைணவ சந்நியாசிகள், திரிதண்டம் ஏந்தியுள்ளனர். வைணவத் துறவிகளை, முக்கோல் பகவர்' என்று 'கலித்தொகை' என்ற சங்கநூல் கூறுகின்றது. புகையின் தொடர்ச்சியான தோற்றம், அங்கு நிலையாக, தொடர்ந்து நெருப்பு எரிந்து கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. நெருப்பு அவிந்தால் புகையில்லை. அதுபோல, உலகம் எல்லாக் காலத்திலும் தொடர்ந்து காணப்பட்டுக் கொண்டிருப்பதால், இதன் தலைவனும், முலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய காரணத் தோற்றத்தினனாக உள்ளான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகை, நெருப்பின் இருப்பை உணர்த்துகின்றது. உலகம், அதன் இயக்கந் தலைவனின் உண்மையைத் தெளிவு படுத்துகின்றது. இந்த உவமையின் மூலம் உணர்ந்து கொள்ள வேண்டிய இறைத்தத்துவத்தை. இந்தக்கவிதையின் தொடக்கத் தொடரிலேயே அடக்கிவைத்துள்ளார் கம்பநாட்டாழ்வார். ஓம் எனும் ஓர்எழுத்து அதனின் உள் உயிர் ஆம் அவன்.' என்ற கவிதையின் முதல் அடியே, இறுதி அடியின் உவமை மூலம் புரிந்துகொள்ளவேண்டிய தத்துவப் பேருண்மையைத்தன்பால் அடக்கிக் கொண்டுள்ளது.

'ஓம், என்பது ஓர் எழுத்து என்று வேதத்திலும் சொல்லப்படுகின்றது. வெளியிலும் ஒரு எழுத்தாகத்தான் தோற்றமளிக்கின்றது. இது ஒரே எழுத்தாகத் தோற்றம் அளிப்பது எப்படி என்பதைக் காண வேண்டுமானால், அதனுள் அடக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களையும், அவைகள் உணர்த்தும் தத்துவங்களையும் ஆராய்தல் வேண்டும்.

எழுத்து இலக்கணம் கூறும், தமிழ்மொழியாயினும் வடமொழி, வியாகரணமாயினும், எம்மொழியாயினும், அவைகளில் 'ஓம்' என்று ஒரு எழுத்து, கூறப்படவில்லை இலக்கண நூல்களால் கூறப்படாத ஒன்றை வேதம், எப்படி 'ஓம்' என்பதை ஒரு எழுத்தாகக் கூறலாம். வேதம். இலக்கண நூலுக்குமாறுபட்டதா? 'ஆம்' என்றும் கூறலாம். 'இல்லை' என்றும் கூறலாம். வேதம், மொழி இலக்கணம் கூறவந்த நூல் அல்ல! இறைத்தத்துவ இலக்கணம் உணர்த்த வந்த மாபெரும் நூல். அது, இறைத்தத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்கு, தத்துவ அடிப்படையில் ஓர் எழுத்தாக்கிக்காட்டியுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதநூல் கூறும் 'ஓம்' ஒரு எழுத்தா? இல்லை மூன்று எழுத்து இயைந்த ஒரு வரி வடிவம். இந்த வரி வடிவத்துக்கு உரிய ஒலி வடிவம் மூன்று எழுத்துக்களின் ஒலிகளால் ஆனது. ஒரு வரி வடிவத்துக்கு ஒரு ஒலி வடிவம்தான் உண்டு மொழி இலக்கணப்படி ஓம் என்பதில் மூன்று எழுத்துக்களின் ஒலிகளை இணைத்துக் காட்டுவதால் இலக்கண நூலுக்கு மாறுபட்டது வேத நூல். வியாகரணம், மொழிகளில் உள்ள எழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறுகின்றது. வேதம் வாழ்க்கையில் காணவேண்டிய தத்துவ இலக்கணத்தைக் கூறுகின்றது. அதனால், 'இலக்கணம்' என்ற அளவில் வியாகரணத்தோடு, வேதம் மாறுபட்டது இல்லை என்று கூறலாம்.

'அ, உ, ம்' என்ற எழுத்துக்களின் சேர்க்கைதான் 'ஓம்' என்பது இது, 'இறைவன், உலகம், உயிர்' என்ற மூன்றன் சேர்க்கையைக் காட்டுகின்றது. அதில் உலகத்தையும் உயிரையும் இயக்குவது இறை என்ற உண்மையையும் 'ஓம்' என்பதனுள் அடங்கியுள்ள எழுத்துக்கள் புலப்படுத்துகின்றன. 'அ' என்ற எழுத்து இறைவனை உணர்த்த வந்தது. 'அ' என்ற எழுத்துதான் எல்லா எழுத்துக்களும் இயங்குவதற்குக் காரணமாக உள்ளது.

'அ' என்ற எழுத்து இறைவனை உணர்த்த வந்தது. 'அ' என்ற எழுத்துதான் எல்லா எழுத்துக்களும் இயங்குவதற்குக் காரணமாக உள்ளது.

'அ, ஆ' அங்காப்பு உடைய 'என்பது எழுத்து இலக்கணம் கூறும் விதி. அதாவது வாயைத் திறந்தால் உண்டாகும் ஒலி 'அ, ஆ' என்பதாகும். எந்த எழுத்தைக் கூறுவதாக இருந்தாலும் வாயைத் திறந்துதானே ஆகவேண்டும்! ஆகவே, எழுத்துக்கள் அணைத்திலும் அகரத்தின் ஒலி கலந்து கொண்டிருக்கின்றது. அகரம் தனித்தும் இருக்கிறது: உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எல்லாவிதமான எழுத்துக்களிலும் தன்னைச் சேர்த்துக் கொண்டும் இருக்கின்றது. 'உ,' என்ற உயிரெழுத்தும், 'ம்' என்ற மெய்யெழுத்தும் ஒலிப்பதுகூட' அகர ஒலி அதனோடு சேர்ந்ததால்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த மூன்றனையும் வேதம்ஏதற்காக ஒன்றாக இணைத்தது? இறைத்தத்துவத்தைஉணர்த்துவதற்கு,அகரம்,அனைத்து எழுத்துக்களிலும் கலந்தும் இருக்கிறது. தனித்தும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் முதன்மையாகவும் (தலைமை) இருக்கிறது. இந்த மூன்றனுள் மிக மேம்பட்ட நிலையில் இருப்பது 'அ' என்ற எழுத்து.

'ஓம்' எனும் ஓர் எழுத்ததன் உள் உயிர் 'அ' என்பது, இது இன்றேல், எந்த உயிரெழுத்தும் இல்லை. மெய்யெழுத்தும் இல்லை. ஆனால் எந்த எழுத்துக்களில் அது கலந்திருந்தாலும் தான் கலந்திருப்பதை அது வெளியில் காட்டிக்கொள்வதில்லை அந்தந்த எழுத்துக்களின் வரி வடிவம் கண்ணுக்கும் ஒலி வடிவம் காதுக்கும் தெரியும் கண்களாலும் காதுகளாலும் காணமுடியாததாக எல்லா எழுத்துக்களிலும் ஒன்றாகத் தன்னைக் கரைத்துக் கொண்டு கிடக்கும் 'அ' என்ற எழுத்து இது, எழுத்திலக்கண நூலாருக்குப் புலனாகும். மற்றையோருக்குப் புலனாகாது.

இறைவன் தானான (சொரூப லட்சணம்) தன்மையனாகவும், உலகம், உயிர்களில்கலந்தவனாகவும், (தடஸ்தலட்சணம்), எல்லாவற்றிற்கும் முதன்மையானவனாகவும் இருப்பவன். அவன் கலந்து கிடக்கும் பொருள் வெளியில் தெரிகிறது. கலந்து கிடக்கும் **தன்மை** வெளியில் தெரிவதில்லை, யாருக்குத் தெரியும்? இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்க்கு, அந்த இறைவன் கலந்து கிடப்பது புலனாகும். பிறர்க்குப் புலனாகாது.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் திருக்குறளின் முதல் குறள்.

> 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு.

இதனை விளக்கவந்த உரையாசிரியர் பரிமேலழகர், 'அகரத்திற்குத் தலைமை, விகாரத்தான் அன்றி நாத மாத்திரை ஆகிய இயல்பான் பிறந்தலானும், ஆதிபகவற்குத் தலைமை, செயற்கை உணர்வான் அன்றி, இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க? என்று,அகரத்திற்கும் ஆதிபகவனுக்கும் உள்ள பொருத்தத்தை, தெளிவுபடுத்துகின்றார். (நாதம்-ஒலி: ஆதிபகவன்-இறைவன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' x என்பது, தொல்காப்பியர் மெய்யெழுத்தின் இயக்கத்துக்குக் கூறிய இலக்கணம். இந்த சூத்திரத்துக்கு, பொருள் கூறும் உரையாசிரியாகிய நச்சினார்க்கினியர், தமது தத்துவப் பேருணர்வோடு இதனை விளக்குகின்றார். 'தனி மெய்களினது நடப்பு, அகரத்தோடு பொருந்தி நடக்கும்.' என்பது (சூத்திரம்) நூற்பாப் பொருள். 'எனவே, ஒருவன் தனி மெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய உருவாக இயக்கும் இயக்கமும். கையாற் காட்சிப் பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்திநடக்கும் என்றவாறு.' என்பது உரையின் விளக்கம்.

'இறைவன் இயங்குதிணைக்கண்ணும், நிலைத்திணைக்கண்ணும். பிறவற்றின்கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு, எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும், தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல, என்னுங்குறளான், அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்.அதுபோல, இறைவனாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனர் உவமை கூறியவாற்றானும், கண்ணன், எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானேயெனக் கூறிய வாற்றானும் பிறநூல்களானும் உணர்க.' 'இதனான் உண்மைத்தன்மையும் சிறிது கூறினாராயிற்று.' என்பதுதத்துவப் பேருணர்வில் முகிழ்த்து வந்த தத்துவஞான இலக்கணத் தெளிவுரையாகும்.

இறைத்தத்துவ நோக்கில் இந்தச் சூத்திரத்துக்குப் பொருள் கண்டால். 'அகரம்' எல்லாஎழுத்துக்களோடும் கலந்து நிற்கும் போது, அது,தடஸ்தலட்சணமாகவும்: தனித்து நிற்கும் போது, சொரூபலட்சணமாகவும் இருப்பதாக உணரலாம். எல்லா எழுத்துக்களும் காரியம்: அந்த எழுத்துக்களை ஒலிக்கச் செய்கின்ற 'அ' என்ற எழுத்து காரணம்.

---

x தொல்காப்பியம்-மொழிமரபு. 13. (46)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அ' என்ற எழுத்து இல்லையேல், எந்த எழுத்தும் ஒலிக்க முடியாது. நெருப்பு இல்லையேல் புகையில்லை. அது போல இறைவன் இல்லையேல் எதுவும் இல்லை. 'அ' இன்றி எந்த எழுத்தும் இசைக்காது. அவன் அன்றி எதுவும் அசையாது. இறைவன், உலகம், உயிர் இந்த மூன்றும் ஒன்றாக இயைந்திருந்தாலும். உலகம் என்ற ஒன்றுமட்டுமே வெளியில் காணப்படுகின்றது. மூன்றன் சேர்க்கையும் ஒன்றன் வடிவமாக இருக்கும் தத்துவத்தைக் காட்டுவதற்காகத் தான், மூன்றெழுத்துக்களைச் சேர்த்து வைத்து, 'ஓம்' என்ற ஒரு எழுத்தாகக் காட்டியுள்ளது வேதம்.

இந்தக் கருத்தை, திருமழிசை ஆழ்வார், தமது திருச்சந்த விருத்தத்தில், 'தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்' என்று அருளிச் செய்துள்ளார். ✱

இறைவனை, எழுத்துக்களில் அகரமாகவும், வெளிப் பார்வையில் (நெருப்பாகவும்) அக்கினியாகவும் காட்டி, கடவுள் தத்துவத்தை உணர்த்துகின்றது இந்தக் கவிதை.

இறைவனை அகரமாகக் காட்டிய நூல்களைப் போல, அப்பெருமானை நெருப்பாகக் காட்டிய நூல்களும் உண்டு.

'பிரம நேயப் பிரம நெருப்பிடை
பிரம மாகிய மந்திரம் தன்னால்,
பிரம மாய சருவுடன் பெய்துபின்,
பிரம மேஅடை வார்உளர் பின்னுங்கேள், ? O

என்று, பிரமம் நெருப்பாக நிற்பதை பட்டனார் கீதை காட்டுகின்றது. கம்பரை. தத்துவப் பேருண்மையைக் கண்டு, காட்டும் மாபெரும் கவிஞராகவும், கவிச்சக்கரவர்த்தியாகவும் புலப்படுத்துகின்ற சில கவிதைகளுள் இதுவும் ஒன்று எனக் கூறலாம்.

✱ திவ்வியப் பிரபந்தம்-755. O பட்டனார் கீதை. 18.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடலும் அலையும் :

காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின் திருக்குஅலால் சொல்லு வோர்க்குஎலாம்
வேலையும் திரையும்போல் வேறு பாடுஇலான். ※

'உலக இயக்கத்துக்குக் காரணமானவன் இறைவனே' என்று உணர்த்திய உத்தமச் சிறுவன், 'உலகமும் அவனும் ஒன்றே' என்றும், அந்த இறைவனினின்றும் உலகம் வேறு பட்டது அன்று என்றும் தெளிவு படுத்துகின்றான். அந்தத் தெளிவுரைக்கு உதவும் வண்ணம் ஒரு உவமை வருகின்றது இந்தக்கவிதையுள் ஒரு மலர் மாலை. அதில் இணைக்கப்பட்ட மலர்கள், நிறத்தாலும், உருவத்தாலும், மணத்தாலும் வேறு பட்டவைகள். கண்ணுக்கு வேறுபாடாகத் தோன்றும் மலர்கள் ஒன்றாக இயைந்ததும், அவை ஒரு அழகிய மணம் நிறைந்த மாலையாகத் தோற்றமளிக்கிறது.

வேறுபட்ட மலர்களை ஒன்றாக இணைத்தது ஒரு நார் தான். மலர்களை இணைத்து மாலையாக்கிய அந்த நார் வெளியில் தெரிவதில்லை. மலர்கள் மாலை ஆயிற்று. இது காரியம். மலர்கள் மாலை உருவம் பெறுவதற்குக் காரண மாகயிருந்தது நார். காரணமாகயிருப்பது தன்னை வெளியில் காட்டிக் கொள்வதில்லை. வேறுபட்ட மலர்களின் சேர்க் கையே மாலைக்கு அழகு. உலகம் பலப்பல விதமான தோற் றப் பொருள்களை உடையது. செயல்களாலும், அமைப்பினா லும், உருவங்களாலும் வெவ்வேறுபட்ட பொருள்களால் நிரப்பப்பெற்றதுதான் உலகம். இவைகளை எல்லாம் ஒன் றாக இணைத்து உலகமாகக் காட்டி, அதனை இயக்கிக் கொண்டிருப்பவன் இறைவன்.

கம். ராமாயணம் 6265. சூலை - குடலைப்பற்றிய ஒரு நோய். இங்கு அந்த நோயால் ஏற்படும் மனத் துன்பத்தைக் காட்ட வந்தது. திருக்கு-மாறுபாடு: வேலை-கடல்: திரை-அலை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலர்களின் வேறுபாடே, மாலைக்கு அலகு தருவது போன்று, பொருள்களின் பல்வேறு வகையான தோற்றங் களே உலகுக்கு அழகு தருகின்றது. மலர்கள் மாலை உருவம் பெருவதற்கு நார் காரணம். பல பொருள்களின் சேர்க்கை உலகம் என்ற பெயர் பெறுவதற்குக் காரணம் இறைச் சக்தி. மாலை உவமையாக்கப் பட்டது இந்தக் கருத்து வெளிப் பாட்டுக்கு மட்டும் அல்ல! இறைத்தத்துவத்தை உலகுக்கு உணர்த்த வந்த சமயம் மாலை போன்றது. அச்சமயத்தை எடுத்துக் கூறும் சமய வாதிகள் மாலையில் உள்ள வேறு பட்ட மலர்களைப் போன்றவர்கள். வேறுபாடு, சமய வாதி களிடம்தான். அவர்கள் கூறும் சமய உண்மை அனைத்தும் இறுதியில் இறைவனை அடைய வேண்டும் என்ற குறிக் கோளைக் கொண்டதே ஆகும்.

வேறுபட்ட சமயவாதிகள் அனைவரிடமும், தான் எந்த வேறுபாடும் இல்லாது கலந்து கொள்வான் இறைவன் வேறுபாடற்ற இறைவனின் தன்மையை விளக்க, வேறு உவமை கவிதையின் இறுதியில் வருகின்றது. ஆழ்ந்து, அகன்று, விரிந்து, பரந்து கிடக்கும் கடல், அதனுள் அலைகள் தோன்றிய வண்ணம் உள்ளன தோன்றிய அலைகள் ஒன்றற்கு ஒன்று மோதிக் கொண்டும் ஓலமிட்டுக் கொண்டும் அலைந்து கொண்டே உள்ளன.

கடலினின்றும் வேறாகத் தோன்றினாலும், அந்த அலைகள் கடலுக்கு வேறுபட்டதல்ல. அவைகள் கடலில் தோன்றி கடலிலேயேதான் அடங்கும்.

அதுபோல, பல்வேறுபட்ட பொருள்களை உடைய உலகம். இறைவனிடத்திலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும். இறுதியில், தோன்றிய மூல மூர்த்தியிடமே அடங்கிவிடும் உலகம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடல் இறைவனுக்கு உவமை. அலை,உலகத்துக்குஉவமை. அலைகடலுக்கு அந்நியமானது அல்ல. உலகமும்இறைவனுக்கு அந்நியமானதல்ல. கடல் இன்றி அலை இல்லை: இறை இன்றி உலகம் இல்லை. தோற்றம், எங்கிருந்ததோ அங்கேயே அடக்கம். 'வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்' என்பது கவிதைத் தொடர்.

> ''காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
> மாலையின் மலர்புரை சமய வாதியர்''

என்ற கவிதைப் பகுதியில், காலை மாலை முரன்பட்ட சொற்கள். இது முரண்தொடை என்ற அமைப்பில் கவிதைக்கு அழகு சேர்க்கிறது. 'காலை' என்பது காலப் பெயர். காலை நேரத்தைக் குறிக்க வந்தது. 'மாலை' என்பது நேரத்தைக் குறிக்க வரவில்லை. மலர்களால் கட்டப்பட்ட மாலையைக் குறிக்க வந்த பொருட் பெயர்.

மாறுபட்ட சொற்கள் கவிதைக்கு அழகைத் தருகின்றன. மாறுபட்ட கருத்துக்களை உடைய சமயவாதியர் பேச்சுக்கள் சமய உண்மைக்கு உதவுகின்றன. மாறுபட்ட தோற்றம் பெற்ற பொருள்கள் உலகத்துக்குப் பொலிவைத் தருகின்றன. மாறுபட்ட மலர்கள் மாலையை அணி செய்கின்றன. மாறுபட்ட அலைகள் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவைகள் எல்லாம், இறை உண்மையை வெளிப்படுத்துவனவேயாகும்.

'வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான், என்ற கவிதைத் தொடர்,

> 'தன்னுளே திரைத்தெழும் தாங்கவெண் தடங்கடல்
> தன்னுளே திரைத்துஎழுந்து அடங்குகின்ற தன்மைபோல்,
> நின்னுளே பிறந்துஇறந்து நிற்பவும் திரிபவும்
> நின்னுளே அடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற, திருமழியாழ்வாரின் திருச்சந்த விருத்தப் (10) பாசுரத்தையும்,

'நுரையும் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும். நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்.'

என்ற பட்டினத்துப் பிள்ளையாரின் 'கோயில் நான்மணி மாலை' (24) யில் உள்ள கவிதைப் பகுதியையும் நினைவுகூரச் செய்கின்றது.

நினைவில் நிற்க வேண்டிய நிறைவுப் பேச்சு :

'இன்னதோர் தன்மையன் இகழ்வுற்று எய்திய
நல்நெடுஞ் செல்வமும் நாளும், நாம்அற
மன்னுயிர் இழத்திஎன்று அஞ்சி வாழ்த்தினேன்.
சொன்னவன் நாமம்என்று உணரச் சொல்லினான்.' O

'அப்பா! இத்தகைய இயல்பினனாகிய இறைவனை இகழ்ந்ததால், நீ அடைந்திருக்கும் அரசச் செல்வத்தையும், உன்னுடைய பெயரையும், வாழ் நாளையும். நிலையான உயிரையும் இழந்துவிடுவாய் என்று அஞ்சுகின்றேன். அந்த அச்சத்தால், உனக்குக் கேடு வராதிருப்பதற்காக, வேதங்களால் சொல்லப்பட்ட இறைவனாகிய நாராயணன் திருப்பெயரைச் சொல்லி வாழ்த்தினேன்.' என்று, மேதை மைந்தனாகிய பிரகலாதன், பேதைத் தந்தையாகிய இரணியனது மனத்தில் நன்கு பதியம் வண்ணம் எடுத்துரைத்தான்.

மைந்தனது அறிவுபூர்வமான நிறைவுப் பேச்சு, தந்தையின் செவிவழி புகுந்து, அவன் உள்ளத்தில் தங்கவேண்டும். தங்கியதா? இல்லை. பொங்கியது. எது? கோபம். கோபம் பாபத்துக்குத்தானே வழி வகுக்கும்? வகுக்கிறது இரணியன் வாய்வழியாக.

O கம். ரா. 6266. நாமம்-பெயர்: (நாம் எனக் குறுகிவந்தது) உணரச் சொல்லுதல் - கேட்பவர் மனத்தில் பதியம் வண்ணம் உரைத்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

பகைமைப் போக்கும் பக்திப் பெருக்கும்

'இட்டுஉண்ணும் ஆலம், இருந்த இனிப்பினை
எண்ணி மகிழ்ந்துஆடும்
கட்டி உறும்கனி முக்கனி தாமோ!
கன்னல் தருப்பாகோ!
எட்டி வரும் அமுதோ! களிஆர இருந்து
ஒழுகும் தேனோ!
சிட்டர் தரும்கவி சாறோ! சீதரன்
திருநாமச் சுவையோ.'

சுவையும் சுமையும்:

எந்த ஒரு திருநாமம், மைந்தனுக்கு, தேனும், பாலும், கன்னலும், அமுதமுமாய் தித்தித்துக் கொண்டிருந்ததோ, அந்தத்திருப் பெயர், தந்தைக்கு, சுவையாகத் தோற்றவில்லை: சுமையாகத் தோற்றியது. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களில் ஒருவருக்குச் சுவையாகவும் மற்றொருவருக்குச் சுமையாகவும் அமைவது, ஒரே திருப்பெயர்தான்.

மைந்தனுக்குச் சுவை: தந்தைக்குச் சுமை: மைந்தனை ஆனந்திக்கச் செய்யும் சுவையாக இருப்பது எதுவோ, அதுவே, தந்தைக்கு, அழுத்தும் சுமையாக நிற்கின்றது. ஏன்?

பக்தி உணர்வுக்குத் திருப்பெயர் சுவை: பகைஉணர்வுக்குச்சுமை. 'நாராயணன்' என்ற திருப் பெயருக்குரிய இறைவனை, 'சுவையன்' என்றே நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார், (1.9 1) அப்படியாவருக்கும் சுவை தருபவனாக உள்ள ஒருவனைப்பகைவனாக்கிக் கொண்டான் தந்தை இரணியன். அதனால், அந்தத் திருப்பெயர் இவனுக்குச் சுமையாக நின்று இவன்உள்ளத்தை அழுத்துகிறது. சுவைதருவது எதுவோ. அதனோடு பக்தன் கலந்து விடுவான். சுமையாக இருப்பதைக் கீழேதள்ளி அழித்துவிடு எண்ணுவான் பகைவன்.

உடல் உறவால் தந்தையாகயிருந்தவன், உள்ளத்து உணர்வால் பகைவனாகின்றான், மைந்தனாகயிருந்தவன் உயிர் உணர்வால் பக்தனாகின்றான். தந்தைபகைவன்: மைந்தன்பக்தன். தந்தையின் பகைமைப் போக்கு,மைந்தனின் பக்தியைப் பெருக்குகிறது.

பாத்மோத்ரபுராணம். நரமடங்கல் எழுந்த படலம் 192.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோபம் :

எந்த உள்ளத்தில் பகைமை உணர்வு தோன்றுகின்றதோ, அதனைச் செயல்படுத்துவதற்குரிய கோப உணர்வும் அங்கேயே தோன்றிவிடும்.

இரணியனின் பகைமை உள்ளத்தில் பொங்கி எழுகின்றது கோபஉணர்வு. எதற்கு? எதிராக எழுந்துள்ள பக்தி உணர்வினை இல்லாது ஒழிப்பதற்கு. கோபம், யாரை அழிப்பதற்காகக் தோன்றுகின்றதோ, அவரை அழிப்பதற்கு முன்பு, எந்த உள்ளத்தில் தோன்றியதோ அந்த உள்ளத்தினரை முதலில் அழித்துவிடும். அதனால். இதற்கு, சேர்ந்தாரைக் கொல்லி' என்று பெயர் கொடுக்கின்றார் வள்ளுவ ஆசான்.

'சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.' (306) என்பது கோபத்தைப் பற்றிய திருக்குறள்.

'சினம் என்னும் நெருப்பு, தனக்கு இடமானவரையே யன்றி, அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையும் சுடும்' என்று உரை கூறிய பரிமேலழகர், 'தன்னையும் வீழ்த்தும், எடுப்பாரையும் அகற்றும் என்று. விளக்கம் கொடுக்கின்றார்.

இரணியனிடம் தோன்றிய கோபம், பிரகலாதனை அழிப்பதற்கு. ஆனால். அது அவனையே அழித்துவிடும் என்பது முதலில் தெரிவதில்லை. கோபம் யாரிடத்தில் தோன்றுகின்றதோ, அவரது அறிவை முதலில் அழித்துவிடும். அப்படி அறிவு அழிந்த நிலையில் இரணியன் செயல் படத்துணிந்தான்.

கொலையாளிகளை அழைத்தான் கொடியோன். அவர்களிடம், இவனைக் கொல்லுங்கள் (கோறிர்) என்று உத்தரவிட்டான். காரணம், 'ஈறு இல் என்பெரும் பகைஞனுக்கு அன்புசால் அடியன்யான்' என்று இவன் கூறுகின்றான். பகைவனுக்கு அடியவன், எனக்குப் பகைவனே. இனி இவன் எனது மைந்தன் அல்லன்: பகைவன். பகைவனைக் கொல்வது அரசனின் கடமை. அதனால், எனது கடமையை நிறைவேற்று, இவனைக் கொல்லுமாறு ஆணையிடுகின்றேன்' என்று கூறினான் கொடியோன். 'தந்தை மைந்தன்' என்ற பாசத்தை அறுக்கிறது பகை உணர்வு.

சினம்-கோபம்: கொல்லி-கொல்வது: ஏமம்-பாதுகாப்பு: புணை-தெப்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொல்லுதலும் வெல்லுதலும்:

கொடியவனின் ஆணையை ஏற்று வந்த கொலை யாளிகள், அடியவனைக் கொல்வதற்கு முதலில் ஆயுதங்க ளைப் பயன்படுத்தினர். ஆயுதங்கள், குத்துதல், எறிதல், வீசுதல், இழுத்தல் முதலிய காரியங்களால் கொலை வேலையைச் செய்வன. அவ்வளவும் அன்பன் பக்கம் நெருங்கியதும் 'முறிந்து நுண் பொடி ஆயின.' அடுத்து, அக்கினி, குண்டத்தில் அன்பனைத் தள்ளினர். அந்த நெருப்பு இலங்கையில். அனுமனது வாலில் வைக்கப் பட்ட நெருப்பு குளிர்ந்தது போன்று, குளிர்ந்தது. பிறகு, கொடிய பாம்பு களின் நடுவில் தள்ளப் பட்டான் பிரகலாதன். அவைகள் அன்பனைத் தீண்டின. ஆனால், விஷத்தைக் கக்கவில்லை இதுவும் பயனற்றுப் போயிற்று.

யானையின் காலில் இட்டு இடறச் செய்யத் துணிந் தார்கள் கொலையாளிகள். யானை வந்தது சிறுவனைக் கொல்வதற்குப் பதிலாக அவனை வலம் வந்து வணங்கி விட்டுச் சென்று விட்டது. எதுவும் பயனற்றுப் போகவே, இரணியனின் ஆணைப்படி, அன்பனைக் கல்லோடு சேர்த்துக் கட்டி கடலில் பாய்ச்சினர். 'நல் துணையாவது நாராயண நாமமே' என்று சொல்லிக் கொண்டு கடலில் மிதந்தான் பிரகலாதன் எப்படி?

"சிலையில் பொலிவுற்றான், சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப் பொலீ கின்றான்'

அன்று, பிரளய காலத்தில் ஆலமரத்தின் இலைமேல், இறைவன் இருந்தது போன்று (சிலை) கல்லின் மேல் கடலில் மிதந்தான் அன்பன்.

இத்தனைக் கொலைக் கருவிகளும் அவனிடம் பய னற்றுப் போயின- ஏன் அவன் பயமற்றவன். (தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்.' தூயவன்தனைத் துணை என உடையவன்.' 'தூயவன் துணிவு ஒன்றா, அறிந்த நாயகன் சேவடி மறந்திலன்; அயர்த்திலன் அவன் நாமம்?' 'அரி என்று தொழுது நின்றனன். நாயகன் தான் இணை.' 'ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம் ஓதுற்றான்.' அதனால் கொடிய வன் செயல் அடியவனிடம் ஒன்றும் செய்யவில்லை. இங்கு வெல்லுதலே நடைபெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9

தூயோன் துதித்தல்

ஆதிப் பரமாம் எனில், அன்று எனல் ஆம்,
ஓதப் பொருள்நூல் கள்உலப் பிலவால்
பேதிப் பன;நீ அவைபேர் கிலையால்
வேதப் பொருளே விளையா டுதியோ.' (6298)

தூண் பாருளம் இண் பாழுளம் :

உடலுக்கு எவ்வளவு தொல்லைகள் வந்தாலும், நல்லன வந்தாலும், அவைகளைத் துன்பமாகவோ இன்பமாகவோ, கருத மாட்டார்கள் பக்தர்கள். எதனையும் பகவான் தரும் அருளாகவே, எண்ணுவார்கள் அந்தப்பக்தர்கள்.

துயரங்களிலும், துவளாது இருந்து, இறைவனை வாழ்த்திக்கொண்டிருப்பதால், பக்தர்கள் தூயோராகின்றனர். இவர்கள் உலகநெறிக்கு அப்பாற்பட்டவர்கள். இங்கு, தாயுமானஅடிகள் அருளியபாடல் ஒன்று சிந்திக்கத்தக்கது.

'வாயார உண்டபேர் வாழ்த்துவதும், நொந்தபேர்
வைவதும், எங்கள் உலக-
-வாய்பாடு! நிற்க நின் வைதிக ஒழுங்கு, நினை
வாழ்த்தினால் பெறுபேறுதான்
ஓயாது பெறுவர்என முறையிட்டது,' O

தந்தையால் துன்புறுத்தப்பட்ட மைந்தன் பிரகலாதன், தூயோனாக இருத்தலால், உலக ஒழுக்கத்தை மேற்கொள்ளாமல். வைதிக ஒழுங்கில் நின்று இறைவனை வாழ்த்துகின்றான்: துதிக்கின்றான்.

துன்பம் தொடர்ந்த காலத்தும், இறைவனைத்துதிப்பவர்களே தூயோர்கள். அவர்களே, இறையருளை உறுதியாகத் தவறாது பெறுவார்கள். பிரகலாதனது பக்தி உள்ளத்தில் ஊற்றெழுந்து ஓடிவரும், பகவானைப் பற்றிய துதிகளைப் பத்துப் பாசுரங்களில் வடித்துக் கொடுத்துள்ளார் கம்ப நாட்டாழ்வார். பகவான் அவதாரமும் பத்துதானே! அதனால் துதிப்பாடல்களும் பத்தாகவே அமைந்தன போலும்!

O சச்சிதானந்த சிவம்-8. உலக வாய்பாடு-உலக ஒழுக்கம். ஓயாது-தவறாமல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியார் அடியேன்:

பக்தர்கள் பகவானை எப்போதும் துதித்துக்கொண்டிருப்பவர்கள்தான். துன்பம் எதிர்வரும் போது, இன்னும் ஆழ்ந்த உணர்வோடு, துதிப்பார்கள் தூய அடியார்கள். 'நோயுளார் வாயுளான் என்பது அப்பர் அடிகளின் அனுபவ அருள்வாக்கு. துன்பம் நிறைந்தவர் நாக்கில், இறைவன் திருப்பெயர் தவறாது வந்து தங்கிக் கொள்ளும்.

அடியார் அடியேன் எனும்ஆர் வம்அலால்,
ஒடியா வலி,யான் உடையேன் உளெனோ?
கொடியாய்! குறியாய்! குணம்ஏதும் இலாய்!
நெடியாய்! அடியேன் நிலைநேர் குதியோ? (6292)

'இறைவா! என்னிடத்தில் ஆர்வம் உண்டு: அகங்காரம் இல்லை. அந்த ஆர்வம் உனக்கு அடியவர்க்கு அடியானாக என்னை வாழச் செய்யும். அதனால். அழியாத (ஒடியாவலி) ஆணவம் தானாக அழிந்து விட்டது என்னிடத்தில். யான், அடியேன்: அகங்காரத்தினன் அல்லேன்.'

'அகங்காரத்தின் துன்புறலாம்: அடியவர் துன்புறலாமா? அடியவர்கள், தமது உடலுக்கு வரும் தொல்லைகளைத் துன்பமாகக் கருத மாட்டார்கள். ஆனால், உலகத்தார், அவைகளைத் துன்பமாகக் கருதி, பக்தர்கள் துயர் உறுகின்றனர் என்று சொல்வார்களே! அதனால், அடியேன்படும் இத் துன்ப நிலையில் நீ எதிர்ப்பட்டு அருள் புரியாயோ' (அடியேன் நிலை நேர்குதியோ?)

'அடியார்களுக்கு யார் கொடுமை இழைக்கிறார்களோ அவர்களிடம் நீ கொடுமையாக இருப்பவன். (கொடியாய்) நீ இன்ன தன்மையுடையவன் என்று யாவராலும் குறித்து ஒண்ணாதவாறு, மனவாக்குக்கு அப்பாற்பட்டு நிற்பவன். (குறியாய்) வேண்டுதல் வேண்டாமை இல்லாத நீ விருப்பு வெறுப்பு என்ற தீயகுணம் எதும் அற்றவனாக உள்ளவன் (குணம் ஏதும் இலாய்) அண்டங்கள் எல்லாம் அணுவெனக் குறுகித்தோன்ற நீ யாவற்றினும் உயர்வற உயர்ந்த நெடியவன்.' (நெடியாய்)

'அத்தகைய பெரியோனாகிய நீ சிறியேனாகிய எனது துன்பத்தைப் போக்கி அருள வேண்டாமா? என்று பிரகலாதன் பெருமானிடத்தில் வேண்டுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விதி :

'கள்ளம் திரிவா ரவர்கை தவம்நீ :
உள்ளம் தெரியாத உனக்கு உளவோ?
துள்ளும் பொறியின் நிலைசோ தனைதான்-
வெள்ளம் தரும்இன் அமுதே விதியோ?' (6293)

'கொடியவர் யார்? அடியவர் யார்? என்பது உனக்குத் தெரியும், கொடியவரிடம் உனது கொடுமையைக் காட்டுவதும் அடியவரிடம் உனதுஅருளைக் காட்டுவதும் விதி. (முறை) அம் முறை மாறியதோ இங்கு? அடியவனாகிய என்னிடம் இந்தவேதனைவந்தது எதற்கு? சோதனை செய்வதற்கா?'

'அந்தச்சோதனையும் கூட, துள்ளித்திரியும் ஐம்புலன் ஆசைகட்கு உட்பட்டிருப்பவர்களிடம்தானே நடத்தவேண்டும்? ஆசைக்கு அகப்படாத அடியார்களை ஆட்கொள்வதற்கு, இந்தச்சோதனையா? இது முறைதானா? (விதியோ)

'வஞ்ச மனம் உடையவர் யாரோ, அவரது வஞ்சனையை அறிந்து, அவரை ஒழிப்பதற்கு அவரும் அறியாமல் மறைந்து ஒழுகுபவன் நீ. அத்தகைய உனக்கு எனது உள்ளக் கருத்து தெரியாமல் இருக்குமா?'

'நீயோ, பாற்கடலில் விளைந்த இனிய அமுதமாக இருப்பவன்.' அதனால், உனது அருள் அமுதத்தையே எனக்குத் தந்தருள வேண்டும். இதுதான் விதி. (முறை), என்று அடியவன் ஆண்டவனிடம் விண்ணப்பித்துக்கொள்கின்றான்.

'உள்ளம் தெரியாத உனக்கு உளவோ?' என்ற கவிதைத் தொடர்,

'சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை
தேவ பிரான் அறியும்:
சிந்தையி னால்செய்வ தான்அறியாதன
மாயங்கள் ஒன்றும் இல்லை, (7.10.10)

என்ற திருவாய் மொழிப் பாசுரப் பகுதியைச் சிந்திக்கச் செய்கின்றது.

'துள்ளும் பொறியின்நிலை' என்றதொடர், 'புள்ளுவர் ஐவர்வேடர் புனத்திடைப்புகுந்து நின்று துள்ளூர், என்ற அப்பர் அருள்மொழியை நினைவு கூரச் செய்கின்றது. (477.5)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உனது நெறியில் முறையல்லாதன நடவாது. எனக்கு வந்த வேதனை, நான், முன்பு தீவினை செய்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றது' 'செய்யாதனவோ இலை தீவினை தான்' என்று தனக்கு வந்த சோதனையை, முறைமைக்கு (விதிக்கு) உள்ளாக்கிக்கொள்கின்றான் ஞானநாயகன்.

அறிவும் அறியாமையும் :

'உனது; செயல்களை, தமது அறிவு கொண்டு ஆராய முற்படுகின்றனர் சிலர். அவர்கள், எவ்வுயிர்க்கும் இறைவனாகிய உனது அருளை நாடாதவர் ஆவர். நீயோ, அறிவு ஒன்றனையே துணையாகக்கொண்டு, உன்னைக் காண்பவர்க்கு, அவரது அறிவுக்கு எட்டாது அப்பாற்பட்டு நிற்கிறாய்.' (நீ அப்புறம் நிற்க)

'அளவுடை ஐம்புலன்கள் அறியாவகையால் அருவாகி நிற்கும் உன்னைத் தமது அறிவால் அளந்து கண்டுவிட முடியும் என்று எண்ணுவதே அவரது அறியாமை.' உன் செயல்களை உள்ளபடி உணர்ந்து கொள்வதற்கு அவர் கல்வியினால் பெற்ற அறிவு துணை செய்யவில்லை என்று உணரும் போதுதான் அவரது அறியாமை அகல்கின்றது. அறியாமை அகன்ற பிறகு அவர்கள் உனக்கு அடியவர் ஆகின்றனர்.' 'நானோ, அன்பினால் அடியவன் ஆனேன். எனக்கு இந்தச் சோதனையா' என்று வேதனையோடுகூற முற்பட்ட பிரகலாதச் செல்வன் அதனையே சாதனையாக்கிக் கொண்டான்.

நாயகர் :

'யாமே தனிநாயகர், எத்தகைய செயல்களும் எம்மால் செய்துமுடிக்கப் பெறுவனவே. யாமே பரம் பொருள்.' என்று செருக்குற்றுக் கூறினர் புராதனர். (பழையவர்-தேவர்) 'முடிவில் ஆற்றலும் முற்றுணர்வும் உடையோம் யாம்? என்று எண்ணிக் கொண்டிருந்த 'தேவர்களும் திருமாலாகிய உனது துணையின்றி எந்தத் தொழிலையும் செய்ய இயலாதவர்களாகின்றனர். அப்படியிருக்க, மண்ணுலகத்தவர், 'நான்தான் தெய்வம்' என்றும், 'நானே நாயகன்' என்றும் சொல்லிக் கொண்டு திரிவது எவ்வளவு பெரிய அறியாமை.' என்பது பிரகலாதன் உரைத்த கருத்துப் பொருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேலையும் விளையாட்டும்:

வேலை (தொழில்) சுமையாகயிருக்கும்: விளையாட்டு சுவையாகயிருக்கும். சுமையாகயிருக்கும் வேலையையே, (தொழில்) சுவைதரும் விளையாட்டாக ஆக்கிக் கொள்பவன் பேராற்றல் பெற்றவனாகயிருக்க வேண்டும். இந்த உலக இயக்கத்துக்கு, படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழில்களும் நடைபெற்றேயாக வேண்டும். இவைகளைச் செய்வதற்குரிய அளவற்ற ஆற்றல் பெற்றவன் ஒருவன் உண்டு. அவனே இறைவன். இதனை, கம்ப நாட்டாழ்வார், காவியத்தின் தொடக்கத்திலேயே, 'உள ஆக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகு இலா விளையாட்டு உடையார் எவர்? அவர் தலைவர் என்று கூறிவிட்டார்.

மூன்று வேலைகளையும், விளையாட்டாகச் செய்து கொண்டிருப்பவர்தான் தலைவர் என்று கூறிய கம்பர், அந்தத் தலைவரது வேறு ஒரு விளையாட்டை, பிரகலாதன் வாயிலாக இங்குக் கூறுகின்றார். அந்தத் தலைவர், இங்கு 'வேதப் பொருள்' என்று விளக்கிக் காட்டப்படுகின்றார்.

நூல்கள் :

பராத தேசத்துப் பாரம்பரியச் சொத்து ஒன்று உண்டு என்றால், அது நம் நாட்டு ஞானப்பெருநூல்கள். முற்றும் துறந்த முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும், பக்தர்களும் நமக்காகத் தேடி, வைத்த ஞானப் பெருஞ் செல்வங்கள் அவைகள்.

அந்தப் பெரியவர்கள் தத்தமது ஞான அனுபவத்தில் கண்ட தத்துவப் பேருண்மைகளை நூல்களாக வடித்துத் தந்தனர். ஒருவரது அனுபவம் போன்று மற்றொருவரது அனுபவம் இருக்காது. அனுபவங்கள் மாறுபடும் உண்மை மாறுபடாது. அனுபவ மாறுபாட்டால் நூல்களும் பலவாக விரிந்தன. அனுபவ மாறுபாட்டை வைத்துக் கொண்டு பேசுபவர்களுக்குத்தான், சமய வாதியர் என்று பெயர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானஅனுபவ மாறுபாட்டால், அந்தத்தத்துவஞானிகள் கண்ட உண்மைப் பொருளுக்கு அவர்கள் கொடுத்துள்ள பெயர்களும் வேறுபடும். உண்மைப் பொருள் ஒன்றுதான் அதற்குக் கொடுக்கப்பட்ட பெயர்கள் வேறுபாட்டின் காரணமாக 'சமயங்கள் பலவாயின. 'சமயங்கள் பல: உண்மை ஒன்று.' என்ற தத்துவத்தை, தாயுமான அடிகள் தமது ஞான அனுபவத்தில் கண்டு கூறியது இங்கு சிந்திக்கத்தக்கது.

'சமய கோடிகள் எலாம், 'தம் தெய்வம் எம் தெய்வம்' என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதுஎது?, (1) என்பது தாயுமான சுவாமிகளின் ஞான அனுபவப் பேருண்மை. ஒரு நூல், 'அதுவே முதன்மை உடைய பரம் பொருள்' என்று சொன்னால், மற்றொரு நூல், 'அது பரம் பொருள் அல்ல' என்று மறுத்துக் கூறும். இப்படி மாறுபாட்டுக் கருத்துக்களைக் கூறும். சமயதத்துவ நூல்கள் எத்தனையோ உள்ளன. 'ஆதி, பரம் ஆம் எனில்,' அன்று, எனல் ஆய், ஓது அப்பொருள் நூல்கள் உலப்பிலவால்' என்பது கவிதைப் பகுதி.

அவைகள் ஒன்றுக்கு ஒன்று முரண்படுவன. அவைகளைக் கற்பவர் உள்ளத்திலும் மாறுபாடுகளே தோன்றும். (பேதிப்பன) இவ்வாறு ஒன்றை ஒன்று ஒவ்வாதனவாய் மாறுபடும் சமயமெலாம் புகுந்து நோக்கினும் பரம்பொருளாகிய உனது இருப்பினையே காட்டும்?

'மாற்ற வொண்ணாதனவாய், அவை எல்லாவற்றிற்கும் மேலாய், அவற்றை வகுத்து நிறுத்தியது உனது திருவிளையாடலே. இத்தகைய திருவிளையாடல்களைச் செய்யும் நீயே வேதப் பொருளாய் விளங்கும் பெருமானாக உள்ளாய்.' பலப் பல சமயங்களை வகுத்துக் கொடுத்த இறைவனது திருவிளையாடலைப்பற்றி நம்மாழ்வார் கூறியது இங்கு நினைவு கூரத் தக்கதொன்றாகும்.

வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல வாக்கி அவையவைதோறு
அணங்கும் பலபல வாக்கிநின் மூர்த்திபரப்பி வைத்தாய்
இணங்குநின் னோரையில்லாய் நின்கண் வேட்கை எழுவிப்பனே'

(திவ்ய - 2573)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுமை :

'அம்போ ருகனார் அரனார் அறியார்;
எம்போ லியர்எண் ணிடின்,என் பலவா?
கொம்போடு, அடை,பூ, கனி,காய் எனினும்
வம்போ மரம்ஒன்று எனும்வா சகமே? (6299)

வேதப் பொருளாக விளங்கும் நாராயணன், சமயங்கள் பலப்பலவற்றை ஆக்கிவைத்தது. அவன் திருவிளையாடல். சமயங்கள் பல ஆனாலும், அவைகளை எல்லாம் ஒன்றாக இணைத்துப் பார்க்கும் திறன் ஞானிகளுக்கு உண்டு. தமது ஞானக்கண்ணால் காணும் ஞானிகள், 'நாராயணன் ஒருவனே அனைத்து சமயங்களாகக் காட்சியளிக்கின்றான்' என்று கூறுவார்கள். (நீ அவை பேர்கிலையால்) 'ஒருவனே, பல சமயங்களின் தோற்றத்துக்குக் காரணமாக உள்ளான்' என்ற உண்மையை, சென்ற கவிதையில் விளக்கிய கம்பர், இக்கவிதையில் 'தோற்றம் பல அடிப்படை ஒன்று' என்ற தத்துவத்தை ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவாக்குகின்றார்.

ஒரு மரம். அதில் கிளை, இலை, மலர், பழம், காய் என்ற பல உறுப்புக்கள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான உருவம், நிறம், மணம், அமைப்பு ஆகியவைகள் இயற்கையாக அமைந்திருக்கும். வெளித்தோற்றத்தில் இவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒருவிதமான அழகு உண்டு. அந்த அளவில் அவைகள் தம்மைக் காண்பவரைத் தம்பால் கவர்ந்து கொள்ளும் தன்மை உடையன.

மலரைப் பார்ப்பவன், அதன் அழகிலும், மணத்திலும் தன் மனத்தைச் செலுத்திவிடுவான்: பிறவற்றைப் பார்க்க மாட்டான். இது போலவே மரத்தினது ஒவ்வொரு உறுப்பும் காண்பவரை தம்மிடம் இழுத்துக் கொள்ளும்.

இத்தனை கவர்ச்சிக்குரிய உறுப்புகள் அனைத்தும். எதுவும் மரத்தைவிட்டு தனித்து நிற்க முடியாது. மரத்தை விட்டு பிரிந்தால் அவைகள் தமது அழகையும் இழக்கும்:

அம்போருகம் - தாமரை: அரன் - சிவபிரான்: அடை - இலை: வம்பு - புதுமை: அம்போருகனார் – தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்ம தேவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயிரினங்களுக்குப் பயன்படும் நிலையையும் இழக்கும். மரத்தோடு இணைந்திருந்தால்தான் அவைகளுக்கு வளர்ச்சியும், வாழ்வும் உண்டு. பிரிந்தால் இழப்பு: இணைந்தால் வாழ்வு

மரம் ஒன்று: அதன் தோற்றத்தில் உறுப்புகள் பல கிளை, இலை, மலர், காய், கனி போன்ற பல உறுப்புக்களோடு தோற்றம் அளிப்பதுதான் மரத்துக்கு அழகு. இந்த உறுப்புக்கள் மரத்தின் அழகினை வெளிப்படுத்துகின்றன: உறுப்புக்களுக்கு மரம் வாழ்வு அளிக்கின்றது. உறுப்புக்கள், மரத்தின் இருப்பைக் காட்டுகின்றன. மரம், உறுப்புக்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. மரமும் உள்ள பொருள்: அதன் உறுப்புக்களும் காணப்படுபவைகள். இதில் இல்லாதது என்பது எதுவும் இல்லை. எல்லாம் உள்ளனவே. உலகத்தில் பல விதமான தோற்றம் உடைய பொருள்கள் உள்ளன. உயிர் உள்ளவைகள். உயிர் அற்றவைகள். உயிரினங்கள், ஊர்வன, நடப்பன, பறப்பன, நீந்துவனவாகவும், அறிவுள்ளனவாகவும், அறிவற்றவைகளாகவும் ஆக பல பிரிவுகளை உடையன. உயிர் அற்றவைகளும் மலை, கடல், ஆறு, போன்ற பலவிதமான தோற்றம் பெற்றவைகள். இவைகள் எல்லாவற்றின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடிப்படையாக அமைவது ஒன்று இருக்க வேண்டும் அதற்குத்தான் பரம்பொருள் என்று பெயர். உலகப் பொருள்கள் பலவிதமான தோற்றங்கள் உள்ளவைகள் அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான கவர்ச்சி உண்டு. இந்தக் கவர்ச்சியும் வளர்ச்சியும், எந்த இணைப்பால் இருக்கிறது? பரம்பொருளோடு இணைந்திருப்பதால்தான் உலகப் பொருள்கள் வளர்ச்சியும் கவர்ச்சியும் பெற்றுள்ளன. பிரிந்தால் வளர்ச்சியும் இல்லை வாழ்வும் இல்லை.

பரம்பொருள் ஒன்று: அதன் உலகத் தோற்றம் பல. இந்த ஒன்றும் என்றும் உண்டு: தோற்றம் பலவும் என்றும் உண்டு. இதன் இணைப்பும் என்றும் உண்டு. இதில் இல்லாதன எதுவும் இல்லை. அனைத்தும் உள்ளவைகளே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரபஞ்சத்தின் இயல்பும், அதன்மூலமும் எடுத்து விளக்கப் படுகின்றது, இங்கு: இந்தவிளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டதுதான் மரமும் அதன் உறுப்புக்களும்.

ஒன்று, பலவற்றின் தோற்றத்துக்கு ஆதாரம். ஆதாரம் ஒன்று: ஆதேயம் பல. தாங்குவது ஒன்று: தங்குவன பல. தங்கும் பலவும் தாங்கும் ஒன்றும், என்றும் இணைந்தே இருப்பவைகள். அதாவது, பலவிதமான தோற்றம் பெற்ற பிரபஞ்சமும், அதற்கு மூலமாக நிற்கும் ஒன்றும் என்றும் இணைந்தே இருக்கும். இதனை ஆராய்ந்து சொல்வது தத்துவ ஞானம்.

7754

அந்தப் பிரபஞ்சத்தில் வாழும் உயிர்களின் குறிக்கோள் யாது? அதனை அடையும்வழி எது? என்பதை எடுத்துக் கூறுவது சமயம்.

ஆய்வு செய்வது தத்துவ ஞானம்: அழைத்துச் செல்வது சமயம் ஞானம் இந்த இரண்டும் அடக்கப்பட்டுள்ளது இந்தக் கவிதையுள். கிளை, இலை, மலர், காய், கனி இவைகள் தனித்தனி உறுப்புக்களாக எண்ணப்படினும், அவை அனைத்தையும் ஒரு சேர நோக்குமிடத்து 'மரம்' என்ற ஒரு பொருளாகத் தோன்றுகின்றது. அதுபோன்று, உலகப் பொருள்கள் (பிரபஞ்சம்) பலவாக எண்ணப்படினும் அவை அனைத்தையும் ஒரு சேரவைத்துக் கவனிக்கும் போது, அவைகள் ஒரேபரம் பொருளின் அங்கங்கள் என்றும், அதுவே மூலம் என்றும் உணரலாம் ஒன்றும், பலவும் என்றும் உள்ளன என்பதனால், உலகம் மாயை என்ற மாயாவாதக் கொள்கை மறுக்கப் படுகின்றது இங்கு.

'உள்ளது ஒன்றுதான். மற்றையவை அனைத்தும் இல்லாதவைகள். 'மாயை' என்ற மாயாவாதம் மறுக்கப்பட்ட பிறகு, அங்கு, சமயம் வருகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள உயிர்கள் வாழ்பவைகள். அந்த வாழ்க்கைக்கு வழி காட்டுதலையும், இறுதி லட்சியத்துக்கு அவைகளை அழைத்துச் செல்லுதலையும் சமயம் செய்யவேண்டும்.

'இறைவா! உன்னை உள்ளபடி உணர்ந்தால்தானே உன்னை வந்து அடைய முடியும்! எல்லாப் பொருளோடும் கலந்து கிடக்கும் உனது இயல்பை உள்ளபடி அறிந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்வதற்கு இந்த உலகத்தைப் படைத்த பிரம்மதேவரும் முயல்கின்றார்: அழித்தல் தொழிலைச் செய்கின்ற அரனாரும் (சிவபிரான்) முயல்கின்றார். அந்த இருபெரும் தேவர்களே கூட உன் இயல்பினை உள்ளவாறு உணரப்பெற்றிலர் அவ்வாறிருக்க, எம்மைப்போன்ற சிற்றறிவினர் நின்னைக் குறித்துப் பலவாறாக எண்ணி உரைத்தற்கு என்ன இருக்கிறது?"

'உன்னை உள்ளபடி உணர்ந்து உன்னிடம் வந்து சேர்வதே எமது குறிக்கோள். குறிக்கோளை அடைய அருள் செய்க? என்பது கவிதையின் முதல் இரண்டடிகளின் கருத்துப் பொருள். இது சமய ஞானம். பின் இரண்டடிகள் தத்துவ ஞானத்துக்கு உரியன. இந்த இரண்டையும் இணைத்து வைத்திருக்கும் புதுமையை இந்தக் கவிதையுள் காணலாம்.

பொன்னும் பூணும் :

> 'நின்னின் பிறிதாய், நிலையின் திரியா,
> தன்னின் பிறிது ஆயினதாம் எனினும்
> உன்னின் பிறிது ஆயினவோ, உலகம் —
> பொன்னின் பிறிது ஆகில, பொற்கலனே! (6230)

சென்ற கவிதையுள் சொல்லப்பட்ட சமய ஞானத்தை விவரிக்கின்றது இந்தக் கவிதை. பொருள்கள் எதனுக்கும் காரணம் உண்டு. பொருள் காரியம். அந்தக் காரியத்துக்கு இரண்டு காரணங்கள். ஒன்று முதற் காரணம். மற்றொன்று நிமித்த காரணம். 'துணி' ஒரு பொருள் இந்தக் காரியத்துக்கு முதற் காரணம் நூல். நிமித்த காரணம் நெசவாளி. நூலே துணியாயிற்று. நூல் துணியான பிறகு, நிமித்த காரணமாகிய நெசவாளியின் தொடர்பு அந்தப் பொருளுக்குஇல்லை இது உலகப் பொருளின் நிலை.

பொன்னாபரணம் ஒருபொருள். காரியம். இதற்கு முதற்காரணம் பொன், (தங்கம்) பொன், ஆபரண வடிவம் பெறுதற்கு நிமித்தகாரணன் பொற்கொல்லன். பொன், ஆபரணமாக உருப்பெற்ற பிறகு பொன் அதனைவிட்டுப் பிரிவது இல்லை, பொற்கலன் (ஆபரணம்) பொன்னினின்றும் வேறுபடுவது இல்லை, முதற்காரணமே காரியமாகக் காட்சியளிக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகத் தோற்றத்துக்கு நிமித்த காரணனும் முதற் காரணனும் இறைவனே. இறைவனே, உலகமாகக் காட்சி யளிக்கின்றான், உலகத்தைத் தோற்றுவித்தவனும். உலக மாகயிருப்பவனும் இறைவனே. ஆபரணம் பொன்னை விட்டுப் பிரிவது இல்லை, உலகம் இறைவனைவிட்டுப் பிரி வது இல்லை, பொன்னே, ஆபரணம். இறைவனே உலகம். அந்த அளவுக்கு இந்த உவமை பொருத்தம். பொன்னை ஆபரணமாக்கிய பொற்கொல்லனாகிய நிமித்த காரணன். பொன், ஆபரணவடிவம் பெற்ற பிறகு, அதனை விட்டுப் பிரிந்து விடுகின்றான். ஆபரணத்துக்கும் பொற்கொல் லனுக்கும் தொடர்பு இல்லை.

இறைவனே உலகமாயின பிறகும், அதன் நிமித்த காரணனாகிய அவன், உலகத்தை விட்டுப் பிரிவது இல்லை. நிமித்த காரணமும், முதற்காரணமும் காரியத்தோடு ஒன்றாகக் கலந்து கிடக்கிறது, உலகம், இறைவனது சங்கற்பத்தால் தோன்றியது. தன்னால் தோற்றுவிக்கப் பட்ட உலகத்தைக் காப்பதற்கு, அவனே உலகப் பொருள் களோடு கலந்து விட்டான். இந்த உண்மையை உணர்ந்தால் மனிதன் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. நம்மைக் காப் ப்வன், நம்மிடத்திலேயே கலந்து கிடக்கும் போது எதற்கு அஞ்சவேண்டும்?

'உன்னை என்னுள்ளே குழைத்த எம், மைந்தா! வானேறே' இனி எங்குப் போகின்றதே?' என்று நம்மாழ்வார் தன்னிடத்தில் நாராயணன், பிரிவின்றிக் கலந்து கிடப்பதை அனுபவிக்கின்றார். (2.6.9.) இரண்டாக இருப்பது ஒன்றாக இணையும். இதுவே விசிட்டாத்வைதம், உள்ளது, ஒன்று தான் என்பது அத்வைதம்.

இந்த விசிட்டாத்வைத வைணவ சமயப் பேருண் மையை நுணுக்கமாகத் தெரிவிக்கின்றது இந்தக்கவிதை. 'உலகம் (இறைவனாகிய) உன்னிடத்தினின்றும் வெளிப் பட்டு வேறாகத் தோன்றுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் நிலையினின்றும் திரிந்து வேறு வேறு வடிவங்களாகவும் தோற்றம் அளிக்கிறது. அப்படியிருந்தாலும் எல்லாவற்றுக்கும் காரணனாகிய உன்னைவிட்டு வேறுபட்டன ஆகுமோ? ஆகாது. எதைப்போல, பொன்னினால் இயன்ற ஆபரணம் அதற்குமுதற்காரணமாகிய பொன்னினின்று வேறாவன அல்ல. அதைப்போல, இது கவிதைப் பொருள்.

நோயும், அது தீர்ப்பானும்:

'தாய், தந் தைஎனும் தகைவந் தனைதான்,
நீதந் தனை: நீ உறுநெஞ் சினன்நான்;
நோய்தந் தவனே நுவல்தீர் வும்எனா
வாய்வந் தனசொல் லிவணங் கினனால்.' (6301)

'உலகமாகயிருப்பவன் இறைவனே' என்று சென்ற கவிதையில் கூறப்பட்டது. உலகைக் காப்பதும் அவன் பொறுப்பு. அதனை மனத்துள் இருத்திக்கொண்டு, 'தனக்கு வந்துள்ள நோய் இது என்றும், அதை நீயே தீர்க்க வேண்டும்' என்றும் நாராயணனிடம் வேண்டிக் கொள்கின்றான். ஞானநாயகன். தனது வேண்டுகோளைக்கூறி. பிரகலாதன் இறைவனைத் தொழுவதாக அமைவது இந்தக் கவிதை.

'தந்தை தாய்ப்பேண்' என்பதும் 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்பதும் 'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதும், பெரியோர்கள் கூறிய முதுமொழி. இதனை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதே உலகியல் நடைமுறை. இத்தகைய உலகியல் நடைமுறை, தனக்கு முரணாக அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டி, இதனால், எது தனக்கு நோயாக அமைந்தது என்பதையும் புலப்படுத்துகின்றான் பக்தன்.

'இறைவா! நீயே, உலகுக்கு ஒரு நெறிமுறையினை வகுத்துக் கொடுத்தாய். தன்னைப்பெற்ற தாயிடமும், தந்தையிடமும் அன்புடையவராய் அடங்கி ஒழுகும் தகுதியோடு அவரை வணங்கி வழிபடுதலே அந்த நெறிமுறை. இந்த உலகியல் நடைமுறை, என் வாழ்க்கையில் முரணாக அமைந்து விட்டதே!' 'இந்த முரணான வாழ்க்கையே எனக்கு ஒரு பெருநோய். சிறு நோயாகயிருந்தால் உலக மருத்துவர் தீர்க்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலக மருத்துவரால் தீர்க்கப்படாத நோயை, உலகத் தலைவனாகிய நீதானே தீர்க்க வேண்டும்! நோயைத் தந்தவனே நோய் தீர்க்கும் மருத்துவன். நீதானே 'தன் வந்திரிப் பெருமாள்' என்ற மருத்துவப் பெயருக்கும் உரியவன். மருத்துவனாகிய நீயே எனது நோயை மாற்ற வேண்டும்.' 'இந்தப் பெரு நோய்க்குப் பிறவி நோய் என்று பெயர். இந்தப் பிறவிப் பெருநோய் எனக்கு யாரால் வந்தது. என்னாலா? இல்லைஇல்லை. நீயே தந்தது. நீயே தீர்ப்பாய்.'

'சிலருக்கு, இந்தப் பிறவி என்பது நோயாக அமையவில்லை. உன்னை அடையும் வாயிலாகவே அது, அமைந்து விடுகின்றது. ('மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்பது அப்பர் அடிகளின் பிரார்த்தனை. இந்த நாயன்மாரும் பிரகலாதனைப் போன்று அரசை எதிர்த்த சத்தியாக்கிரகி)' 'அந்த சிலருள் ஒருவனாக என்னைப் பிறக்க வைக்காமல், பிறவியை நோயாகக் காணும் பலருள் ஒருவனாக என்னைப் பிறக்க வைத்தது நீதானே!' 'உலகைக் காக்கவந்த உன்னைத் தெய்வமாகக்கொள்ளாமல், தன்னையே உலகத் தலைவனாகக் கருதிக் கொண்டு, எல்லோரும் தன்னையே தெய்வமாகத் தொழ வேண்டும் என்று ஆணை பிறப்பித்து வாழும் ஒரு கொடியவனுக்கு என்னை மைந்தனாகப் பிறப்பித்தது நீதானே!' 'உன்னை தெய்வமாகத் தொழும் நான், தன்னையே தெய்வமாகப் பிறரைத் தொழுமாறு செய்து கொண்டிருக்கும் தீயோனை, உடல் பிறப்பின்படி எப்படித் தந்தையாகக் கருதி வழிபடுவது?' 'தந்தையை வணங்குவது நீ வகுத்த உலகியல் நடைமுறை. உன்னை வணங்காத கொடியவனாக இருப்பினும், இரணியன், உனக்கு அடியவனாகிய எனக்குத் தந்தைதானே! அந்தத் தந்தையை நான் வணங்க முடியாத நிலைமை ஏற்பட்டதால் இந்தப் பிறவி எனக்கு நோயாகவே உள்ளது.' 'தாய் தந்தை எனும் தகை வந்தனை தான் (வணக்கம்) நீ தந்தனை.' என்பது கவிதைப் பகுதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தந்தையைத் தீயோனாகவும், மைந்தனாகிய என்னை தூயோனாகவும் நீ ஆக்கி வைத்ததால்தான், என் வாழ்க்கையில் முரணான நடைமுறை எற்பட்டுள்ளது.'

'உன்னைத் தெய்வமாகக் கொள்ளாமல், பகைவனாகக் கருதிச் செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தந்தை தீயோனாகின்றான். (நீ உறும் நெஞ்சினன் நான்) எனது நெஞ்சை விட்டு இமைப் பொழுதும் நீங்காதவனாக நீ இருப்பதால், நான் தூயோனாகின்றேன்.' 'தூயோன் தீயோனை எப்படி வணங்கமுடியும்? வணங்காததால்தான், அந்தத்தந்தை, என்னை மைந்தன் என்றும் பாராமல், எனக்கு எல்லையற்ற இடர் தருகின்றான்.'

'நீ என் நெஞ்சுள் இருப்பதால், அவன் தரும் துன்பங்களை எல்லாம் நான் துன்பமாகக் கருதுவதில்லை. என்னை மேலும், சோதனைசெய்து தூய்மைப்படுத்தும் நற்கருமங்களாகவே, கருதுகின்றேன். ஆயினும் உலகமக்கள், தூயோன் ஒருவன் – பகவத்பக்தன் ஒருவன் துன்புறுகின்றானே என்று எண்ணுவர். அதனால் எனக்கு வரும் துன்பத்தை நீயே துடைக்க வேண்டும். 'மைந்தனாகப் பிறந்தநான், தந்தையைத் தொழமுடியாத நிலையில் உள்ள எனது பிறவி நோயை நீயே தீர்க்க வேண்டும்.' என்று சொல்லி பிரார்த்தனை செய்து கொண்டான் பிரகலாதச் செல்வன். 'வாய்தந்தன சொல்லி வணங்கினனால்' என்ற தொடரோடு இந்தக்கவிதை நிறைவு பெறுகின்றது. பிரகலாதன், அறிஞரின் அறிஞனாகவும் தூயோனாகவும் இருப்பதால், அவன் வாய்தந்த அனைத்து வார்த்தைகளும் பகவான் திருவுள்ளத்துக்கு இயைந்தனவாகவே இருக்கும். வாய் தந்த வார்த்தையை பகவான் திருவுள்ளம் ஏற்காத ஒரு சூழ்நிலையும் உண்டு இராம காதையுள்'எங்கு? பகவான் இராமபிரானாக அவதாரம்செய்து, கானகமேமிக விரும்பிப் போகின்ற காலத்து, அந்தச் சூழ்நிலை எற்பட்டது, அளவற்ற அன்பின் மிகுதியால் தம்பி இலக்குவன் பேசிய பேச்சு, இராமன் திருவுள்ளத்துக்கு இயைந்ததாக இல்லை. அதனால், 'வாய்தந்தன கூறுதியோ மறைதந்தநாவால், என்று இராமபிரான் கூறினான். இந்தக்கவிதைத் தொடர் இங்கு நினைவு கூரத்தக்கது. (கம்.ரா. 1736)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10

உலகு தந்தார்

'உலகுதந் தானும் பல்வேறு
உயிர்கள்தந் தானும் உள்உற்று,
உலைவுஇலா உயிர்கள் தோறும்,
அங்குஅங்கே உறைகின் றானும்,
மலரினில் வெறியும் எள்ளில்
எண்ணெயும்: மற்றும் கேளாய்!
அலகுஇல்பல் பொருளும் பற்றி
முற்றிய அரிகாண் அத்தா.' (6308)

வந்தனை தந்த மைந்தன் :

உலகியல் நடைமுறைக்கு ஏற்ப, மைந்தன் தந்தைக்கு வந்தனை செய்யும் ஒரு சூழ்நிலை உருவாகிறது. இரணியனது கட்டளைப்படி, பிரகலாதனைக் கொலை செய்ய முயன்ற கொலையாளிகள், அதனைச் செய்ய இயலாதவர்களாயினர்: தங்களது இயலாமையை, நடுங்கிக்கொண்டே சென்று சொன்னார்கள் இரணியனிடம். 'நானே, அவன் உயிரைக் கொல்லும் வேலையைச் செய்கின்றேன்.' என்று சொல்லிக்கொண்டு பிரகலாதனிடம் வந்தான் இரணியன். 'உனது உயிரை நானே உண்பேன்' என்று சொல்லிக்கொண்டு தன்னிடம் வந்த தந்தையை எதிர்க்கவில்லை மைந்தன்: எதிரில் நின்று வரவேற்றான். சத்தியாக்கிரகிக்கு வன்முறையில் நம்பிக்கையிருக்காதல்லவா? வரவேற்பு வணக்கத்தோடு நிகழ்கிறது. பிறகு பேச்சாகத் தொடர்கிறது.

'வந்தானை வணங்கி, என்மன் னுயிர்தான்
எந்தாய் கொளஎண் ணினையேல், இதுதான்
உம்தா ரியதுஅன்று உலகு யாவும்உடன்
தந்தார் கொளநின் றதுதான் எனலும்.' (6306)

தன்னிடம் வந்த தந்தையை உலகியல் நடைமுறைப்படி முதலில் வணங்கினான் மைந்தன்: பிறகு தந்தை வந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு பேசுகின்றான். பேச்சு ஒரு பேருண்மையைப் புலப்படுத்துகின்றது: கேட்பவனின் உள்ளத்தில் ஒரு ஐயத்தை எழுப்பி கேள்வி கேட்கச் செய்யத் தூண்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எனது தந்தையே (எந்தாய்) எனது உயிர், நிலையானது. (மன்னுயிர்.) நிலையான எனது உயிரை நிலையில்லாத நீ, பறித்துக் கொள்ள எண்ணுகின்றாய். அது உனக்கு உரிமை உடையது அன்று. (உந்தாரியதுஅன்று) அந்த உயிரை, நீ எனக்குக் கொடுக்கவில்லை. கொடுத்தவன் தான் எடுத்துக் கொள்ளமுடியும். அதனால் எடுத்துக் கொள்ளும் உரிமை உனக்கு இல்லை.'

'யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கிறாயா? இந்த உலகைத் தந்தவர்தான் எனது உயிரைத் தந்தார். உலகுதந்த அவரே, எனக்கு உயிர் வழங்கியதனால், அதனை வாங்கிக் கொள்ளவும் உரிமைபெற்றவராவார்.' (உலகு தந்தார் கொள நின்றது) என்பது, ஞானநாயகன் உரைத்த நல்லுரை.

கொல்ல வந்த கொடியவனுக்கு, நல்லுரை யாகத் தோற்றவில்லை இது. 'உலகு யாவும் உடன் தந்தார் கொள நின்றது' என்ற தொடர்தான், இரணியன் உள்ளத்தை உறுத்தியது: உலுக்கியது: ஐயுறச் செய்தது: கேள்வி கேட்கவைத்தது. கனல் பறக்கக் கேள்வி எழுகின்றது.

''ஏவரே உலகம் தந்தார்? என்பெயர் ஏத்தி வாழும்
மூவரே? அல்லர் ஆகின், முனிவரே? முழுதும் தோற்ற
தேவரே? பிறரே? யாரே? செப்புதி தெரிய'' என்றான்-
கோவம் மூண்டுஎழுந்தும் கொல்லான் காட்டுமேல் காட்சி
கொள்வான். *(6307)*

கொடியவன் உள்ளத்தில் கோபம் மூண்டு எழுந்தது. ஆனால், யாரைக் கொல்ல நினைத்து வந்தானோ அவனைக் கொல்ல வில்லை. (கொல்லான்) ஏன்? உலகு தந்தவர் யார் என்பதை மைந்தன் காட்டினால், அந்தக் காட்சியைக் கண்டு உண்மை தெரிந்துகொள்ளலாம் என்ற எண்ணத்தால், கொல்லவில்லை. (காட்சி கொள்வான்) 'கொல்லான், ஏன்? கொள்வான்' கருத்து நிறைந்த சொல் நயம் பொருந்திய கவிதைத் தொடர் இது. கேள்வி, கோபத்தால் எழுந்து வந்தது தான்! ஆயினும், அசுரனைப் பொறுத்தவரையில் அறிவொடு பட்டதுதான் அந்தக் கேள்வி. ஆனால், ஆணவத்தில் மிதந்துவந்தது அக்கேள்வி.

'உலகம் தந்தார் யார்?' என்று கேள்வியின் தொடக்கம். ஆனால் கேள்வியின் அமைப்பு வாக்கிய முறைப்படி இல்லை. ஏன்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வின் உந்துதலால் வாயினின்றும் வெளியேறும் வார்த்தைகள் முறையான வாக்கியமாக அமையாது. 'ஏவரே உலகம் தந்தார்?' என்பது கவிதையின் தொடக்கத்தில் உள்ள கேள்வித்தொடர். இது, கேட்பவனின் உள்ளத்தில் மூண்டு எழுந்த கோப உணர்வை வெளிப்படுத்துகின்றது.

சொற்கள் அமைப்பின் மூலம், இந்தச் சொற்கள், எந்த உணர்வினால் உந்தப்பட்டன என்பதைக்குறிப்பால் உணர்த்துவதும் ஒரு கவிதை. நயம். அப்படி அமைந்துள்ளது இந்தக் கவிதை. கோப உணர்வின் உந்துதலால் வெளியேறிய கேள்வி. ஐய உணர்வையும் அணைத்துக் கொண்டு. பலவாக விரிகின்றது. எப்படி?

'நான்தானே உலகம் தந்தவன்' அப்படியிருக்க வேறு யாரையோ குறிப்பிடுகின்றானே இந்தப் பேதைப் பிள்ளை கேட்போம். என்னுடைய புகழையே துதித்துக் கொண்டிருக்கும் மும்மூர்த்திகளா?ஆசைகள் அனைத்துயும் துறந்து வாழும் துறவிகளா? என்னிடம் முழுமையாகத் தோற்று ஓடிச் சென்ற தேவர்களா? இவர்கள் அல்லாமல் பிறர் யார் உலகுதந்தவர் இதற்குத் தெளிவான பதிலைக் கூறுக' என்பது அசுரனின் ஆணவ ஆணையில் தோன்றிய கேள்வி.

இது கோபக் கனலில் கொதித்து வந்த தந்தையின் கேள்வி. இதற்கு வந்த பதில். மைந்தனின் அன்பு நீரில் ஊறி வந்த அமுத மொழி. கேள்வி. கொடியவனிடமிருந்து வருவது. அதனால் கோபக் கனலோடு வந்தது. பதில், அடியவனிடமிருந்து வருவது. அதனால் அன்பிற்கனிந்து அமுதமாக வெளியேறுகிறது. அன்பின் நிறைவு அமுதம் அது அனைவரையும் அச்சம் இன்றி வாழ வைக்கும். ஆணவப் பெருக்கு நல்குவது நஞ்சு. (விஷம்) அது. உலகத்தினரை. அச்சத்தோடு நடுங்கிக் கொண்டு வாழச் செய்யும் .அன்பு அனைவரையும் அணைத்துக் கொள்ளும். ஆணவம் அனைவரையும் அடித்து விரட்டும். ஆணவம் அடித்தாலும். அன்பு, அடித்த, கையையும், தன்னோடு அணைத்துக் கொள்ள முயலும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பும் உணர்வுதான்: ஆணவமும் உணர்வுதான். இரண்டு உணர்வுகளுக்கும் இருப்பிடமாக இருப்பது உள்ளம். உள்ளமும் கண்ணுக்குத்தெரியாதது:அதில் தோன்றும் உணர்வுகளும், கண்ணுக்குத் தெரியாதவைகள். ஆனால், சொற்களாலும் செயல்களாலும் அந்த உணர்வுகள் தம்மை வெளிப்படுத்திவிடும். இந்த இரு உணர்வுகளும் கண்ணால் காண முடியாதவைகள்தான். ஆனால், என்றும் உள்ளவைகள். இல்லாதவைகள் அல்ல. இந்த அடிப்படையில் அமைகிறது பிரகலாதனின் அன்புப் பதில்.

இரணியன், உடல் உறவால் தந்தை. அதனால், அவன் கொடியவனாக இருப்பினும், உண்மையை உணரச் செய்து, அவனைத் திருத்துவதற்கு முயல்கின்றான் மைந்தன் பிரகலாதன். பதில், திருத்தமானதுதான். ஆனால், கேள்வி கேட்ட தந்தை, அதனைத் தனக்குப் பொருத்தமாக்கிக் கொள்ளவில்லை. ஏன்? ஆணவம், அன்புக்குப் பணியாதல்லவா?

அன்புப் பதில் :

கொடிய தந்தையை, 'அத்தா' என்று அன்போடு அழைத்து கேள்விக்கான பதிலைத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றான் மைந்தன் பிரகலாதன். 'என் அப்பனே! இதனைக் கேள் நீ உலகம் தந்தவர்யார்?' என்றுதானே கேட்டாய். கண்ணால் காணப்படுகின்ற இந்த உலகத்தையும், உலகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற உயிரினங்களையும் தந்தது யார் என்று சொல்கின்றேன். கவனமாகக் கேள்.'

வேதம் ஓதத் தொடங்கும் போது, 'அரிஓம்' என்று சொல்லி விட்டுதானே தொடர்ந்து ஓத வேண்டும்! அந்தப் பிரணவ மந்திரத்துக்கு உரிய நாராயணன்தான், இந்த உலகைப் படைத்தான்: (தந்தான்) இதில் உலவும் பல வேறுபட்ட உயிரினங்களையும் தோற்றுவித்தான். (தந்தான்) அது மட்டும் அல்ல! அவனே, அந்த உயிர்களிடம் உறைபவனாகவும் உள்ளான். அதனால்தான், அவைகள் உலைவு இல்லாத உயிர்களாக உள்ளன.' (உலைவு இலா-அழிவு இல்லாத)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அந்த 'அரி' உயிர்களுக்கு உயிராக அங்கு அங்கே உறைவதோடு, அளவற்ற எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டும் உள்ளான்.' 'எல்லா உயிர்களுக்குள்ளும் அந்தர்யாமியாக தங்கிக் கொண்டும், அவைகளைத் தன்னுள் தூங்கவைத்து, அவைகளைத் தாங்கிக் கொண்டும் இருப்பவன் நாராயணனே.'

'இது, 'எப்படி முடியும் என்று கேட்கின்றாயா?' மலர் கண்ணுக்குத் தெரிவது. அதனை மலராக விரியச் செய்து, அனைவரது கவர்ச்சிக்கும் உள்ளாக்குகின்ற மணம் (வாசனை) வெளியில் தெரிவதில்லை. கண்ணுக்குத் தெரியாத ஒன்றனுடைய தொடர்பினால்தான், கண்ணுக்குத் தெரிகின்ற மலர், மணக்கிறது. தெரிவதைக் காட்டிலும் தெரியாததே உயர்வுக்குரியது, மலரை பெருமைக்குரியதாகச் செய்யும் மணம், மலரின் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறது. மலர் முழுவதும் நிறைந்திருக்கும் மணம் (வாசனை) தன்னை மறைத்துக் கொண்டும் இருக்கின்றது. மறைந்திருப்பதுதான், நிறைந்தும் இருக்கும்.

'எள். காட்சிப் பொருளாகயிருப்பது, அதனைக் காட்சிப் பொருளாக்கிக் கொண்டிருப்பது அதனுள் நிறைந்திருக்கும் எண்ணெய். உள்ளிருக்கும் எண்ணெய்தான், அந்தத் தானியத்தை' 'எள்' என்ற பெயருக்கு உரியதாக்குகின்றது. உள்ளிருக்கும் எண்ணெய், அதனை விட்டு வெளியேறினால், அதற்கு 'எள்' என்ற பெயர் இல்லை. வேறு ஒரு பெயர் வந்து விடும். (பிண்ணாக்கு) உள்ளிருக்கும் ஒன்றுதான் வெளிப் பொருளுக்குத் தோற்றத்தைக் கொடுக்கின்றது.

'மலரினில் வெறியும், எள்ளில் எண்ணெயும்' போல உலகில் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் வேத முதல்வனான அந்த அரி. 'இதை நீ அறி' 'அப்பா' என்று மைந்தன், தந்தையின் கேள்விக்குப் பதில் அளித்தான். (வெறி-மணம்): வாசனை. அரி-திருமால்: நாராயணன். பொருட் பெயர். அறி-அறிந்து-தெரிந்து கொள்வாய். ஏவல் வினை.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எங்கும் அலகுஇல் பல்பொருளும் பற்றி முற்றிய **அரி** காண்- அத்தா' என்பது கவிதையின் இறுதிப் பகுதி. அந்த அரி (நாராயணன்) எங்கும் எப்பொருளையும் பற்றிக் கொண்டு நிற்கின்றானே! அவன் உன்னையும் பற்றிக் கொண்டுதானே இருப்பான். அந்த அரியை நீ அறியவில்லையா? எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்த அரியை (திருமால்) நீ அறியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? உன் ஆணவம், அரியைக் காணும் கண்ணுக்குத் திரை போடுகின்றது. அந்த அரியை நீ அரியாக அறிகின்றாய். அவ்வளவுதான் உன் அறிவு! 'அரி'' காண்' என்ற தொடர் கதை நயம் கருதிய கருத்து வளம்மிக்க தொடராக அமைந்துள்ளது.

'அந்தியம் போதில் **அரி** உருவாகி **அரியை** அழித்தவனை, பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே' என்ற பெரியாழ்வரது பல்லாண்டு பாசுரத்தை நினைத்து இன்புறச் செய்கின்றது அரி- காண் என்ற தொடர் (அரி- சிங்கம்: அரி -பகைவன்) அரியை (நாராயணன்) இரணியன் அரியாகக் (பகைவனாக) கருதிச் செயல்பட்டதனால், அந்த அரியும் அரி (சிங்கம்) உருவிலேயே வந்து, அறியாத அசுரனை அழித்தது. அறிந்த அன்பனை அளித்தது போலும்! அந்த அரி, எல்லோரும் காணும் படியாகக் காட்சி கொடுப்பவன். அப்படியிருந்தும் தன் தந்தை அரியை ஆண்டவனாகக் காணாமல், அரி (பகைவன்) யாகக் காண்கின்றானே என்ற ஏக்கத்தோடு, மேலும் இதனை விவரிக்கின்றான் ஞானநாயகன் ''அரி'' என்ற ஒரு சொல்லே, பகவான் (நாராயணன்) சிங்கம், பகைவன் என்ற பல பொருளையும் பற்றி முற்றி நிற்கிறது. நீ அறி: இதனைக் காண்' என்று அறியாத் தந்தைக்கு, அறிஞரின் அறிஞன் அறிவித்து அதனைக் காணும் வழியைக் காட்டுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணும் கண்ணும் காணாக் கண்ணும் :

'என்கணால் நோக்கிக் காண்டற்கு எங்கணும்
உளன்காண் எந்தை;
உன்கண், நான் அன்பின் சொன்னால் உறுதிஎன்று
ஒன்றும் கொள்ளாய்;
நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ
நினக்குப் பின்னோன்
பொன்கணான் ஆவி உண்ட புண்டரீ கக்கண்
அம்மான்.' ★

கண்களும் காண்டலும் நிறைந்த கருத்து வளம் செறிந்ததோர் நற்கவிதையாகும் இது. காணப்படும் பொருள் ஒன்று தான். ஆனால், சில கண்களால், அதனைக் காணமுடிகிறது. சில கண்களால் காண முடிவதில்லை. ஏன்? இதனைத் தெளிவாக விளக்குகிறது இக் கவிதை. 'என் தந்தை நீ: உன் மைந்தன் நான். வயதிலும் அனுபவத்திலும், கல்வியிலும், அதிகாரத்திலும், பெற்ற வரத்திலும் நீ மிக மிகப் பெரியவன்: இவைகள் எல்லாவற்றிலும் நான் மிக மிகச் சிறியவன்.' 'எந்தை' என்ற அழைப்புச் சொல் இவ்வளவையும் உள் ளடக்கிக் கொண்டுள்ளது.

'அவ்வளவு சிறியவனாக நான் இருந்தாலும், அந்த நாராயணன் எங்கும் நிறைந்து இருப்பதை எனது கண்ணால் எளிமையாகக் காணமுடிகின்றது. நீயும் என்னைப் போலவே அவனைக் காண முடியும். உன்னிடத்தில் நான் கொண்ட அன்பின் காரணத்தால்தான் இதனைச் சொல்கின்றேன். ஆனால், அதனை, உனக்கு நான் செய்யும் நன்மை என்று கருதி, நீ, ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறாய்?

'உனது பார்வையை, உன்னிடம் நிறைந்திருக்கும் அதிகார ஆணவம் உன் கண்ணில் திரையாக நின்று மறைக்கின்றது. ஆணவத்திரையைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் உனது கண்ணால் காண்டற்கு எளியவன் அல்லன் அந்த இறைவன், உனக்கு அரியவனே அந்த அரி.'

'உள்ளத்தில் அன்பு இருந்தால், அவனைக் காண்பதற்கு, கண்கள் கருவிகளாக இருந்து உதவும். ஆணவம் மிகுந்திருந்தால், அந்தக் கண்கள் காணாக் கண்களாகும்.'

O *6309*. உறுதி-நன்மை: பின்னோன்-தம்பி: பொன்கணான்-இரணி - ஆவி - உயிர்: புண்டரீகம் - தாமரை: அம்மான் - இறைவன் - யாட்சன்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எந்தப் பகவானை, நீ, பகைவனாகக் கருதுகிறாயோ அந்த இறைவனது ஆற்றலைச் சொல்கின்றேன் கேள். உனது தம்பி இரணியாட்சன் (பொன் கணான்) எவ்வளவு ஆற்றல் பெற்றவன்! அவனை உலகத்தில் இல்லாதபடி ஆக்கியவன் யார்? நீ பகையாகக் (அரியாக) கருதும் அந்த அரிதானே, உனது தம்பியின் உயிரைக் (ஆவி) கவர்ந்தவன்! 'உன்னுடைய தம்பியை இன்மையாக்கிய உண்மையை உணர்ந்த பிறகாவது, அந்த ஆண்டவனிடம் நீ அன்பு கொள்ள வேண்டாமா?

'அந்த அரி (நாராயணன்) தாமரை மலர் போன்று பரந்து விரிந்து கண்களை உடையவன். (புண்டரகக் கண்) தனது தாமரைக் கண்களால், 'யார் யார்எப்படி வாழ்கின்றார் கள்? எப்படித் தன்னைப் பார்க்கின்றார்கள்? என்பதைக் கண்டு அறிபவன் அந்த அரி. 'ஆணவத்தோடு தன்னை நோக்கு பவனையும், அன்போடு நோக்குபவனையும் அளந்து கண்டறி பவன் அந்த அரி. அப்பா! நீ உன் ஆணவத்தை அடக்கி வைத்து விட்டு, அன்புக்கண் கொண்டு பார்' என்று பிரகலாதன், இரணியனுக்கு,இறைவனைக் காணும் வழியைக் காட்டினான். 'அன்பு அரியைக் காட்டும்: ஆணவம் அவனை மறைக்கும்.' இது, இக்கவிதையின் ஆழ்பொருள்.

'அன்பில் அன்றி, ஆழியானையாவர் காண வல்லரே என்ற திருமழிசை ஆழ்வாரின் திருச் சந்தப் பாசுரப் பகுதி இங்கு நினைவு கூரத்தக்கது. (76) மேலும், 'பத்துடை அடி யவர்க்கு எளியவன்: பிறர்களுக்கு அரிய வித்தகன்' என்ற நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரத் தொடரையும் நினைத்துப் பார்க்க வைக்கின்றது இந்தக்கவிதை. (1.3.1)என் கணால் நோக்கிக் காண்டற்கு எங்கும் உளன்காண்' என்ற கவிதைப்பகுதி, 'என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்! என்னை முனியாதே' என்ற திருவாய் மொழிப் பாசுரத் தொடரையும் (5.5.2) 'நின்கண்ணால் காண்பென்மன்யான்' நெய்தல் உண்கண், நின்கண்ணாக என்கண்மன' என்ற கலித்தொகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைத் தொடரையும் (குறிஞ்சிக்கலி-3) நினைவு படுத்துகின்றது.

காண்பான், காணப்படும் பொருள், காணும் கருவி (கண்) என்ற மூன்றனையும் ஒன்றாக இணைத்துக் காட்டும் இந்தக் கவிதை, தத்துவ சாத்திரத்துறையில் பெரிதும் பேசப் படுகின்ற 'திரிபுடி' என்ற உண்மைப் பொருளின் விளக்க மாக அமைந்துள்ளது என்னலாம்.

மூன்று :

'மூன்றுஅவன் குணங்கள்; செய்கை மூன்று:அவன்
உருவம் மூன்று;
மூன்றுகண், சுடர்கொள் சோதி மூன்று; அவன்
உலகம் மூன்று;
தோன்றலும், இடையும், ஈறும் தொடங்கிய
பொருள்கட்கு எல்லாம்
சான்றுஅவன் இதுவே வேத முடிவு;இது சாதம்'
என்றான். (6310)

மூன்று என்பதனை மேலும் விளக்கமாக எடுத்துரைக் கின்றான் பிரகலாதச் செல்வன். 'எவரே உலகம் தந்தார்?' என்ற தந்தையின் கேள்விக்கு மைந்தன் கூறிய பதிலை, விவரிக்கும் கவிதைகள் மூன்று. அதனுள், மூன்றாவது இது. முழு முதற் பொருளோடு ஒன்றாகி நிற்கும் மூன்று என்ற எண்ணுக்குரியவைகள் எவ்வெவைகள் என்பதை விளக்கும் கவிதையையும் மூன்றாவதாகவே வைத்தார் போலும் கம்பநாட்டாழ்வார். 'தந்தையே! அந்த அரியின் (நாராயணன்) குணங்கள், சாத்துவிகம், இராசதம், தாமசம் என்று மூன்று: அவன், உலக இயக்கத்துக்கு நடத்துகின்ற செயல்களும், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று: முத்தொழில் களையும் நடத்தும் அவன் வடிவமும், அரி, அயன், அரண் என்ற மூன்று: உலகைக் காணகின்ற அந்த இறைவனது கண் களும் மூன்று: அவைகள், சுடர்விட்டு ஒளிர்வனவாகிய சூரியன், சந்திரன், தீ என்ற மூன்றாகும். அவன் ஆளுகைக்கு உட்பட்ட உலகமும். சுவர்க்கம், மத்திமம், பாதாளம் என்ற மூன்று: இந்த இறைவனின் சாட்சிக்கு உட்பட்டவைகளாக இருக்கும் பொருள்களின் நிலைகளும், தோன்றுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலை பெறுதல், அழிதல் என்ற மூன்று. ஆனால், தனக்கு முதல், நடு, ஈறு என்ற மூன்று நிலையில்லாதவன் இறைவன் இத்தகைய இயல்பினனே இறைவன் இதுவே வேதங்களின் முடிந்த பொருள். இது சத்தியம்' (சரதம்) என்று அசுரத்தத்தைக்கு அன்பு மைந்தன் எடுத்துரைத்தான். பக்தி உணர்வோடு மைந்தன் எடுத்துரைத்த, தத்துவ ஞானம் கலந்த சமயப் பேருணர்வு உண்மைகளை பகுத்து, ஆய்ந்து எடுத்துக் கொள்ளும் நிலையை எட்டவில்லை இரணியன்.

பொருள் உண்மையைத் தெளிவதற்கு, இரணியன் நம்புகின்ற அளவை ஒன்றே ஒன்றுதான். அது காட்சி அளவை மட்டுமே. அதனால் அவன், 'நின்கண்ணால் காணக்கூடிய ஒருவனை எண் கண்ணாலும் காண வேண்டும். அப்படி நீ அந்த ஒருவனை எனக்குக் காட்ட முடியுமா?" என்பது தந்தையின் அடுத்த கேள்வியாக எழுகின்றது.

ஒன்'றல்இல் பொருள்கள் எல்லாம் ஒருவன் புக்கு உறைவன்'
என்றாய்:

நன்று அது கண்டு. பின்னர். நல்லவா புரிதும்:

என்று இரணியன், பிரகலாதனிடம் தனது கருத்தாக உரைத்தான். பிறகு, அதனை உறுதிப்படுத்தும் வண்ணம், 'தூணில் நின்றுளன் எனில் கள்வன் நிரப்புதி நிலைமை' என்று கோபம் பொங்கக்கனன்று உரைத்தான் இரணிய அசுரன்.

தூண், அவனது மேற்பார்வையில் நடப்பட்டது. அவனுக்கே உரிமை உடையது, அதனுள், பிரகலாதனால் கூறப்படும் அந்த ஒருவன் இருக்க முடியாது' என்பது இரணியன் நம்பிக்கை. தனது நம்பிக்கையையும் மீறி, அந்த இறைவன் தூணில் மறைந்து கொண்டு இருந்தால், அவன் கள்வன் ஆவான் என்பது இரணியன் கருத்து.

தனக்கு உரிமைப் பட்ட ஒன்றில், பிரகலாதனால் சுட்டிக் காட்டப்படும் ஒருவன் வந்து மறைந்து ஒளிந்து கொண்டிருந்தால். அவன் திருடனாகத் தான் இருக்க வேண்டும்!என்பது அசுரனின், அசைக்க முடியாத நம்பிக்கை, 'தூணில் நின்றுளன் எனில் அவன் கள்வன்' என்று ஆணித்தரமாக உரைத்தான் அசுரத்தந்தை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11

சிரித்தது செங்கண்சீயம்

'நசைதிறந்து இலங்கப் பொங்கி,
நன்றுநன்று என்ன நக்கு,
விசைதிறந்து உருமு வீழ்ந்தது
என்னஓர் தூணின் வென்றி
இசைதிறந்து உயர்ந்த கையால்
எற்றினான் ஏற்ற லோடும்,
திசைதிறந்து அண்டம் கீறிச்
சிரித்தது செங்கண் சீயம், (6315)

சிரிப்பு :

உள்ளம் இன்ப உணர்வில் ஈடுபட்டிருக்கும் போதும் சிரிப்பு வரும்: ஏளன உணர்வின் வெளிப்பாடாகவும் சிரிப்பு வரும்: காணாத ஒன்றைக் காணும் போதும் வரும்: கோப உணர்வு தலை தூக்கி நிற்கும் போதும் சிரிப்பு வரும். இந்தச் சிரிப்பு ஏளனமும் கோபமும் கலந்த ஒரு உணர்வின் உந்துதலால் வெளிப்படுவது. இந்தச் சிரிப்பை வரவழைத்ததும் ஒரு சிரிப்புதான். 'அவுணர் வேந்தன் எயிற்று அரும்பு இலங்க நக்கான்' — (நக்கான் -சிரித்தான்) இந்த இரணியனின் சிரிப்பு தான், இறைவனைச் சிரித்துக் கொண்டு வரச் செய்தது. இரண்டு சிரிப்புக்கும் என்ன தொடர்பு? தொடர்பு தோன்றியது எவ்வாறு? இதற்குக் காணமாக இருந்தவர் யார்?

'நின்ற இத்தூணில் அவன் புக்கு உறைந்து நிற்பதைக் காட்ட முடியுமா?' என்ற அசுரத் தந்தையின் கேள்விக்கு, அன்பு மைந்தன் உரைத்த பதில். இரண்டு சிரிப்புக்கும் தொடர்பை ஏற்படுத்தியது. இரணியனின் கோபச் சிரிப்பு, இளைஞனை நோக்கியது: இறைவனின், ஏளனம், கலந்த கோபச் சிரிப்பு, இளைஞனைக் காக்கவும் இரணியனைத் தாக்கவும் வந்தது. அரியாக (சிங்கமாக) வந்த அரியின் சிரிப்பு, அன்பு மைந்தனுக்கு அருட் சிரிப்பாகத்தோற்றுகிறது: ஆணவத் தந்தைக்கு அழிக்கும் சிரிப்பாகத் தோற்றுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தையின், கோபச்சிரிப்போடு வந்த கேள்விக்கு, மைந்தனின் ஞானத் தெளிவோடு பதில் வருகிறது.

,அப்பா! 'தூணில் இருப்பானா அந்த அரி' என்றல்லவா கேட்டாய். சொல்கின்றேன், கேள் தூணில் மட்டும் அல்ல! எங்கு எங்கு உள்ளான் என்பதைத் தெரிவிக்கின்றேன்.

"சாணினும் உளன்;ஓர் தன்மை அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்; மா மேருக் குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத் தன்மை
காணுதி விரைவின்" என்றான்; "நன்று"எனக் கனகன் சொன்னான்.

வேதமுதல்வனாகிய அந்த அரி, மிகமிகச் சிறிய பொருளிலும் இருப்பவன்: மிகமிகப் பெரிய பொருளிலும் இருப்பவன். 'கைவிரல்களால் நீட்டியளக்கக் கூடிய அளவினதாகிய பொருளிலும். பிளவுபடாமையால் ஒன்று என்னும் தன்மையதாகிய அணுவினை நூறு கூறாகப் பிளந்தால், அந்த நுண்ணியதாகிய மிகச்சிறிய துகளிலும், மிகப் பெரிய மேரு மலையிலும், இங்கே நிற்கின்ற தூணிலும் அந்த அரி (நாராயணன்) நிறைந்திருக்கின்றான். அதுமட்டும் அல்ல! அந்த இறைவனை, நீ இல்லை என்று சொல்கின்றாயே அந்தச் சொல்லிலும் கூட அவன் தங்கியிருக்கின்றான். இதனை நீ விரைவில் காணப் போகின்றாய்' என்று ஞானநாயகன் நயம்படக்கூறினான்.

'இல்லை' என்று சொன்ன சொல்லிலும் அவன் உள்ளான்' என்பதை எப்படி உணர்ந்து கொள்வது? மேலை நாட்டில் நடந்த நிகழ்ச்சி ஒன்று, இதன் உண்மையை உணர்ந்து கொள்ள உதவுகிறது. கடவுள் இல்லை என்பது நாத்திகம். உண்டு என்பது ஆத்திகம். இந்த இரண்டு கொள்கைகளும் எந்த நாட்டிலும்.

6312. சதம் - நூறு: கோண் - அணுவின் நூறில் ஒருபகுதி: மா-பெரிய: குன்று-மலை: கனகன்-பொன்னன். (இரணியன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எந்தக் காலத்திலும் இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இறுதியில் ஆத்திகக் கொள்கையே, வெற்றி பெறும்.

'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்பது நாத்திகர்களின் கொள்கை. 'காணப்படாத காட்சியும் உண்டு' என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அப்படி நம்பிக்கையற்ற நாத்திகர் ஒருவர், 'கடவுள் எங்கும் இல்லை' என்று பொருள்படக் கூடிய 'God is no where' என்ற ஆங்கிலத் தொடரைத் தனது மந்திரமாக உச்சரித்துக் கொண்டிருந்தார். பிறரையும் அப்படியே உச்சரிக்கச் செய்து, தமக்கு ஒரு சீடர் கூட்டத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார் அந்த ஆங்கில நாட்டு நாத்திகர்.

உச்சரித்தது மட்டும் அல்ல, அதனையே தாரகமந்திர மாக்கிக் கொண்டு, தமது வீட்டு முகப்பிலும் எழுதி வைத்திருந்தார். அவருக்கு இறுதிக்காலம் நெருங்கியது. படுக்கையில் கிடந்தார். அவரது வாய், தானாக உச்சரிக்கத் தொடங்கியது. எப்படி? 'O, god! O. god!' என்று. 'கடவுளே கடவுளே!' என்ற ஒலியைக் கேட்ட அவரது சீடர்கள், என்ன இப்படி உளறுகிறீர்கள் என்று கேட்டனர். 'நான் உளறவில்லை: உண்மையைத்தான் சொல்லுகின்றேன்.' என்றார் அந்த நாத்திகப் பெரியார்.

'நீங்கள் வீட்டு முகப்பில் எழுதி வைத்திருப்பது முன்பு உளறிய வார்த்தையா?' என்பது சீடர்களின் கேள்வி. 'இல்லை; உண்மை. அதே எழுத்துக்களில் அடங்கி உள்ளது. திரும்பப் படித்துப் பாருங்கள்' என்பது பெரியவர் பதில் 'god is now here' என்று படிக்கச் செய்தார் அந்த ஆங்கில நாட்டு நாத்திகப் பெரியார். 'கடவுள் எங்கும் இல்லை' என்ற சொல்லிலேயே 'கடவுள் இங்கு இருக்கிறார்' என்பது அடங்கி உள்ளது.

'நீ சொன்ன சொல்லிலும் உளன்' என்ற கவிதைத் தொடரின் பொருளை, இந்த நிகழ்ச்சியின் மூலம் உணரலாம். இந்தத் தொடரின் பொருளுக்கு இந்நிகழ்ச்சி பொருத்தமாக இருப்பதால் எடுத்துக் காட்டப் பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறைவன் இருக்கும் மிகச்சிறிய இடத்திற்கு எடுத்துக் காட்டாக 'அணுவைச்சதகூறு இட்ட கோண்' என்பது காட்டப்பட்டுள்ளது. அணுவே கண்ணுக்குத் தெரியாத ஒன்று. 'அது, பிளக்கமுடியாத ஒன்று' என்று, சென்ற நூற்றாண்டுவரை விஞ்ஞானிகள் எண்ணிக் கொண்டிருந்தனர்: அதனைப் பிளக்க முடியும் என்றும், அதனுள் அடங்கிக் கிடக்கும் சக்தி அளவற்ற ஒன்று என்றும் அண்மைக் காலத்தில்தான் விஞ்ஞானிகள் உணர்ந்தனர். உலகுக்கு அணுவின் சக்தியால்கிடைக்கும் பயன்களைத் தந்தனர் விஞ்ஞானப் பெரியவர்கள்.

ஆனால், பல நூற்றாண்டுகட்கு முன்பே, கவிச்சக்கரவர்த்தி, கண்ணுக்குப் புலப்படாத அணுவைப் பிளக்க முடியும் என்றும், அதனை நூறு கூறாகவும் பிரிக்க முடியும் என்றும், அந்த ஒரு கூறுக்கு கோண்' என்று பெயர் என்றும் காட்டியுள்ளார். அந்த நூற்று ஒருகூறுள் அடங்கிக்கிடப்பது இறைச் சக்தி, 'அது இன்றி அணுவும் அசையாது, என்றபழமொழியின் உண்மையையும் புலப் படுத்துகின்றது இந்தக்கவிதை. கவிச் சக்கரவர்த்தி கம்பர் மெய்ஞ்ஞானத்தோடு, நவீன காலத்துக் குரிய விஞ்ஞானப் பேரறிவும் நிரம்பப் பெற்றவர் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றது இந்தக் கவிதை.

'அரி' (நாராயணன்) தங்கியுள்ள மிகச் சிறிய இடம். அணுவினைச் சத கூறு இட்ட கோண்: மிகப் பெரிய இடம், மாமேருக் குன்று: இரண்டுக்கும் இடைப்பட்டது சாண் அளவு இடம். இவைகள் கண்ணால் காணப் படுபவைகள். கண்ணால் காணப் படாதது — (காதால் கேட்கப் படுவது) சொல். அதிலும் இருப்பவன் அவனே. காட்சி அளவைக் குரிய இந்தத் தூணிலும் அவனைக் காணலாம். இது பிரகலாதனின் ஞானத் தெளிவால் வந்த பதில். கேள்வி கேட்ட இரணியன் இதனை அப்படியே ஏற்றுக் கொள்ள வில்லை. ஏன்? ஞானத் தெளிவு அவனுக்கு இல்லையல்லவா? ஆனால் 'நன்று' என்று சொன்னான் எது நன்று? 'தூணில் இருப்பதாகச் சொன்னானே' அது நன்று எனக் கொண்டு, மேற்கொண்டு ஒரு ஆணை யிட்டான் அசுரன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆணையும் அந்த செயலும் :

'உம்பர்க்கும் உனக்கும் ஒத்து,இவ் உலகுளங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி' என்பது அந்த அசுர னின் ஆணை. இந்த ஆணையை நிறைவேற்றாவிட்டால் என்ன நடக்கும்? 'காட்டாயாகில்' (காட்டவில்லை என்றால்)

'கும்பத்திண் கரியைக் கோள்மாக் கொன்றென நின்னைக் கொன்று' உன்
செம்பொத்த குருதி தேக்கி உடலையும் தின்பன்'
என்றான் ★

'உலகு எங்கும் பரந்து இருப்பவனாக நீ கூறும் அரியை, இந்தத் தூணின் வழியாக, நான் கண்ணால் காணு மாறு காட்டவேண்டும்' என்ற தந்தையின் ஆணவ ஆணையை, மைந்தன் நிறைவேற்றியாக வேண்டும். நிறைவேற்ற முடியாது போனால், மைந்தனுக்குக் கிடைக்கும் தண்டனை மிக மிகக் கடுமையானதாகும்.

'யானையை, சிங்கம் கொல்வதைப்போல, தந்தை மைந்தனைக் கொல்வான்: அதன் இரத்தத்தையும் தன்னுள் நிரப்பி வைத்துக்கொள்வான் : மைந்தனின் உடலையும் தின்று விடுவான்.' இந்தத் தண்டனை கிடைக்கும் என்பது இரணி யனின் அறிவிப்பு. 'சிங்கமாக நின்று உன்னைக் கொல்லப் போகின்றேன்' என்ற இரணியனைக் கொல்வதற்கு ஒரு சிங் கமே வரப்போவதை, அவன் எப்படிஅறிவான்? இரத்தத்தைத் தேக்குவதும் நிரப்புதல் உடலைத் தின்பதும் யார்' என்பதை யும் அறியான் அசுரன். இவன் எதையும் அறியான் தான்!

அறிஞரின் அறிஞன் சொல்லும், அறிவுரையைக் கேட்டு உணர்வதற்கு அறிவு வேண்டும் அல்லவா? அது இல்லாத தால். தன் செயலே நடக்கும் என நம்புகின்றான் இரணியன். மனிதன், எந்தக் கொடுமையைப் பிறர்க்குச் செய்ய வேண்டும் என்று திட்டமிடுகின்றானோ, அந்தக் கொடுமை அவனுக்கே வந்து சேரும் என்பது இயற்கை நியதி. இந்த இயற்கை நியதியை, தனது அதிகார வன்மையாலும், தான் பெற்ற சாகாவரத்திண்மையாலும் வென்றுவிடலாம் என்று எண்ணிச் செயல்படுகின்றான் இரணியன்.

O 6313. உம்பர்-தேவர்: கம்பம்-தூண்: கும்பம்-யானையின் தலைமேல் அமைந்த மத்தகம் என்னும் உறுப்பு: கோண்மா-வலியசிங்கம்: குருதி-இரத்தம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியவனின் அறவுரை :

"என்உயிர் நின்னால் கோறற்கு எளியதுஒன்று அன்றுத் யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றான் ஆயின்,
என்உயிர் யானே மாய்ப்பல்; பின்னும்வாழ்வு உகப்பல் என்னின்,
அன்னவற்கு அடியேன் அல்லேன்" என்றனன் அறிவின் மிக்கான். O

'தந்தையே! எனது உயிர் உன்னால் கொல்லப்படும் அளவுக்கு எளிமை உடையதொன்றல்ல! ஆனால், நானே மாய்ப்பேன்.' எப்போது? நான் முன்பு சொன்னேனே அந்த இறைவன், நீ எங்கெங்கெல்லாம் தொடுகின்றாயோ, அங்கெல்லாம் அவன் தோன்றுவான், அப்படி தோன்றாத போது யானே மாய்ப்பேன்.

'இதனைச் செய்யாது, மறுபடியும் நான் வாழ்க்கையை விரும்புவேனாயின், அந்த அரிக்கு அடியவன் அல்லேன்' என்று சூளுரை கூறினான். யார்? அறிவின் மிக்கோன்-அறிவில் மேம்பட்டவனாகிய பிரகலாதன்.— அறிவொடு பட்டவன் கூற்று இது. அதனால் பொய் கலவாதது: மெய் கலந்தது இது. நம்பிக்கையற்ற இரணியன், எந்த இடத்தில் தொட்டாலும் அந்த இடத்தில் இறைவன் தோன்றுவான் என்று எவ்வளவு நம்பிக்கையோடு பேசுகின்றான் பிரகலாதப் பெருஞ் செல்வன்.— பக்தன் என்ன சொல்கின்றானோ, அந்த சொல்லை, பொய்க்காமல் காப்பதைத் தனது கடமையாக ஏற்றுக் கொண்டிருப்பவன் பகவான்.

காக்கும் கடவுள், தனது பக்தன் கூறிய கூற்றைக் காக்காமல் இருப்பானா? அதுவும், இறைவனையே, இல்லையாக்கும் முறையில் திட்டமிட்டுச் செயல் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாத்திகன் முன்னிலையில், பக்தன் இவ்வளவு நம்பிக்கையோடு சொல்லியிருக்கும் போது, அதனைக் காப்பதற்குத் துடித்துக் கொண்டிருப்பான் பகவான். பகவானது. துடிப்புக்குக் காரணம் என்ன? அடியவனின் அறவுரையைப் புறவுரையாக்கிக் கொண்டு நம்பிக்கையில்லாமல், இந்தக்கொடியவன் எந்தத் தூணில் தட்டுவானோ. அந்தத் தூணில் தோன்றவேண்டுமே என்ற துடிப்பு.

O 6314. கோறல் - கொல்லுதல். மாய்ப்பல் - மாய்த்துக் கொள்வேன்: உகப்பல்-விரும்புவேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அளந்திட்ட தூண் :

நல்லோனது பேச்சில் நம்பிக்கையற்ற வல்லோனாகிய இரணியன், நம்பி, கையால் தூணைத் தட்டினான். எதை நம்பினான் அவன். தனது மைந்தனால் கூறப்பட்டவன் தூணுள் இருக்க முடியாது என்பதை நம்பினான். அதனால் தனது கையால் தட்டினான் தூணை. தட்டுதலை எதிர் பார்த்துக் கொண்டிருந்த இறைவன், இரணியன் எதிர் பாராத வடிவத்தில் தோன்றினான். இந்தத் தோற்றத்தை தமது மனத்தில் இருத்திப் பார்த்து அனுபவித்தவர் பெரி யாழ்வார். அவர் அருளிய பாசுரம் ஒன்று சிந்திக்கத்தக்கது இங்கு.

'அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்ட வாள்உகிர்ச் சிங்க உருவாய்
உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பு அகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி
பேய் முலை உண்டானே சப்பாணி.' (பெ,. திருமொழி. 1.7.9)

தூணின் உயரமும், எடையும், பருமனும், சுற்றளவும் இரணியனால் அளக்கப்பட்டது. அதனால், தன்னால் அளந்து வைக்கப்பட்ட தூணினுள், அந்த நாராயணன் என்பவன் இருக்க முடியாது என்பது இரணியனது உறுதியான தீர் மானம், அந்த நம்பிக்கையோடு தான், தூணைத்தட்டினான் அசுரன். தட்டியதும் வெளிப்பட்டது நரசிங்கம்.

தானே அளந்து வைத்துக் கட்டிய தூணினின்றும், அரி (நாராயணன்) அரியின் (சிங்கமாக) உருவமாக, அரி யாக (பகைவனாக) வருவான் என்பது இரணியன் எதிர் பாராத ஒன்று. தூணில் இருக்கமாட்டான் அவன்' என்ற இரணியனது நம்பிக்கையை அழித்தது சிங்கத்தின் தோற்றம்.

'காட்டுமேல் காட்சி கொள்வேன்' என்ற எண்ணத் தினனாகிய இரணியன், தான் எதிர்பாராத இந்தச்சிங்கத்தின் காட்சியைக் கண்டும், பிரகலாதன் சொல்லை ஏற்க மறுக்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரணியன் தூணைத் தட்டும் போது, எந்த உணர்வோடு தட்டினான் என்பதைக் கம்பர் கூறுவதைக் கவனிக்க வேண்டும். 'நசை திறந்து இலங்கப் பொங்கி 'நன்று நன்று, என்ன நக்கு' என்பது கவிதைத் தொடர். உலகமெலாம் கலந்துவிளங்கும் இறைவன் ஒருவன் உளன் எனப்பிரகலாதன் தெளியக் காட்டுவானாயின் அவனைக் காணுதல் வேண்டும் என்ற விருப்பத்தோடு தூணைத் தட்டினான் இரணியன். (நசை-விருப்பம்) அந்த விருப்பம் வெளிப்படுமாறு 'நன்று நன்று' என்றுகூறினான்: பிறகு, கோபஉணர்வு தோன்ற சிரித்தான்' (நக்கு-சிரித்து) அந்தக் கோபச் சிரிப்பு அவன் கைக்கு வேகத்தைக்கொடுத்தது.(விசைதிறந்து–வேகத்துடன்)வேகம் பெற்ற உயர்ந்த கையால் எற்றினான். (எற்றினான்-அறைந்தான்) எற்றியதும் எதிர்த்து வந்தது செங்கண் சீயம். (சிங்கம்)

கோபச்சிரிப்போடு தூண் அறையப்பட்டதால்அதிலிருந்து வெளியேறும் சிங்கமும் கோபச் சிரிப்பு சிரித்தது. அந்தக் கோபச் சிரிப்பு அண்டம் பிளக்குமாறு ஒலித்தது. உலகம் ஒரு எதிரொலி மண்டபம். என்ன சொல்கிறோமோ, அதையே எதிரொலிக்கும் எதைச் செய்கிறோமோ அந்தச் செயலே எதிராக வரும். இது உலக இயற்கையின் விதி. இந்த விதிப்படிதான், கோபச் சிரிப்போடு தூணைத் தட்டிய இரணியனுக்கு எதிராக, இறைச் சக்தி, கோபச் சிரிப்போடு வெளிப்பட்டது.

அளந்திட்ட தூணைத்தட்டுவதற்குத் தனது கைகளையே கருவியாகக் கொண்டான் இரணிய அசுரன். அதனின்றும் வெளிப்பட்ட அரியும் (சிங்கம்:திருமால்.) அந்த அசுரனை அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது தமது கைகளையே. அரியை (நாராயணன்) அரியாக (சிங்கமாக) வரவழைத்தது கொடியவனின் கைகள், அந்தஅரியைக் கண்டதும் அடியவனின் கைகள் என்ன செய்தன? அதைத் தெரிவிப்பது அடுத்த கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12

மைந்தனின் மகிழ்ச்சியும் தந்தையின் இகழ்ச்சியும்

'நாடி, நான் தருவென் என்ற நல்லறி வாளன், நாளும்
தேடிநான் முகனும் காணாச் சேயவன் சிரித்த லோடும்,
ஆடினான்; அழுதான் பாடி அரற்றினான்; சிரத்தில் செங்கை
சூடினான்; தொழுதான்; ஓடி உலகெலாம் துகைத்தான்,
துள்ளி.' ❦

'நானே தேடிக்கண்டு அந்த இறைவனை உனக்குக் காட்டிக் கொடுப்பேன்' என்று மைந்தன் தந்தையிடம் கூறியிருந்தான். அவ்வாறே, பக்தன் கூறிய உறுதிமொழிகளைக் காப்பதற்காகத் தூணில் தோன்றினான் பகவான். இறைவனை உணரும் நனஞானம் (நல்லறிவாளன்) பெற்றிருந்ததால்தான் பிரகலாதன் அவ்வளவு உறுதியாகக் கூறினான். தான் சொன்னவண்ணமே, பகவான் தோன்றியதால், அந்தக் காட்சியைக் கண்டு அளவற்ற ஆனந்தம் அடைந்தான் அடியவன். இந்தக் காட்சியைக் காண்பதற்கு, நான்கு முகங்களைப் பெற்ற பிரம்மதேவன், ஒரு முகமாக நாள்தோறும் முயன்று பார்க்கின்றான். காண முடியவில்லை. நான்முகனாலும் காணமுடியாத அந்தப் பெருமானை, ஒரு முயற்சியும் செய்யாமலேயே கண்டான் என்றால், அவன் பெற்ற மகிழ்ச்சிக்கு எல்லை கூற முடியுமா?

மகிழ்ச்சியால் மைந்தன் ஆனந்தக் கூத்து ஆடினான்: தன் பொருட்டு எளிமையாக வந்த இறைவனது அருள் திறத்தை எண்ணி நெஞ்சம் நெக்குருகி அழுதான்: இறைவனது பொருள் சேர் புகழ் திறத்தைப் பாடி அரற்றினான்; தனது சிவந்த கைகளைத் தலையின் மேல் குவித்து வணங்கினான்: உலகமெங்கும் துள்ளிக்குதித்து ஓடி, கால்களால் உழப்பினான்.

உள்ளத்தில் தோன்றும் மகிழ்ச்சி உணர்வு வெளிப்படும்போது, ஏற்படும் செயல்கள் இவை. மைந்தனின் இச்செயல்கள் அவன் உள்ளத்து மகிழ்ச்சிக்கு அடையாளமாகின்றான்.

❦ *6316*. நாடி-தேடி: சேயவன்-அப்பாற்பட்டவன்: சிரம்-தலை: சூடினான்-தலைமேல் குவித்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேயவன் சிரித்தலோடும் மைந்தன் மகிழ்ந்தான்: அப்பொழுது, தந்தை என்ன செய்தான்? இகழ்ந்தான் எப்படி?

'ஆர்அடா சிரித்தாய்? சொன்ன அரிகொலோ? அஞ்சிப் புக்க
நீர், அடா போதாது என்று நெடுந்தறி நேடி னாயோ?
போர்அடா? பொருதி ஆயின் புறப்படு புறப்படு'' என்றான்-
பேர்அடா நின்ற தாளோடு உலகுஎலாம் பெயரப் போவான்O

சேயவன் சிரிப்பு, மைந்தனை மகிழ வைத்தது, தந்தையை இகழ வைத்தது. 'ஆர் அடா சிரித்தாய்' என்று சிரித்தவனை ஏளனத்தோடு, இகழும் முறையில் நோக்கினான்; பிறகு நேருக்கு நேராகப் பேசத் தொடங்குகின்றான் அசுரத்தந்தை. 'என் மைந்தன் சொன்ன 'அரி' என்பவன் நீ தானா? நீ எனக்குப் பயந்து கொண்டு தானே பாற் கடலில் சென்று ஒளிந்து கொண்டிருந்தாய். நீ ஒளிந்து கொள்வதற்கு அந்த இடம் போதாது என்று, இந்தத் தூணையும் உனது மறைவிடம் ஆக்கிக் கொண்டாயா? எனது அரண் மனைத் தூணிலேயே வந்து ஒளிந்து கொண்டிருக்கும் உன்னை நான் விட மாட்டேன். இனி உனக்கும் எனக்கும் போர்தான். போர் செய்வதற்கு உனக்கு ஆற்றல் இருந்தால் வெளியில் புறப்பட்டு வா, புறப்படு புறப்படு. என்று ஏளனம் கலந்த கோபத்தோடு கூறினான். கூறினவன் யார்? உலகு எலாம் பெயரப் போவான் எப்படி? பேர் அடா நின்ற தாளோடு. தன் பெயர் பொருந்தி நிற்றற்குக் காரணமாகிய வலிமை வாய்ந்த கால்களால், உலகமெல்லாம் நிலைகுலையும் படி அடி பெயர்த்திடுபவன். இரணியனது கால்கள் வலிமையானவை. அந்தக் கால்களை அடி பெயர்த்து வைத்தால், உலகமே, தனது நிலைகுலைந்து நடுங்கும். அப்படிப் பட்டவன் தான், இப்படிக் கோபத்தோடு போருக்கு அழைக்கின்றான் சிரித்த செங்கண் சீயத்தை.

உலகை நிலை குலையச் செய்த அசுரன், தனது நிலை குலைய, தன்னை அழிக்க வந்த சிங்கத்தை அவனே அழைக்கின்றான். என்பது ஈற்றடியின் குறிப்பு. இரணியனது அடங்காத ஆணவ உணர்வை, கோபம் கலந்த சொற்களின் மூலம் வெளிப்படுத்திக் காட்டும் அழகிய கவிதை இது.

O 6317. தறி-தூண்: நேடினாய்-தேடினாய் பொருதி-போர் செய்வாய் பேர்தல்- இடம் பெயர்தல். பேர்-புகழ்: அடாநின்ற-அடுத்து நின்ற.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13

அருட்சிங்கம் ஆற்றியவை

'பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது சீயம் பின்னை,
வளர்ந்தது திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை யார்அறிந்து அறைய கிற்பார்?
கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும்'
(*6318*)

'புறப்படு, புறப்படு' என்று அழைத்த பிறகும், புறப் படாமல் இருப்பானா அந்தப் புண்ணியப் பெருமூர்த்தி. புறப்படத் தொடங்கியதும் தூண் இரு கூறாகப் பிளந்தது. செங்கன் சீயம் தூணினின்றும் வெளிப்பட்டது: பிறகு, அது எட்டுத் திசைகளையும் தொட்டுக் கொண்டு வளர்ந்தது; இந்த அண்டத்துக்கு வெளிப் புறத்தில் உள்ள அண்டங்களை அளப் பதற்காக, தன் வடிவினால் நீண்டு உயர்ந்தது. அதனால், உலக உருண்டையாகிய முட்டை கீழ்ப்பக்கமும் மேல் பக்க மும் கிழிந்து பிளந்தது. இந்த அண்டத்துக்கு அப்பால் நிகழ்ந்த செய்கையினை அறிந்து சொல்ல வல்லவர்கள் யார்? சொல்லும் ஆற்றல் பெற்றவர்கள் யாரும் இல்லை என்பது குறிப்பு.

உலகத்துக்கு அருள் செய்ய வந்த அரி (நாராயணன்) அரி (சிங்கமாக) உருவமாக, அவுணர் வேந்தன் முன் எவ்வ ளவு பெரிய தோற்றத்தினனாய் விளங்குகின்றான் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றது இந்தக் கவிதை. தன்னையே மிக மிகப் பெரிய உருவத்தினனாகவும், வலிமை நிறைந்த வனாகவும் எண்ணிக் கொண்டிருந்தவன் இரணியன், அவ னுக்கு முன்னால், இறைவன் இவ்வளவு பெரிய தோற்றத் தினனாகத் தன்னைக் காட்டியது, இதனைக் கண்ட பிறகா வது, அவனுடைய ஆணவம் அடங்கும் என்பதற்குத்தான்.

சிங்கத்தின் பேருருவத்துக்கு முன்னால் நிற்கும் இரணி யன், இப்போது மிக மிகச் சிறிய வடிவத்தினன் ஆனான். அப்படியிருந்தும் அவனது ஆணவம் குறையவில்லை. அசுரனிடம் வளர்ந்து பெருகியுள்ள ஆணவ உணர்வு வலிமை யற்று, தானே அடங்கிவிட வேண்டும் என்பதற்காக நரசிங்கம் பல வீரச் செயல்களை நடத்தியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மன்றல் அம் துளபமாலை மானுட மடங்கல் வானில் சென்றது' என்று தொடக்கம் செய்து, அந்தச் சிங்கம் ஆற்றிய வீரச் செயல்களைப் பல கவிதைகளில் விவரிக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

நரசிம்மத்துக்கு இப்போது எத்தனையோ கைகள்! எத்தனையோ முகங்கள்! இவ்வளவு எதற்கு? கடல்போன்று பரந்து கிடக்கும் இரணியனது அசுரச் சேனையை அழிக்க வேண்டும் அல்லவா! அதற்கு.

சிங்கம், ஆயிரம் கோடி வெள்ளத்து அயில் எயிற்று அவுணர்கள் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு திருமுகத்தால் நோக்கி அழிக்கும். சில அவுணர்களைத் தனது பற்களின் நடுவில் வைத்து அடக்கும்: சிலரைப் பாரிடைத் தேய்க்கும்: (பார்-பூமி) சிலரை, பகிரண்டத்து அடிக்கும்: மேருவில் புடைக்கும் சிலரை: விரல்களால் பிசையும் சில அவுணர்களை: கடல் நீரில் அமுக்கும் சிலரை: அசுரர் சிலரை நெருப்பிடைச் சுருக்க நீட்டும்: வாய்களைப் பிளக்கும் அவுணர் சிலரை: செந்தீக் கண்களைப் பிடுங்கும்: குடலைக் கொய்யும்: உகிர்களால் உறக்கும்.

அது மட்டும் அல்ல சிங்கத்தின் செயல்கள். வானுற உயர்ந்த மானுட மடங்கல், தனது ஆற்றலைக் காட்டுவதற்கு 'யானையும், தேரும் மாவும், யாவையும் உயிர் இராமை ஊனொடு தின்னும்: ஒலிதிரைப்பாவை எமும் மீனொடு குடிக்கும்: மேகத்தை இடியோடு சேர்ந்து விழுங்கும்: தான் அழிந்த அவுணர்களின் உடல்களை, கடலில் வீசி எறியும் அதனால், கடல்தூர்ந்து போகும்.

மானுட மடங்கல் இவ்வளவையும் செய்தது எதற்கு? இரணியனது அசுரத்தனச் செயலுக்குத் துணையாக நின்று செயல்பட்ட அவுணர்களை ஒழித்துக் கட்ட வேண்டும்.

தலைவனுக்கு முன். அவனது தொண்டர்களை ஒழித்து விட வேண்டும். இது ஒரு ஆன்மீக அரசியல் நெறி. தக்கோர் இடர்.துடைக்கப்படவேண்டுமானால். தீயோர் அனைவரையும் தீர்த்துக்கட்டியாக வேண்டும். அப்படித் தீர்த்துக் கட்டியும், தீயோர்களின் தலைவன் திருந்தவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14
சீரிய சிங்கமும் சீறிய சிறுமையும்

'இவையா பிலவாய் திறந்துளரி கான்ற
இவையா எரிவட்டக் கண்கள் இவையா
எரிபொங்கிக் காட்டும் இமையோர் பெருமான்
அரிபொங்கக் காட்டும் அழகு.?

(நான் முகன் திருவந்தாதி-21)

நரசிம்மம் நடத்திய செயல்களுக்குரிய தோற்றத்தை அழகாகக் கண்டு அனுபவிக்கின்றார் ஆழ்வார் ஒருவர். அவர் திருமழிசை யாழ்வார். அதனால் அது சீரிய சிறந்த சிங்கமே அதனை அழகாகக் கண்டு ஆனந்தம் பெற்றவர் ஆழ்வார். அதன் செயலைக் கண்டு அசுரர் தலைவன் சீறினான் அதனால் அவன் சிறுமை பெறுபவனே ஆவான் நரசிம்மத்தின் செயல்களில் அழிவைக் கண்டும், அஞ்சாமல் அதனை எதிர்க்கத் துணிந்தான் அவுணன். 'உயிருடை மேரு என்ன வாய் மடித்து உருத்து நின்றான் இரணியன், நரசிங்கத்தை எதிர்ப்பதற்கு.

'நின்றவன் தன்னை நோக்கி, நிலைஇது கண்டு, நீயும்,
ஒன்றும்உன் உள்ளத்து யாதும் உணர்ந்திலை போலும்
அன்றே
வன்தொழில் ஆழிவேந்தை வணங்குதி; வணங்க வே,உன்
புன்தொழில் பொறுக்கும்? என்றான் உலகெலாம் புகழ
நின்றான். O

அறியாமையால், அரியை (சிங்கத்தை) எதிர்க்கத் துணிந்து நின்ற கொடியவனைத், திருத்துவதற்கு அன்போடு அறிவுரை கூறுகின்றான் அடியவன். 'அப்பா எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனது நிலையை நீ இப்போது காட்சி அளவையால் காண்கின்றாய். இப்படிக் கண்ணாரக் கண்ட பிறகும், எதனையும் உய்த்துணர வல்லவனாகிய நீ, உன் உள்ளத்தில் ஒரு சிறிதும் உணரவில்லை போலும்! போனது போகட்டும்! இனிமேலாவது பகைவரிடம் கொடுந் தொழில் காட்டும் சக்கரப்படையை ஏந்திய இந்த நாராயணனை வணங்குவாய். வணங்கினால், நீ எவ்வளவு பெரிய பிழைகளைச் செய்திருந்தாலும். அதனை, சிறியோன் செய்த

O 6333. ஆழிவேந்து-சக்கரப்படை ஏந்திய திருமால்: புண் தொழில்-அற்பத்தனமான செயல்: பொறுக்கும்-மன்னிக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறுபிழை என்று கருதிபொறுத்துக் கொள்வான்'. ஆழிவேந்து அனைவரினும் பெரியவன் அல்லவா! உன்னை மன்னித்து விடுவான், உன் பிழைகளுக்கு ஏற்ற கொடுந் தண்டனை எதுவும் கொடுக்க மாட்டான். அதனால், நீ, வணங்கா முடியனாக நிற்காமல், வணங்கும் அடியவனாக மாறிவிடு' 'அப்பா!' என்று மன்றாடி அன்புளத்தோடு கேட்டுக் கொண்டான் தனது தந்தையிடம். யார்? 'உலகு எலாம் புகழ நின்றான்.' — பிரகலாதன்.

உலகத்தினர் அனைவராலும் புகழ்ந்து பேசப் படுவதற்குரிய குணங்களால் உயர்ந்து நின்ற மைந்தன், கண்ணாரக் கண்டும், உண்மையை உணராமல், நரசிம்மத்தை எதிர்க்க நின்ற தந்தைக்கு, தக்க சமயத்தில் கூறிய அறவுரை இது. மைந்தனும் நின்றவன்தான்: தந்தையும் நின்றவன்தான் நிற்றல் என்பது இருவருக்கும் ஒன்றுதான். ஆனால் கற்றதும் பெற்றதும் வேறு பட்டவைகளாகும். தந்தை கற்றான் வேதத்தை. கற்றதன் பயன் எதுவோ அதனைப் பெறுவதற்குரிய ஒன்று, தானே வந்து முன் நிற்கிறது. அதனை ஏற்க மறுக்கின்றான். கற்றதனாலாய பயன் எது? இறைவன் திருவடியை வணங்குவதுதான். வணங்கப்பட வேண்டிய இறைவன், எதிரில் வந்து காட்சி கொடுக்கவும், வணங்க மறுக்கின்றான் என்றால், அசுரனின் ஆணவத்தால் வளர்ந்து நிற்கும் அறிவின்மையை என்ன என்று சொல்வது!

மைந்தன், எந்த ஆசிரியரிடமும் எந்த நூலையும் கற்றான் இல்லை ஆனால், இறைவன் திருவடி தொழுதலாகிய அதன் பயனைப் பெற்றான். அதனால் உலகு எலாம் புகழ நின்றான். நின்றான், நின்றவன் தன்னை நோக்கினான்: நிறைமொழி கூறினான். அதுவே மறை (வேதம்) மொழி. இதனைக் குறைமொழியாகத் தான் கொண்டான் அக்கொடியவன். இப்படிப் பலவிதமான நயம் தரத்தக்கது இந்தக் கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'வணங்கு' என்ற கூற்றுக்கு, இணங்காதவனாய், இரணியன் பேசிய பேச்சு, ஆணவத்தின் உச்சநிலையைக் காட்டுகின்றது. என்ன பேச்சு?

'கேள், இது: நீயும் காண, கிளர்ந்தகோள் அரியின் கேழ்இல்
தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்து, பின், என்
வாளினைத் தொழுவது அல்லால், வணங்குதல், மகளிர் ஊடல்
நாளினும் உளதோ' என்னா, அண்டங்கள் நடுங்க நக்கான். ✻

'நான் சொல்வதைக் கவனமாகக் கேள்: நான் என்ன செய்வேன் தெரியுமா? 'ஆழி வேந்தை வணங்குதி' என்றல்லவா சொன்னாய். வணங்குவேன். எதனை? எனது வாளை, எப்போது? ஊக்கம் பெற்றதாய்த் தோன்றிய, கொலைத் தொழில் வல்ல, இந்த நரசிங்கத்தின் தோளையும் தாளையும் (காலையும்) வெட்டுவேன்: பிறகு உன்னையும் வெட்டி வீழ்த்துவேன். பகைவனையும். பகைவனைத் தெய்வமாக வணங்கிய உன்னையும் வெட்டி வீழ்த்தியபிறகு, எனது வாளை வணங்குவேன்.'

'சிலர், தமது மனைவிமார்களது ஊடலைப் போக்குவதற்காக, அவர்களை வணங்குதல் உண்டு. அப்படியும் கூட அந்த ஊடல் காலத்திலும் வணங்கி அறியாதவன் நான். 'அப்படி வணங்கா முடியனாக வளர்ந்து வாழ்ந்த நான், இப்போது உனக்காக இவனை வணங்கித் தளர்ந்து தாழ்ந்து போவேனா? ஒருக்காலும் முடியாது.' என்று சொல்லி, உலகமெல்லாம் நடுங்குமாறு ஒரு வெடிச் சிரிப்பு சிரித்தான் இரணியன்.

சீரிய (சிறப்புமிக்க) சிங்கத்தைச் சீறும் சிறியோனாக இருக்க விரும்புகின்றானே அன்றி, வணங்கும் பெரியோனாக வாழ விரும்பவில்லை இரணியன். வாழ வைப்பது எது? வீழ வைப்பது எது? என்பதைப் பகுத்துப் பார்த்து உணரும் ஆற்றலை வளர விடாமல் தடுப்பது எது? அது ஆணவம். தனது தந்தையை வாழ வைப்பதற்காக அரும்பாடு படுகின்றான் மைந்தன். தந்தையின் ஆணவம்தான், அவனை வீழ்த்தப் போகின்றது.

✻ 6334. அரி-சிங்கம்: கேழ்-ஒப்பு: நக்கான்-சிரித்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீறும் சிறியோன், சீரிய சிங்கத்தை நெருங்குகின்றான் சீரிய ,சிங்கம் நெருங்கிய சிறிய வனைச்சுற்றிச் சூழ்ந்தது எப்படி?

'நகைசெயா, வாயும் கண்ணும்
வாளொடு நடந்த தாளும்
புகைசெயா, நெடுந்தீப் பொங்க
உருத்துஎதிர் பொருந்தப் புக்கான்:
தொகைசெயற்கு அரிய தோளால்
தாள்களால் சுற்றிச் சூழ்ந்தான்
மிகைசெய்வார் வினைகட்கு எல்லாம்
மேற்செயும் வினையம் வல்லான்! (6335)

இரணியன், நரசிங்கத்தை நெருங்கும் போது, ஏளன மாகச் சிரித்தான்: வாள் ஏந்தினான். அவனது வாயிலும், கண்ணிலும் கோபத்தீ பொங்கிச் சீறியது: அந்த சீற்றம். அவன் நடந்த கால்களின் வேகத்திலும் வெளிப் பட்டது. இப்படித் தன்னை நெருங்கி வந்த இரணியனை, எண்ணிக்கையற்ற தனது கைகளாலும், கால்களாலும் சுற்றிப் பிணித்துக் கொண்டான் யார்? மிகை செய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும் வினையம்வல்லான்.'- மிக்க கொடுந் தொழிலைச் செய்பவராகிய தீயோர் செய்யும் வஞ்சனை களுக்கு எல்லாம் முந்துற மேற்பட்டுச் செய்யும் சூழ்வினைத் திறத்தில் வல்லவனாகிய நாராயணன்.

வல்லான், தன்னைக் கொல்ல வந்தவனை இல்லா னாக்குவதற்காக, தனது கைகளாலும் கால்களாலும் சுற்றிப் பற்றிக் கொண்டான். கவிதையின் இறுதி அடி, இறைவன், யாருக்கு எந்த உருவில் எத்தகைய செயலைச் செய்வான் என்பதைத் தெளிவு படுத்துகின்றது. இந்தக் கவிதைக்கு, நயம் சேர்க்கும் நல்லதோர் ஈற்றடி இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரணியனின் இறுதி:

'ஆயவன் தன்னை மாயன் அந்தியின் அவன்பொற் கோயில்
வாயிலின் மணிக்க வான்மேல், வயிரவாள் உகிரின் வானின்
மீஎழு குருதி பொங்க வெயில்விரி வயிர மார்பு
தீஎழப் பிளந்து நீக்கி, தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்? (6341)

வியக்கத்தக்க பேராற்றலைப் பெற்ற சிங்கப் பிரான், அத்தகையவனான இரணியனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையைக் கொடுத்தான், எப்படிப் பட்ட தண்டனை! மார்பு பிளக்கப்பட்டது: நேரம், பகலும் இரவும் இல்லாத மாலைக் காலம்: இடம், வீட்டின் உள்ளும் வெளியும் சந்திக்கும் வாசற்படி: இருத்திக் கொண்டது. மேலும் கீழும் இல்லாத சிங்கப்பிரான் தொடை: பிளந்த கருவி, ஈரமுடையதும் ஈரம் அற்றதுமான நகம்: பிளந்த உருவம் நரனும் சிங்கமும் கலந்த புது வடிவம். இரணியனது வயிர (உறுதி) மார்பு பிளக்கப்பட்ட போது, இரத்த வெள்ளம் எங்கும் பரந்தது. (பரவியது) தீப் பொறி எங்கும் பறந்தது. இரணியன் தனது அறிவுத்திறத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பிரம்மதேவனிடம் பெற்ற வரத்துக்குக் குறையேற்படாமல், அதற்கு அப்பாற் பட்டு வந்த தண்டனை இது. அசுரன் வீழ்ந்தான்: அமரர்கள் வாழ்ந்தனர். நரசிம்மமூர்த்தி இரணியனைத் தீர்த்ததன் மூலம், தேவர்களது இடரையும் தீர்த்தான். (நீக்கினான்) சிங்கப்பிரான் செயலை விவரிக்கும் பெரியாழ்வார் பாசுரம் ஒன்று இங்கு நினைவு கூரத்தக்கது.

'உரம்பற்றி! இரணியனை- உகிர்நுதியால்
ஒள்ளியமார்பு உறைக்க ஊன்றி
சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க,
வாய்அலறத் தெழித்தான்
(பெரியாழ்வார் திருமொழி 4.9.8.)

மைந்தனுக்கு இறுதியைக் கொடுக்கத் திட்டமிட்ட தந்தை, தானே சென்று இறுதியிடம் இணைந்து கொண்டு விட்டான்.

கவான்- தொடை: வாள்-கூர்மை: உகிர்-நகம்: குருதி-இரத்தம் இடுக்கண்-துன்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15

நரமடங்கல் கண்ட நான்முகன்

'தன்னைப் படைத்ததுவும் தானே எனும்தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ என்றால், உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய்நீ எனும்இதுவும் எத்துஆமோ?' O

தேவர்களின் துயர் தீர்ந்த பிறகு, அவர்களுள் படைப்புத் தேவனாகிய நான்முகன் நரசிங்கமூர்த்தியின் முன் வந்து நின்றான். தேவர்களின் துயர் தீர்க்க வந்த இந்த நரமடங்கல் தோற்றத்தின் மூலமாக உலகுக்கு உணர்த்தப்பட்ட ஒரு உண்மையைக் கூறி, இறைவனைப் புகழ்கின்றான் பிரம்ம தேவன்.

'உலகிற்கெல்லாம் இறைவனே காரணமாவான்: தனக்குக் காரணமாவது பிறிது ஒன்று எதுவும் இல்லாதவன்: அவனைத் தோற்றுவித்துக் கொள்வதுவும் அவனே: மன்னுயிர்கள் எல்லாம் உய்வு பெறும் பொருட்டு, அவைகள் வழிபடுவதற்காக, தனக்குரிய திருமேனியைத் தானே படைத்துக் கொள்வான்' என்று இறைவன் இயல்பு பற்றி அறிவு நூல்கள் கூறும். 'அந்த நூல்கள் கூறுவது உண்மை தான், என்பதை, நீயே உன்னை நரமடங்கலாகத் தோற்றுவித்துக் கொண்டதன் மூலம் உலகுக்கு உணர்த்தி விட்டாய்.' 'இறைவனாகிய தன்னைத் தோற்றுவித்துக் கொண்டதும், அப்பரம் பொருள்தானே, என்ற உண்மை யினைப்பின்பு, நின்னால் படைத்துக் கொள்ளப் பெற்ற நரசிங்கமாகிய இந்தத் திருவுருவமே நன்கு புலப்படுத்து வதாகும்.'

O 6345. ஏத்து-புகழுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மேலும், எல்லையற்ற பேருலகம் அனைத்தையும் உன்னிடத்திலிருந்தே தோற்றுவிக்கும் வியக்கத்தக்க பேராற்றல்படைத்தவன் நீ. அப்படி நீயே முழு முதற்கடவுளாகயிருந்தும், மன்னுயிர்களுக்கு ஏற்றபல் வேறு உடம்புகளையும் படைக்கக் கூடிய தொழிலை, என்னிடத்தில் கொடுத்தாய். படைப்புத் தேவனாகிய என்னையும் நீயே படைத்தாய்' என்று சொல்லிப் புகழ்கின்றேன் உன்னை. 'இது உன்னை உள்ளபடி உணர்ந்து போற்றிய புகழுரை ஆகாது'. 'உனக்குரிய எல்லையற்ற ஆற்றல்களுள் ஒரு பகுதியை, எனக்குக் கொடுத்து என்னை, உனது அருளால் உயரச் செய்தாய்' என்று கூறுவதே ஏற்புடையதாகும்' என்ற குறிப்புத் தோன்ற ஏத்தினான் நான்முகன்.

'நின்னுள்ளே நான்முகனை மூழ்த்தநீர் உலகுஎல்லாம் படை' என்று முதல் படைத்தாய்" என்ற திருவாய் மொழிப் பாசுரப் பகுதி இங்கு நினைவு கூரத்தக்கது. (3.1.7)

பொன்னும் பொற்கலனும்:

'நின்னுளே என்னை நிருமித்தாய்; நின் அருளால்,
என்னுளே, எப்பொருளும் யாவரையும் யான் ஈன்றேன்;
பின்இலேன்; முன்இலேன்: எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியஓர் பொற்கலனும் போன்றேன்.'O

'என் தந்தையாகிய இறைவனே! உன்னிடத்திலிருந்தே என்னைத் தோற்றுவித்தருளினாய். உனது அருளின் திறத்தால், நான் என்னிடத்தேயிருந்து அஃறிணையாகிய எல்லாப் பொருள்களையும் உயர்திணை உயிர்களாகிய யாவரையும் படைத்தேன். எனக்கு ஆதியாக உன்னையன்றி வேறு ஒன்றனையும் முன் உடையேன் அல்லேன்: பின்னர்ச் சென்று அடையும் அந்தமாக ஒன்றையும் பெற்றிலேன்.'

'உன்னிலிருந்து நான் வேறு ஒருவனாக இருந்து செயல்பட்டாலும், உன்னைப் பிரியாதவனாகவேயிருப்பேன். 'பொன் ஆபாரணம், பொன்னிலிருந்து தனி வடிவம் பெற்று, தனக்கு என ஒரு அழகு பெற்று விளங்குகிறது.

O 6348. நிருமித்தல்- தோற்றுவித்தல்; கலன்-அணிகலன் (ஆபரணம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தாலும், அது பொன்னை விட்டுப் பிரிந்தது அல்ல! அதேபோன்று. நானும், உலக உயிரினங்களும் தனித்தனியான உருவங்களும் தொழில்களும் இயல்புகளும் பெற்றிருந்தாலும், உன்னைவிட்டுப் பிரிந்தவர்களாக மாட்டோம்.' என்று நரமடங்கலைக் கண்ட நான்முகன், மேலும் போற்றிப் புகழ்ந்துரைத்தான்.

பிரம்மதேவனது புகழ்ச்சி, வேறு ஒரு வகையாகவும் அமைகின்றது, குற்றம் எதுவும் ஒரு சிறிதும் இல்லாதவன் இறைவன், 'அமலன்' என்றும், 'விமலன்'என்றும் சொல்லப்படுபவன் இறைவன். அத்தகையவனிடத்தில் ஒரு குற்றம் அமைந்திருப்பது போன்று காட்டிப் புகழ்கின்றான்.

'வரம்பின்மை' என்ற குற்றம் (எல்லையற்ற ஆற்றல்) உள்ளது. எப்படி? கடலில் தோன்றும் நீர்க்குமிழிகள் நிலையற்றவை: அழியக்கூடியவை. அவை அழிந்தாலும் கடலின் நீரிலேதான் இருக்கும். அது போன்று உன்னிடத்திலிருந்து தோன்றிய பல ஆயிரங்கோடி அண்டங்கள் நிலையற்றவை: அழிவன. ஆனால் உன்னிடத்தில் அடங்குவன.'

உலகத் தோற்றத்துக்கு நிலைக்களமாக விளங்கும் நீயே, உலகில் உள்ள எல்லா உருவங்களாகவும் கலந்து விளங்குகின்றாய். இப்போது, அந்த உருவங்கட்கு எல்லாம் மாறுபட்ட நிலையில் உள்ள அஞ்சத்தக்க இந்த நரசிங்க உருவத்தினை விரைந்து படைத்துக் கொண்டாய்.'

,இது, உனது எல்லையற்ற ஆற்றலைக் காட்டுகின்றது. அதனால், 'வரம்பில்லாமை' என்ற ஒரு குற்றம் உன்னை வந்த சேர்ந்துவிடுமே, என்று புகழாப் புகழ்ச்சியாகக் கூறுகின்றான் பிரம்மதேவன். 'இவ்வுருவம் வல்லே குறித்தால் வரம்பின்மை வாராதோ' என்பது கவிதைத் தொடர்.

நரசிம்ம வடிவம், நாராயணனை நான்முகன் போற்றிப் புகழ்வதற்கு ஏற்ற ஒரு தோற்றமாயிற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16

திருமகள் வருகையும் சிங்கப் பெருமான் அருளுதலும்

'பூவின் திருவை, அழகின் புனைகலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடுஎன்னும் இன்பத்தை,
ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம்மோயை ஏவினார், பாற்செல்ல? (6351)

'செந்தா மரைப்பொகுட்டில் செம்மாந்து! வீற்றிருக்கும்
நந்தா விளக்கை, நறுந்தாள் இளங்கொழுந்தை,
முந்தா உலகும், உயிரும் முறைமுறையே,
தந்தாளை, நோக்கினான், தன்ஒப்பு ஒன்று இல்லாதான்.'
(6352)

இந்த இரண்டு கவிதைகளும், இரணியன்வதைப் படலத்துள் தனித்ததோர் சிறப்புக்கு உரியவைகள். கற்பார் அனைவர் மனத்துள்ளும் நிலையாக நிற்க வேண்டியவைகள், வைணவ சம்பிரதாயத்தில், பெரிய பிராட்டியை (திருமகள்: இலக்குமி) வழிபடுதல் என்பது மிகமுக்கியமானதாகக் கருதப்படுகின்றது. பிராட்டிதான், அடியவர்களை ஆண்டவனிடம் சேர்ப்பிக்கின்றாள். இருநிலையினர்க்கும் புருஷகாரமாக இருப்பவள் பிராட்டியே. அடியவர்களைத் தனது அருளாலும், பெருமானைத் தனது அழகாலும் திருத்தி இணைத்து வைக்கும் ஆற்றல் பெற்றவள் பிராட்டி.

'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பன்' திருமால். அதனால் பெருமான், உலக உயிர்களைக் காப்பதற்காக, மண்ணுலகில் அவதாரம் செய்யும் போதெல்லாம் பெருமானுக்குத் துணையாக நிற்பதற்குப் பிராட்டியும் கூடவே அவதாரம் செய்வாள்.

இப்போது, நரசிம்ம அவதாரம், பெருமான் தனித்து நின்று செய்தது, பிராட்டி, பக்கத்தில் இல்லை. அதனால் இரணியனைக் கொன்ற கோபம், தணியாமல் நிற்கின்றான் பெருமான், அந்தக்கோபத்தைத் தணிப்பது யார்? பிராட்டி தானே அந்தக் கைங்கர்யத்தைச் செய்ய முடியும்! ஆகவே தேவர்கள் அனைவரும் பிராட்டியிடம் முறையிட்டு, சிங்கப் பிரானிடம் செந்தாமரைச் செல்வியை அனுப்புகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரம்மதேவன் முதலிய தேவர்கள் பிரார்த்தித்து (ஏவினார்) அனுப்பினார்கள். யாரை? பிராட்டியை. எத்தகைய பிராட்டி?

அழகு எனப்படும் பண்பு, தனக்கு, மேலும் அழகு உண்டாவதற்காகப் புனைந்து கொள்ளத்தக்க ஆபரணமாக விளங்குபவள்: (அழகின் புனைகலம்) எல்லோர்க்கும் செல்வத்தை வழங்குபவள்: பரமபதமாகிய பேரின்பமாகத் திகழ்பவள்: எம்பெருமானாகிய நாராயணனுக்கு உயிர்த் துணையாக நிற்பவள்; இறைவாமையைத்தரும் அமிர்தத்துடனே திருப்பாற்கடலில் தோன்றியவள்; மண்ணுலகில் உள்ளமக்களுக்கேயன்றி விண்ணுலகத் தேவர்களுக்கும் தாயாகயிருந்து அருள்செய்பவள், இத்தகைய பிராட்டி. அனைவர்க்கும் காட்சியளிப்பதற்காகத் தாமரை மலரில் வீற்றிருக்கின்றாள். (பூவின் திரு) தாயாரிடத்தில் தானே பிள்ளைகள் தமது குறையைத் தீர்க்குமாறு வேண்டிக் கொள்வார்கள். அந்த உலகியல் முறைக்குஏற்ப, 'தேவர்க்கும் தம் மோயைஏவினார்' (மோய்-தாய்) எனப்பட்டது.

தேவர்களது வேண்டுகோளை ஏற்று. சிங்கப்பிரானிடம் சென்றாள் திருமகள். பிரான், பிராட்டியை நோக்கினான். நோக்கப்பட்ட பிராட்டியையும் நோக்கிய பிரானையும் விவரிக்கின்றது இரண்டாவது கவிதை.

பெருமானால் நோக்கப்பட்ட பிராட்டி, செந்தாமரை மலரின் நடுவில் பெருமகிழ்ச்சியுடன் வீற்றிருப்பவள்: தூண்டா விளக்காகத் தோன்றுபவள்: (நந்தா விளக்கு) நறுமணம் வீசும் காம்புடன் கூடிய இளங்கொழுந்தாகத் திகழ்பவள்: ஆதியிலே உலகங்களையும் உயிரினங்களையும் வழிமுறை வழி முறையாகப் பெற்றருளியவள், இத்தகைய திருமகள், பெருமானால் திருநோக்கு அருளப்பெற்றவள். நோக்கிய பெருமான், 'தன் ஒப்பு ஒன்று இல்லாதவன்.' 'தனக்கு உவமை இல்லாதவன்.' தனக்குச் சமமாகச் சொல்வதற்குஎந்த ஒன்றும் இல்லாதவன். சிங்கப்பிரான், ஒப்பு உவமை அற்ற, உயர்வற உயர்ந்த உத்தமன் என்பது குறிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமகளின் வருகைக்காக வந்த. இந்த இரண்டு கவிதைகளும், சிங்கப்பிரான் எப்படித் 'தன் ஒப்பு ஒன்று இல்லாதவனாக' விளங்குகின்றானோ, அதைப் போலவே, ஒப்பற்ற உயர்வுடையனவாக விளங்குகின்றன என்று கூறலாம்.

பிராட்டியின் சத்தியத்தையும் சொரூப நிலையையும் அழகிய தமிழ்ச் சொற்களில் வைத்து விளக்கும் கவிதைகள் இந்த இரண்டும். அடியார்களுக்குப் புருஷகாரமாக (உதவுபவளாக) விளங்கும் பெரிய பிராட்டியின் தத்துவத்தையும் தகவினையும் அழகு ஒழுகுகின்ற தமிழ்ச் சொற்களால் விளம்பி மலர்ந்து விரிந்த இந்தக் கவிதைகள் இரண்டும், கம்பநாட்டாழ்வார் வைணவ சமயத்தில் எவ்வளவு அழுத்தமான ஈடுபாடு கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகின்றன. இதனை அடுத்துவரும் கவிதை, சிங்கப்பிரான் நோக்கத்துக்குப் பிறகு நடந்ததைக் கூறுகின்றது.

'தீதிலா வாக உலகுஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான் கண்ட முனிக்கணங்கள்
ஓதினார் சீர்த்தி: உயர்ந்த பரஞ்சுடரும்
நோதல்ஆங்கு இல்லாத அன்பனையே நோக்கினான்(6353)

திருமகள், தெய்வமாகப் பேசப்படுகின்றாள் இங்கு எப்படிப் பட்ட தெய்வம்? தீமைகள் எதுவும் இல்லாதவாறு உலகினைப் படைத்தலுக்கு உதவிய தெய்வம். இந்த தெய்வத்தை தூணில் தோன்றிய சிங்கத் தெய்வம் நோக்கியது. இந்தத் தெய்வத் திருநோக்கில் அருள் அமுது ஒழுகுவதைக் கண்டனர் முனிவர்கள். 'சக்தியும் வந்தது: சிங்கப்பிரான் திருமுகத்தில் சாந்தியும் வந்தது: சகலரும் வந்தோம்' என்று சொல்லிக் கொண்டு, முனிவர்கள் வந்தனர். பெருமானுடைய பொருள் சேர் புகழைப் போற்றினர். ஆனால், அந்த உயர்ந்த பரஞ்சுடரோ, புகழ்பாடும் புண்ணியர்களை நோக்கவில்லை. தந்தையைக் கொன்ற போதும், அதுபற்றிச் சிறிதும் வருந்தாத பேரன்பினனாகிய பிரகலாதனையே நோக்கினான் பேரொளிப் பிழம்பினனாகிய பெருமான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17

பகவானும் பக்தனும்.

'உன்னைச் சிந்தை செய்து செய்து,உன்
நெடுமா மொழிஇசை பாடி, ஆடி, என்
முன்னைத் தீவினைகள்
முழுவேர் அரிந்தனன் யான்:
உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த
இரணியன் அகல்மார்வங் கீண்ட என்
முன்னைக் கோளரியே!
முடியாதது என்எனக்கே? (திருவாய்மொழி—2.2.6.)

இறைவனை, தனது சிந்தையினால் இகழ்ந்தான் இரணியன். இகழ்ந்த மார்பு (சிந்தை) பிளக்கப்பட்டது. பெருமானைச் சிந்தையினால் புகழ்ந்தான் பிரகலாதன், அதனால் முடியாத காரியமும் முடிந்தது பிரகலாதப் பெரும் பிள்ளைக்கு. இதனைத் தனது சிந்தையில் நினைத்துப் பார்த்துப் பாசுரம் இடுகின்றார் நம்மாழ்வார், நரசிம்மச் சிந்தனையாளர்க்கு, நடவாத அரிய பெரிய காரியங்களும் வாழ்க்கையில் நடக்கும் என்பது குறிப்பு.

நாராயணன், தன்னைச் சிந்தையில் வைத்துப் புகழ்ந்து கொண்டிருந்த பிரகலாதனது சபதத்தை நிறைவேற்று வதற்காக, இதுவரை உலகத்தில் இல்லாத ஒரு புதுத் திரு வுருவத்தை ஏற்றுக் கொண்டு வந்தான். புகழ்பாடிய முனிவர்களை நோக்கிலன் சிங்கப்பிரான்: புகழுக்குரிய செயல் செய்த அன்பனை நோக்கினான். அன்பனை நோக்கி அருள்மொழி கூறுகின்றான் அந்தச் சிங்கப் பிரான், 'உன் தந்தையை உன் முன்னிலையில் கொன்றேன்: உடலைப் பிளந்தேன்: என்னை இகழ்ந்த இதயத்தை (சிந்தை) எடுப் பதற்கு, பிளந்த உடலுள் எனது கையை விட்டுத்துழாவி னேன். (பிளந்து, அளைய) அப்போதும், என்னைப் புகழ்ந்த உன் சிந்தைதளரவில்லை. (சிந்தைதளராது) அது, அறநெறி பிறழாத உனது நற்செய்கையைக் காட்டுகின்றது. (அறம் பிழையாச் செய்கையாய்) அதனால், நீ, அளவற்ற பேரன் பினை என்னிடத்தில் (அந்தமிலாஅன்பு) வைத்துள்ளாய் என்பதை உணர்கின்றேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்த இளம் பருவத்திலேயே, தந்தை என்ற உடல் உறவுப் புறச்சுற்றத் தொடர்புக்கு இடம் கொடுக்காமல், என்னையே உன் உயிர் உறவினனாகக் கொண்டு செயல் பட்டாய். ஆகவே நீ எனது அருள் திறத்துக்கு உறியவனாகி விட்டாய். என்னையே தஞ்சமாகப் பற்றிய உனக்கு, என்ன நன்மை செய்வது? 'இனி இதற்குக் கைம்மாறு யாது' என்றான்'.

நான் செய்ய இருக்கும் நன்மையைக் கேள்.

'கொல்லேம், இனிஉன் குலத்தோரை, குற்றங்கள்
எல்லை இலாதன செய்தாரே என்றாலும்.
நல்லேம் உனக்கு;எம்மை நாணாமல் நான்செய்வது
ஒல்லை உளதேல், இயம்புதியால்' என்று உரைத்தான். *(6356)*

'அன்பனே! உனது குலத்தில் உதிப்பவர்கள் எவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்தாலும், நான், அவர்களைக் கொல்ல மாட்டேன்: எனக்கு அன்பனாகிய உனக்கு, எக்காலத்தும் நன்மையே செய்வேன். உனக்கு எது வேண்டுமோ, அதை, சிறிதும் வெட்கப் படாமல் கேள். உனக்கு விருப்பமானவற்றை விரைவில் சொல்வாய்!' என்று பகவான் பக்தனிடம் கேட்டான். பகவான் எதுவும் கொடுக்கத் தயாராக இருக்கின்றான். அனால், பக்தன் உலகியல் பொருளாக எதையும் வேண்டும் என்று கேட்க வில்லை. கேட்டான். எதை?

'முன்பு பெறப்பெற்ற பேறோ முடிவுஇல்லை:
பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுகுவனேல்,
என்பு பெறாத இழிபிறவி எய்திடினும்
அன்பு பெறும்பேறு அடியேற்கு அருள்என்றான். (6357)

தான் இதுவரை பெற்ற பெரும் பேறுகளையும், இனி என்ன பேறு வேண்டும் என்பதையும் சொல்கின்றான் பிரகலாதப் பெருஞ்செல்வன். 'எம்பெருமானே! உனது திருவருளால், இதற்கு முன் நான் பெற்ற நன்மைகள், அளவற்றவைகள். அறியாக் காலமாகிய இளம் பருவத்திலேயே கல்வியின் பயனாகிய உன் திருவடி தொழுதல், உன் திருநாமமாகிய திருஎட்டெழுத்து மந்திரம் ஓதுதல், அதன் பெருமையை உணர்தல், நான் உணர்ந்த உண்மைகளைத் தந்தைக்கு எடுத்துரைத்தல், உண்மை உணரா தந்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்குக் கொடுமை இழைத்து, என்னைக் கொல்ல முயற்சித்தும் நான்கொல்லப் படாமல் இருந்தமை, மாற்ற மனம் கடந்த பெருமானாகிய நீ, ஒரு கல்தூணில் எனக்காகத் தோன்றுதல், வேத விற்பன்னர்களாலும் காண முடியாத நீ, எளியேனுக்குக் காட்சி கொடுக்கப் பெறுதல் முதலிய பல நற்பேறுகளைப் பெற்றுள்ளேன்.' 'இனி பெற வேண்டியது யாது உள்ளது, ஒருவேளை இனி, பிறவி, எனக்கு வந்தால், அப்பொழுது பெற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றை இப்பொழுதே கேட்கின்றேன்,' 'எலும்பே இல்லாத ஒரு இழிந்த பிறவியை அடைந்தாலும், அப்போதும் உனது திருவடிக் கண் அன்பு செலுத்தும் நற்பேற்றினை எனக்கு அருளுக' என்று ஞானநாயகன் நரசிம்ம மூர்த்தியிடம் வேண்டிக் கொண்டான்.

உண்மையான பக்தர்கள் பகவானிடம் கேட்பது இத்தகைய ஒருவரம்தான், என்பதனை அப்பர் அடிகள் அருளிய தேவாரப் பாடல் ஒன்றிலிருந்தும் அறியலாம்,

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்அடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தர வேண்டும்." (அ. தேவாரம் 4.94.8)

அன்பின் பெருமையை அடியார் அறிவர்: கொடியார் அறியார். அன்பின் பெருமையை உணர்ந்து அதனை வாழ்க்கையில் பெறாதவர்கள் கொடியவர்களாகத்தான் இருப்பார்கள்.

கொடியவனாகிய தந்தை இழைத்த கொலைச் செயல்களினின்றும் தப்பி வந்து, இறுதியில் பிரகலாதன் வெற்றி கண்டது, இறைவனிடம் கொண்ட அளவற்ற அன்பினால் தான். அதனால்தான் 'எந்தப்பிறவியிலும் அன்பு ஒன்றே வேண்டும்' என்று கேட்டான் அறிஞரின் அறிஞன். பிறவி எவ்வளவு கீழானதாகயிருந்தாலும், இறை அன்பு, பிறவியைப் பெருமைக்குரியதாக்கிவிடும் என்பது பிரகலாதனின் நம்பிக்கை, பக்தன் கேட்டது அன்பு: பகவான் கொடுப்பது என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

18

நானா வளர்க

நரசிம்மமூர்த்தி, அருள் சுரந்த நெஞ்சினனாய், அன்பனுக்குக் கொடுத்தவைகள் :-

'முன்ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்,
உன்நாள் உலவாய்நீ என்போல் உளை.'

மற்றும்

'என்னைத் தொழுதுஏத்தி எய்தும் பயன் எய்தி,
உன்னைத் தொழுது ஏத்தி உய்க உலகு எல்லாம்.'

இன்னும்

'தானவர்க்கு வேந்தன் நீ என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே இறை.?

என்று பகவான் கொடுத்த வரத்தின்படி, பிரகலாதன் அழியாத ஆயுள் நாள் பெற்றவனாவான்: உலகினர் இறைவனைத் தொழுது அடையும் பயன்களை எல்லாம், தன்னைத் தொழும் உலகினர்க்கு கொடுப்பவனாவான்: தானவர்க்கு (அசுரர்க்கு) மட்டும் அரசன் அல்லன்; வானவர்க்கும் அரசனாவான். இதனை உறுதிப்படுத்தும் முறையில் நிறைவாக ஒரு அருள் மொழி வழங்கினன் அந்தச் சிங்கப் பிரான்.

'நல்அறமும், மெய்ம்மையும், நான்மறையும் நல்அருளும்,
எல்லைஇலா ஞானமும், ஈறுஇலா எப்பொருளும்,
தொல்லைசால் எண்குணனும், நின்சொல் தொழில் செய்ய
மல்லல் உரு ஒளியாய் நானா வளர்க நீ,' (6361)

'இறைவனாகிய என்னைப் போன்று எனது அடியவனாகிய நீயும் எல்லா நற்குணங்களையும் ஒருங்கே அமையப் பெற்று களிப்புறதல் வேண்டும்' (நானா வளர்க) என்று அருளினான் நரசிங்கப்பெருமான். எனது ஆணையின் படி தொழில் புரியக் கூடியவைகள் அனைத்தும் உன் ஆணைக்கு உரியனவாகும். உனது ஆணையின் வண்ணம் தொழிற் படுபவைகள்: நன்மையை விளக்கும் தருமம், சத்தியம், நான்கு வேதங்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நலம் சிறந்த கருணை, எல்லையற்ற தத்துவஞான மாகிய மெய்யுணர்வு, முடிவு ஒன்றுஇல்லாத எல்லா வகையான பொருள்கள், பழமையான எட்டுக்குணங்கள். இவைகள் அனைத்தும், 'நின் சொல் தொழில் செய்க.' என்பது நரசிம்மமூர்த்தி. ஞான நாயகனுக்கு வழங்கிய நற்பேறு. 'எண் குணத்தான்' என்ற தொடர் இறைவனுக்கு வழங்கப் பட்டுள்ளது, தெய்வத்திருக்குறளில். அப்படி, எண் குணத்தினனாக, பிரகலாதன் விளங்கவேண்டும் என்பது நரசிம்ம மூர்த்தியின் திருவிருப்பம். அதனால், பிரகலாதன் தெய்வமாகவே என்றும் காட்சியளிப்பான். 'நானா வளர்க' என்பதன் உட்பொருள் இதுவேயாகும். வளர்க' களிப்புறுக. வேனில் வளராமயில் -(திணைமாலை நூற்றைம்பது. 111) வேனில் களிப்படையாத மயில் என்பது இதன் பொருள்.

'இறைவன், நல்லறம் முதலியனவற்றைத் தனது ஆணைக்கு உட்படுத்தி, எட்டுவகைக் குணங்களையும் பெற்று எப்படிக் களிப்புறுகின்றானோ அப்படியே இந்தப் பிரகலாதப் பிள்ளையும் களிப்புற வேண்டும்.' என்பதை இந்தக் கவிதையின் பொருள் விளக்கமாகக் கொள்ள வேண்டும். எண் குணங்களாவன:- தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல். முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை, ஆகியவைகள் ஆகும்.

அசுரனாகிய இரணியனுக்கு மைந்தனாகப் பிறந்தும், பிரகலாதன் அசைக்க முடியாத அளவற்ற பக்தி உணர்வு நிரம்பப் பெற்றதனால், இறைவனே, 'நீ என்னைப் போன்று களிப்புற்று விளங்குக' (நானாவளர்க) என அசீர்வாதம் செய்யப் பெற்றவனான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19

முடி சூடல்

'தேமன் உரிமை புரிய, திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற உடையான் முடிசூட்ட,
கோமன் னவன்ஆகி மூவுலகும் கைக்கொண்டான் —
நாம மறைஓதாது ஓதி நனிஉணர்ந்தான்.' (6363)

நிறைவாக, ஞானநாயகனை, ஞாலத்துக்கு எல்லாம் நாயகனாக (அரசனாக) ஆக்குவதற்குரிய முடி சூட்டு விழா நடைபெறுகின்றது. அரண்மனைவாயிலில் மங்கலவாத்தியமாக முரசு ஒலிக்கின்றது: நரசிம்ம மூர்த்தியின் ஆணைப்படி, தேவர்களின் அரசனாகிய இந்திரன், விழாவுக்கு வேண்டிய குற்றேவல்களைச் செய்கின்றான்: பிரம்மதேவன் வேள்விச் சடங்குகளை நிகழ்த்துகின்றான்: இறைவனாகிய நாராயணனே தனது திருக்கரத்தால் முடியினை எடுத்துச் சூட்டுகின்றான்.

இத்தகைய பெருமை பெற்ற பிரகலாதன் மூன்று உலகங்களையும் தனக்கே உரியனவாகக் கைக்கொண்டு ஆட்சி புரிகின்றான். இவ்வாறான ஆட்சியைப் பெற்றவன் யார் என்பதை இறுதி அடி காட்டுகின்றது. 'நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான்' கவிதையின் நிறைவான இந்த அடியின் மூலம் கம்பநாட்டாழ்வார், பிரகலாதாழ்வாருக்கு முடி சூட்டி விட்டார் என்று சொல்லலாம்.

வேதங்கள் புகழ் நிறைந்தவைகள்: அவைகளை எந்த ஆசிரியரிடமும் சென்று கற்காமல், அவற்றின் உட்பொருளை மிகவும் தெளிவாக உணர்ந்தவன் பிரகலாதப்பெருஞ்செல்வன். அசுரன் மைந்தன், ஆண்டவன் முடி சூட்ட மூவுலகுக்கும் அரசனான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

20

ஆணவத் தந்தையும் அன்பு மைந்தனும்

தந்தை இரணியன்

பிரம்மனிடம் வேதம் ஓதியவன்
ஓதியும் உணராதவன்
கற்றும் அதன் பயன் காணாதவன்
தெய்வத்தையே இகழ்ந்தவன்
இறைவன் எங்கும் இல்லை என்றவன்
சாங்கிய நெறியினன்
வேதவாதி
வேதத்தில் கர்ம காண்டமே
கொண்டவன்
காட்சி அளவையே போதும் என்பவன்

பகவானைப் பகைத்தவன்
கண்ட காட்சியையே கொண்டவன்
வயதால் மிக மிக முத்தவன்
அதிகாரவன்மையால் அனைவரையும்
அடக்கியவன்
ஆணவத்தால்யாரையும் மதிக்காதவன்

புறவலிமை அனைத்தையும் பெற்றவன்
அகத்தில் அகங்காரத்தையே
நிறைத்தவன்
அனைவரையும் தனக்கு அடிமை
ஆக்கியவன்
ஆட்சியில் அனைவரையும் அஞ்சச்
செய்தவன்
தேவர்களுக்கும் துயர் விளைவித்தவன்
உடல் வலிமையால் உலகத்தை
ஆள்பவன்
தானே தனக்கு முடி சூட்டிக்
கொண்டவன்
சாகாவரம் பெறமுயன்று தோற்றவன்
மைந்தனையே கொல்ல முயன்றவன்
உலக ஆட்சியை முயன்று பெற்றவன்
தவம்செய்து வரம்பலம் பெற்றவன்
குறை பல நிறைந்த மனத்தினன்
ஏதம் கொண்டு ஊதியம் விட்ட பேதை

காரியத்தை மட்டும் காண்பவன்
தீமை செய்ய அஞ்சாத தீயோன்
எல்லாம் தானே என்பவன்

மைந்தன் பிரகலாதன்

யாரிடமும் எதுவும் ஓதாதவன்
ஓதாது உணர்ந்தவன்
கற்காமலேயே அதன்பயன் கண்டவன்
தெய்வத்தைப் புகழ்ந்தவன்
இறைவன் எங்கும் உண்டு என்றவன்
பக்தியோக நெறியினன்
உபநிடதவாதி
வேதத்தின் ஞானகாண்டம்கண்டவன்

அனுமான அளவையே உயர்ந்தது
என்பவன்

பகவானுக்குப் பக்தன்
காணாத காட்சியையும் கண்டவன்
வயதில் மிக மிக இளைஞன்
அன்பால் அனைவரையும் அணைத்தவன்

அறிவின் தெளிவால் எவரையும்
மதிப்பவன்

புறவலிமை எதுவும் பெறாதவன்
அகத்தில் ஆனந்தமே கண்டவன்

அனைத்துமாகிய இறைவனுக்கு
அடிமையானவன்
அனைவரின் அச்சத்தையும்
அகற்றியவன்
தேவர்கள் துயர்விலக உதவியவன்
ஆன்ம பலத்தால் அனைத்துடனும்
தொடர்பு கொண்டவன்
இறைவனாலேயே முடி சூட்டப்
பெற்றவன்
முயற்சியின்றியே சாவை வென்றவன்
கொலை விலகப் பயின்றவன்
உலக ஆட்சி, தானே வரப்பெற்றவன்
தவம்செய்யாது ஆன்மபலம்பெற்றவன்
குறைவிலாக் குணத்தினன்
ஏதத்தை எதிர்த்து ஊதியம் கண்ட
மேதை

காரியத்தின் காரணத்தைகாண்பவன்
எதிலும் தூய்மை காணும் தூயோன்
எல்லாம் இறைவனே என்பவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21

அசுரனையும் அருளாளனையும் காட்டிய கவிதைத் தொடர்கள்

அசுரன்

1 பூதம் கண்ணிய வலிஎலாம் ஒருதனிப் பொறுத்தான் (1)
2 மற்றை அண்டத்தும் தன்பெயரே சொல வாழ்ந்தான் (2)
3 எவ் உலகங்கட்கும் இறைவன் (18)
4 ஊழியும் கடந்து உயர்கின்ற ஆயுளான் (20)
5 உலகம் ஏழும் ஏழும் வந்து அடிதொழ அரசு வீற்றிருந்தான் (20)
6 உலகு எலாம் உயர்ந்தோன் (56)
7 காட்டுமேல் காட்சி கொள்வான் (119)
8 பேர் அடா நின்றதாளோடு உலகு எலாம் பெயரைப் போவான். (129)
9 கனகன் (124)

அருளாளன்

1 அறிஞரின் அறிஞன் (19)
2 தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான் (19)
3 நாயகன் தனிஞானி (19)
4 நல் அறத்துக்கு நாதன் (19)
5 தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் (19)
6 தக்கோன் (19)
7 ஞானநாயகன் (23)
8 விமலன் (27)
9 துணை இலான்தனைத் துணைஎன உடைய அத்தூயோன் (38)
10 அறிஞரின் தூயோன் (46)
11 தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் (82)
12 தூயவன்தனைத் துணைஎன உடைய அவ்ஒருவன் (82
13 அறிந்த நாயகன் சேவடி மறந்திலன் (83)
14 பொய் அற்றான் (92)
15 ஆதிப்பண்ணவன் ஆயிரம் நாமம் ஓதுற்றான் (103)
16 மறை ஒல்லை உணர்ந்தான் (103)
17 அறிவின் மிக்கான் (126)
18 நல்லறிவாளன் (128)
19 உலகெலாம் புகழ நின்றான் (145)
20 நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான் (175)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22

திரிவேணி சங்கமம்.

நம் பாரத தேசத்தில் திரிவேணி சங்கமம் என்ற ஒரு புண்ணிய தீர்த்தம் உள்ளது. இது. உத்திரப்பிரதேச மாநிலத்தில் அலகாபாத் நகரை அழகு செய்து கொண்டிருக்கின்றது. கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று நதிகளும் ஒன்றாகக் கலக்கும் இடத்துக்குத் திரிவேணி சங்கமம் என்று பெயர். இந்தப் புண்ணியத் தீர்த்தத்தில் நீராடினால், நீராடியவர்களது பாபங்கள் அனைத்தும், தீர்க்கப்பட்டு விடும். உடல் அழுக்கும் உள்ளத்து அழுக்கும் ஒரு சேர நீக்கும் ஆற்றல் பெற்றது இந்தப் புண்ணிய தீர்த்தம். இது, புறத்திலே தோன்றும் புண்ணிய தீர்த்தம் காட்சி அளவைக்கு உரியது. பாபம் கழியும் என்ற நம்பிக்கை.

கம்பராமாயணத்தில் ஒருதிருவேணி சங்கமம் இரணியன் வதைப்படலம். இராமாவதாரக் கதையில் ஒரு நரசிம்மாவதாரக் கதை. இதை கொண்டு வந்து சேர்த்தவர் யார்? அவர்தான் கம்ப நாட்டாழ்வார். இந்தக் கதையை இணைப்பதற்குக் காரணமாக இருந்தவர் யார்? அவரும் ஒரு ஆழ்வார் அவர் வீபீஷணாழ்வார். இந்தக் கதைக்கு நாயகனாக (தலைவனாக) விளங்குபவர் யார்? அவரும் ஒரு ஆழ்வார்தான். அவர் பிரகலாதாழ்வார்.

மூன்று ஆழ்வார்களும் ஒன்று கலக்கும் பகுதி இரணியன் வதைப்படலம். அதனால் இதை ஒரு திரிவேணி சங்கமம் என்று கூறலாம். இம்மூவரும் ஒருவகையில் அரசர்கள் கம்பர் கவிச்சக்கரவர்த்தி, வீடணன்; இலங்கை மன்னன். பிரகலாதன், கோமன்னவன் ஆகி மூவுலகும் கைக் கொண்டான். இம்மூன்று அரசர்களும், ஆண்டவனது அருள் வெள்ளத்தில் ஆழங்கால் பட்டதால்தான் ஆழ்வார் எனப் பட்டனர், இம் மூவரிடத்திலுமிருந்து புறப்பட்டது பக்தி வெள்ளம். பக்திப் பெருவெள்ளமாகிய இந்தத் திரிவேணி சங்கமத்தில் மூழ்கிக் களித்தால், போய பிழையும் புகுதருவான் நின்றனவும் போகும். புண்ணியம் வரும். நம்பிக்கை வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

இரணியன் வதைப் படலம் மூலம்

கம்பன் வாழ்க! கம்பன்புகழ் வாழ்க!!

கன்னித் தமிழ் வாழ்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

இரணியன் இயல்பும் ஏற்றமும்

1 வேதம் கண்ணிய பொருள்எலாம் விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரம்எலாம் தரக்கொண்டு போந்தான்:
காதும் கண்ணுதல், மலர்அயன், கடைமுறை காணாப்
பூதம் கண்ணிய வலிஎலாம் ஒருதனி பொறுத்தான்.

2 எற்றை நாளினும் உளன்எனும் இறைவனும், அயனும்
கற்றை அம்சடைக் கடவுளும், காத்து, அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவினோ? அதன்புறத்து உலவா
மற்றை அண்டத்தும், தன்பெய ரேசொல வாழ்ந்தான்.

3 பாழி வன்தடந் திசைசுமந்து ஓங்கிய பணைக்கைப்
பூழை வன்கரி இரண்டு கைக்கொடு பொருந்தும்;
ஆழம் காணுதற்கு அரியவாய் அகன்ற பேர்அழி
ஏழும் தன்இரு தாள்அளவு எனக்கடந்து ஏறும்.

4 வண்டல் தெண்திரை ஆற்றுநீர் சிலஎன்று மருவான்;
கொண்டல் கொண்டநீர் குளிர்ப்புஇல என்றுஅவை குடையான்;
பண்டைத் தெண்திரை பரவைநீர் உவர்என்று படியான்;
அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து அப்பினால் ஆடும்.

5 மரபின், மாபெறும் புறக்கடல் மஞ்சனம் மருவி
அரவின் நாட்டிடை மகளிரோடு இன்அமுது அருந்தி
பரவும் இந்திரன் பதியிடைப் பதற்பொழுது அகற்றி,
இரவின் ஓலக்கம் நான்முகன் உலகத்துள் இருக்கும்.

6 சாரும் மானத்தில், சந்திரன் தனிப்பதம் சரிக்கும்;
தேரின் மேலின்நின்று இரவிதன் பெரும்பதம் செலுத்தும்;
பேர்வுஇல் எண்திசைக் காவலர் கருமமும் பிடிக்கும்;
மேரு மால்வரை உச்சிமேல் அரசு வீற்றிருக்கும்.

கண்ணிய-கருதிய: கடைமுறை-இறுதியாகிய எல்லை; உலவா எண்ணில் அடங்காத: பூழை - உள் துளை: பொதுத்து: துளைத்து-சாரும்-ஏறிச்செல்லும்: மானம்-விமானம்-சரித்தல்: உலாவுதல்: சந்திரனுக்கு விமானமும், சூரியனுக்குத் தேரும் ஊர்தி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7 நிலனும், நீரும், வெங் கனலொடு காலும்ஆய், நிமிர்ந்த
தலனுள் நீடிய அவற்றின்அத் தலைவரை மாற்றி,
உலவும் காற்றொடு கடவுளர் பிறரும்ஆய், உலகின்
வலியும் செய்கையும் வருணன்தன் கருமமும், மாற்றும்.

8 தாம ரைத்தடங் கண்ணினான் பேர்அவை தவிர,
நாமம் தன்னதே உலகங்கள் யாவையும் நவில,
தூம வெங்கனல் அந்தணம் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியின் இமையவர் பேறுஎலாம் உண்ணும்.

9 காவல், கட்டுதல், துடைத்தல்,என்று இத்தொழில் கடவ
மூவ ரும்அவை முடிக்கிலர், பிடிக்கிலர் முறைமை;
ஏவர் மற்றவர்? யோகியர் உறுபதம் இழந்தார்;
தேவ ரும், அவர் தாள்அலால் அருச்சனை செய்யார்.

10 மருக்கொள் தாமரை நான்முகன், ஐம்முகன் முதலோர்
குருக்களோடு சுற்று ஓதுவது அவன்பெருங் கொற்றம்;
சுருக்குஇல் நான்மறை, "தொன்று தொட்டு உயிர்தொறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் இரணிய னே! நம!" என்னும்.

11 பண்டு, வானவர் தானவர் யாவரும் பற்றி,
தெண் திரைக்கடல் கடைதர, வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கோற்றத்தன் குவவுத்தோட்டு அமைந்த
தண்டுஎனக் கொளலுற்று, அது நொய்துஎனத் தவிர்ந்தான்.

12 மண்ட லம்தரு கதிரவன் வந்துபோய் மறையும்
எண்தலம் தொடற்கு அரியன தடவரை இரண்டும்,
கண்த லம்பசும் பொன்னவன் முன்னவன் காதில்
குண்ட லங்கள்: மற்று என், இனிப் பெருவிறல் கூறல்?

தலன்-இடன்: இமையவர்பேறு-அவிஉணவு: குருக்கள்-புரோகிதர்: தண்டு-தண்டாயுதம்: எண்தலம்-எண்ணுதற்கு அரியன வாகிய மனம். தடவரை இரண்டு-உதயமலை, அத்தமலை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13 மயர்வுஇல் மன்நெடுஞ் சேவடி மண்ணிடை வைப்பின்,
அயரும், வாள்எயிற்று ஆயிர நனந்தலை அனந்தன்:
உயருமேல், அண்ட முகடுதன் முடிஉற உயரும்:
பெயரு மேல்,நெடும் பூதங்கள் ஐந்தொடும் பெயரும்.

14 பெண்ணில், பேர்எழில் ஆணினில், அலியினில் பிறிதும்
உள்நிற் கும்உயிர் உள்ளதில், இல்லதில், உலவான்;
கண்ணில் காண்பன, கருதுவ யாவினும் கழியான்;
மண்ணில் சாகிலன்; வானிலும் சாகிலன்:—வரத்தால்.

15 தேவர் ஆயினர் ஏவரும், திரிதரும் இயக்கர்
யாவ ரேயிம்மற்று எண்ணவும், நினைக்கவும் இயன்ற,
கோவை, மால்,அயன் மான்இடன் யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்: ஆற்றலும் தீர்கிலன்—அனையான்.

16 நீரின் சாகிலன்; நெருப்பினும் சாகிலன்; நிமிர்ந்த
மாரு தத்தினும், மண்ணின்மற்று எவற்றினும், மாளான்;
ஓரும் தேவரும், முனிவரும், பிறரும் உரைப்பச்
சாரும் சாபமும் அன்னவன்தனைச் சென்று சாரா.

17 உள்ளில் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வான் படைக்கலம் யாவையும் கொல்லா;
நள்ளின் சாகிலன்; பகலிடைச் சாகிலன்; நமனார்
கொள்ளச் சாகிலன்; ஆர்இனி அவன்உயிர் கொள்வார்?

18 பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினில் புணரா
வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களால் விளியான்;
தாதை தன்னைத்தான் தனிக்கொலை சூழினும் சாகான்;
ஈது அவன்நிலை எவ்உலகங் கட்கும் இறைவன்.

மயர்வு-மனச் சோர்வு: மான் இடன்-மானை இடக்கையில் தரித்தவன்; நள் - இரவுப் பொழுது; நமனார் - எமன்; பொருள்கள்-மந்திரங்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரகலாதன் பெருமை

19 ஆயவன் தனக்கு அருமகன், அறிஞரின் அறிஞன்,
தூயர் என்பவர் யாரினும் மறையினும் தூயான்,
நாய கன்தனி ஞானிநல் அறத்துக்கு நாதன்,
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் உளன்ஒரு தக்கோன்.

20 வாழியான், அவன்தனைக் கண்டு மனம் மகிழ்ந்து, உருகி,
'ஆழி ஐய! நீ அறிதியால் மறை' என் அறைந்தான் —
ஊழியும் கடந்து உயர்கின்ற ஆயுளான், உலகம்
எழும் ஏழும்வந்து அடிதொழ அரசு வீற்றிருந்தான்.

21 என்று, ஓர் அந்தணன், எல்லைஇல் அறிஞனை ஏவி,
'நன்றுநீ இவற்கு உதவுதி. மறை' என நவின்றான்;
சென்று மற்றுஅவன் தன்னொடும் ஒருசிறை சேர்ந்தான்;
அன்று நான்மறை முதலிய ஓதுவான் அமைந்தான்.

22 ஓதப் புக்கு, அவன், 'உந்தைபேர் உரை' என லோடும்,
போதத் தன்செவித் தொளைஇரு கைகளால் பொத்தி,
மூதக் தக்கோய் இதுநல்தவம் அன்று' என மொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்தான்.

23 "ஓம்நமோ நாராய ணாய" என்றுஉரைத் து,உளம் உருகி,
தான்அமைந்து இருதடக் கையும் தலைமிசைத் தாங்கி,
பூநிறக் கண்கள் புனல்உக, மயிர்ப்புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன்; அந்தணன் நடுங்க.

24 'கெடுத்து ஒழிந்தனை, என்னையும் உன்னையும்; கெடுவாய்!
படுத்து ஒழிந்தனை; பாவி! எத்தேவரும் பகர்வதற்கு,
அடுத்து அன்றியே அயல்ஒன்று பகரநின் அறிவில்
எடுத்தது என்இது? எனசெய்த வண்ணம் நீ?' என்றான்.

வாழியான்-நல்வாழ்வுக்குரிய நற்பேறுடையான்: (பிரகலாதன்)
போத-நன்றாக; மூதக்கோய்-மூத்த அறிவுடைய பெரியோனே:
வேதத்துஉச்சி-உபநிடதங்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானநாயகன் நல்லுரை

25 'என்னை உய்வித்தேன்; எந்தையை உய்வித்தேன்; இனைய
உன்னை உய்வித்து,இவ் உலகையும் உய்விப்பான் அமைந்து,
முன்னை வேதத்தின் முதற்பொருள் மொழிவது மொழிந்தேன்;
என்னை குற்றம்நான் இயம்பியது? இயம்புதி' என்றான்.

26 'முந்தை வானவர் யாவர்க்கும், முதல்வர்க்கும் முதலோன்
உந்தை; மற்றுஅவன் திருப்பெயர் உரைசெயற்கு உரிய
அந்த ணாளனேன் என்னினும் அறிதியோ? ஐய!
இந்த இப்பெயர் உரைத்து எனைக் கெடுத்திடல்' என்றான்.

27 வேத பாரகன் அவ்வுரை விளம்பலும், விமலன்,
'ஆதி நாயகன் பெயர்அன்றி யான்பிறிது அறியேன்;
ஓத வேண்டுவது இல்லை; என் உணர்வினுக்கு ஒன்றும்
போதி யாததும் இல்லை' என்று இவைஇவை புகன்றான்.

28 'தொல்லை நான்முறை வரன்முறைத் துணிபொருட்டு எல்லாம்
எல்லை, கண்டவன் அகம்புகுந்துஇடம் கொண்டது என்உள்;
இல்லை, வேறுஇனிப் பெரும்பதம்; யான்அறி யாத
வல்லை யேல், இனி ஓதுவி நீதியின் வழாத.

29 'ஆரைச் சொல்லுவது, அந்தணர் அருமறை அறைந்தோர்.
ஓரச் சொல்லுவது எப்பொருள், உபநிட தங்கள்,
தீரச் சொல்பொருள் தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது, பிறிதும்ஒன்று உளதோ?'

30 'வேதத் தானும்,நல் வேள்வியி னானும், மெய்உணர்ந்த
போதத் தானும், அப் புறத்துள எப்பொரு ளானும்,
சாதிப் பார்பெறும் பெரும்பதம் தலைக்கொண்டு சமைந்தேன்;
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம்ஒன்று உளதோ?

வேதத்தின் முதற்பொருள்-பிரணவம்: போதியாதது-உணர்த்தப்படாத பொருள்: இடம் கொள்ளல் (தாம்விரும்பி உறையும்) இடமாகக்கொண்டு அமர்தல்; வேள்வி-யாகம். போதம்-அறிவு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

31 'காடு பற்றியும் கனவரை பற்றியும், கலைத்தோல்
மூடி பற்றியும், முண்டித்தும், நீட்டியும், முறையால்
வீடு பெற்றவர், 'பெற்றதின் விழுமிது'என்று உரைக்கும்
மாடு பெற்றனென்: மற்று, இனி என்பெற வருந்தி?

32 'செவிக ளால்பல கேட்டிலர் ஆயினும், தேவர்க்கு
அவிகொள் நான்மறை அகப்பொருள் புறப்பொருள் அறிவார்;
கவிகள் ஆகுவார்; காண்குவார், மெய்ப்பொருள்; - காலால்
புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையின் புக்கார்.

33 'எனக்கும் நான்முகத்து ஒருவற்கும், யாரினும் உயர்ந்த
தனக்கும் தன்நிலை அறிவுஅரும் ஒருதனித் தலைவன்
மனக்கு வந்தனன்; வந்தன, யாவையும்: மறையோய்!
உனக்கும் இன்னதின் நல்லதுஒன்று இல்'என உரைத்தான்.

அந்தணனும் அசுரனும்

34 ,மாற்றம் யாதுஒன்றும் உரைத்திலன். மறையவன்; மறுகி,
'ஏற்றம் என்?'எனக்கு இறுதிவந்து எய்தியது' என்னா,
ஊற்றம் இல்லவன் ஓடினன் கனகனை உற்றான்,
தோற்ற வந்ததுஓர் கனவுகண் டனன்எனச் சொன்னான்.

35 'எந்தை! கேள்; எனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இயம்பச்
சிந்தை யால்இறை நினைத்தற்கும் அடாதன செப்பி,
'முந்தை யேநினைந்து, என்பொருள் முற்றும்!'என்று உரைத்து,உன்
மைந்தன் ஓதிலன், வேதம்'என்று உரைத்தனன், வணங்கி,

36 'அன்ன கேட்டு, அவன், 'அந்தண! அந்தணர்க்கு அடாத,
முன்னர் யாவரும் மொழிதரும் முறைமையின் படாத,
தன்னது உள்உறும் உணர்ச்சியால் புதுவது தந்தது,
என்ன சொல், அவன் இயம்பியது? இயம்புதி' என்றான்.

விழுமிது-மேம்பட்டது: மாடு-செல்வம்; புவி-பூமி: நாயகன்-தலைவன்: ஊற்றம்-நெஞ்சத்துணிவு: கனகன்-இரணியன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

37 அரசன் அன்னவன் உரைசெய, மறையவன் அஞ்சி,
சிரதலம்காம் சேர்த்திடா, 'செவித்தொளை சேர்ந்த
உரகம் அன்னசொல் யான்உனக்கு உரைசெயின், உரவோய்!
நரகம் எய்துவென்; நாவும்வெந்து உகும்'என நவின்றான்.

தந்தையும் மைந்தனும்

38 'கொணர்கஎன் மைந்தனை வல்விரைந்து' என்றனன், கொடியோன்;
உணர்வுஇல் நெஞ்சினன் ஏவலர் கடிதினின் ஓடி,
கணனின் எய்தினர் 'பணி' என, தாதையைக் கண்டான் —
துணைஇ லான்தனைத் துணைஎன உடையவன் தொழுதான்.

39 'தொழுத மைந்தனை, சுடர்மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத, அன்பினின் இறுகுறத் தழுவி,மாடு இருத்தி,
முழுதும் நோக்கி, நீ,வேதியன் கேட்கிலன் முனிய,
பழுது சொல்லியது என்?அது பகருதி' என்றான்.

40 'சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன
ஒருவன், யாவர்க்கும் நாயகன், திருப்பெயர் உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து, இடர்க்கடல் கடக்க
உரிய மற்றுஇதின் நல்லதுஒன்று இல்'என உரைத்தான்.

41 தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெய, தீயோன்
'தாஇல் வேதியன் தக்கதே உரைசெயத் தக்கோன்;
ஆவது ஆகுக; அன்றுஎனின் அறிகுவம்' என்றே,
'யாவது அவ்வுரை? இயம்புதி, இயம்புதி' என்றான்.

திருஎட்டெழுத்தின் பெருமை

42 'காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்.
சேம வீடுஉறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும்; ஒருவன்
நாமம்; அன்னது கேள்; நமோ நாராய ணாய!'

துணைஇலான் - ஒப்பிலாதவன்; (திருமால்) சுருதி-கேள்வி: வேதம்: காமம்-விரும்பப்படும் நற்பேறுகள்; வீடு-பரமபதம், பதம்-யாகத்தினால் அடையும் துறக்கம்முதலிய மேலுலகங்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

43 'மண்ணின் நின்று, மேல் மலர்அயன் உலகுஉற வாழும்
எண்இல் பூதங்கள், நிற்பன திரிவன, இவற்றின்
உள்நிறைந் துளகர ணத்தின் ஊங்குஉள உணர்வும்,
எண்ணுகின் றதுஇவ் எட்டெழுத் தே;பிறிது இல்லை.'

44 'முக்கண் தேவனும் நான்முகத்து ஒருவனும் முதலா,
மக்கள் காறும், இம் மந்திரம் மறந்தவர் இறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கினர்: அல்லவர் இதன்நிலை உணரார்,'

45 'தோற்றம் என்னும்அத் தொல்வினைத் தொடுகடல் சுழிநின்று
ஏற்று நன்கலன், அருங்கலன் யாவர்க்கும், இனிய
மாற்ற மங்கலம், மாதவர் வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள், திருந்தமற்று இதின்இல்லை சிறந்த.'

46 'உன்உயிர்க்கும், என்உயிர்க்கும் இவ்உல கத்தின் உள்ள
மன்னுயிர்க்கும், ஈது உறுதிஎன்று உணர்வு மதித்துச்
சொன்னது இப்பெயர்' என்றனன் அறிஞரின் தூயோன்;
மின்உயிர்க் கும்வேல் இரணியன் தழல்எழ விழித்தான்

கொடியவனின் கோபத்தில் உதிர்ந்தவைகள் :

47 'இற்றை நாள்வரை, யான்உள நாள்முதல், இப்பேர்
சொற்ற நாவையும் கருதிய மனத்தையும் சுடும்என்
ஒற்றை ஆணை; மற்று யார்உனக்கு இப்பெயர் உரைத்தார்?
கற்றது ஆரொடு? சொல்லுதி, விரைந்து' எனக் கனன்றான்.

48 'முனைவர் வானவர் முதலினர், மூன்று உலகத்தும்
எனைவர் உள்ளவர், யாவரும் என்இரு கழலே
நினைவது; ஓதுவது என்பெயர்; நினக்குஇது நேர
அனைவர் அஞ்சுவர்; மைந்த! நீயாரிடை அறிந்தாய்?

கரணம்-மனம் முதலிய அந்தக்கரணங்கள் (கருவி) உணர்வு-மெய்ஞ்ஞானம்: நன்கலன்-நல்லமரக்கலம்: (கப்பல்) நேர-உடன்பட்டுச்சொல்ல: ஓதுவது-சொல்வது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

49 'மறங்கொள் வெஞ்செரு மலைகுவான், பல்முறை வந்தான்.
கறங்கு வெஞ்சிறைக் கலுழன்தன் கடுமையின், கரந்தான்;
பிறங்கு தெண்திரைப் பெருங்கடல் புக்கு, இனம் பெயராது,
உறங்கு வான், பெயர் உறுதிஎன்று ஆர்உனக்கு உரைத்தார்?'

50 'பரவை நுண்மணல் எண்ணினும், எண்ணஅரும் பரப்பின்
குரவர் நம்குலத்து உள்ளவர் அவன்கொலக் குறைந்தார்;
அரவின் நாமத்தை எலிஇருந்து ஓதினால், அதற்கு
விரவு நன்மைஎன்.' துன்மதி: விளம்புஎன் வெகுண்டான்.

51 'வயிற்றினுள் உலகு ஏழினோடு ஏழையும் வைக்கும்
அயிர்புஇல் ஆற்றல்என் அனுசனை, ஏனம் ஒன்றுஆகி,
எயிற்றினால் எறிந்து, இன்உயிர் உண்டவன் நாமம்
பயிற்ற வோ,நினைப் பயந்தது நான்?எனப் பகர்ந்தான்.

52 'ஒருவன், யாவர்க்கும் எவற்றிற்கும் உலகிற்கும் முதல்வன்,
தருதல், காத்து, அவை தவிர்தல்என்று இவைசெயத் தக்கோன்,
கருமத் தால்அன்றிக் கரணத் தால்உள்ள காட்சி.
திருவிலீ! மற்றுஇது எம்மறைப் பொருள்எனத் தெரிந்தாய்.'

53 'ஆதி அந்தங்கள் இதனின் மற்றுஇல்லை பேர்உலகின்;
வேதம் எங்கனம் அங்கனம் அவைசொன்ன விதியால்,
கோதுஇல் நல்வினை செய்தவர் உயர்குவர்: குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர்; இதுமெய்ம்மை, தெரியின்.'

54 'செய்த மாதவம் உடைமையின், அரி. அயன், சிவன்என்று
எய்தி னார்பதம் இழந்தனர்: யான்தவம் இயற்றி,
பொய்இல் நாயகன் பூண்டபின், இனிஅது புரிதல்
நொய்யது ஆகும்என்று ஆரும்என் காவலின் நுழைவார்.

கறங்குதல் - சுழலுதல்; கலுழன் - கருடன்: அயிர்ப்பு - ஐயுறவு: அனுசன் - தம்பி: கருமம் - காட்சிஅளவை: காரணம் - கருதல் அளவை; (அனுமானம்) காட்சி - உணர்வு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

55 'வேள்வி ஆதிய புண்ணியம் தவத்தொடும் விலக்கி,
கேள்வி யாவையும் தவிர்த்தனென், 'இவைகிளர் பகையைத்
தாழ்வி யாதன செய்யும்' என்று: அனையவர் தம்பால்
வாழ்வு யாது? அயல் எவ்வழிப் புறங்கொண்டு வாழ்வார்?

56 'பேதைப் பிள்ளைநீ: பிழைத்தது பொருத்தனென்; பெயர்த்தும்
ஏதுஇல் வார்த்தைகள் இனையன விளம்பலை; முனிவன்
யாது சொல்லினன், அவைஅவை இதம்என எண்ணி,
ஓதி: போதி' என்று உரைத்தனன் —உலகுஉளலாம் உயர்ந்தோன்.

அறிஞனின் (பிரகலாதன்) அறிவுரை

57 'உரைஉளது உணர்த்துவது: உணர்ந்து கோடியேல்,
விரைஉள அலங்கலாய் வேத வேள்வியில்
கரைஉளது; யாவரும் கற்கும் கல்வியின்
பிரைஉளது:' என்பது மைந்தன் பேசினான்:

58 வித்துஇன்றி விளைவது ஒன்றுஇல்லை: வேந்த! நின்
பித்துஇன்றி உணர்தியேல், அளவைப் பெய்குவேன்;
உய்த்துஒன்றும் ஒழிவுஇன்றி உணதற் பாற்று'எனா
கைத்துஒன்று நெல்லிஅம் கனியின் காண்டியால்;

59 தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின்இலன், முன்இலன், ஒருவன்; பேர்கிலான்:
தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ?'

60 'சாங்கியம், யோகம்என்று இரண்டு தன்மைய,
வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன:
ஆங்குஅவை உணர்ந்தவர்க்கு அன்றி. அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணர்தற் பாலதோ?

பித்து — பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்: (மயக்க உணர்வு) அளவை — மெய்ப்பொருளை அறியும் வகை: சாங்கியம் ஆராய்ச்சியால் வரும் ஞானம்: யோகம் — ஆராய்ச்சியால் வந்ததை அனுபவமாகச் செயல் படுத்தும் நிலை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

61 சித்துஎன அருமறைச் சிரத்தின் தேறிய
தத்துவம் அவன்;அது தம்மைத் தான்உணர்
வித்தகர் அறிகுவர்: வேறு வேறு உணர்
பித்தரும் உளர்சிலர், வீடு பெற்றிலார்.'

62 'அளவையான் அளப்பஅரிது; அறிவின் அப்புறத்து
உளவையாய் உபநிட தங்கள் ஓதுவ;
கிளவிஆர் பொருள்களான் கிளக்கு றாதவன்
களவையார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார்.'

63 மூவகை உலகும்ஆய் குணங்கள் மூன்றும்ஆய்,
யாவையும் எவரும்ஆய், எண்இல் வேறுபட்டு,
ஓவல்இல் ஒருநிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ?'

64 'கருமமும், கருமத்தின் பயனும், கண்ணிய
தருமுதல் தலைவனும், தானும், தான்;அவன்
அருமையும் பெருமையும் அறிவ ரேல்அவர்,
இருமை என்றுஉரைசெயும் கடல்நின்று ஏறுவார்.'

65 'மந்திரம் மாதவம் என்னும் மாலைய,
தத்துறு பயன்இவை, முறையின் சாற்றிய
நந்தல்இல் தெய்வம்ஆய், நல்கும் நான்மறை
அந்தம்இல் வேள்வி மாட்டு அவிசும்ஆம்அவன்.'

66 'முற்பயப் பயன்தரும், முன்னில் நின்றவர்,
பிற்பயப் பயன்தரும், பின்பு போல்அவன்;
தற்பயன் தான்தெரி தருமம் இல்லை;அஃது
அற்புத மாயையால் அறிகி லார்பலர்.'

உளவை—உள்ளவை: (உள்ளமறைபொருள்) தேய்தல்—அளவிற்பட்டுச் சுருங்குதல்: தான் — தானாக விளங்குபவன்: (சொருபலட்சணம்) அவிசு — தேவர் உணவு: முற்பயன் — முன்னே நுகர்தற்குரிய நிலையில் முதிர்ந்த வினைப் பயன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

67 'ஒருவினை, ஒருபயன் அன்றி உய்க்குமோ,
இருவினை என்பவை இயற்றி இட்டவை;
கருதின கருதின காட்டு கின்றது,
தருபரன் அருள்;இனிச் சான்று வேண்டுமோ?'

68 'ஓர்ஆவுதி கடைமுறை வேள்வி ஓம்புவார்,
அராடஅணை அமலனுக்கு அளிப்ப ரேல்;அது
சராசரம் அனைத்தினும் சாரும் —என்பது
பராவஅரு மறைப்பொருள்; பயனும் அன்னதால்,'

69 'பகுதியின் உட்பயன் பயந்தது; அன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன: வரவு போக்கது;
புகுதிஇல் லாதவர் புலத்திற்று ஆகுமோ?'

70 'எழுத்துஇயல் நாளத்தின் எண்இ லாவகை,
முழுத்தனி நான்முகன் முதல முற்றுஉயிர்—
வழுத்துஅரும் பொருட்டதுஓர் புரையின் வைகுமால்,
விழுத்தனிப் பல்இதழ் விரைஇ லாமுகில்,'

71 'கண்ணினும் கந்துளன்; கண்டு காட்டுவார்
உள்நிறைந் திடும்உணர்வு ஆகி உண்மையால்,
மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்—
எண்ணினும் நெடியவன் ஒருவன், என்இலான்,'

72 'சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்;
இந்தியம் தொறும்உளன்; உற்றது எண்ணினால்,
முந்தைஓர் எழுத்துஎன வந்து மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான்.'

பகுதி — மூலப்பிரகிருதி: உட்பயன் — காரிய உருவமாகிய உலகம். பயந்தது—தோற்றுவித்தது; விகுதியின் மிகுதிகள்— விகாரத்தால் உண்டான தொகுதிகள்; வகுதி — தத்துவங்க ளின் பகுப்பு: வசந்தன — அடங்கியவை. புரை — ஒரு பகுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

73 'காமமும், வெகுளியும், முதல கண்ணிய
தீமையும், வன்மையும், தீர்க்கும் செய்கையான்
நமமும், அவன்பிற நலிவுகொ டாநெடுஞ்
சேமமும் பிறர்களால் செப்பற் பாலவோ.''

74 'காலமும் கருவியும் இடனும் ஆய்,கடைப்
பால்அமை பயனும்ஆய் பயன்துய்ப் பானும்ஆய்,
சீலமும் அவைதரும் திருவும் ஆய்,உளன்—
ஆலமும் வித்துஒத்து அடங்கும் ஆண்மையான்.'

75 'உள்ளுற உணர்வுஇனிது உணர்ந்த ஓசைஓர்
தெள்விளி யாழிடைத் தெரியும் செய்கையின்,
உள்உளன்; புறத்துஉளன்; ஒன்றும் நண்ணலான்;
தள்ளஅரு மறைகளும் மருளும் தன்மையான்.'

76 'ஓம்எனும் ஓர்எழுத்து அதனின் உள்உயிர்
ஆம்அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்;
தாமமூ உலகமும் தழுவிச் சார்தலால்
தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான்.'

77 'காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின், திருக்குஅலால் சொல்லு வோர்க்குஎலாம்,
வேலையும் திரையும்போல் வேறு பாடுஇலான்.'

78 'இன்னதுஓர் தன்மையன் இகழ்வுற்று எய்திய
நல்நெடுஞ் செல்வமும், நாளும், நாம்அற
மன்னுயிர் இழத்தி!என்று அஞ்சி வாழ்த்தினேன்.
சொன்னவன் நாமம்என்று உணரச் சொல்லினான்.

தாமம் — இடப்பரப்பு: காலையின்மலர் — மலரும் நேரத்தில் மலர்ந்த பூக்கள்: சூலை — கொடிய வயிற்று நோய்: திருக்கு மாறுபாடு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோபம் கொண்ட கொடியவன் ஆணை

79 எதிரில் நின்றுஇவை இவைஉளரத்=
=திடுதலும் எவ்உலகமும் அஞ்ச,
முதிரும் வெங்கத மொழிகொடு
மூண்டது முதுகடல்கடு ஏய்ப்ப:
கதிரும், வானமும் சுழன்றன:
நெடுநிலம் கம்பித்த! கனகன்கண்
உதிரம் கான்றன: தோன்றின
புகைக்கொடி: உமிழ்ந்தது கொடுந்தீயே.

80 'வேறும் என்னொடு தரும்பகை
பிறிதுஇனி வேண்டலென்; வினையத்தால்,
ஊறி. என்னுளே உதித்தது;
குறிப்புஇனி உணர்குவது உளதுஅன்றால்;
ஈறுஇல் என்பெரும் பகைஞனுக்கு
அன்புசால் அடியென்யான் - என்கின்றான்:
கோறிர்' என்றனன்: என்றலும்
பற்றினர், கூற்றினும் கொலைவல்லார்.

ஏவலர்கள் பிரகலாதனைக் கொல்ல முயலும், அவன் உய்தலும் :

81 குன்று போல்மணி வாயிலின் பெரும்புறத்து
உய்த்தனர் மழுக்கூர்வாள்
ஒன்று போல்வன ஆயிரம் மீதுஎடுத்து
ஓச்சினர்; —'உயிரோடும்
தின்று தீர்குதும்' என்குநர், உரும்எனத்
தெழிக்குநர் சினவேழக்
கன்று புல்லிய கோள்அரிக் குழுஎனக்
கனல்கின்ற தறுகண்ணார்

82 தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் தன்னை,
அத்தவம்எனும் தகவுஇல்லோர்
'ஏ'எனும் மாத்திரத்து எய்தன எறிந்தன,
எறிதொறும் எறிதோறும், —
தூய வன்தனைத் துனைஎன உடையஅவ்
ஒருவனைத் துன்னாதார்
வாயின் வைதன ஒத்தன —அத்துணை
மழுவொடு கொலைவாளும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

83 எறிந்த, எய்தன, எற்றின, குத்தின,
ஈர்த்தன, படையாவும்
முறிந்து, நுண்பொடி ஆயின; முடிந்தன;
முனிவுஇலான் முழுமேனி
சொறிந்த தன்மையும் செய்தில ஆயின;
தூயவன் துணிவுஒன்றா
அறிந்த நாயகன் சேவடி மறந்திலன்,
அயர்ந்திலன் அவன்நாமம்.

84 'உள்ள வான்படை உலப்பில யாவையும்
உக்கன உரவோய்!—நின்
பிள்ளை மேனிக்குஓர் ஆனிவந்தி லது;இனிச்
செயல்என்கொல், பிறிது'என்ன,
'கள்ள உள்ளத்தன் கட்டினன் கருவிகள்;
கதுமெனக்கனல் பொத்தித்
தள்ளு மின்'என உரைத்தனன்; வயவரும்,
அத்தொழில்தலை நின்றார்.

85 குழியில் இந்தனம் அடுக்கினார், குன்றுஎன;
குடம்தொறும் கொணர்ந்துஎண்ணெய்
இழுது நெய்சொரிந் திட்டனர்; நெருப்பு
எழுந்திட்டது, வசும்புஎட்ட
அழுது நின்றவர் அயர்வுற, ஐயனைப்
பெய்தனர்; 'அரி'என்று
தொழுது நின்றனன், நாயகன் தாள்இணை;
குளிர்ந்தது சுடுதீயே.

86 கால வெங்கனல் கதுவிய காலையில்,
கற்புஉடையவள் சொற்ற
சீல நல்உரை சீதம்மிக்கு அடுத்தலின்,—
கிழியொடு நெய்தீற்றி,
அலம் அன்னநம் அரக்கர்கள் வயங்கு
எரிமடுத்தலின், —அனுமன்தன்
கூலம் ஆம்என், என்புறக் குளிர்ந்தது,அக்—
குருமணித் திருமேனி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

87 'சுட்டது இல்லைநின் தோன்றலை, சுடர்க்கனல்
சுழிபடர் அழுவத்துள்
இட்ட போதிலும் என்இனிச் செயத்தக்கது'
என்றனர், இகல் வெய்யோர்.
'கட்டி தீயையும் கடுஞ்சிறை இடுமின்;
அக்கள்வனைக் கவர்ந்துஉண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்கள்' என்றனன்,
எரிமழு தறுகண்ணான்.

88 அனந்த னேமுதலாகிய நாகங்கள்
'அருள்என்கொல்' என,அன்னான்
நினைந்த மாத்திரத்து எய்தின நொய்தினில்
நெருப்புஉகு பகுவாயால்,
வனைந்த தாம்அன்ன மேனியினான் தன்மேல்,
வாள்எயிறுஉற ஊன்றி,
சினம்தம் மீக்கொள, கடிந்தன; துடித்திலன்,
திருப்பெயர் மறவாதான்.

89 பக்கம் நின்றவை பயத்தினின் புயற்கறைப்
பசும்புனல் பகுவாயின்
கக்க வெஞ்சிறைக் கலுழனும் நடுக்குற,
கவ்விய காலத்துள்,
செக்கர் மேகத்துச் சிறுபிறை நுழைந்தன
செய்கைய வலிசிந்தி
உக்க பற்குலம்; ஒழுகின எயிற்றுஇரும்
புரைதொறும் அமிழ்து ஊறி,

90 'சூழப் பற்றின சுற்றும் எயிற்றின்
போழக் கிற்றில' என்று புகன்றார்;
'வாழித் திக்கின், மயக்கின் மதம்தாழ்,
வேழத் துக்குஇடு மின்'என விட்டான்,

அழுவம்-பெருங்குழி: போழ - பிளக்க: வேழம் - யானை:
செக்கர்-செந்நிறம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

91 பசையில் தங்கல்இல் சிந்தையர் பல்லோர்
திசையில் சென்றனர்; 'செப்பினன்' என்னும்
இசையில் தந்தனர் —இந்திரன் என்பான்
விசையின் திண்பனை வெஞ்சின வேழம்.

92 கையில், கால்களில், மார்பு கழுத்தில்,
தெய்வப் பாசம் உறைப்பிணி செய்தார்;
மையல் காய்கரி முன்உற வைத்தார்;
பொய்அற் றானும் இதுஒன்று புகன்றான்.

93 'எந்தாய்! — பண்டுஓர் இடங்கர் விழுங்க,—
முந்தாய் நின்ற முதல்பொருளே என்று,
உன்தாய் தந்தை இனத்தவன் ஓத,
வந்தான் என்தன் மனத்தினன்' என்றான்.

94 என்னா முன்னம் இருங்களி றும்தன்
பொன்ஆர் ஓடை பொருந்த, நிலத்தின்,
அன்னா னைத்தொழுது அஞ்சி அகன்றது;
ஒன்னார் அத்திறம் எய்தி உரைத்தார்.

95 'வல்வீ ரைத்துயில் வானை மதித்து, என
நல்வீ ரத்தை அழித்தது; நண்ணுற்று,
ஒல்வீர்! ஒற்றை உரக்கரி தன்னைக்
கொல்வீர்' என்றனன், நெஞ்சு கொதிப்பான்.

96 தன்னைக் கொல்லுநர் சாருத லோடும், —
பொன்னைக் கொல்லும் ஒழிப்புகழ் பெர்ய்யா
மன்னைக் கொல்லிய வந்தது — வாரா
மின்னைக் கொல்லும் வெயில்தின் எயிற்றால்.

முந்தாய்-மூலமாய்: வீரை-கடல்: பசை-இரக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

97. வீரன் திண்திறல் மார்பினில் வெண்கோடு
ஆரக் குத்தி அழுத்திய நாகம்,
வாரத் தண்குலை வாழை மடல்சூழ்
ஈரத் தண்டுஎன, இற்றன எல்லாம்.

98 வெண்கோடு இற்றன, மேவலர் செய்யும்
கண்கோ டல்பொறி யின்கடிது ஏகி
'எண்கோ டற்குஅரிது' என்ன, வெகுண்டான்.
திண்கோ டைக்கதி ரின்தெறு கண்ணான்.

99 'தள்ளத் தக்குஇல் பெருஞ்சயி லத்தோடு
எள்ளக் கட்டி எடுத்து விசித்து,
கள்ளத்து இங்குஇவ னைக்கரை காணா
வெள்ளத் துஉய்த்திடு மின்'என விட்டான்.

100 ஒட்டிக் கொல்ல உணர்ந்து வெகுண்டான்;
விட்டிட் டான்அலன் என்று விரைந்தார்
கட்டிக் கல்லொடு கால்விசை யிற்போய்
இட்டிட் டார்கட லின்நடு: எந்தாய்!.

101 நடுஒக் கும்தனி நாயகன் நாமம்
விடுகிற் கின்றிலன் ஆகலின், வேலை
மடுஒத்து, அங்குஅதின் வங்கமும் அன்றாய்
குடுவைத் தன்மையது ஆயது குன்றம்.

102 தலையில் கொண்ட தடக்கையி னான்,தன்
நிலையில் தீர்வுஇல் மனத்தின் நினைந்தான்
சிலையில் திண்புன லில்,சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப்பொலி கின்றான்

கண்கோடல்பொறி - கண் இமைக்கும் அளவு: எண் - வலிமை: பொறி-அளவு: ஒட்டுதல்-சபதம் செய்தல்: நடுஒக்கும் நாயகன்-எவ்வுயிர்க்கும் நடுவாய் நின்று அருள் சுரக்கும் இறைவன்: வங்கம்-கப்பல்; சிலை-கல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

103 மோதுற்று ஆர்திரை வேலையில் மூழ்கான்,
மீதுற்று ஆர்சிலை மீது கிடந்தான்,
ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம்
ஓதுற் றான்-மறை ஒல்லை உணர்ந்தான்:

பிரகலாதன் பிரார்த்தனை:

104 'அடியார் அடியேன் எனும்ஆர் வம்அலால்,
ஓடியா வலியான் உடையேன் உளெனோ?
கொடியாய்! குறியாய்! குணம்ஏ தும் இலாய்!
நெடியாய்! அடியேன் நிலைநேர் குதியோ?

105 'கள்ளம் திரிவா ரவர், கை தவம் நீ;
உள்ளம் தெரியாத உனக்கு உளவோ?
துள்ளும் பொறியின் நிலைசோ தனைதான்-
வெள்ளம் தரும்இன் அமுதே! -விதியோ?

106 'வருநான் முகனே முதல்வா னவர்தாம்,
திருநான் மறையின் நெறியே திரிவார்;
பெருநாள் தெரிகின் றிலர்;பே தைமையேன்,
ஒருநாள் உனைஎங்ஙனம் உள் ளுவெனோ?'

107 'செய்யா தனவோ இலை; தீ வினைதான்
பொய்யா த்னவந்து புணர்ந் திடுமால்,
மெய்யே! உயிர்தீர் வதுஓர் மேல்வினை, நீ,
ஐயா! ஒரு நாளும் அயர்த்த னையோ?'

108 'ஆயப் பெறும்நல் நெறிதம் அறிவு என்று,
ஏயப் பெறும்ஈ சர்கள் எண் இலரால்:
நீ அப் புறம் நிற்க, நினைக்கி லர்; நின்
மாயப் பொறிபுக்கு, மயங்கு வரால்.'

நேர்குதியோ - எதிர்ப்பட்டு அருள் புரிவாயோ: துள்ளல் -தாவுதல்: விதியோ- முறையோ: அயர்த்தனையோ-மறந்தனையோ: ஏயப்பெறும்-பொருந்தி ஒழுகப் பெறும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

109 'தாமே தனிநா யகர்ஆய், எவையும்
போமே பொருள்' என்ற புராத னர்தாம்,
'யாமே பரம்' என்றனர்; என்ற அவர்க்கு
ஆமே? பிறர், நின் அலது, ஆர் உளரே?,

110 'ஆதிப் பரம்ஆம் எனில், அன்று எனலாம்;
ஓதுஅப் பெருநூல்கள் உலப்பு இலவால்;
பேதிப் பன' நீ அவைபேர் கிலையால்;
வேதப் பொருளே! விளையா டுதியோ?'

111 'அம்போ ருகனார், அரனார், அறியார்;
எம்போ லியர்எண் ணிடின். என், பலவா?
கொம்பொடு, அடை, பூ கனி, காய் எனினும்,
வம்போ, மரம்ஒன் று, எனும்வா சகமே?'

112 'நின்னின் பிறிதாய், நிலையின் திரியா,
தன்னின் பிறிது ஆயினதாம் எனினும்
உன்னின் பிறிது ஆயினவோ. உலகம் —
பொன்னின் பிறிது ஆகில, பொற்கலனே?.

113 'தாய்தந்தை எனும்தகை வந்த னைதான்,
நீதந்தனை; நீஉறு நெஞ்சி னென்நான்;
நோய்தந் தவனே! நுவல்தீர் வும்' எனா,
வாய்தந் தனசொல் லிவணங் கினனால்.

பிரகலாதனை மேலும் துன்புறுத்துதல் :

114 அத்தன் மைஅறிந் தஅருந் திறலோன்,
'உய்த்து உய்ம்மின், என்முன்' என, உய்த்தனரால்;
பித்துண் டதுபேர்வு உறுமா பெறுதும்!
கைத்தும், கடுநஞ் சின்' எனக் கனலா.

புராதனர் - பழையோர்; தன்னின் - தமக்குள்ளே: கைத்தல் - வெறுத்தல்; நஞ்சு - விஷம்: கனலா - கோபித்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

115 இட்டார் கடுவல் விடம் எண் ணுடையான்
தொட்டான் நுகரா ஒருசோர்வு இல்னால்;
சுட்டுஆர் சுடுமத்தி கை கண் கொடியோன்,
விட்டான்; அவன் மேல் அவர் வீ சினரால்.

116 வெய்யார், முடிவுஇல் லவர்வீசிய போது,
உய்யான் எனும்வே லையினுள் உறைவோன்
கைஆ யிரம் அல்ல; கணக்கு இல' என்றி',
எய்யா உலகு யாவையும் எண்ணினனால்

இரணியன் பிரகலாதன் விவாதம் :

117 ஊனோடு உயிர்வே றுபடா உபயம்
தானே உடையன், தனிமா யையினால்
யானே உயிர் உண் பல் எனக் கனலா,
வான்ஏ ழும்நடுங் கிடவந் தனனால்

118 வந்தானை வணங்கி என்மண் உயிர்தான்
எந்தாய்! கொளஎண் ணினையேல், இதுதான்
உம்தாரி யதுஅன் று; உலகு யாவும் உடன்
தந்தார் கொளநின் றதுதான்' எனலும்.

119 எவரே உலகம் தந்தார்? என்பெயர் ஏத்தி வாழும்
மூவரே? அல்லர் ஆகின், முனிவரே? முழுதும் தோற்ற
தேவரே? பிறரே? யாரே? செப்புதி தெரிய' என்றான்,
கோவம் மூண்டு எழுந்தும் கொல்லான் காட்டுமேல்
காட்சி கொள்வான்.

120 உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள் தந்தானும்,
உள்உற்று,
உலைவு இலா உயிர்கள் தோறும், அங்குஅங்கே உறை
கின்றானும்,
மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும்! மற்றும்கேளாய்
அலகுஇல் பல்பொருளும் பற்றி முற்றிய அரிகாண்
அத்தா!

எண்ணுடையான்- இறைவனைத்தியானிப்பவன்: பிரகலாதன்; கட்டு- முடிச்சு மத்திகை- குதிரைச்சம்மட்டி: உபயம்- உபாயம்: தரியது- தரத்தில் உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

121 'என்கணால் நோக்கிக் காண்டற்கு எங்கணும் உளன்காண் எந்தை;
உன்கண்நான் அன்பின் சொன்னால், உறுதி என்றுஒன்றும் கொள்ளாய்;
நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ நினக்குப் பின்னோன்
பொன்கணான் ஆவி உண்ட புண்டரீகக்கண் அம்மா?

122 'மூன்றுஅவன் குணங்கள்; செய்கை மூன்று;அவன் உருவம் மூன்று;
மூன்றுகண், சுடர்கொள் சோதி மூன்று; அவன் உலகம் மூன்று;
தோன்றலும் இடையும் ஈறும் தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்றுஅவன் இதுவே வேத முடிவு:இது சரதம் என்றான்.

123 'என்றலும் அவுணர் வேந்தன் எயிற்றுஅரும்பு இலங்க நக்கான்
'ஒன்றல்இல் பொருள்கள் எல்லாம் ஒருவன்புக்கு உறைவன் என்றாய்;
நன்றுஅது கண்டு, பின்னர் நல்லவா புரிதும்; தூணில்
நின்றுளன் என்னின் கள்வன், நிரப்புதி நிலைமை' என்றான்.

124 'சாணினும் உளன்;ஓர் தன்மை, அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்;மா மேருக் குன்றினும் உளன்;இந் நின்ற
தூணினும் உளன்;நீ சொன்ன சொல்லினும் உளன்;இத் தன்மை
காணுதி விரைவின்' என்றான்; 'நன்று' எனக் கனகன் சொன்னான்.

125 'உம்பர்க்கும்,உனக்கும், ஒத்து,இவ் உலகுஎங்கும் பரந்து ளானை
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி: காட்டி டாயேல்,
கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றென, நின்னைக் கொன்று,உன்
செம்புஒத்த குருதி தேக்கி, உடலையும் தின்பென்' என்றான்.

126 'என்உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்றுஅன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றான் ஆயின்,
என்உயிர் யானே மாய்ப்பல்; பின்னும் வாழ்வுஉகப்பல் எண்ணின்,
அன்னவற்கு அடியேன் அல்லேன்' என்றனன், அறிவின் மிக்கான்

ஆவி-உயிர்: புண்டரீகம்-தாமரை: ஒன்றல் இல்பொருள்கள்-ஒன்றுபடுதல் இல்லா வேறுபட்ட பொருள்கள்: கும்பம்-மத்தகம்: கோள்மா-வலியசிங்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நரசிங்கம் தோன்றுதல்

127 நகைதிறந்து இலங்கப் பொங்கி 'நன்றுநன்று' என்ன நக்கு
விசைதிறந்து உருமு வீழ்ந்த தென்னஓர் தூணின், வென்றி
இசைதிறந்து உயர்ந்த கையால் எற்றினான்; எற்ற லோடும்,
திசைதிறந்து, அண்டம் கீறச் சிரித்தது, அச்செங்கண் சீயம்.

பிரகலாதன் பெரிதும் மகிழ்தல்

128 'நாடிநான் தருவென் என்ற நல்அறி வாளன், நாளும்
தேடிநான் முகனும் காணாச் சேயவன் சிரித்த லோடும்,
ஆடினான்; அழுதான்; பாடி அரற்றினான்; சிரத்தில் செங்கை
சூடினான்; தொழுதான் ஓடி உலகுஎலாம் துகைத்தான், துள்ளி

அசுரனின் ஆணவப் பேச்சு

129 'ஆர்அடா சிரித்தாய்? சொன்ன அரிகொலோ? அஞ்சிப் புக்க
நீர்,அடா, போதாது என்று, நெடுந்தறி நேடி னாயோ?
போர்அடா? பொருதி ஆயின். புறப்படு புறப்படு' என்றான்—
பேர்அடா நின்ற தாளோடு உலகுஎலாம் பெயரப் பேர்வான்.

நரசிங்க மூர்த்தியின் பெரு வடிவு

130 பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது, சீயம் பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை யார்அறிந்து அறைய கிற்பார்?
கிளர்ந்தது: ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும்.

131 மன்றல்அம் துளப மாலை மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றாம்; சேவடி படியில் தீண்ட
நின்றதுஓர் பொழுதின், அண்ட நெடுமுகட்டு இருந்த முன்னோன்
அன்றுஅவன் உந்தி வந்தா னாம்எனத் தோன்றி னானால்.

132 'எத்துணை போதும் கை'என்று இயம்பினால், எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரே? அந்தத் தானவர் விரிந்த சேனை,
பத்து நூறு அமைந்த கோடி வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலும் மாள, தனித்தனி அள்ளிக் கொண்ட.

பேர்அடா நின்றதாள் - புகழ் பொருந்தியகால்: கை - எத்துணை போதும்-கைகள் எத்தனை உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

133 ஆயிரம் கோடி வெள்ளத்து அயில்எயிற்று அவுணர்க்கு; அங்கு அங்கு,
ஏயின ஒருவர்க்கு ஓர் ஓர் திருமுகம், இரட்டிப் பொன்தோள்,
தீஎனக் கனலும் செங்கண் சிரம் தொறும் மூன்றும், தெய்வ
வாயினில் கடல்கள் ஏழும், மலைகளும், மற்றும், முற்றும்.

134 முடங்குவால் உளை அவ் அண்டம் முழுவதும் முடிவில் உண்ணும்
கடம்கொள் வெங்காலச்செந்தீ அதனை வந்து அவிக்கும், கால
மடங்கலின் உயிர்ப்பும் மற்று அக் காற்றினை மாற்றும்: ஆனால்,
அடங்கலும் பகுவாய் யாக்கை அப்புறத்து அகத்தது அம்மா!

135 குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டைக் கூட்டில்
பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள், அமுது பல்கும்
எயிற்றுவன் பகுவாய் உள்புக்கு இருக்கு ந இருக்கை எய்தி,
வயிற்றின் வந்துஅந்நாள், இந்நாள் வாழும் மன்னுயிர்கள் மன்னோ;

136 நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ, கேடு? நான் முகத்தோன் ஆதி
தொன்மையின் தொடர்ந்த வாய்மை அறத்தொடும் துறந்திலோரை,
அன்வயித்து, ஓரும் தீய அவுணர்அல் லாரை, அந்நாள்,
தன்வயிற்று அகத்து வைத்துத் தந்ததுஅச் சீயம், தாயின்.

137 பேருடை அவுணர் தம்மைப் பிறைஎயிற்று அடக்கும்; பேரா,
பாரிடைத் தேய்க்கும்: மீளப் பகிரண்டத்து அடிக்கும்; பற்றி,
மேருவில் புடைக்கும்: மாள விரல்களின் பிசையும்; வேலை
நீரிடைக் குமிழி ஊட்டும்; நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்.

138 வகிர்ப்படுத்து உரக்கும்; பற்றி வாய்களைப் பிளக்கும்; வன்தோல்
துகிர்ப்படுத்து உரிக்கும்; செந்தீக் கண்களைச் சூலும்; சுற்றிப்
பகிர்ப்படக் குடரைக் கொய்யும்; பசைஅறப் பிசையும், பல்கால்;
உகிர்ப்புரைப் புக்கோர் தம்மை உகிர்களால் உறக்கும்; ஊன்றி;

கடம்- கடமை: கால மடங்கல்- காலனை ஒத்த சிங்கம்: அப்புறம், மேற்புறம்: அன்வயித்து- சேர்ந்து: சுரிக்க- சுருண்டுதீய! சூலுதல்- தோண்டி எடுத்தல்; பகிர்பட-துண்டுபடுமாறு: உகிர்ப்புறம் -நகச் சந்துகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

139 யானையும், தேரும் ,மாவும், யாவையும், உயிர் இ ராமை,
ஊனொடு தின்னும்; பின்னை, ஒலிதிரைப் பரவை ஏழும்
மீனொடு குடிக்கும்: மேகத்து உருமொடு விழுங்கும், விண்ணில்;
தான்ஓடுங் காதுஎன்று அஞ்சி, தருமமும் சலித்தது அம்மா!

140 ஆழிமால் வரையோடு ஏற்றும், சிலவரை; அண்ட கோளச்
சூழ்இருஞ் சுவரில் தேய்க்கும், சிலவரை; துளக்குஇல் குன்றம்
ஏழினோடு ஏற்றிக் கொல்லும், சிலவரை; எட்டுத் திக்கும்
தாழ்இருட் பிழம்பின் தேய்க்கும், சிலவரைத்; தடக்கை தூக்கி.

141 மலைகளின் புரண்டு வீழ, வள்உகிர் நுதியால், வாங்கி,
தலைகளைக் கிள்ளும்; அள்ளித் தழல்எழப் பிசையும்; தக்க
கொலைகளின் கொல்லும்; வாங்கி உயிர்களைக் குடிக்கும்; வான
நிலைகளில் பரக்க, வேலை நீர்களை நிரம்பத் தூர்க்கும்:

142 முப்புறத்து உலகத் துள்ளும் ஒழிவுஅற முற்றும் பற்றி,
தப்புதல் இன்றிக் கொன்று, தையலார் கருவும் தள்ளி,
இப்புறத்து அண்டத்து யாரும் அவுணர் இல்லாமை எற்றி
அப்புறத்து அண்டம் தோறும் தடவின, சிலகை அம்மா!

143 கனகனும் அவனில் வந்த, வானவர் களைகண் ஆன
அனகனும் ஒழிய, பல்வேறு அவுணர் ஆனவரை எல்லாம்
நினைவதன் முன்னம் கொன்று நின்றது,அந் நெடுங்கண் சீயம்,
வனைகழ லவனும், மற்றுஅம் மடங்கலின் வரவு நோக்கி.

இரணியன் வாள் ஏந்தி போருக்கு எழுதல் :

144 வயிரவாள் உரையின் வாங்கி, வானகம் மறைக்கும் வட்டச்
செயிர்அறு கிடுகும் பற்றி, வானவர் உள்ளம் தீய,
அயிர்படர் வேலை ஏழும் மலைகளும் அஞ்ச ஆர்த்து,அங்கு
உயிருடை மேரு என்ன வாய்மடித்து உருத்து நின்றான்.

ஆழிவரை - சக்கரவாளமலை: கிடுகு - கேடகம்: அயிர்-நுண்ணியமணல்: உருத்து - கோபித்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தைக்கு மைந்தனின் அறிவுரை

145 நின்றவன் தன்னை நோக்கி, 'நிலைஇது கண்டு, நீயும்,
ஒன்றும்உன் உள்ளத்து யாதும் உணர்ந்திலை போலும் அன்றே
வன்தொழில் ஆழி வேந்தை வணங்குதி; வணங்க வே, உன்
புன்தொழில் பொறுக்கும்' என்றான்-உலகெலாம் புகழ நின்றான்

இரணியன் நரசிங்கத்தை எதிர்த்தல் :

146 'கேள்' இது நீயும் காண, கிளர்ந்த கோள் அரியின் கேழ்இல்
தோளொடு தாளும் நீக்கி, நின்னையும் துணித்து, பின், என்
வாளினைத் தொழுவது அல்லால், வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?' என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்.

இரணியன் இறுதி எய்துதல்

147 நகைசெயா, வாயும் கையும், வாளொடு நடந்த தாளும்
புகைசெயா, நெடுந்தீப் பொங்க உருத்து,எதிர் பொருந்தப் புக்கான்;
தொகைசெயற்கு அரிய தோளால் தாள்களால் சுற்றிச் சூழ்ந்தான்
மிகைசெய்வார் வினைகட்கு எல்லாம் மேற்செயும் வினையம் வல்லான்.

148 இருவரும் பொருந்தப் பற்றி, எவ்வுல குக்கும் மேல்ஆய்,
ஒருவரும் காணா வண்ணம் உயர்ந்த தற்குஉவமை கூறின்,
வெருவரும் தோற்றத்து. அஞ்சா, வெஞ்சின அவுணன் மேரு
அருவரை ஒத்தான்; அண்ணல் அல்லவை எல்லாம் ஒத்தான்.

149 ஆர்ப்புஒலி முழக்கின், வெவ்வாய் வள்உகிர்ப் பாரம் ஆன்ற
ஏற்றுஅருங் கரத்தின். பல்வேறு எறிதிரைப் பரப்பின் உற்ற
பாற்கடல் பரந்து பொங்கிப் பங்கயத்து ஒருவன் நாட்டின்
மேல்சென்றது ஒத்தான் மாயன்; கனகனும் மேரு ஒத்தான்.

150 வாளொடு தோளும், கையும், மகுடமும், மலரோன் வைத்த
நீள் இருங் கனக முட்டை நெடுஞ்சுவர் தேய்ப்ப நேமி
கோளொடும் திரிவது என்னக் குலமணிக் கொடும்பூண் மின்ன
தாள் இணை இரண்டும் பற்றிச் சுழற்றினன் தடக்கை ஒன்றால்.

ஆழிவேந்து-சக்கராயுதம் ஏந்திய திருமால்: (இங்கு நரசிங்கம்) நரசிங்கத்தின் கர்ச்சனைக்குக் கடலின் முழக்கமும் கைகளின் தொகுதிக்குக் கடலின் அலைப் பரப்பும் உவமை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

151 சுழற்றிய காலத்து, இற்ற தூங்கு குண்டலங்கள் நீங்கி,
கிழக்கொடு மேற்கும் ஓடி விழுந்தன கிடந்த, இன்றும்
அழல்தரு கதிரோன் தோன்றும் உதயத்தோடு அத்தம் ஆன;
நிழல்தரும், காலை மாலை, நெடுமணிச் சுடரின் நீத்தம்.

152 போன்றன இனைய தன்மை; பொருவியது இனையது என்று
தான்தனி ஒருவன், தன்னை உரைசெயும் தரத்தி னானோ?
வான்தரு வள்ளல் வெள்ளை வள்உகிர் வயிர மார்பின்
ஊன்றலும், உதிர வெள்ளம் பரந்துளது, உலகம் எங்கும்.

153 ஆயவன் தன்னை, மாயன், அந்தியின், அவன்பொன் கோயில்
வாயிலில், மணிக்க வான்மேல், வயிரவாள் உகிரின் வாயின்,
மீஎழு குருதி பொங்க, வெயில்விரி வயிர மார்பு
தீஎழப் பிளந்து நீக்கி, தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.

தேவர்கள் நரசிங்கத்தைக் கண்டு அஞ்சி நிற்றல்:

154 முக்கணான், எண்க ணானும், முளரி ஆயிரம் கணானும்
திக்கண் ஆம்தேவ ரோடு முனிவரும், பிறரும், தேடிப்
புக்க நாடு அறிகுறாமல் திரிகின்றார் புகுந்து மொய்த்தார்.
'எக்கணால் காண்டும், எந்தை உருவம்'என்று இரங்கி நின்றார்.

155 நோக்கினார் நோக்கி னார்முன், நோக்குறு முகமும் கையும்
ஆக்கையும் தாளும் ஆகி, எங்கனும் தானே ஆகி,
வாக்கினால் மனத்தினால் மற்று அறிவினால் அளக்க வாரா,
மேக்குஉயர் சீயம் தன்னைக் கண்டனர், வெருவு கின்றார்

156 பல்லொடு பல்லுக்கு எல்லை ஆயிரக் காதப் பத்தி,
சொல்லிய வதனம் கோடி கோடிமேல் விளங்கித் தோன்ற,
எல்லைஇல் உருவிற்று ஆகி இருந்ததை எதிர நோக்கி,
அல்லிஅம் கமலத்து அண்ணல் அவன்புகழ் விரிப்ப தானான்.

நெடுமணி-சிறந்த மாணிக்கம்: இனைய தன்மை-இவ்வியல்புகள்:
இனையது-இன்னதொரு பொருள்: பொருவியது-ஒத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நரசிங்க மூர்த்தியை நான்முகன் துதித்தல்

157 'தன்னைப் படைத்ததுவும் தானே எனும்தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ என்றால், உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய்நீ எனும்இதுவும் ஏத்துஆமோ?

158 'பல்ஆயிரம் கோடி அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குள்என தோன்றுமால் நின்னுழையே;
எல்லா உருவமுமாய் நின்றக்கால், இவ்உருவம்
வல்லே படைத்தால், வரம்புஇன்மை வாராதோ?'

159 'பேரை ஒருபொருட்கே பல்வகையால் பேர்த்துஎண்ணும்
தாரை நிலையை; தமியை; பிறர் இல்லை;
யாரைப் படைக்கின்றது யாரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது? ஐயா! அறியேமால்.'

160 'நின்னுளே என்னை நிருமித்தாய்: நின்அருளால்
என்னுளே, எப்பொருளும் யாவரையும் யான்ஈன்றேன்;
பின் இலேன்; முன் இலன்; எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர் பொற்கலனே போல்கின்றேன்.

சிங்கப்பிரான் சீற்றம் தணிந்து தேவர்களுக்கு அபயம் அளித்தல்:

161 என்று ஆங்கு இயம்பி, இமையாத எண் கணவனும்,
வன்தாள் மழுவோனும், யாரும் வணங்கினரால்;
நின்றார், இருமருங்கும்: நேமிப் பெருமானும்,
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான்.

162 'எஞ்சும், உலகுஅனைத்தும் இப்பொழுதே' என்று, என்று
நெஞ்சு நடுங்கும் நெடுந் தேவரை நோக்கி,
அஞ்சன்மின்!' என்னா, அருள் சுரந்த நோக்கினால்,
கஞ்சமலர் பழிக்கும் கை அபயம் காட்டினான்.

பெரும் பெருமை- விசுவம் என்னும் பிரபஞ்சம்: ஏத்து-புகழுரை: தாரை நிலை- ஒழுங்கான நிலை: பின்-காரியம்: முன்-காரணம். கஞ்சம்-தாமரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமகள் வருகையும் சிங்கப்பிரான் நோக்கமும்

163 பூவின் திருவை, அழகின் புனை கலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடுஎன்னும் இன்பத்தை,
ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம்மோயை, ஏவினார் பாற்செல்ல.

164 செந்தா மரைப்பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை, நறுந்தாள் இளங்கொழுந்தை,
முந்தா உலகும் உயிரும் முறைமுறையே
தந்தாளை நோக்கினான், தன்ஒப்புஒன்று இல்லாதான்.

சிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கி அருளியவை

165 தீதுஇலா ஆக உலகுஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான்; கண்ட முனிக்கணங்கள்
ஓதினார், சீர்த்தி, உயர்ந்த பரஞ்சுடரும்,
நோதல்ஆங்கு இல்லாத அன்பனையே நோக்கினான்.

166 'உந்தையை உன்முன்கொன்று உடலைப் பிளந்துஅளைய,
சிந்தை தளராது அறம்பிழையாச் செய்கையாய்!
அந்தம்இலா அன்புஎன்மேல் வைத்தாய்: அளியத்தாய்!
எந்தை! இனிஇதற்குக் கைம்மாறு யாது?' என்றான்.

167 'அயிரா இமைப்பினைஓர் ஆயிரம் கூறுஇட்ட
செயிரின் ஒருபொழுதில், நுந்தையை யாம்சீறி,
உயிர்நேடு வேம்போல், உடல்அளைய, கண்டும்
செயிர்சேரா உள்ளத்தாய்க்கு, என் இனியாம் செய்கேம்?'

168 'கொல்லேம், இனிஉன் குலத்தாரை, குற்றங்கள்
எல்லை இலாதன செய்தாரே என்றாலும்,
நல்லேம், உனக்குஎம்மை; நாணாமல், நாம்செய்வது
ஒல்லை உளதேல். இயம்புதியால்' என்றுஉரைத்தான்.

திரு - இலக்குமி: மோய் - தாய்: சீர்த்தி - மிகுபுகழ்: அயிரா - நுண்ணிதாக: நுந்தை - உன் தந்தை: நேடுவேம் - தேடுவேம்: எம்மை - எப்பிறப்பும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரகலாதன் வரமும் பெருமான் அருளும்

169 'முன்பு பெறப்பெற்ற பேறோ முடிவுஇல்லை;
பின்பு பெறும்பேறும் உண்டோ? பெறுகுவனேல்,
என்பு பெறாத இழிபிறவி எய்தினும்,நின்
அன்பு பெறும்பேறு அடியேற்குஅருள்' என்றான்.

170 அன்னானை நோக்கி, அருள்சுரந்த நெஞ்சினன்ஆய்,
'என்ஆணை வல்லன்' எனமகிழ்ந்த பேர்ஈசன்,
'முன்ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்,
உன்நாள் உலவா(ய்)நீ; என்போல்உளை' என்றான்.

171 'மின்னைத் தொழுவளைத்தது என்ன மிளிர்ஒளியாய்!
முன்னைத் தொழும்புக்கே ஆம்அன்றோ, மூஉலகும்?
என்னைத் தொழுதுஏத்தி, எய்தும்பயன் எய்தி,
உன்னைத் தொழுதுஏத்தி, உய்க, உலகுஎல்லாம்.

172 'ஏனவர்க்கும் வேண்டில் எளிதுஒன்றோ? -ஏற்குஅன்பர்
ஆனவர்க்கம் எல்லாம் நினக்குஅன்பர் ஆயினார்;
தானவர்க்கு வேந்தன்நீ என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே இறை'தொல் மறைவல்லோய்!

173 'நல்அறமும், மெய்ம்மையும், நான்மறையும், நல்அருளும்,
எல்லைஇல் ஞானமும், ஈறுஇலா எப்பொருளும்,
தொல்லைசால் எண்குணனும் நின்சொல் தொழில்செய்ய,
மல்லல் உருஒளியாய்! நாள்நா வளர்கநீ!'

பிரகலாதன் முடிசூட்டு விழா

174 என்றுவரம் அருளி 'எவ்உலகும் கைகூப்ப,
முன்றில் முரசம் முழங்க, முடிசூட்ட,
நின்றஅமரர் அனைவீரும் நேர்ந்துஇவ னுக்கு
ஒன்று பெருமைஉரிமை புரிக' என்றான்.

என்பு - எலும்பு: ஈசன் - சிங்கப்பிரான்: ஏற்கு: எனக்கு:
தானவர் - அசுரர்; தொழும்பு - அடித்தொண்டு;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

175 தேமன், உரிமை புரிய, திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற, உடையான் முடிசூட்ட,
கோமன் னவன்ஆகி மூஉலகும் கைக்கொண்டான்
நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான்.

வீடணன் முடிவுரை

176 'ஈதுஆகும், முன் நிகழ்ந்தது; எம்பெருமான் என்மாற்றம்
யாதானும் ஆக நினையாது இகழ்தியேல்,
தீதுஆய் விளைதல் நனி திண்ணம்' எனச் செப்பினான்
மேதா விகட்குஎல்லாம் மேலான மேன்மையான்

இரணியன் வதைப்படலம் முற்றிற்று

இம்பர் நாட்டில் செல்வம்எலாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்,
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையில் போல்,
கற்றோர்க்கு இதயம் களியாதே.

கம்ப நாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல் முதற்குறிப்பு அகராதி.
எண் பாடலைக் குறிக்கும்.

அடியார்	104	உள்ளுற	75
அத்தன்மை	114	உன்உயிர்க்கும்	46
அம்போருகனார்	111	ஊனோடு	117
அயிரா	167	எஞ்சும்உலகு	162
அரசன்	37	எத்துணை	132
அளவையான்	62	எதிரில் நின்று	79
அன்னகேட்டு	36	எந்தாய்	93
அன்னானை	170	எந்தைகேள்	35
அனந்தனே	88	எழுத்துஇயல்	70
ஆதிஅந்தங்கள்	53	எற்றை	2
ஆதிப்பரம்	110	எறிந்த	83
ஆயப்பெறும்	108	என்உயிர்	126
ஆயவன்	19	என்கணால்	121
ஆயவன்தன்னை	153	என்றலும்	123
ஆயிரங்கோடி	133	என்றுஆங்கு	161
ஆர்ப்புஒலி	149	என்றுஓர்	21
ஆர்அடா	129	என்றுவரம்	174
ஆரைச்சொல்வது	29	என்னா	94
ஆழிமால்வரை	140	என்னை	25
இட்டார்	115	எனக்கும்	33
இருவரும்	148	ஏவரே	119
இற்றை	47	ஏனவர்க்கு	172
இன்னது	78	ஒட்டிக்கொள்ள	100
ஈதுஆகும்	176	ஒருவன்	52
உந்தையை	166	ஒருவினை	67
உம்பர்க்கும்	125	ஓம்எனும்	76
உரைஉளது	57	ஓம்நமோ	23
உலகுதந்தானும்	120	ஓதப்புக்க	22
உள்ளவான்படை	84	ஓர்ஆவுதி	68
உள்ளில்	17	கண்ணினும்	71
கள்ளம்	105	கருமமும்	64
காடுபற்றியும்	31	கனகனும்	143
		காமம்	42

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காமமும் 73
காலமும் 74
கால வெங்கனல் 86
காலையின் 77
காவல் 9
குயிற்றிய 135
குழியில் 85
குன்று போல் 81
கெடுத்து 24
கேள்இது 146
கையில் 92
கொணர்க 38
கொல்லேம் 168
சாங்கியம் 60
சாணினும் 124
சாரும் 6
சித்து 61
சிந்தையின் 72
சுட்டது 87
சுருதி 40
சுழற்றிய 151
சூழப்பற்றின 90
செந்தாமரை 164
செய்த மாதவம் 54
செய்யாதனவோ 107
செவிகளால் 32
தலையில் 102
தள்ளத் தக்க 99
தன்னுளே 59
தன்னைக் கொல்லுநர் 96
தன்னைப் படைத்ததுவும் 157
தாமரை 8
தாமேதனி 109
தாய் தந்தை 113
தாயின் 82
தீது இலா 165
தேமன் உரிமை 175
தேவர் ஆயினர் 15
தேவர் செய்கையன் 41
தொல்லை 28
தொழுத 39
தோற்றம் 45
நகை செயா 147
நசை திறந்து 127
நடு ஒக்கும் 101
நல்அறமும் 173
நன்மையின் 136
நாடி நான் 128
நிலனும் 7
நின்றவன் 145
நின்னின் 112
நின்னுளே 160
நீரின் 16
நோக்கினார் 155
பக்கம் 89
பகுதியின் 69
பசையில் 91
பண்டு 11
பரவை 50
பல் ஆயிரம் 158
பல்லொடு 156
பாழிவன் 3
பிளந்தது 130
பூதம் ஐந்தொடு 18
பூவில் திருவை 163

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணில் 14
பேதைப் பிள்ளை 56
பேருடை அவுணர் 137
பேரை ஒரு 159
போன்றன 152
மண்டலம் 12
மண்ணின் நின்று 43
மந்திரம் 65
மயர்வு இல் 13
மரபின் 5
மருக்கொள் 10
மலைகளின் 141
மறம் கொள் 49
மன்றல் அம் 131
மாற்றம் 34
மின்னை 171
முக்கணான் 154
முக்கண் தேவனும் 44
முடங்கு 134
முந்தை 26
முப்புறத்து 142
முற்பயப் பயன் 66
முன்பு பெற 169
மோதுற்று 103
வகிர்ப்படுத்து 138
வண்டல் 4
வந்தானை 118
வயிரவாள் 144
வயிற்றினுள்
வருநான்முகன் 06
வல்வீரை 95
வாளொடு 150
வாழியான் 20
வித்து இன்றி 58
வீரன் திண் திறல் 97
வெண்கோடு 98
வெய்யார் 116
வேதத்தானும் 30
வேத பாரகன் 27
வேதம் கண்ணிய 1
வேள்வி ஆதிய 55
யானையும் 137
முனைவர் 48
மூவலக 63
மூன்று அவன் 122

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

பயன்படுத்தப்பட்ட நூல்கள்

1 கம்பராமாயணம் மூலம் மர்ரே கம்பெனி பதிப்பு
2 " சென்னைக் கம்பன் கழகம்
3 " உரை வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்
4 " " அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
5 திருக்குறள் - பரிமேலழகர் உரை
6 சிவஞான சித்தியார்
7 பாரதியார் பாடல்
8 பட்டனார் கீதை
9 விஷ்ணு சகஸ்ரநாமம். இராதாகிருஷ்ண சாஸ்திரிகள் உரை
10 கம்பன் பிள்ளைத் தமிழ் - கனகராஜ அய்யர்
11 இந்திய தத்துவஞானம் - கி. லக்ஷ்மணன்
12 திருமந்திரம் - திருமூலர்
13 இரணியன் வதைப்பரணி
14 மஹாநாராயணோப நிஷத் - மொழிபெயர்ப்பு
15 இராமசெயத் திருப்புகழ்
16 விஷ்ணுபுராணம் - சுப்பராய அய்யர்
17 பாத்மோத்ர புராணம் - இராமனுஜ நாவலர்
18 அதர்வணவேதம் - மொழிபெயர்ப்பு
19 நிருஸிம்ஹ தாபநீ உபநிஷத் - மொழிபெயர்ப்பு
20 திருவாய்மொழி
21 பெரிய திருமொழி
22 பெரியாழ்வார் திருமொழி
23 திருச்சந்த விருத்தம்
24 பரிபாடல்
25 கல்லாடம்
26 திவ்யப்பிரபந்தம் மூலம் - மர்ரே கம்பெனி
27 சீவகசிந்தாமணி - நச்சினார்க்கினியர் உரை
28 பெரியபுராணம்
29 தேசிகப் பிரபந்தம்
30 திருவாசகம்
31 சிவஞான போதம்
32 சுந்தரர் தேவாரம்
33 தொல்காப்பியம்—நச்சினார்க்கினியர் உரை.
34 கோயில் நான்மணிமாலை—பட்டினத்துப் பிள்ளையார்
35 கலித்தொகை
36 தாயுமானவர் பாடல்
37 'ஸ்வாமி -புட்டபர்த்தி சுவாமிகள்-ரா.கணபதி
38 நான்முகன் திருவந்தாதி
39 திருவிருத்தம்
40 முதல் திருவந்தாதி

7754

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

பயன்படுத்தப்பட்ட நூல்கள்

1 கம்பராமாயணம் மூலம் மர்ரே கம்பெனி பதிப்பு
2 " சென்னைக் கம்பன் கழகம்
3 " உரை வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்
4 " " அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
5 திருக்குறள் - பரிமேலழகர் உரை
6 சிவஞான சித்தியார்
7 பாரதியார் பாடல்
8 பட்டனார் கீதை
9 விஷ்ணு சகஸ்ரநாமம். இராதாகிருஷ்ண சாஸ்திரிகள் உரை
10 கம்பன் பிள்ளைத் தமிழ் - கனகராஜ அய்யர்
11 இந்திய தத்துவஞானம் - கி. லக்ஷ்மணன்
12 திருமந்திரம் - திருமூலர்
13 இரணியன் வதைப்பரணி
14 மஹாநாராயணோப நிஷத் - மொழிபெயர்ப்பு
15 இராமசெயத் திருப்புகழ்
16 விஷ்ணுபுராணம் - சுப்பராய அய்யர்
17 பாத்மோத்ர புராணம் - இராமனுஜ நாவலர்
18 அதர்வணவேதம் - மொழிபெயர்ப்பு
19 நிருஸிம்ஹ தாபநீ உபநிஷத் - மொழிபெயர்ப்பு
20 திருவாய்மொழி
21 பெரிய திருமொழி
22 பெரியாழ்வார் திருமொழி
23 திருச்சந்த விருத்தம்
24 பரிபாடல்
25 கல்லாடம்
26 திவ்யப்பிரபந்தம் மூலம் - மர்ரே கம்பெனி
27 சீவகசிந்தாமணி - நச்சினார்க்கினியர் உரை
28 பெரியபுராணம்
29 தேசிகப் பிரபந்தம்
30 திருவாசகம்
31 சிவஞான போதம்
32 சுந்தரர் தேவாரம்
33 தொல்காப்பியம்—நச்சினார்க்கினியர் உரை.
34 கோயில் நான்மணிமாலை—பட்டினத்துப் பிள்ளையார்
35 கலித்தொகை
36 தாயுமானவர் பாடல்
37 'ஸ்வாமி -புட்டபர்த்தி சுவாமிகள்-ரா.கணபதி
38 நான்முகன் திருவந்தாதி
39 திருவிருத்தம்
40 முதல் திருவந்தாதி

7754

पुस्तकालय गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவரங்கம் பதிப்பகம்
7, எல்லப்பச் செட்டியார் காலனி
இராசிபுரம்-637 408. (சேலம் மாவட்டம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

ஞான நாயகன்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மு. இராமசாமி.

இராமாவதாரக் கதையில் நரசிம்மாவதாரக் கதை. கதாநாயகன் : ஞானநாயகன் - பிரகலாதன். கம்பர் கொடுத்த பெயர்: இரணியன் வதைப்படலம். இதனைக் கம்பர் பாடக் காரணம். மற்றைய பகுதிகளுக்கு இல்லாததோர் தனித்த ஏற்றம். இதனைப் பற்றி இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்துகள். ஆழ்வார்கள் மூவர் சந்திப்பு. இணைப்புக்குக் காரணமாக இருந்தவர்.

இரணியன் ஓதியும் உணராதவன்: வேத வாதி: சாங்கிய நெறியினன். பிரகலாதன் ஓதாது உணர்ந்தவன்: உபநிடதவாதி: பக்தியோக நெறியினன். விளக்கம்.

தந்தை கர்ம காண்டத்தில் நின்று பேசுவது: மைந்தன், ஞான காண்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேசுவது. இந்தப் பேச்சில் தத்துவ ஞானம், சமயப் பேருணர்வு விசிட்டாத்வைதம் விளக்கம் பெறுதல்.

தந்தையின் கொடுமையினின்றும் மைந்தன் வென்றமை. நரசிங்கம் தூணில் தோன்றுதல். இரணியன் இறுதி. நரமடங்கலை நான்முகன் துதித்தல். இதில் இறைவனின் தானான தன்மை (சொரூப லட்சணம்) கலந்த தன்மை (தடஸ்த லட்சணம் விளக்கம் பெறுதல்.

சிங்கப்பிரான், பிரகலாதனுக்கு முடி சூட்டி அருள் செய்தல்.

அசுரத் தந்தைக்கும் அன்பு மைந்தனுக்கும் உள்ள வேறுபாடுகள் தொகுப்பு.

இரணியன் வதைப்படலம் மூலம் 176 பாடல்கள். இது, இலக்கிய ரசிகர்களுக்கு இன்ப விருந்தாக அமையும் பக்தர்களுக்குப் பரமானந்தம் அளிப்பது.

விலை ரூ. 40-00

திருவரங்கம் பதிப்பகம்

சன்—மூன் பிரிண்டர்ஸ் அம்மாப்பேட்டை, சேலம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar